# அநுபோக வைத்திய நவநீதம்

ஹக்கீம்
பா.மு. அப்துல்லா சாயபு

பாகம்-10

தாமரை நூலகம், சென்னை-26.

# அனுபோக வைத்திய நவநீதம்

பத்தாம் பாகம்

ஆசிரியர் :

ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்

பதிப்பாசிரியர் :

எஸ். பி. ராமச்சந்திரன்

Cell: 8439777140
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக கடை
மு. முருகன்
13, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு,
கனரா வங்கி பின்புறம்,
சிவகங்கை 630 561.

தொலைபேசி எண் : 420 249

**தாமரை நூலகம்**

7. என். ஜி. ஓ. காலனி,
வடபழனி, சென்னை — 600 026.

தாமரை வெளியீடு எண் : 164
முதற்பதிப்பு : நவம்பர் 1995.
உரிமை பெற்றது. : ©

## நூலைப் பற்றி

நூலின் பெயர் : அனுபோக வைத்திய நவநீதம்
ஆசிரியர் : ஹக்கீம். பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்
பதிப்பாசிரியர் : எஸ். பி. ராமச்சந்திரன்
வெளியிட்டோர் : தாமரை நூலகம், 7, என் ஜி. ஓ. காலனி, வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு : நவம்பர், 1995.
உரிமை : பதிப்பகத்திற்கு
நூல் வடிவம் : 21 செ. மீ. × 14 செ. மீ.
தாளின் தன்மை : 14.4 வெள்ளைத்தாள்
அட்டை : 13.8 சேஷசாயி
அச்சு எழுத்து : 10 புள்ளி
மொத்தப் பக்கங்கள் : 144 + XVI = 160
பிரதிகள் : 1000
பைண்டிங் : செக்ஷன்

விலை ரூ. 40—00

அச்சிட்டோர் : அமுதன் அச்சகம்
: 66, பெரியார் தெரு
: எம். ஜி. ஆர். நகர், சென்னை78-

# பத்தாம் பதிப்பின் முகவுரை

நண்பர்களே! இந்த அனுபோக வைத்திய நவநீதத்தின் அருமை பெருமைகளும், இதிலெழுதப்பட்டு வரும் முறைகளின் உயர்வும் இதற்கு முன் வெளியிடப்பட்டுள்ள பாகங்களை ஆதியோடந்தமாகப் படித்தும், கேட்டும், அவற்றிலுள்ள முறைகளை முறைப்படி செய்தும் அனுபவித்தவர்களுக்கு நன்கு விளங்கும் முன் ஒன்பதாம் பாகப் முகவுரையில் சொல்லியிருக்கிறபடி இம் மருத்துவ பெருமக்கள் மேலும் கடினமான நோய்களுக்காம் கைவல்யமான பல முறைகளையும் எழுதும்படி நம்மை மேலும் வற்புறுத்திய படியால் அவர்கள் விருப்பத்தின் படியே இதன் ஒன்பதாம் பாகத்தைச் சில நாள்களுக்கு முன்னே எழுதி வெளிப்படுத்தி அது உத்தேசத்தினும் விரிவெய்திய படியால், மீதியாயிருந்த முறைகளை எழுதி பத்தாம் பாகமென முடித்து வெளியிட்டிருக்கிறோம். இது மற்ற பாகங்களைக்காட்டிலும் மிகவும் சிறப்புற்றது என்பதை இதைப் பார்வையிடும் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்வார்கள்.

இந்தப் பத்தாம் பாகத்தில், மஞ்சள் காமாலை, நீர்க் காமாலை, ஊது காமாலை, வறட்காமாலை, அழற்காமாலை முதலிய காமாலை நோய்களைத் தீர்க்கக்கூடிய முறைகளாகிய நீர்க்காமாலை உசிதம், மஞ்சட்காமாலை உசிதங்கள், காமாலைப்பழ இளகம், காமாலை அய உசிதம், காமாலைக் கிட்ட உசிதம், காமாலைக் காந்தச் செந்தூரம் ஆகியவைகளும்;

பஞ்சபாண்டு, நச்சுப்பாண்டு, பித்தப்பாண்டு, பெருவயிறு குன்மம், மகோதரம் முதலிய பாண்டுநோய் வகைகளைத் தீர்க்கத்தக்க முறைகளாகிய பாண்டு உசிதங்கள், பாண்டு சீ... உசிதம், வீக்க உசிதம், பித்தப்பாண்டு குடிநீர்கள், பாண்... சாரக்கட்டு, பாண்டு செயநீர், நஞ்சுபாக எண்ணெய், விடபாக இளகம், பஞ்சபாண்டு இளகம், பாண்டு அரப்பொடி இளகம், பாண்டு லோகசெந்தூரம், கௌசைப்பேதி நெய், கௌசைக் காய் இளகம், கௌசைப்பேய்ப்பீர்க்கு இளகம், கட்டிக்கு இலவணாதிச் சூரணம், குன்மக்கட்டிச் சூரணம், பெருவயிற்று வில்லை, சிந்தாமணி எண்ணெய், மகோதர உசிதங்கள். மகோதரலவண இளகம், அட்டகுன்ம உருண்டை, அட்டகுன்ம பச்சைவெட்டுப் பற்பம், குன்ம உசிதம், எரிகுன்ம உசிதங்கள், சத்திகுன்ம உசிதங்கள், வலிகுன்ம உசிதம், குன்மவாயு உசிதம்,

அட்டகுன்மக் கிட்டக்குளிகை, தேங்காய்ச் சூரணம் ஆமிலபற்ப மாத்திரை, கலிங்காதிக் குழம்பு ஆகியவைகளும், மலட்டெண்ணெய், உருத்திரவாயுச் சூரணம், உருத்திரவாயு மெழுகு, திரிசிரட்டை நெய் முதலியவைகளும்,

அண்டவாதம், அண்டவாயு, அண்டவீக்கம், அண்ட இசிவு முதலிய அண்ட நோய்களைத் தீர்க்கும் முறைகளாகிய வச்சிர சிந்தாமணி உருண்டை, அண்டவாயு உசிதம், விதைவாயு உசிதம், அண்டவாத ஒற்றடம், அண்டவாதக்கட்டு, சகலவாயு ஒற்றடம். வாயு மேற்பூச்சுத் தைலம், அண்டவாத கோழிச் சூரணம், விதைவாத இளகம், அண்டவாத எண்ணெய்கள், அண்ட எண்ணெய், அண்டவாத பேதி, அண்டவாத மேற்பூச்சுத் தைலம், அண்டவாத அழிஞ்சில் எண்ணெய் ஆகியவைகளும்;

யானைக்கால் வீக்க மருத்துவமாகிய யானைக்கால் பற்றுக்களும்;

அரையாப்பு மருத்துவமாகிய அரையாப்புப் பற்றுக்கள், அரையாப்புக் கட்டுக்கள், அரையாப்பு உசிதம், அரையாப்புக் களிம்பு, அரையாப்பு இளகம், அரையாப்பு எண்ணெய், அரையாப்புக் காரம் ஆகியவைகளும்;

கிரந்திப்புண், கிரந்திப்புற்று, மேகப்புண், குழிப்புண், அழிப்புண், சிலைப்புண் முதலிய கிரந்திநோய் மருத்துவமாகிய கிரந்திப் புண்மாத்திரை. கிரந்தி மேற்பூச்சு, கிரந்திப்புண் தூள், கிரந்தி உருண்டை, புருடக்கிரந்தி எண்ணெய், புருடக்கிரந்தித் தூள், கிரந்திப்புகை, கிரந்தி உருண்டை. புற்றுப் பதங்கம், கிரந்திக்குடிநீர், கிரந்திவல்லாதகி, கிரந்தியெண்ணெய், கிரந்திச்சூரணம் பறங்கியாதி இளகம், சடைச்சிநெய், கள்ளிப்பூக் கிரந்தி எண்ணெய், கிரந்திக் களங்கு, நாசிக்கிரந்திப் புகை, கிரந்தித் தேங்காய் நெய், கரளைநோய் நிவாரண எண்ணெய், மேக எண்ணெய், வடிவெண்ணெய், மேகப்புகை, இரணப் பூச்சுத் தைலம், மேகமேற் பூச்சுத்தைலம், குழிப்புண் பூச்சுத் தைலம், புண்சுடர்த் தைலம் எண்ணெய், புரைநெய், குழிப்புண்ணுசிதம், புண்பச்சை எண்ணெய், பிளவைக்களிம்பு, துவரெண்ணெய்கள், எண்பிளாஸ்திரி, வடக்களிம்பு. கரப்பான் குடிநீர், வெட்டுக்காய உசிதம், ஆறாப்புண்ணுசிதம், கிருமிப் புண்ணுசிதம், இரணக்கட்டு, துர்மாமிசக்களிம்பு சிவப்புப் பிளாஸ்திரி, சப்தரிஷிக்களிம்பு, மஞ்சள் பிளாஸ்திரி, புண்ணிற்குக் குளிர்ந்தகாரம், புண்வாய்க்காரம், புற்றுசிதம், குடோரித் தைலம், இரணக்கிருமி நாசகாரி, புரைப் புண்ணுசிதம், இரண முலாம், இரண உசிதம், இரணப்புகைகள் ஆகியவைகளும்;

கண்டமாலை மருந்துவமாகிய: கண்டமாலை எண்ணெய், கண்டமாலைப்புகைகள், கண்டமாலைப் பிளாஸ்திரி, கண்டமாலைப் பூக்கத்தைலம், கண்டமாலைப் பிரயோகம், கண்டமாலை நீலிஎண்ணெய், கண்டமாலைப் பத்துகள் ஆகியவைகளும்;

நரம்புச்சிலந்தி மருத்துவமாகிய நரம்புச்சிலந்தி மேற்கட்டுகள், நரம்புச்சிலந்தி எண்ணெய்கள் ஆகியவைகளும்;

சிலந்திப்பற்று, படுவன் உசிதம், விரற்சுற்றி உசிதங்கள், பருவத்தைலங்கள், புழுவெட்டுசீதம், புழுவெட்டுத்தைலம், புழுவெட்டு எண்ணெய், சிக்கிட உசிதம், புழுவெட்டு மத்தைத் தைலம், கூந்தல்வளர் தைலம், கூந்தல்வளர் மணித்தைலம், உரோமநாசகாரி, உரோமசங்கரன், நரைமாறத் தைலம், தலைப்பேன்சாகத் தைலம், வாய்க்கிரந்தி உசிதங்கள், பொத்திக் கடிமுளாம், பொத்திக்கடித்தைலம், நெருப்புப்புண் உசிதங்கள், முகவங்குப்பூச்சு, முகவாத மேற்பூச்சு, உதட்டுவெடிப்பு முலாம் உதட்டு வெடிப்பு உசிதங்கள், ஆரக்தபித்த கறித்தைலம், அறுவகை இரத்த நெய், இரத்தபித்த குடிநீர், இரத்தபித்த உசிதங்கள், பாதவெடிப்பு உசிதம் ஆகிய பல மருத்துவ முறைகளும்;

இரத்தபீனிசம், சிராய்ப்பீனிசம், நீர்ப்பீனிசம், சீழ்ப்பீனிசம் முதலிய பீனிச நோய் மருத்துவமாகிய பீனிச உசிதநசியம், பீனிசப் புகை, பீனிச ஸ்நானத் தைலம், இரத்த பீனிச மை, இரத்த பீனிச நசியம், நசிய நெய், பீனிச வேம்புத் தைலம், பீனிச மறள் தைலம், பீனிச துளசித் தைலம், பீனிச மிளகுத்தைலம், கபாலசூலைத் தைலம், கபாலசூலைப் பாளைத்தைலம், இரத்தபீனிசப் புகை, பீனிசத்தலைக்கட்டு, கபால சூலை, கலிய ணத் தைலம், கரிசாலைத் தைலம் நீலித் தைலம், அவரைத் தைலம், பதங்கத் தைலம், பீனிச சுகந்தத் தைலம், பீனிச வெருகந்தைலம், நசிய நெய், ஆக்கிராணம், பீனிசப்புகைகள், கொரட்டைத்தைலம், சாம்பிராணிப்புகை, நறளைத்தைலம், பீனிச நசியங்கள், பீனிசவேர்த் தைலம் முதலியவைகளும்;

இரத்தகாசம், இரத்தசயம், சுவாசகாசம் முதலிய நோய்களின் மருத்துவமாகிய இரத்தகாச உசிதம், இரத்தச் சய உசிதங்கள், காசபஞ்சவித்துச் சூரணம், இரத்தகாசநெய், சுவாசகாச உசிதம் ஆகியவைகளும்;

காதுநோய் மருத்துவமாகிய: செவிநோய்த் தைலம், செவிநோய் சஞ்சீவிகள் காதுசன்னித்தைலம், செவிப்புழு உசிதங்கள் காதில் ஈப்புகுதலுக்கு மருத்துவம், செவிச்சீழ்த்தைலம் காது

மூலப்பற்று, செவிட்டுசிதங்கள், காதுநோவுசிதம், காது வெளிச்சி உசிதம், செவிநாறல் நோவுசிதம் ஆகியவைகளும்;

பல்நோய் மருத்துவமாகிய: பல்பொடி, பல்நோய் உசிதம், பல் சஞ்சீவித்தூள், பல்லரணை உசிதங்கள், பல்நோய் உசிதங்கள் ஆகியவைகளும்;

கண் நோய் மருத்துவமாகிய: அந்திமாலை உசிதங்கள், கண் வெள்ளைப் பொடிகள், கண்சிவப்புப் பொடி, பச்சைக் கற்பூரப்பொடி, நயன உசிதபுற்பங்கள், கண்மை, வெள்ளெழுத்து மாத்திரை, வெள்ளெழுத்துத் தைலம், நேத்திரவாயு மை, நேத்திரவாயுப் பற்று, நேத்திரவாயுத்தைலங்கள், கண்காச மாத்திரை, கண்பூ மாத்திரை, கண்டமுடமயிர்மை, கண்புழுவெட்டு மை, கண்விரிவுமை கண்அமரப் பொடி, கண் சதை வளர்ச்சி மை, கண்ணீர்ப்பாய்ச்சலுக்கு மை, கண்குருட்டு விநோத மருத்துவம், கண்பூவுசிதங்கள், நயன நோய சந்திரோதயம், கண்பச்சை மாத்திரை, கண்பச்சை உருண்டை, கண் பச்சைத் தாம்பிராதி மாத்திரை, கண்கமலப் பச்சைமாத்திரை, கண்புழுவெட்டு மாத்திரை, நயனநோய்த் தாம்பிரமணி மாத்திரை, கண் இலகுரத்தினாதி மாத்திரை, சிறு இரத்தினாதி மாத்திரை, நவரத்தினாதி மாத்திரை, நவலோக ரத்தினாதி மாத்திரை, நயன சிந்தாமணி மாத்திரை, கலிக்க மாத்திரை, நேத்திரவாயு வத்தி, கண்ணோய் நசியம், கண்ணோய் ஆக்கிராணம், கண்ணோய் பேதிச்சூரணம், நயன்நோய் பேதி, நயன சஞ்சீவி மை, கண்நவநீத மை, கண்கண்டுக் குழம்பு, கண்பச்சைக் கற்பூரக் குழம்பு, கண்பற்றுகள், கண்பற்று மாத்திரை, கண் புறவளையங்கள், கண்ணோவுசிதம், கண் குமரிப்பற்று, கண் ஒற்றடம், கண்ணோய்ப்புகைகள், கண் குளிர்ச்சி எண்ணெய்கள், நயன சஞ்சீவித் தைலம், நயன மேக சஞ்சீவித் தைலம், கண் அயிரை உசிதம், கண்தைலம், இரணசுக்கிர உசிதம், இரணசுக்கிரமாத்திரை கண்ணொற்றட உசிதம், கண்ணின் உசிதம், கண்ணொளி உசிதம், நயனநோய் வெள்ளிப்பொடி, நயனநோய் ஆசாருன் தைலம், கண்நிம்பசஞ்சீவி, கண்ணிமை உசிதம், காணி ஒற்றடம், ரசித பற்ப உசிதம் ஆகியவைகளும் வகைவிவரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

முன் ஒன்பதாம் பாகத்தில் சொல்லி இருக்கும் முறைகள் யாவும் பரம்பரையில் பத்திரமாகவும் இரகசியமாகவும் வைக்கப்பட்டிருந்த பல்லாயிரம் முறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவைகள். இவை யாவும் குணத்தில் விசேஷப்பட்டவைகளும், செய்வதற்கு இலகுவானவைகளுமாம் இப்புத்தகம் முன்பாகங்களை வாங்கினோர் வாங்காதவர் ஆகிய எல்லோருக்கும் மிக அவசியமானது. ஆதலின், சித்த மருத்துவ ஆர்வ

முள்ள மருத்துவர்கள் இதற்கு முன் நம்மால் வெளிப்படுத்தப் பட்ட இதன் மற்ற பாகங்களையும், இன்னுமுள்ள சித்த மருத்துவ நூல்களையும் வாங்கி நம்மை மகிழ்வித்துக் கனப் படுத்தி வந்தது போலவே இதனையும் இதற்குப் பின்னே வெளி வரும் திறவுகோலையும் வாங்கி நமக்கு ஊக்கத்தை உண்டாக்கி நம்மைக் கனப்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இந்தப் பத்தாம் பாகத்தையும் இதற்கு முந்திய ஒன்பதாம் பாகத்தையும் அதற்கு முன்னுள்ள எட்டுப்பாகங்களையும் வாங்கி ஆதியோடந்தமாக கவனித்துப் பார்த்து முறைகளைச் செய்து அறிந்து பயிற்சியில் சிறப்புப் பெற்றவர்கள் தமக்கும் தம்முடைய இனபந்து மித்திர முதலியவர்களுக்கும் நேரிடும் நோய்களைத் தீர்த்து நோயற்ற வாழ்வையடைந்து நீடூழி வாழ்வார்களாக. ஆமீன்.

**ஹக்கீம் (பா.) மு. அப்துல்லா சாயபு,**
**எண் 12, அப்பு மேஸ்திரி தெரு,**
**ஜார்ஜ்டவுன்,**
**சென்னை.**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அட்டகுன்ம உருண்டை | ... | 24 |
| அட்டகுன்ம கிட்டக்குளிகை | ... | 28 |
| அட்டகுன்ம புக்சை வெட்டு பற்பம் | ... | 25 |
| அண்ட எண்ணெய் | ... | 40 |
| அண்டவாத அழிஞ்சில் எண்ணெய் | ... | 42 |
| அண்டவாத எண்ணெய் | ... | 38, 39 |
| அண்டவாத ஒற்றடம் | ... | 35 |
| அண்டவாதக் கட்டு | ... | 35 |
| அண்டவாதக் கோழிச் சூரணம் | ... | 36 |
| அண்டவாதப் பேதி | ... | 41 |
| அண்டவாத மேற்பூச்சுத் தைலம் | ... | 41 |
| அண்டவாயு உசிதம் | ... | 34 |
| அண்ட நோய்க்கு மருத்துவம் | ... | 33 |
| அந்திமாலை உசிதம் | ... | 117 |
| அரையாப்புக் கட்டு | ... | 47, 48 |
| அரையாப்புக் களிம்பு | ... | 48 |
| அரையாப்புக் காரம் | ... | 74 |
| அரையாப்பு உசிதம் | ... | 47 |
| அரையாப்புப் பற்று | ... | 46, 47 |
| அரையாப்பு இளகம் | ... | 48 |
| அரையாப்பு எண்ணெய் | ... | 49 |
| அவரைத் தைலம் | ... | 94 |
| அறுவகை இரத்தநெய் | ... | 103 |
| ஆக்கிராணம் | ... | 96 |
| ஆண்நரம்புச் சிலந்தி | ... | 76 |
| ஆமிலபற்பமாத்திரை | ... | 29 |
| ஆறாப்புண் உசிதம் | ... | 67 |
| ஆனைக்கால் பற்று | ... | 42-46 |
| இரசிதபற்ப உசிதம் | ... | 145 |
| இரண உசிதம் | ... | 76 |
| இரணக் கட்டு | ... | 68 |
| இரணக்கிருமி நாசகாரி | ... | 75 |
| இரணசுக்கிர உசிதம் | ... | 142 |

| | பக்கம் |
|---|---|
| கண்டமாலை எண்ணெய் | ... 70 |
| கண்ணண்ட உசிதம் | ... 143 |
| கண்ணயிரை உசிதம் | ... 141 |
| கண்ணிமை உசிதம் | ... 145 |
| கண்ணீர்ப்பாய்ச்சலுக்கு மை | ... 126 |
| கண்ணொளி உசிதம் | ... 143 |
| கண்ணொற்றட உசிதம் | ... 142 |
| கண்ணோய் ஆக்கிராணம் | ... 133 |
| கண்ணோய் நசியம் | ... 133 |
| கண்ணோய்ப் புகை | ... 138 |
| கண்ணோய்ப் பேதிச் சூரணம் | ... 133 |
| கண்ணோய் மருத்துவம் | ... 117 |
| கண்ணோய் உசிதம் | ... 137 |
| கண் தைலம் | ... 141 |
| கண் நவநீத மை | ... 134 |
| கண் நிம்பசஞ்சீவி | ... 144 |
| கண் பச்சைக் கற்பூரக்குழம்பு | ... 135 |
| கண் பச்சைத் தாம்பிராதி மாத்திரை | ... 128 |
| கண் பச்சை மாத்திரை | ... 127 |
| கண் பச்சை உருண்டை | ... 128 |
| கண் பற்று | ... 136 |
| கண் பற்று மாத்திரை | ... 136 |
| கண் புழுவெட்டு மாத்திரை | ... 129 |
| கண்புழுவெட்டு மை | ... 124 |
| கண் புறவளையம் | ... 137 |
| கண்பூ மாத்திரை | ... 123 |
| கண்பூ உசிதம் | ... 126 |
| கண் முடமயிர்மை | ... 123 |
| கண் மை | ... 120 |
| கண் விரிவு மை | ... 124 |
| கண் வெள்ளைப் பொடி | ... 117, 118 |
| கபாலசூலைக் கலியாணத் தைலம் | ... 93 |
| கபாலசூலைத் தைலம் | ... 93 |
| கபாலசூலைப் பாளைத்தைலம் | ... 93 |
| கரப்பான் குடிநீர் | ... 82 |
| கரளையாப்புக் கட்டு | ... 49 |
| கரளைநோய் நிவாரண எண்ணெய் | ... 58 |
| கரிசாலைத் தைலம் | ... 94 |
| கலிக்க மாத்திரை | ... 132 |

| | பக்கம் |
|---|---|
| கலிங்காதிக் குழம்பு ... | 80 |
| கள்ளிப்பூக்கிரந்தி எண்ணெய் ... | 86 |
| காசபஞ்ச வித்துத் தூள் ... | 106 |
| காணி ஒற்றட்டம் ... | 212 |
| காதில் ஈப்புகுதலுக்கு மருத்துவம் ... | 112, 113 |
| காது சன்னித் தைலம் ... | 112 |
| காதுநோய் மருத்துவம் ... | 112 |
| காதுநோய் உசிதம் ... | 114 |
| காதுமூலப் பற்று ... | 113 |
| காதுவெளிச்சி உசிதம் ... | 114 |
| காமாலை அய் உசிதம் ... | 4 |
| காமாலை காந்தச் செந்தூரம் ... | 5 |
| காமாலை கிட்ட உசிதம் ... | 5 |
| காமாலைப்பழ இளகம் ... | 3 |
| கிரந்திக் குடிநீர் ... | 82 |
| கிரந்திக் களங்கு ... | 87 |
| கிரந்திச் சூரணம் ... | 86 |
| கிரந்திப் புகை ... | 81 |
| கிரந்திப்புண் தூள் ... | 51 |
| கிரந்திப்புண் மாத்திரை ... | 50 |
| கிரந்தி மேகச் சூரணம் ... | 83 |
| கிரந்தி மேற்பூச்சு ... | 81 |
| கிரந்தி உருண்டை ... | 52, 82 |
| கிரந்தி எண்ணெய் ... | 85 |
| கிரந்தி வல்லாதகி ... | 54, 83, 84 |
| கிருமிப்புண் உசிதம் ... | 67 |
| கிளிச்சி எண்ணெய் ... | 139 |
| குடோரித் தைலம் ... | 74 |
| குழிப்புண் உசிதம் ... | 65 |
| குழிப்புண் பூச்சுத் தைலம் ... | 63 |
| குன்ம உசிதம் ... | 26 |
| குன்மக்கட்டிச் சூரணம் ... | 19 |
| குன்மவாயு உசிதம் ... | 27 |
| கூந்தல்வளர் தைலம் ... | 109 |
| கூந்தல்வளர் மணித்தைலம் ... | 109 |

| | | பக்கம் |
|---|---|---|
| கொரட்டைத் தைலம் | ... | 101 |
| கௌசைக் காயலேகம் | ... | 15 |
| கௌசைப் பேதிநெய் | ... | 15 |
| கௌசைப் பேய்ப்பீர்க்கு இலேகம் | ... | 16 |
| சகலவாயு ஒற்றடம் | ... | 35 |
| சடைச்சி நெய் | ... | 65 |
| சத்திகுன்ம உசிதம் | ... | 26 |
| சப்தரிஷிக் களிம்பு | ... | 69 |
| சாம்பிராணிப் புகை | ... | 97 |
| சித்தர் தைலம் | ... | 102 |
| சிந்தாமணி எண்ணெய் | ... | 21 |
| சிலந்திப் பற்று | ... | 113 |
| சில்விஷ உசிதம் | ... | 108 |
| சிவப்பு பிளாஸ்திரி | ... | 69 |
| சிறு இரத்தினாதி மாத்திரை | ... | 130 |
| சுவாசகாச உசிதம் | ... | 106 |
| செவிச்சீழ்த் தைலம் | ... | 113 |
| செவிட்டு உசிதம் | ... | 113 |
| செவிநாறல் நோய் உசிதம் | ... | 115 |
| செவிநோய் சஞ்சீவி | ... | 100, 114 |
| செவிநோய்த் தைலம் | ... | 99 |
| செவிப்புழு உசிதம் | ... | 112 |
| தந்தப்பொடி | ... | 169 |
| தந்தரோக உசிதம் | ... | 170 |
| தலைப்பேன் சாகத் தைலம் | ... | 111 |
| திரிசிரட்டை நெய் | ... | 33 |
| துர்மாமிசக் களிம்பு | ... | 68 |
| துவர் எண்ணெய் | ... | 65, 66 |
| தேங்காய்ச் சூரணம் | ... | 28 |
| தேங்காய் நெய் | ... | 67 |
| நசிய நெய் | ... | 96, 101 |
| நயன சஞ்சீவித் தைலம் | ... | 140 |
| நயன சஞ்சீவி மை | ... | 134 |
| நயன சிந்தாமணி மாத்திரை | ... | 131 |
| நயனமேக சஞ்சீவித் தைலம் | ... | 131 |
| நயனரசித பற்பம் | ... | 119 |

| | பக்கம் |
|---|---|
| நயனநோய் அசாருன் தைலம் | 144 |
| நயனநோய் சந்திரோதயம் | 127 |
| நயனநோய் தாம்பிரமணி மாத்திரை | 129 |
| நயனநோய்ப் பேதி | 133 |
| நயனநோய் வெள்ளிப்பொடி | 143 |
| நரம்புச்சிலந்தி நோய் | 76 |
| நரம்புச்சிலந்தி எண்ணெய் | 76 |
| நரம்பும் சிலந்திப்பற்று | 77 |
| நரை மாறத் தைலம் | 111 |
| நவரத்தினாதி மாத்திரை | 130 |
| நவலோக ரத்தினாதி மாத்திரை | 131 |
| நரளைத் தைலம் | 99 |
| நாசிக்கிரந்திப் புகை | 88 |
| நாசிக்கிரந்தி உருண்டை | 88, 130 |
| நீர்க்காமாலை உசிதம் | 2 |
| நீலித் தைலம் | 94 |
| நெருப்புப்புண் உசிதம் | 78, 79 |
| நேத்திரவாயுத் தைலம் | 122 |
| நேத்திரவாயுப் பற்று | 122 |
| நேத்திரவாயு மை | 121 |
| நேத்திரவாயு வர்த்தி | 132 |
| பச்சைக்கற்பூரப் பொடி | 118 |
| பஞ்சபாண்டு இளகம் | 11 |
| படுவன் உசிதம் | 77 |
| பட்டை வல்லாதகி | 84 |
| பதங்கத் தைலம் | 95 |
| பருத் தைலம் | 107 |
| பல்நோய் உசிதம் | 116 |
| பல்சஞ்சீவித் தூள் | 116 |
| பல்லரணை உசிதம் | 116 |
| பறங்கியாதி இளகம் | 55 |
| பாண்டு அரப்பொடி இளகம் | 13 |
| பாண்டு உசிதம் | 5,6 |
| பாண்டு சாரக்கட்டு | 8 |
| பாண்டுசீன உசிதம் | 6 |
| பாண்டுச் செயநீர் | 9 |
| பாண்டுநோய் மருத்துவம் | 7 |

| | | பக்கம் |
|---|---|---|
| பாண்டுலோகச் செந்தூரம் | ... | 13 |
| பாதவெடிப்பு உசிதம் | ... | 79 |
| பித்தபாண்டுக் குடிநீர் | ... | 7 |
| பிளவைக் களிம்பு | ... | 65 |
| பீனிச உசித நசியம் | ... | 89 |
| பீனிச சுகந்தத் தைலம் | ... | 95 |
| பீனிசத் தலைக்கட்டு | ... | 101 |
| பீனிசத் துளசித்தைலம் | ... | 92 |
| பீனிச ஸ்நானத்தைலம் | ... | 90 |
| பீனிச நசியம் | ... | 98 |
| பீனிசப் புகை | ... | 89, 97 |
| பீனிசமறள் தைலம் | ... | 91 |
| பீனிச மிளகுத் தைலம் | ... | 92 |
| பீனிச நோய் மருத்துவம் | ... | 89 |
| பீனிச வெருகந் தைலம் | ... | 96 |
| பீனிச வேம்புத் தைலம் | ... | 91 |
| பீனிச வேர்த்தைலம் | ... | 98 |
| புண்சுடர்த் தைலம் | ... | 64 |
| புண்ணிற்குக் குளிர்ந்தகாரம் | ... | 73 |
| புண் நெய் | ... | 64 |
| புண் பச்சை எண்ணெய் | ... | 65 |
| புண் பிளாஸ்திரி | ... | 66 |
| புண் வாய்க்காரம் | ... | 74 |
| புருடக்கிரந்தித் தூள் | ... | 81 |
| புருடக்கிரந்தி எண்ணெய் | ... | 80 |
| புரை நெய் | ... | 64 |
| புரைப்புண் உசிதம் | ... | 75 |
| புழுவெட்டு உசிதம் | ... | 107 |
| புழுவெட்டுத் தைலம் | ... | 107 |
| புழுவெட்டு மத்தைத் தைலம் | ... | 109 |
| புழுவெட்டு எண்ணெய் | ... | 108 |
| புற்று உசிதம் | ... | 74 |
| புற்றுப் பதங்கம் | ... | 53 |
| பெண்நரம்புச் சிலந்திக் குறி | ... | 76 |
| பெருவயிற்று வில்லை | ... | 20 |
| பொத்திக்கடித் தைலம் | ... | 78 |
| பொத்திக்கடி மூலாம் | ... | 77 |

| | | பக்கம் |
|---|---|---|
| மகோதர உசிதம் | ... | 24 |
| மகோதரலவண இளகம் | ... | 23 |
| மஞ்சள்காமாலை மருத்துவம் | ... | 2 |
| மஞ்சட்காமாலை உசிதம் | ... | 3 |
| மஞ்சள் பிளாஸ்திரி | ... | 69 |
| மலட்டெண்ணெய் | ... | 31 |
| முகவங்குப் பூச்சு | ... | 87 |
| முகவாத மேற்பூச்சுத் தைலம் | ... | 101 |
| முடிவளர் தைலம் | ... | 108 |
| மேக எண்ணெய் | ... | 59 |
| மேகப் புகை | ... | 61 |
| மேக மேற்பூச்சுத் தைலம் | ... | 62 |
| வச்சிரசிந்தாமணி உருண்டை | ... | 33 |
| வடக் களிம்பு | ... | 67 |
| வடி வெண்ணெய் | ... | 60 |
| வலிகுன்ம உசிதம் | ... | 27 |
| வாயு மேற்பூச்சுத் தைலம் | ... | 36 |
| வாய்க்கிரந்தி உசிதம் | ... | 115 |
| விஷபாக எண்ணெய் | ... | 10 |
| விஷபாக இளகம் | ... | 10 |
| விரந்சுற்றி உசிதங்கள் | ... | 77 |
| விதைவாத இளகம் | ... | 37 |
| விதைவாயு உசிதம் | ... | 35 |
| வீக்க உசிதம் | ... | 7 |
| வெட்டுக்காய உசிதம் | ... | 67 |
| வெள்ளெழுத்துத் தைலம் | ... | 121 |
| வெள்ளெழுத்து மாத்திரை | ... | 120 |



Cell: 8489777140
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக கடை.
மு. முருகன்
13, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு.
கனரா வங்கி பின்புறம்,
சிவகங்கை 630 561.

Cell: 9489777140
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக கடை
மு. முருகன்
13, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு.
கனரா வங்கி பின்புறம்,
சிவகங்கை 630 561.

# அனுபோக வைத்திய நவநீதம்

## பத்தாம் பாகம்

### கடவுள் வணக்கம்

மாவா ரனுபோக வைத்ய நவநீதம்
பாவாரு மச்சிற் பதித்திடவே— நாவாரும்
ஆதியே பல்கோடி யண்டமனைத் தும்படைத்தாள்
சோதியே செய்வாய் துணை.

### குரு வணக்கம்

திருவும் புகழுந் திகழறிவுஞ் சேரேங்
குருவின் பதம்பணிந்து கொண்டு— வருநலனு
போகமாம் வாகடத்திற் போற்றுநவ நீதமுயர்
வாகவியற் றத்தொடங்கு வாம்

### நூல்

இயற்கையின் அருளினாலும், பெரியோர்களின் வாழ்த்தினாலும், பல மருத்துவ அறிஞர்களின் உதவியினாலும் இதற்கு முந்திய எட்டுப் பாகங்களில்; தனிச்சரக்குகளின் செந்தூரங்கள், பற்பங்கள், அவை சம்பந்தமான இளகம், சூரணம் முதலிய பாகங்களையும், அவற்றின் அனுபானங்களுக்கும், தனி உபயோகத்திற்கும்பயன்களுக்குமுரிய பல அரிய முறைகளையும் சொல்லியிருக்கின்றோம், மேலும் நம்மைப் பல விதத்திலும் மேன்மைப்படுத்திவரும் பெருஞ் செல்வர்கள் கடினமான நோய்களுக்கும், செய்தேர்ச்சியான சில முறைகளை எழுதும்படி விரும்பினபடியால் அவர்கள் கருத்திற்

கிசைந்து நமது பரம்பரையிலும், நமக்கும், நண்பர்களுக்கும் செய்தேர்வுற்ற முறைகளை வெளிப்படுத்த முன்வந்து, இதற்கு முந்திய ஒன்பதாம் பாகத்தில் உடலிலுள்ள தீயமாசுகளை நீக்கு தற்கு உபயோகமாகும் பலவகை பேதி முறைகள், சுரம், முக்குற்றம், பிரமேகம், மதுமேகம், வெள்ளையொழுக்கு, பெரும்பாடு, சூதகக்கட்டு, மலக்கட்டு, நீர்க்கட்டு, நச்சுக்கழிச்சல், எருவாய் நோய் மூலச்சூடு முதலிய பல கடினமான நோய்களைத்தீர்க்கும் அருமையான முறைகள் ஆகியவைகளை எழுதி வந்ததில் அது உத்தேசத்தினும் அதிக விரிவெய்தியபடியால் இந்தப் பத்தாம் பாகமும் எழுத நேரிட்டது. இந்தப் பத்தாம் பாகத்தில் பல வகை மஞ்சள்நோய், பாண்டு நோய்கள், கௌசை, மகோதரம், வல்லைக்கட்டி, கெண்டைக்கட்டி முதலிய பல வகைக்கட்டிகள், குன்மநோய், அண்டவாதம், யானைக்கால் வீக்கம், நெரிக்கட்டு சுரம், அரையாப்பு, பவுத்திரம், முடிச்சு நோய்கள், புண்கள், கண்டமாலை, பீனிசநோய், முகவாதம், சயம், இரத்தசயம், இரத்தபித்தம், உரோம சம்பந்த நோய்கள், செவிநோய், பல்நோய், கண்நோய் முதலியவைகளுக்காகும் பல முறைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இம்முறைகளெல்லாம் ஆயிரத்திற் கொன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள்; ஏட்டிலிருந்தபடி எடுத்தெழுதப்பட்டவைகளல்ல; பல தடவை அனுபவசித்தி பெற்றவைகள்; இதில் சொல்லியிருக்கிற மேற்படி முறைகளைச் செய்து அனுபவித்தால் பல கடின நோய்கள் தீர்ந்து அநேகவித நன்மைகள் உண்டாகும் என்பது திண்ணம். சுலபமாகச் செய்து கொள்ளக்கூடிய அநேக சிறந்த முறைகள், தனிச்சரக்கு பயன் ஆகியவைகளும் இதில் சொல்லப்பட்டிருக்கின்றன.

## மஞ்சள் காமாலை மருத்துவம்

### 1429. நீர்க்காமாலை உசிதம்

கையாந்தகரை சமூலம், சிறுசெருப்படிக் கொழுந்து, பச்சை மஞ்சள், மிளகு இவை வகைக்கு $1\frac{1}{4}$ வராகன் எடை. இவற்றை அம்மியில் வைத்து வெண்ணெய்போலஅரைத்துஆழாக்கு வெள்ளாட்டு மூத்திரத்தில் கரைத்துப் பருகச் செய்விக்கவும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளை மூன்று நாள் செய்யின் நீர்க்காமாலை தீரும். இரண்டொரு தடவை கழிச்சலாகும்.

**பத்தியம்:—** மோருஞ் சாதமும் சாப்பிடவும்.

**குறிப்பு:—** வெள்ளாட்டு மூத்திரத்தில் சாப்பிடுவது கூடாமையாயிருந்தால் வெள்ளாட்டுப்பாலில் மேற்கண்டவை

கனைக் கரைத்துக்கொடுக்கவும். பாலை உட்கொண்டால் பத்தியம் பாலன்னம் சாப்பிடவும்.

## 1430. மஞ்சட்காமாலை உசிதம்

சிற்றாமணக்கம்பருப்பைத் தண்ணீரில் இழைத்துக் கண்ணில் விட்டுவர பீளைசார்ந்த மஞ்சட்காமாலை தீரும்.

## 1431. மேற்படி வேறு

வேப்பங்கொழுந்து $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), இதனை வெண்ணெய் போல் அரைத்து அரையாழாக்கு எருமைத்தயிரில் கரைத்துப் பருகச் செய்விக்கவும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் மூன்றுநாள் செய்யின் மஞ்சட்காமாலை தீரும்.

## 1432. மேற்படி வேறு

கீழ்க்காய் நெல்லிசமூலம் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), மிளகு $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்) இவ்விரண்டையும் அம்மியில் வைத்து வெண்ணெய் போல் அரைத்து அரை ஆழாக்கு எருமைத் தயிரில் அல்லது பசுவின் பாலில் கரைத்துப் பருகச் செய்விக்கவும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் மூன்று நாள் செய்யின் மஞ்சட்காமாலை, பாண்டுநோய், ஈரல் வீக்கம் ஆகியவை தீரும்.

## 1433. மேற்படி வேறு.

கோது கொட்டை நீக்கின புளி 1 வராகன் எடை. இதனை இரண்டு பலம் தண்ணீரில் கரைத்துத் திப்பியை நீக்கிவிட்டு நான்கு குன்றிமணி எடை வெடியுப்புச் சுண்ணத்தைக் கலந்து உட்கொள்ளவும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் மூன்றுநாள் செய்யின் மஞ்சட்காமாலை தீரும். இதனுடன் இரண்டு குன்றிமணி எடை சுண்ணாம்பைக் கலந்தும் உபயோகிக்கலாம்.

**பத்தியம்** :— எருமைத் தயிர், எருமை மோர், வெண்ணெய் ஆகியவையாகும்; உப்பை நீக்கவும்.

## 1434. காமாலைப்பழ இளகம்

மேற்றோல் நீக்கின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, கோட்டம், சதகுப்பை, இந்துப்பு, சடாமாஞ்சில், கடுகுரோகணி, ஓமம், சாதிபத்திரி, ஏலரிசி, வகைக்கு $2\frac{1}{2}$, வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்) வாய்விளங்கம், கொத்துமல்லி விதை, கருஞ்சீரகம்,

**பேய்ப்புடல், கண்டத்திப்பிலி, சிறு தேக்கு: மஞ்சள்கடுக்காய் தோல், பெருலவங்கப்பட்டை, சன்னலவங்கப்பட்டை, இலவங்கப் பத்திரி**, கார்போகரிசி இவை வகைக்கு $1\frac{1}{4}$ வாரகன் எடை (4 கிராம்) நெல்லிமுள்ளி $\frac{1}{2}$ பலம் (17 $\frac{1}{2}$ கிராம்) அரப்பொடி 5பலம் (175 கிராம்) காந்தம் $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்) கீழ்க்காய் நெல்லி வேர் 2 பலம் எலுமிச்சபழம் 2, கையாந்தகரைச்சாறு $2\frac{1}{2}$ படி.

**செய்முறை:**— அரப்பொடியில் கருவேலம்பட்டைச் சாற்றை விட்டுக்காய்ச்சிநல்லெண்ணெய்விட்டுவறுத்து நீர் விட்டுக்கழுவி யெடுத்துக்கொள்ளவும். கடைச் சரக்குகளையும் இடித்துத் தூள் செய்து கொள்ளவும் அயத்தையும் காந்தத்தையும் அம்மியில் வைத்து நேர்மையாகப் பொடி செய்து மற்றத் தூள்களையும் சேர்த்துக் கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய்போலரைத்து எலுமிச்சம்பழத்தை நான்காகப் பிளந்து உள்ளிருக்கிற விதையை நீக்கிவிட்டு அதற்குள் இந்த மருந்தை வைத்து ஒரு பானையில் வரிசையாக வைத்து அதன் மீது கரிசாலைச்சாற்றை விட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துச் சாறெல்லாம் சுண்டி எலுமிச்சம்பழம் நன்றாகவெந்து போயிருக்க வேண்டும். அப்படி வேகாமல் அரைகுறையாக வெந்திருந்தால் இன்னும் கரிசாலைச்சாற்றைவிட்டு நன்றாக வேக வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு எடுத்து அம்மியில் வைத்து வெண்ணெய்போல அரைத்து ஒரு சாடியில் போட்டுக் கொஞ்சம் நல்லெண்ணெயை விட்டுப் புரட்டி வைத்துக் கொள்ளவும்.

**அளவு:**— 2 முதல் 3 வராகன் எடை ......

**தீரும்நோய்கள்:**— ஊதுகாமாலை, வறட்காமாலை, அழற் காமாலை, மஞ்சட்காமாலை, இன்னும் மற்ற காமாலைகள் தீரும். பித்த வெட்டை, பஞ்சபாண்டு, வல்லை, சோகை ஆகியவைகளும் தீரும்.

**பத்தியம்:**— புளி, புகை, புணர்ச்சி நீக்கவும்.

### 1435. காமாலை அயஉசிதம்.

**சுத்தி** செய்த அரப்பொடி 1 பலம் (35 கிராம்), ஓமஉமி 4 பலம் (140 கிராம்) இவ்விரண்டையும் அம்மியில் நாலுசாமம் (12 மணி நேரம்) அரைத்து சாடியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:**— $\frac{1}{2}$ முதல் 1 வராகன் எடை.

**அனுபானம்:-** தேன், நெய், இளகம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** காமாலை நோய்கள், பித்தவெட்டை பாண்டு, சோகை ஆகியவைகள் தீரும்.

**பத்தியம்:-** புளி, புகை, ஆகியவைகளை நீக்கவும்.

### 1436. காமாலைக்கிட்ட உசிதம்

அயத்திற்குப் பதிலாகக் கிட்டத்தைச் சேர்த்து மேற்கண்ட படி செய்து மேற்கண்டபடி உபயோகிக்க மேற்கண்டநோய்கள் தீரும்.

### 1437. காமாலை காந்த செந்தூரம்

ஏழு ஊசி பிடிக்கிற காந்தம் 2 பலம் (70 கிராம்). இதனை நெருப்பில் காய்ச்சிக் கொள்ளுச் செடியின் சமூலச்சாற்றில் தோய்க்க வேண்டும். மறுபடியும் காய்ச்சி மறுபடியும் மேற்படி சாற்றில் தோய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பத்துத் தடவை செய்ய சுத்தியாகும். பின்பு அதனைக் கல்வத்தி விட்டுப் பொடித்துக் கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டுசாம நேரம் (6 மணி) அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்கெடை விராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்துப் பொடித்து முன்போல் முன் சாற்றையே விட்டரைத்து முன்போல் புடமிடவும். இவ்விதமே சோற்றுக் கற்றாழைச்சாற்றில் மூன்றுபுடமும், தாவல்பட்டைச் சாற்றில் இரண்டு புடமும், அரசம்பட்டைச் சாற்றில் இரண்டு புடமும், எலுமிச்சம்பழச்சாற்றில் இரண்டு புடமும் போட்டெடுக்கச் செந்தூரமாகும். அதனைப்பொடித்து பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 1 முதல் 3 குன்றிமணி எடை. காலை மாலை இரண்டு வேளையும் அரை மண்டலம் உட்கொள்ளவும்.

**அனுபானம்:-** தேன், நெய் ஆகியவைகளாம்.

**தீரும்நோய்:-** மஞ்சள் நோய், பாண்டு, சோகை, இரத்த சோகை, அக்கினி மந்தம் ஆகியவை தீரும்.

## பாண்டுநோய் மருத்துவம்

### 1438. பாண்டு உசிதம்

சங்கம் வேர்ப்பட்டையை அரைத்த விழுது 2½ வராகன் எடை (8¾ கிராம்), இதனை ஆழாக்கு வெள்ளாட்டு மூத்திரத்

தில் அல்லது வெள்ளாட்டுப்பாலில் கரைத்துக் காலையில் மூன்று நாள், ஐந்து நாள், ஏழு நாள் பருகச் செய்யவும்.

**தீரும்நோய்:-** பாண்டு வீக்கம் தீரும்.

**பத்தியம்:-** உப்பில்லாப் பத்தியம் வைக்கவும்.

**குறிப்பு:-** பனைவேர்க் குடிநீர் முதலிய மூத்திரக் கழிவுக் குடிநீர்களில் கலந்து கொடுத்தாலும் மேற்கண்ட குணங்களுண்டாகும்.

## 1439. மேற்படி வேறு

மேற்படிசங்கம் வேர்ப்பட்டையை அரைத்த விழுதை வெள்ளாட்டுப்பாலில் அல்லது பசுவின் பாலில் கரைத்துச் சர்க்கரையும் போட்டுக் காய்ச்சிப் பாயாசம் போலச்செய்து உட்கொள்ள மேற்கண்ட குணங்களுண்டாகும்.

## 1440. மேற்படி வேறு

சிற்றிலை விழுதியின்வேரை அல்லது ★ விழுதிவேரை அரைத்தவிழுது $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), இதனை அரை அல்லது முக்கால் ஆழாக்கு வெள்ளாட்டுப் பாலில் அல்லது பசுவின் பாலில் கரைத்துக் காலை, மாலை 3 முதல் 7 நாட்கள் பருகச் செய்யவும். மேற்படி வேரை அரைத்து வீக்கத்தின் மேல் பூசவும். இவ்விதம் செய்து வர பாண்டு வீக்கம் ஆகியவை தீரும்.

## 1441. பாண்டு சீன உசிதம்

சீனாக்காரம் 1 பலம் (35 கிராம்), வெடியுப்பு 1 பலம் (35 கிராம்), இவ்விரண்டையும் நேர்மையாகப் பொடித்து ஒரு ஓட்டில் குவியலாக வைத்துத்திரியால் கொளுத்தி விட்டு எரிந்து ஆறினபின் எடுத்துப் பொடித்து பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும். இது ஒரு வகைச் சுண்ணமாம். இதனைச் சிலர் சீனச் சுண்ணம் என்றும், சிலர் வெடியுப்புச் சுண்ணம் என்றும் சொல்லுவர்.

**அளவு:-** $\frac{1}{2}$ முதல் 2 வராகன் எடை.

**அனுபானம்:-** இரண்டு மூன்று ரஸ்தாளி வாழைப் பழங்களை உரித்துக் கொஞ்சம் பச்சை அரிசி உமியைப் போட்டு நன்றாய்ப் பிசைந்து மூன்று அல்லது நான்கு சாம நேரம் வைத்

★ விழுதிவேரை பாலில் அரைத்து மாதவிடாய் காலங்களில் காலையில் மட்டும் கொடுக்க மலட்டு நோய் நீங்கிக் கரு தரிக்கும். அப்போது புளி நீக்கவும்.

திருந்து பிழிந்தால் சாறு வரும். அந்தச் சாறு 2 பலம்(70கிராம்) இதில் மேற்படி சுண்ணத்தை கலந்து கொடுக்கவும். இன்னும் மூத்திரக் கழிவுக் குடிநீர்களிலும் கலந்து கொடுக்கலாம்.

**தீரும்நோய்கள்:**— நீர் பிரிந்து வீக்கங்கள் வாடும்; பாண்டு நோய்தீரும்.

## 1442. வீக்க உசிதம்

ஆகாசத்தாமரை இலைச் சாற்றில் கருவங்கத்தை இழைத்து வீக்கத்தின் மேல்பூச அது கரையும்.

## 1443. பித்தபாண்டு குடிநீர்

★ஆதாளை வேர்ப்பட்டை, நீர் முள்ளிவேர், நெருஞ்சி வேர், சிறு பீளைவேர், சிற்றிலைவிழுதிவேர், வெள்ளறுகு, வெருகங்கிழங்கு, கொல்லன் கோவைக்கிழங்குஇவை வகைக்கு 5 பலம் (175 கிராம்) வசம்பைச் சுட்டு எரித்த சாம்பல், மிளகு, கடுக்காய்த்தோல் இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்).

**செய்முறை:**— இவை எல்லாவற்றையும் இடித்து மூன்றுபடி தண்ணீரில் போட்டுக் காய்ச்சி முக்கால் படியாகச் சுண்ட வைத்து ஒரு ஆழாக்கு எடுத்து அதில் 1 வராகன் எடை வெண் காரப்பொரியைப் போட்டுக் கரைத்துப் பருகச் செய்விக்கவும். இவ்விதம் காலையிலும், மாலையிலும் கொடுக்கவும். இன்னும் நீர்முள்ளிச் சாம்பலை, வெள்ளாட்டு மூத்திரத்தில் குழைத்து பூசி வரவும். இவ்விதம் மூன்றுநாள் செய்யின் பாண்டு, பித்த பாண்டு முதலியவை தீரும்.

## 1444. மேற்படி குடிநீர் (வேறு)

பனைவேர், தென்னம்வேர், நீர்முள்ளிவேர் இவை வகைக்கு 6 பலம் (210 கிராம்), பழங்கிட்டம் 3 பலம் (105 கிராம்). மடிந்த இரும்பு அல்லது இரும்புத்துகு 8 பலம் (280 கிராம்), மஞ்சள் கடுக்காய்த்தோல் 1 பலம் (35 கிராம்), கோமியம் அல்லது தண்ணீர் 5 படி.

**செய்முறை:**— மேற்கண்டவைகளைப் பஞ்சு போல் சிதைத்தும் கிட்டத்தையும் அயத்தையும் தூள்செய்து ஒரு பாத்திரத்தில் போட்டு மேற்கண்ட திரவத்தை விட்டுக் காய்ச்சி நான்கில் ஒரு பாகமாகச் சுண்ட வைத்து அரை ஆழாக்கு இறுத்து அதில் ஒருவராகன் எடை சாரச் சுண்ணத்தை, அல்லது

---

★ காட்டா மணக்கு

சாரக்கட்டை அல்லது சலமஞ்சரியை, அல்லது சலோதாரியை, அல்லது கிருபாமெழுகை. அல்லது பாண்டு செயநீரை, அல்லது மேற் சொல்லி இருக்கிற வெடியுப்புச் சுண்ணத்தைக் கலந்து பருகச் செய்விக்க வேண்டும்.

இவ்விதம் காலை, மாலை; இரண்டு வேளையும் ஏழு நாட்கள் செய்யவும்.

**திரும் நோய்கள்:—**விடபாண்டு, பெருவயிறு, மகோதரம், பித்த பாண்டு ஆகியவை தீரும்.

**பத்தியம்—:** புளி, புகை ஆகியவைகளைச் சமயோசிதம் போல் நீக்கி வைக்கவும்.

**குறிப்பு:—** மலம் போகவேண்டியதிருந்தால் கடுக்காய்த் தோலை அதிகமாகச் சேர்த்து கொள்ள வேண்டியது. இன்னும் இதனுடன் சுரைக்கொடி. கீழ்க்காய்நெல்லி, கையாந்தகரை முதலியவைகளையும் சேர்த்துக் கொள்ளலாம்

## 1445. பாண்டு சாரக்கட்டு

பூநீறு 2 பலம் (70 கிராம்), சீனாக்காரம், வெண்காரம், நாலாங்காய்ச்சல் வெடியுப்பு இம்மூன்றும் வகைக்கு முக்கால் பலம் வீதம் சேர்த்துப் பொடிசெய்து இதில் இரண்டு பலம் (70 கிராம்)நிறுத்துஎடுத்துக் கொள்ள வேண்டியது இதனுடன் பூநீற்றையும் சேர்த்து ஒருமணி நேரம் அரைத்து எடுத்து வைத்துக் கொள்க. நவச்சாரம் 2 பலம் (70 கிராம்)

**செய்முறை:—** ஒரு சிறு சட்டியில் முன் சித்தப்படுத்தின தூளை ஒரு அங்குலம் பரப்பி அதன் மீது சாரக் கட்டியை வைத்து, அது மறையும்படியாக முன் தூளைப் போட்டுப் பரப்பி மெதுவாயமுத்திவிட்டுச் சட்டியின் வாயை மறு சட்டியால் மூடிச் சந்தில்லாமல் பொருத்த வேண்டியது. சீலை மண் செய்யலாகாது.மேற்கண்டவாறு பொருத்தி அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து வரவேண்டியது.அடிக்கடி திறந்து பார்த்துப் புகைந்தால் முன் தூளைப் போட்டு அழுத்திவிடவேண்டியது. ஒருமணி நேரம் சென்றபின்பு எடுக்க முக்கால் கட்டாய் இருக்கும்: எடையும் முக்காலிருக்கும் பொடித்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு:—** ¼ முதல் ½ வராகன் எடை.

**தீரும்நோய்கள்:-** மேற்கண்ட குடிநீர்களில் ஒன்றுடன் கலந்து கொடுத்து வந்தால் பாண்டு, பெருவயிறு, வயிற்றுவலி ஆகியவை தீரும்.

## 1446. பாண்டு செயநீர்

(அ) கறியுப்பு 2 பலம் (70 கிராம்), பூநீறு 2 பலம் (70கிராம் இவ்விரண்டையும் சேர்த்து நேர்மையாகப்பொடித்து வைத்துக் கொள்க.

(ஆ) நாலாங்காய்ச்சல் வெடியுப்பு 2 பலம் (70 கிராம்) சீனாக்காரம் 1 பலம் (35 கிராம்), வெண்காரம் 1 பலம் (35 கிராம்) இந்த மூன்றையும் சேர்த்து அரைத்து நேர்மையாகத் தூள் செய்து வைத்துக் கொள்க.

**செய்முறை:-** ஆறு பலம் (210 கிராம்) கொள்ளும்படியான ஒரு கலயத்தில் (அ) விலுள்ள தூளை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை அடியில் பரப்பிச் சமமாக அழுத்திவிட்டு(ஆ)விலுள்ள தூளை அதில் கொட்டி நன்றாய் அழுத்தி அதன்மீது (அ)வின் மறுபாதியைக் கொட்டி அழுத்திச் சில்லிட்டுச் சீலைமண்செய்து உலர்த்திக் கவசத்தின் நான்கு பங்கு எடை வராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்க வைத்த சரக்கானது உருகி மணி போல் இருக்கும். அதனை எடுத்துப் பொடித்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துப் பனியில் வைக்க செயநீராகும். பனி யில்லாவிட்டால் நீரில் வைத்தாகிலும், ஈர நிலத்தில் புதைத்தாகிலும் சமயோசிதம் போல் செயநீர் செய்துகொள்ளவும்,

**அளவு:-** $1\frac{1}{4}$ முதல் 2 வராகன் எடை.

**அனுபானம்:-** முள்ளங்கிக் கிழங்கை நான்காகப் பிளந்து அது கொள்ளுகிற மட்டும் வெடியுப்பைத் தூள் செய்து நிரப்பி நூலாலிறுகச் சுற்றிக் கயிற்றில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு அதன் கீழ்ப் பீங்கான் பாத்திரம் வைக்க நீர் வடியும். இதற்கு முள்ளங்கிச் செயநீர் என்று பெயர். இந்த செயநீர் 1 முதல் $1\frac{1}{2}$ பலம் (35-$52\frac{1}{2}$ கிராம்) செயநீரில் மருந்தைச் சேர்த்துக் கொடுக்கவும். காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கலாம். இன்னும் மேற்கண்ட குடிநீர் வகைகளிலொன்றிலும் கலந்து கொடுக்கலாம்.

**தீரும்நோய்கள்:-** பாண்டு, நீர்க்கட்டு, வயிற்றுவலி ஆகியவை தீரும்.

## 1447. விஷபாக எண்ணெய்

(அ) நல்லெண்ணெய், கழுதை லத்திச்சாறு, கற்பூரவள்ளி இலைச்சாறு, விஷ்ணுகிரந்தி சமூலச்சாறு, சாணாக்கி இலைச் சாறு, வெள்ளறுகுச்சாறு இவை வகைக்கு கால்படி.

(ஆ) புன்னைவேர்ப்பட்டை, நன்னாரிவேர், குரிஞ்சாவேர், மிளகரணைவேர், புங்கம் வேர்ப்பட்டை, கிளிமூக்குக் கிழங்கு, ஆகாசக்கெருடன் கிழங்கு, தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ், வசம்பு இவை வகைக்கு 1½ வராகன் எடை.

**செய்முறை:-** (அ) விலுள்ளவைகளை ஒன்றாகக் கலந்து கொள்ளவும். (ஆ) விலுள்ளவைகளில் இடிக்க வேண்டியவை களை இடித்துச் சூரணித்தும் மற்றவைகளையும் சேர்த்து அம்மி யில் வைத்து நீர் வார்த்து வெண்ணெய் போலரைத்து முன் சித்தப்படித்தினதில் கரைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித் துக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டிப் பீங்கான் பாத்திரத் தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 1 முதல் 1½ வராகன் எடை.

**அனுபானம்:-** மேற்கண்ட குடிநீர்கள், முள்ளங்கிச்செயநீர், இளநீர், வெள்ளரி விதையை அரைத்துப் பிழிந்த பால் முதலி யவைகளாகும்.

**தீரும்நோய்கள்:-** விடபாகம், வீக்கம் முதலியவைகள் தீரும்.

**பத்தியம்:-** புளி, புகை, வாயு பண்டங்கள் ஆகியவைகளை நீக்கவும்.

## 1448. விஷபாக இளகம்

மேற்றோல் சீவிய சுக்கு 2 பலம் (70 கிராம்) அரிசித்திப்பிலி மிளகு, சுத்தி செய்த அரப்பொடி, கிட்டம் இவை வகைக்கு 1 பலம் (35-கிராம்), கடுக்காய் 30 எண் (இவற்றை உடைத்து உள் விதையை நீக்கி மேற்றோலை மாத்திரம் எடுத்துக் கொள்ளவும்) கடுகுரோகணி, எவாச்சாரம், வெடியுப்பு, வெண் காரம் இவை வகைக்கு 2 வராகன் எடை (7-கிராம்), இந்துப்பு 1 வராகன் எடை (3½ கிராம்), பிரண்டைச்சாறு, கரிசாலைச் சாறு வகைக்கு 1 படி, பனைவெல்லம் 3 பலம், (105-கிராம்)

**செய்முறை:-** மேற்கண்ட சரக்குகளில் அரப்பொடி கிட்டம் தவிர இடிக்க வேண்டியவைகளை இடித்துத்தூள் செய்தும், ஒன்றாகக் கலந்தும் கொள்க. பிறகுக் கிட்டத்தை அம்மியில் வைத்துப்பொடித்து அயத்தையும் சேர்த்து அரைமணி நேரம் அரைத்துக் கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து வெண்ணெய் போலான பின்பு முன் சித்தப்படுத்தின தூளைவைத்து அரைத்து நன்றாக நேர்மையானவுடன் மீதியானக் கையாந்தகரைச் சாற்றையும் பிரண்டைச் சாற்றையும் ஒன்றாகக் கலந்து அதில் வெல்லத்தை கரைத்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் முன் சித்தப்படுத்தினதையுங் கரைத்து மத்தால் கடைநது இளகப்பதத்தில் இறக்கிப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:** $1\frac{1}{2}$ முதல் 2 வராகன் எடை. காலைமாலை இரண்டு வேளையும் பயன்படுத்தவும்.

**அனுபானம்:-** சர்க்கரை, தேன், குடிநீர் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** விடபாகம், பாண்டு, வீக்கம், காமாலை, அனல்மந்தம் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** புளி, புகை தள்ளவும். துவரம்பருப்பு, கீரைத் தண்டு, தூதுவளைப் பஞ்சாங்கம், உப்பு ஆகியவைகளை சேர்க்கவும்.

## 1449. பஞ்சபாண்டு இளகம்

(அ) வளையலுப்பு, கந்தகவுப்பு, சவ்வச்சர லவணம், அட்டுப்பு, நவச்சாரம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) இவற்றைக் கல்வத்தில் இட்டுப் பொடித்துத் தும்பையிலைச் சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு இரண்டு சாமநேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடிச் சீலை மண் செய்து கவசத்தின் ஆறு பங்கு எடை வராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

(ஆ) லாட அரப்பொடி 1 பலம் (35 கிராம்) (இதனை எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று நாள் ஊறவைத்து நாலாம் நாளரைத்து நீர் விட்டுக் கழுவி வெய்யிலில் உலர்த்திக் கொள்ளவும்) ஊசிக்காந்தம் 4 பலம் (140 கிராம்) (இதனை நெருப்பில் காய்ச்சிக் கொள்ளிலைச் சாற்றில் தோய்க்க வேண்டும். பிறகு எடுத்துக் காய்ச்சி முன்போல் தோய்க்கவும். இவ்விதம் மடக்கி

மடக்கிப் பத்துதடவை செய்து சரம் உலர்த்திப் பொடித்துக் கொள்ளவும்) கிட்டம் 4 பலம் (140 கிராம்) (இதனைநெருப்பில் காய்ச்சிக் காய்ச்சி பசு மூத்திரத்தில் ஏழுதடவை மடக்கி மடக்கித் தோய்த்து எடுத்து சரம் உலர்த்திப் பொடித்துக் கொள்ளவும்.)

(இ) மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, பறங்கிப்பட்டை, மஞ்சள் கடுக்காய்த்தோல் இவைகள் வகைக்கு 1 பலம் (35 கிராம்), சிற்றரத்தை, வாய்விளங்கம், வகைக்கு 4 பலம் (140 கிராம்) இவைகளை ஒன்றாகச் சேர்த்து இடித்து தூள் செய்துத் துணியில் வடிகட்டி வைத்துக் கொள்க.

(ஈ) எலுமிச்சம் பழச்சாறு 8 பலம் (280 கிராம்), கையாந்த கரைச்சாறு 16 பலம் (560 கிராம்), பழங்காடி 32பலம்(1 கிலோ 120 கிராம்), நவ்வல் பட்டையில் பசுவின் நீர்விட்டு இடித்து பிழிந்தசாறு 64 பலம் (2 கிலோ 240 கிராம்), (பசுவின் சிறு நீரைச் சேர்க்க விருப்பம் இல்லாதவர்கள் வெள்ளாட்டுப்பாவில் அல்லது அதிகமாக உப்புகரிக்கின்ற கிணற்றுநீரில் இடித்து முன் கண்ட அளவு எடுத்துக் கொள்ள வேண்டும்.) தோலுரித்த வெள்ளைப்பூண்டு 4 பலம்(140 கிராம்) இதனைக் குறுகலாக அரிந்து கொள்ளவும்.) பனைவெல்லம் 16 பலம் (560 கிராம்) நல்லெண்ணெய் 8 பலம் (280 கிராம்).

**செய்முறை:-** (ஈ) யிலுள்ள நவ்வல்பட்டைச் சாற்றையும், காடியையும் ஒன்றாகக் கலந்து அதில் பூண்டைச் சேர்த்து வெல் லத்தை கரைத்து அடுப்பேற்றிக் காய்ச்சிப் பாகு செய்துகொள்க (அ) (ஆ) (இ) ஆகிய மூன்றிலுள்ளவைகளில் அயம் கசந்தம், கிட்டம் இம் மூன்றையும் அம்மியில் வைத்து (ஈ) யிலுள்ள எலுமிச்சம் பழச்சாற்றையும், கையாந்தகரைச் சாற்றையும் ஒன்றாகக் கலந்து சிறுகச்சிறுகத் தெளித்து வெண்ணெய் போல் அரைத்து மற்றவைகளையெல்லாம் ஒன்றாகக் கலந்து அதிற் சேர்த்து முன் சாற்றையேச் சிறுகச்சிறுக வார்த்து மை போலரைத்து முன் சித்தப்படுத்தின பாகில் கரைத்து அடுப் பேற்றி மத்தாற் கடைந்து (ஈ)யிலுள்ள நல்லெண்ணெயையும் விட்டுக் கிண்டிக் கீழிறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** $\frac{1}{2}$ முதல் $1\frac{1}{4}$ வராகன் எடை. காலை, மாலைஇரண்டு வேளையுங் கால் மண்டலம் முதல் முக்கால் மண்டலம் பயன் படுத்தவும்.

**தீரும்நோய்கள்:-** பஞ்சபாண்டு, பித்தவெட்டை, காமாலை பெருவயிறு. கீழ்க்கவுசை, மேற்கவுசை, பேராமை ஆகியவை சம்பந்தமான அநேக நோய்கள் தீரும்.

**பத்தியம்—:** இச்சாபத்தியம். நோய் அதிகமாக இருந்தால் நேரத்திற்கேற்றாற்போல் பத்தியத்தை ஏற்படுத்தவும்.

## 1450. பாண்டு அரப்பொடி இளகம்

**சுத்தி** செய்த அய அரப்பொடி 4 பலம் (140 கிராம்) கையாந்தகரைச் சாறு, நெல்லிக்காய்ச்சாறு, கீழ்க்காய் நெல்லிச் சமூலச்சாறுவகைக்கு 6 பலம் (560 கிராம்), சர்க்கரை 80 பலம் (2 கிலோ 800 கிராம்), தேன் 10 பலம் (350 கிராம்).

**செய்முறை:—** முன் மூன்றுச் சாறுகளையும் ஒன்றாகக்கலந்து கொள்ளவும். அரப்பொடியை அம்மியில் வைத்து இந்தச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து கைவிடாமலரைத்து வெண்ணெய் போலான பின்பு எடுத்துக் கொள்க. மிகுந்த சாற்றில் சர்க்கரையைக் கரைத்துப் பாகு செய்து, பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தினதைக் கரைத்து மத்தால் கடைந்துத் தேனையும் விட்டு நன்றாகக் கலந்து கீழிறக்கி ஆறின பின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

**அளவு—:** ½ முதல் 1 வராகன் எடை.

**தீரும்நோய்கள்:—** பாண்டு. பித்த வெட்டைக்காமாலை ஆகிய நோய்கள் தீரும். இரத்தப் பெருக்கமுண்டாகும். உடல் வெளுப்பு மாறும் பசியை அதிகரிக்கச் செய்யும்.

**பத்தியம்:—** கைப்பு, புளிப்பு தள்ளி இச்சாபத்தியமாக இருக்கவும்.

**குறிப்பு:—** அய அரப்பொடிக்குப் பதிலாக இரும்புத் துருவைச் சேர்த்துக் கொள்வது உத்தமம். இன்னும் கிட்டத்தையும் மேற் கண்டவிதமாக சேர்த்துச் செய்து கொள்ளலாம். கிட்டத்தைச் சேர்த்தால் மண்டூர இளகம் எனப் பெயரிடவும். இச்செய்திகளெல்லாம் மருத்துவர்களின் அறிவாற்றலையும், அனுபவத்தையும் சேர்ந்தது.

## 1451. பாண்டு லோகச் செந்தூரம்

(அ) அய அரப்பொடி தேவையான அளவு. இதனை யொரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு எலுமிச்சம் பழச்சாற்றை மிதக்க விட்டுப் பன்னிரண்டு மணிநேரம் ஊறவைத்துக் கழுவி விடவும். பிறகு நல்லெண்ணெயை விட்டு முன்போல் பன்னிரண்டு மணி நேரம் ஊறவைத்து அரைத்துக் கழுவி எடுத்து உலர்த்தி 1 பலம் (35 கிராம்) நிறுத்தெடுத்துக் கொள்ளவும்.

நெல்லிக்காய்க் கெந்தகம் தேவையான அளவு. இதனை யொரு இரும்புக் கரண்டியிலிட்டு கொஞ்சம் பசு வெண்ணெய் போட்டுருக்கிப் பசுவின் பாலில் சாய்க்கவும். பிறகெடுத்து முன் போல் புதிய பசுவின் பாலில் சாய்க்கவும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பத்து தடவைச் சாய்க்கவும். ஒவ்வொரு தடவையும் பால் புதியதாயிருக்க வேண்டும். இவ்விதம் செய்யின் நெல்லிக் காய்க் கெந்தகம் சுத்தியாகும்.

(ஆ) மேற்கண்டபடி சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்த கம், சுத்தி செய்த இலிங்கம், சுத்தி செய்த வீரம், வெடியுப்பு இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) பூநீறு 1 வராகன் எடை (3½ கிராம்) எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** (அ)விலுள்ள அரப்பொடியையும், (ஆ)விலுள்ள கெந்தகத்தையும் சேர்த்துப் பொடித்து எலுமிச்சம் பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் பன்னிரண்டு பங்கு எடை வராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்து கல்வத்தி லிட்டுப் பொடித்து முன்போல் புடமிட்டு எடுத்துக் கொள்க. இதனைக் கல்வத்தில் இட்டு (ஆ) விலுள்ள மற்றவைகளைத் தனித்தனியாகப் பொடித்துச் சேர்த்து ஒரு மணி நேரமரைத்து நன்றாகக் கலந்த பின்பு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து, வில்லை செய்து உலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி ஐந்து சீலைமண்செய்து உலர்த்திக் கவசத்தின் ஆறுபங்கு எடை வராட்டியில் புடமிட்டு எடுக்கவும். வண்ணமிருந்தால்உத்தமம். வண்ணமில்லாவிட்டால் முன்போல் எலுமிச்சம் பழச்சாற்றை விட்டொரு சாம நேர மரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடிச் சீலைமண் செய்து உலர்த்திக் கொல்லுலையில் வைத்து அகல் சிவக்க ஊதி ஆறவிட்டு எடுக்க மாதுளம்பூ வண்ணமா யிருக்கும். இதனைப் பொடித்துப் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** ½ முதல் 1 வராகன் எடை.

**அனுபானம்:—** தேன், நெய், வெண்ணெய் முதலியவை களாம்.

**தீரும் நோய்கள்:—** பித்தவெட்டை. குருதிக்குறைவு நோய், காமாலை, முதலிய நோய்கள் தீரும்.

**பத்தியம்:—** புளி, புகை முதலியவை நீக்கவும்.

**குறிப்பு:—** அயச் செந்தூரம் அநேக வகைகளுண்டு. ஒவ்வொரு மருத்துவர்க்கும் இரண்டொருமுறை தெரிந்தேயிருக்கும். ஆனால் ஒவ்வொரு வகையிலும் மாற்றமுண்டென்பது தெரிந்த செய்தி. இந்த முறையானது சிறந்த முறைகளுள் ஒன்றென அறிந்திருக்க வேண்டியது. இதனைச் சோர்வு, வலிவின்மை, விந்து வீணாதல் முதலியவைகளிலும் தகுந்த இளக வகைகளுடன் உபயோகித்தால் சிறந்த குணத்தைத் தரும்.

## 1452. கௌசை பேதி நெய்.

பருமனானவைகளும், முற்றினவைகளுமான மூன்று தேங்காய்களைத் துருவிப்பிழிந்த தனிப்பால் ½ படி, சதுரக்கள்ளிப்பால் 1 ஆழாக்கு.

இவ்விரண்டையும் கலந்து அடுப்பேற்றி எடுத்துக் கடுகுத்திரள் பதத்திலிறக்கி இளஞ்சூட்டுடன் கப்பளியால் வடிகட்டிக் கண்ணாடிக் குடுவையில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** 1 முதல் 2 வராகன் எடை. உடல் வலிமையைச் சற்று தெரிந்து அளவையேற்படுத்திக் கொள்ள வேண்டும். காலையில் மூன்று நாள் கொடுத்தால் போதுமானது. பேதியாகும்.

**தீரும் நோய்கள்:—** இருபத்துநான்கு கௌசை நோய்களும் தீரும். வயிற்றுக் கட்டிகள், குன்மக் கட்டிகள், சூதகக் கட்டி முதலிய ஈரத்த நோய்களெல்லாம் தீரும்.

**பத்தியம்:—** மோர் சோறு கொடுக்கவும்.

## 1453. கௌசை காய இளகம்.

(அ) உயர்ந்த பெருங்காயம் 2 பலம். (70 கிராம்) காந்தம் 1 விராகன் எடை (3½ கிராம்) சவுக்காரம், துருசு, யானைத்திப்பிலி வகைக்கு 4 வராகன் எடை, (14 கிராம்), கல்லுப்பு 10 பலம் (350 கிராம்) கொடிவேலி வேர்ப்பட்டை, குறிஞ்சா வேர் வகைக்கு 2 பலம் (70 கிராம்)

(ஆ) வெங்காயச்சாறு, பேய்மிரட்டிச்சாறு, ஆற்றுத்தும்மட்டிக்காய்ச்சாறு, பேய்த்தும்பைச்சாறு இவை வகைக்கு 2

படி. சதுரகள்ளிப்பால் 1 ஆழாக்கு, எருக்கம்பால் ¼ படி, சிறு பிள்ளைகள் மூத்திரம் அல்லது உப்பு கைப்புள்ளக் கிணற்றுநீர் 2ஆழாக்கு

(இ) நார்த்தங்காய் 10, அழிஞ்சில் கொழுந்து, எட்டிக் கொழுந்து, மருதகாரைக் கொழுந்து, வகைக்கு 2 பலம் (70 கிராம்) பப்பாளிப்பழம் 2. பசுவின் மூத்திரம் அல்லது கிணற்று நீர் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** (ஆ)விலுள்ள நீர்ப் பொருட்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து கொள்க, (அ)விலுள்ளவைகளில் இடிக்க வேண்டியவைகளை யிடித்துத் தூள் செய்தும், பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்துத் தூள் செய்தும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும். (இ) யிலுள்ள நார்த்தங்காயை அறுத்து விதைகளை நீக்கிவிட்டுத் தோலுடன் அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்துக் கொள்க. மேற்படி (இ)யிலுள்ள கொழுந்து வகைகளையும் ஒன்றாகக் கலந்து வெண்ணெய் போலரைத்துக் கொள்க. பப்பாளிப் பழத்தை அறுத்து விதையை நீக்கி அம்மியில் வைத்து வெண்ணெய்போலரைத்துக் கொள்ளவும். இந்த மூன்று வகைகளையும் ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்து (அ)விலுள்ள தூளையும் சேர்த்து (இ) யிலுள்ள சிறுநீரை அல்லது கிணற்று நீரைச் சிறுகச் சிறுகவிட்டு வெண்ணெய் போலரைத்து முன் சித்தப்படுத்தி யிருப்பதில் கரைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து மத்தால் நன்றாகக் கடைந்து இளகிய பதத்தில் இறக்கி ஆறின பின்பு பீங்கான் சாடியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** 1 முதல் 3 வராகன் எடை. இது உண்பதற்கு நன்றாயிராது ஆகையால் முதலில் வெல்லம் அல்லது சர்க்கரையைப் போட்டுச் சுவைத்த பின்னர் இதனை உட்கொள்ளவும். காலையில் மட்டும் மூன்று நாள் கொடுக்கவும்.

**தீரும் நோய்கள்:—** கௌசை, கட்டி, வல்லைக்கட்டி, மகோதரம், போராமை, குன்மக்கட்டி, சூதகக்கட்டி முதலியவைகள் தீரும்.

**பத்தியம்:—** மருந்து சாப்பிடும் மூன்று நாளும், மறுமூன்று நாளும் ஆக ஆறு நாட்கள் உப்பு இல்லாமல் உணவு கொள்ளவும்.

## 1454. கௌசைப் பேய்ப்பீர்க்கு இளகம்

முற்றின பேய்ப் பீர்க்கங்காய் சுமார் 100. இவைகளை வரகு வைக்கோல் கோட்டைக் கட்டி அதற்குள் வைத்து எரித்து

வதக்கி இடித்துச் சாறு பிழிந்து ஒரு மண் பாத்திரத்திலிட்டுக் குழம்புப்பதமாகக் காய்ச்சி இரண்டு ஆழாக்கு அளந்து எடுத்துக் கொள்ளவும். புட்டி வெல்லம் 5 பலம் (175 கிராம்) சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு, சுத்தி செய்த அய அரப்பொடி இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்.) இந்துப்புத் தூள் 2 பலம் (70 கிராம்), மஞ்சள்கடுக்காய்த் தோல்தூள் 5 பலம் (175 கிராம்), பெருங்காயம் 6 வராகன் எடை (21 கிராம்), (இதனை வறுத்துத் தூள் செய்துகொள்ளவும்).

**செய்முறை:-** அரப்பொடியை அம்மியில் வைத்து மேற்படிப் பேய்ப்பீர்க்கன் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்தரைத்து வெண்ணெய் போலான பின்பு மற்றச் சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து இதில் சேர்த்து முன் சாற்றையேசிறுகச்சிறுகத் தெளித்து வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ளவும். முன் காய்ச்சின பேய்ப்பீர்க்குக் குழம்பில் வெல்லத்தைக் கரைத்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் அரைத்துச் சித்தட்படுத்தினதைக் கரைத்து மத்தால் கடைந்து இளகுபதத்தில் இறக்கி ஆறவைத்துப் பீங்கான் சாடியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 1 முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை.

**அனுபானம்:-** சர்க்கரை, வெண்ணெய், வாழைப்பழம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** அருவை, கெளசை, வெப்புப்பாவை, கெண்டை, கல் விப்புருதி, நீராம்பல், மகோதரம, பெருவயிறு, வாயுத்திரட்சி, வயிற்றுவலி, அட்டகுன்மம், நான்காம் மாறல் சுரம், மூன்றாம் மாறல் சுரம், இன்னும் பல மாறல் சுரங்கள், சுரக்கட்டி, வயிற்றிலுள்ள பல நோய்கள், மேகநோய், மேகப் புண், குட்டம், குறைநோய் முதலிய நோய்கள் தீரும்.

**பத்தியம்:-** நோயின் வலிமை, உடல்வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தாற்போல் பத்தியத்தை ஏற்படுத்தவும்.

## 1455. கட்டிக்கு இலவணாதிச் சூரணம்

(அ) வளையலுப்பு, கறியுப்பு, இந்துப்பு, அட்டுப்பு, கெந்த வெடியுப்பு. வெண்காரம், சத்திச்சாரம், நவச்சாரம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்). எருக்கம்பால், சதுரக்கள்ளிப் பால் இவை செல்லத்தக்க அளவு.

வதக்கி இடித்துச் சாறு பிழிந்து ஒரு மண் பாத்திரத்திலிட்டுக் குழம்புப்பதமாகக் காய்ச்சி இரண்டு ஆழாக்கு அளந்து எடுத்துக் கொள்ளவும். புட்டி வெல்லம் 5 பலம் (175 கிராம்) சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு, சுத்தி செய்த அய அரப்பொடி இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்.) இந்துப்புத் தூள் 2 பலம் (70 கிராம்), மஞ்சள்கடுக்காய்த் தோல்தூள் 5 பலம் (175 கிராம்), பெருங்காயம் 6 வராகன் எடை (21 கிராம்), (இதனை வறுத்துத் தூள் செய்துகொள்ளவும்).

**செய்முறை:-** அரப்பொடியை அம்மியில் வைத்து மேற்படிப் பேய்ப்பீர்க்கன் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்தரைத்து வெண்ணெய் போலான பின்பு மற்றச் சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து இதில் சேர்த்து முன் சாற்றையேசிறுகச்சிறுகத் தெளித்து வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ளவும். முன் காய்ச்சின பேய்ப்பீர்க்குக் குழம்பில் வெல்லத்தைக் கரைத்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் அரைத்துச் சித்தப்படுத்தினதைக் கரைத்து மத்தால் கடைந்து இளகுபதத்தில் இறக்கி ஆறவைத்துப் பீங்கான் சாடியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 1 முதல் 1½ வராகன் எடை.

**அனுபானம்:-** சர்க்கரை, வெண்ணெய், வாழைப்பழம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** அருவை, கௌசை, வெப்புப்பாவை, கெண்டை, கல் விப்புருதி, நீராம்பல், மகோதரம, பெருவயிறு, வாயுத்திரட்சி, வயிற்றுவலி, அட்டகுன்மம், நான்காம் மாறல் சுரம், மூன்றாம் மாறல் சுரம், இன்னும் பல மாறல் சுரங்கள், சுரக்கட்டி, வயிற்றிலுள்ள பல நோய்கள், மேகநோய், மேகப் புண், குட்டம், குறைநோய் முதலிய நோய்கள் தீரும்.

**பத்தியம்:-** நோயின் வலிமை, உடல்வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தாற்போல் பத்தியத்தை ஏற்படுத்தவும்.

## 1455. கட்டிக்கு இலவணாதிச் சூரணம்

(அ) வளையலுப்பு, கறியுப்பு, இந்துப்பு, அட்டுப்பு,கெந்த வெடியுப்பு. வெண்காரம், சத்திச்சாரம், நவச்சாரம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்). எருக்கம்பால், சதுரக்கள்ளிப் பால் இவை செல்லத்தக்க அளவு.

(ஆ) மேற்றோல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சள் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லி முள்ளி, நற்சீரகம், சுட்டெரித்த வசம்புச்சாம்பல், கொடிவேலி வேர்ப்பட்டை, அப்பளக்காரம், வெண்காரம், கண்டத்திப்பிலி சிற்றரத்தை இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) இவற்றுள் இடிக்க வேண்டியவைகளை இடித்துச் சூரணித்தும் பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்துத் தூள் செய்தும் ஒன்றாகக் கலந்துகொள்ளவும்.

**செய்முறை:-** (அ) விலுள்ளவைகளைத் தனித்தனியாகப் பொடித்து தூள் செய்து எருக்கம்பாலைச் சிறுகச்சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்துப்பிறகு சதுரக் கள்ளிப்பாலை விட்டு ஒரு நாளரைத்து மூன்றுநாள் வெய்யிலில் வைத்து, எருக்கிலை தொண்ணை செய்து அதற்குள் வைத்துப் பொட்டலங் கட்டி அதன்மேல் மூன்று சீலைமண் செய்து நூறுபலம் விராட்டியில் புடமிட்டுக் குளிர ஆறினபின் எடுத்துக் கவசத்தைப் பிரித்து அதற்குள்ளிருப்பதைக் கல்வத்திலிட்டுப் பொடித்து அதை நிறுத்து அதற்குச் சமனெடை (ஆ)விலுள்ள சூரணத்தை நிறுத் தெடுத்து இரண்டையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு ஒரு மணி நேரம் அரைத்து நன்றாக சேர்ந்த பின்பு பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 3 முதல் 4 வராகன் எடை.

**அனுபானமும் பயன்படுத்துதலும்:-** அரையாழாக்கு வெந்நீரில் மேற்கண்ட சூரணத்தை அளவுப்படி சேர்த்துக் கொடுக்க வாத சம்பந்தமான கட்டிகள் தீரும்.

பசுவின் நெய் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்) இதில் மேற்படி சூரணத்தை அளவுப்படி சேர்த்துக் கொடுக்க பித்த சம்பந்தமான கட்டிகள் தீரும்.

பசுவின் மூத்திரம் அல்லது உவர்ப்புள்ள கிணற்றுநீர் 1 ஆழாக்கு, இதில் மேற்படி சூரணத்தை அளவுப்படி சேர்த்துக் கொடுக்கக் கப சம்பந்தமான கட்டிகள் தீரும்.

புளிச்சக்காடி 1 ஆழாக்கு, இதில் மேற்படி சூரணத்தை அளவுப்படி சேர்த்துக் கொடுக்க முக்குற்ற சம்பந்தமான கட்டிகள் தீரும்.

இன்னும் இதனைத் தக்க அனுபானங்களிலிட வயிற்றுக் கட்டி எட்டு விதமும் தீரும்.

**பத்தியம்:** சமயோசிதம் போல் நோய், உடல் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியமேற்படுத்தவும்.

## 1456. குன்மக்கட்டிச் சூரணம்

மேற்றோல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, சுட்டெரித்த வசம்புச்சாம்பல், தோலுரித்த பூண்டிதழ், நற்சீரகம், கருஞ்சீரகம், ஓமம், இந்துப்பு, சீனக்காரம். துத்தம் வறுத்ததுருசு, சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், சுத்திசெய்த அய அரப்பொடி, கல்லுப்பு, மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி இவற்றுள் இடிக்க வேண்டியவைகளை இடித்துச் சூரணித்தும், பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்துத் தூள் செய்தும் வகைக்குத் தனித்தனி 1 பலம் (35 கிராம்), ஆற்றுத்தும்மட்டிக்காய் 7, பழச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:**— மேற்கண்ட வகைகளில் பூண்டை அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்துக் கொள்ளவும். பிறகு அயத்தை அம்மியில் வைத்து பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்துப் பூண்டு மற்றத் தூள்கள் ஆகியவைகளையெல்லாம் ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்து அரைத்து எல்லாம் நன்றாக சேர்ந்த பின்பு எடுத்து இரண்டு பாகமாகப் பிரித்து வைத்துக்கொள்க. ஆற்றுத்தும்மட்டிக் காய்களை நான்காகப் பிளந்து ஒரு பாகத்தை ஏழு காய்களிலும் திணித்து நிறைத்துக்கொள்க. இவ்விதமே நாரத்தங்காய்களையும் நான்காகப் பிளந்து மற்றொரு பாகத்தை அவற்றில் செலுத்திக் கொள்க. இந்த இரண்டு வகைக்காய்களையும் கடும் வெய்யிலில் வைத்து ஈரப்பசையில்லாமல் நன்றாய் உலர்த்திக் கல்லுரலில் இடித்துத் தூளாக்கிப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:**— 1 முதல் 2 வராகன் எடை.

**அனுபானம்:**— சர்க்கரை, தேன், நெய் முதலியவைகளாம். இதனை ஞாயிற்றுக் கிழமை அல்லது செவ்வாய்க் கிழமை ஆரம்பஞ் செய்து கால் மண்டலம் சாப்பிடவும்.

**தீரும்நோய்கள்:**— எரிகுன்மம், வலிகுன்மம், வாயுகுன்மம், அகுவை, பீலிகை, வெப்புப்பாவை, மகோதரம். பெருவயிறு முதலிய வயிற்று நோய்களெல்லாம் தீரும்.

**பத்தியம்:**— பாற்கஞ்சி, பாலன்னம் முதலிய இலகு போசனங்களைச் சமயோசிதம்போல் ஏற்படுத்தவும்.

**குறிப்பு:**— மேற்கண்ட மருந்தை மேற்கண்ட முறைப்படி செய்யவேண்டுமானால் கடுங்கோடையாயினும் சுமார்

இரண்டு மாதங்கள் செல்லும், ஆகையால் இதனைச் சீக்கிர மாகவும் சுலபமாகவும் செய்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் மேற்கண்டபடி தூளை சுத்திப் படுத்தி கால்படி ஆற்றுத் தும் மட்டிக்காய்ச் சாற்றையும் கால்படி நாரத்தங்காய்ச்சாற்றையும் சேர்த்து வெய்யிலில் உலர்த்தி மறுபடியும் பொடித்துக்கொண் டால் சுலபமாகவும் சீக்கிரமாகவும் இது முடிவதோடு சிறந்த குணத்தையும் தரும். இது என் சொந்த அனுபவமாகும்.

## 1457. பெருவயிற்று வில்லை

சுத்தி செய்த இரசம், மஞ்சள் கடுக்காய்த்தோல், நெல்லி முள்ளி தான்றிக்காய்த்தோல், மேல்தோல் சீவி சுக்கு, மிளகு அரிசித்திப்பிலி, கடுகுரோகணி, கோஷ்டம் இவை வகைக்கு 2வராகன் எடை (7 கிராம்) சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந் தகம், மைசாட்சி இவை வகைக்கு 3 வாரகன் எடை(10½கிராம்) சவுக்காரம், உள்முளை. முளையிலை நீக்கினகாட்டாமணக்குப் பருப்பு இவை வகைக்கு 4 வராகன் எடை (14 கிராம்).(காட்டா மணக்குப் பருப்பைச் சற்று ஓட்டில் வறுத்துக் கொள்ளவும். சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு 32 வராசன் எடை (112 கிராம்), வேப்பிலைச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:**— இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்றாகக் கறுத்தபின்பு தனியே எடுத்து வைத்துக் கொள்க. ஆமணக்கம்பருப்பு, நேர்வாளப்பருப்பு ஆகிய இரண்டையும் தவிர மற்றச் சரக்குகளில் இடிக்க வேண்டியவை களைத் தனித்தனியே இடித்துத் தூள் செய்து, தனித்தனியே நிறுத்தெடுத்துக் கொள்ள வேண்டியது. பொடிக்க வேண்டியவைகளை பொடித்துத் தனித்தனி தூள்செய்து தனித் தனியே நிறுத்தெடுத்துக் கொள்ள வேண்டியது. இந்த இரண்டு வகைகளையும் முன் அரைத்த இரசகெந்தித் தூளையும் ஒன்றாகக் கலந்து வைத்துக்கொள்க. நேர்வாளத்தையும் ஆமணக்கம் பருப்பையும் கல்வத்திலிட்டு வெண்ணெய்போல் அரைத்து முன் சூரணத்தையும் சேர்த்து இரண்டு மணி நேரம் அரைத்து எல்லாம் நன்றாகச் சேர்ந்த பின்பு வேப்பிலைச் சாற்றை மிதக்க விட்டு ஒருநாள் ஊறவைத்து மறுநாள் மேற்படி வேப்பிலைச் சாற்றையே சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்து மைபோலான பின்பு ஒரு வராகன் எடையுள்ள வில்லை மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு**—: ½ முதல் 1 மாத்திரை.

**அனுபானம்:**— சர்க்கரை, வாழைப்பழம், வெல்லம், வெண்ணெய் ஆகியவைகளாம். இதனை உட்கொண்டு மேலே வெந்நீர் பருகவும்.

**தீரும்நோய்கள்:**— பெருவயிறு, மகோதரம் முதலியவை தீரும்.

**பத்தியம்:**— சமயோசிதம் போல் ஏற்படுத்தவும்.

**குறிப்பு:**— இது ஒருவகை உயர்வான மருந்தென்பது அனுபவசாலிகளுக்குத் தெரியும். ஆனால்இதுஆச்சரியப்படும்படியாகச் சிலருக்கு அதிசீக்கிரத்தில் குணத்தைக் கொடுத்திருக்கிறது சில உடலினர்களுக்கு அதிகமாக பேதியாகி மலத்தோடுஇரத்தம் கண்டிருக்கிறது. ஆகையால் மருத்துவர்கள் உடல்நிலைமையை நிதானித்து உபயோகித்தால் நோய் குணப்படுவதுடன் நல்ல கீர்த்தியடைய ஏதுவாகும். மகோதரம் இலேசான வியாதியன்று; கடின சாத்தியமென்பது தெரிந்த விஷயம்.

## 1458. சித்தாமணி எண்ணெய்

(அ) சிற்றாமணக்கெண்ணெய் 8 பலம் (280 கிராம்), வேலிப்பருத்தி சமூலச்சாறு 64 பலம் (2 கிலோ 240 கிராம்).

(ஆ) மஞ்சள் கடுக்காய்த்தோல் 8 பலம் (280 கிராம்).இதில் ஒருபடி நீரை விட்டு நான்கில் ஒரு பாகமாகக் காய்ச்சிச் சுண்ட வைத்து வடிகட்டித் திப்பி நீக்கிக் குடிநீரை எடுத்துக் கொள்க.

(இ) கருஞ்சீரகம், இந்துப்பு. வெண்காரம், பெருங்காயம், (இதனைப் பொரித்துக் கொள்ளவும்)அரிசித் திப்பிலி இவற்றின் தனித்தனித் தூள் வகைக்கு ¼ பலம் (8 ¾ கிராம்).

(ஈ) தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் 8 பலம் (280கிராம் சுத்தி செய்த நேர்வாளப்பருப்பு. 1 பலம் (35 கிராம்). சதுரக் கள்ளிப்பால் 1 பலம் (35 கிராம்.)

(உ) கஸ்தூரிமஞ்சள், கடுகுரோகிணி, குங்குமப்பூ: கோரோசனை. இரசகற்பூரம் இவை வகைக்கு ⅛ வராகன் எடை. இவற்றுள் குங்குமப்பூவைத் தவிர மற்றவைகளைத் தனித்தனிச் சூரணித்தும் தனித்தனிப் பொடித்தும் ஒன்றாகக் கலந்து குங்குமப் பூவைக் கல்வத்திலிட்டுக் கொஞ்சம் பாலை வார்த்து வெண்ணெய்போல் அரைத்து முன் சித்தப் படுத்தி இருக்கிற கோரோசனை முதலியவைகளையும் சேர்த்து ஒரு மணிநேரம் அரைத்து ஈரமில்லாமல் வெய்யிலில் உலர்த்தி மறுபடியும் பொடித்துக் கொள்க.

**செய்முறை:-** (அ) வினும் (ஆ) வினுமுள்ள திரவங்களை ஒன்றாகக் கலந்து கொள்க. (இ)யினுள்ளவைகளைக் கல்வத்தில் அல்லது அம்மியில் வைத்துக் கொஞ்சம் நீர்வார்த்து வெண்ணெய் போலரைத்து முன் சித்தப்படுத்தின திரவத்தில் கரைத்து விடுக. (ஈ) யிலுள்ளவைகளை வெண்ணெய் போலரைத்தும் மேற்படி மருந்தில் கரைத்து விடுக. பிறகு அதனை அடுப்பேற்றி இரண்டு நாள் இளஞ்சூடு காட்டிவந்து மூன்றாம் நாள் சிறு தீயாக எரித்துக் கடுகு திரள் பதத்திலிறக்கி வடிகட்டி (உ) விலுள்ள தூளைத் தூவி நன்றாகக் கலந்து புட்டியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு:-** 2 முதல் 3 வராகன் எடை.

உடல் பலத்திற்குத் தகுந்தபடி காலை ஒருவேளைமாத்திரம் 1 முதல் 15 நாள்கள் சமயோசிதம்போல் உபயோகிக்கவும்.

**அனுபானம்:-** இளநீர், காப்பி, தேநீர், குடிநீர்கள் முதலியவைகளாம். தக்க அனுபானங்களில் கொடுக்க அநேக நோய்கள் தீரும்.

**தீரும்நோய்கள்:** பஞ்சபாண்டு, மகோதரம், பெருவயிறு, நீராமை, கவுசை, கெண்டை, விப்புருதி, சலக்கோவை, உதிரக்கட்டி முதலிய எல்லா வகைக் கட்டிகள், ஊறல், கிரந்தி, பதினெட்டு வகை குட்டங்கள், குன்மங்கள், அரையாப்பு, அண்டவியாதி, புண்கள், குடோரம், சொறி, கடி, தடி, யானைக்கால் வீக்கம், யானைக்கால் வீக்கசுரம் ஆகியவைகள் தீரும். இன்னும் மற்ற அனைத்து நோய்களுக்கும் கொடுக்கலாம். மலடு நீங்கிக் கர்ப்பந்தரிக்கும்.

**பத்தியம்:-** நோய் வலிவிற்குத் தகுந்தபடியும் சமயோசிதம் போலவும் உப்பைச் சேர்த்தும் சேர்க்காமலும், புளி, புகை வாயு பண்டங்களைத் தள்ளியும் பத்தியமேற்படுத்த வேண்டியது.

**குறிப்பு:-** இது சிறந்த மருந்துகளில் ஒன்று. பெயர் பெற்ற மருத்துவர்களிடத்தில் இது எப்போதும் சித்தமாக இருக்க வேண்டியது. அவர்கள் சக்திக்குத் தகுந்தபடி இதனை அதிக அளவாகச் செய்து வைத்துக் கொள்ளலாம். இதுநாள் படநாள் பட சிறப்புடைய குணத்தைத் தரும்.

## 1459. மகோதர உசிதம்

மருக்காரப்பழத்தைத் துவைத்துச் சாறு பிழிந்து சுமார் ஒரு ஆழாக்கு சாற்றில் இரண்டுசாண் அகலம் இரண்டு சாண் நீளம் உள்ள மெல்லிய துணியைத் தோய்த்து உலர்த்தி வைத்துக் கொள்ளவும். இதில் ஒரு அங்குலம் கிழித்து அரை அல்லது ஒரு ஆழாக்கு இளநீரில் பிசைந்து பருகச்செய்விக்கவும். பேதியாகும் நோயின் வலிவு, உடல் வலிவு ஆகியவற்றிற்குத் தகுந்தபடி ஐந்துநாள், ஏழுநாள், ஒன்பது நாள் உபயோகிக்கவும். கழிச்சல் அதிகமானால் குளிர்ந்த தண்ணீரால் கால் முகங் கழுவி இளநீர் பருகச்செய்யப் பேதி கட்டும். இன்னும் பேதி நிற்காவிட்டால் ஏலரிசி, தக்கோலம், அகில், சந்தனம், இலவங்கம் இவைகளைச் சமமாக சேர்த்துக் குடிநீர் செய்து பருகச்செய்விக்கவும். அல்லது வசம்பைக் கரியாக்கித் தேனில் இழைத்துக் கொடுக்கவும். அல்லது குளிர்ந்த நீரில் மெல்லிய துணியை நனைத்து அடிவயிற்றில் போட்டு வைக்கவும். ஈரமுலராமல் அடிக்கடிமாற்றி மாற்றிப் போட்டுக் கொண்டுவர பேதி கட்டுப்படும்.

**தீரும்நோய்:-** மகோதரம் தீரும்.

## 1460. மகோதர உசிதம் (வேறு)

கடல்நுரையை அஞ்சனம்போல் பொடித்துப்புட்டியில் வைத்து கொள்ளவும். இதில் கால் வராகன் எடை எடுத்துஅரை ஆழாக்கு வெள்ளாட்டுப் பாலில் கரைத்துப் பருகச் செய்யவும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் அரைமண்டலம் ஒரு மண்டலம் உபயோகிக்க மகோதரம் தீரும்.

**பத்தியம்:-** சமயோசிதம் போலேற்படுத்தவும்.

## 1461. மகோதர லவண இளகம்

(அ) அப்பளக்காரம், சவுக்காரம், வெண்காரம், வெடியுப்பு, நவச்சாரம், சூடன், சுத்தி செய்த நேர்வாளம், அன்னபேதி, கடல்நுரை, சீனாக்காரம், பெருங்காயம், (இதனை வறுத்துக் கொள்ளவும்) வளையலுப்பு, கெந்தவெடியுப்பு, இந்துப்பு, கறியுப்பு அட்டுப்பு இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்).

(ஆ) பிள்ளைகள் மூத்திரம் அல்லது கடல்நீர், அல்லது அதிக உவர்ப்பான கிணற்று நீர் 1 படி, ஆற்றுத்தும்மட்டிக் காய்ச் சாறு 1 படி, பப்பாளிப்பழம் 2, பனைவெல்லம் 1 பலம் (35 கிராம்).

**செய்முறை:—** (அ) விலுள்ளவைகளில் நேர்வாளத்தைக் கல்வத்தில் இட்டு வெண்ணெய் போல் அரைத்து மற்றச் சரக்கு களையும் தனித்தனிப் பொடித்து ஒன்றாகக் கலந்து இதில் சேர்த்து ஒரு மணி நேரம் அரைத்து நன்றாகச் சேர்த்து வைத்துக் கொள்க. (ஆ) விலுள்ள திரவங்களை ஒன்றாகக் கலந்து வெல்லத்தையும் பப்பாளிப்பழத்தையும் அதில் கரைத்துக் காய்ச்சிப்பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தினதை யும் அதில் கரைத்து இளக பதத்தில் இறக்கி ஆறின பின் புட்டி யில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** 1 முதல் 2 வராகன் எடை, காலை மாலை இரண்டு வேளையும் அரை மண்டலம் ஒரு மண்டலம் உபயோகிக்கவும்.

**அநுபானம்:—** முன் சொல்லியிருக்கிற குடிநீர்கள், கீழ்க்காய் நெல்லிசமூலக் குடிநீர், இளநீர், வெள்ளரிவிதையை அரைத்துப் பிழிந்தபால் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:—** மகோதரம், பெருவயிறு, கவுசைக்கட்டி, உதிரக்கட்டி, சுரக்கட்டி, குன்மக்கட்டி, பஞ்சபாண்டு ஆகியவை தீரும்.

**பத்தியம்:—** சமயோசிதம் போலேற்படுத்தவும்.

## 1462. அஷ்டகுன்ம உருண்டை

தோலுரித்து முளை போக்கின வெள்ளைப் பூண்டிதழ் 4 பலம் (140 கிராம்), அரிசித்திப்பிலித் தூள், மிளகுத் தூள், கண்டத்திப்பிலித்தூள், ஓமத்தூள் இவை வகைக்கு 2 பலம் [70 கிராம்] வெள்ளைச்சாரணை வேர், வேளைவேர், முருங்கை வேர்ப்பட்டை இவற்றின் தூள் வகைக்கு 1 பலம் (35 கிராம்), சுத்தி செய்த அரப்பொடி 2 பலம் (70 கிராம்), துணியில் வடி கட்டிய கற்சுண்ணம் 1 பலம் [35கிராம்], பழச்சாறு செல்லத் தக்க அளவு.

**செய்முறை:—** அய ஆரப்பொடியை அம்மியில் வைத்து பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போல ரைத்துப் பிறகு வெள்ளைப் பூண்டைச் சேர்த்தரைத்து நன்றாக மசிந்த பின்பு முன் தூள்களையும் ஒன்றாகக் கலந்து இதில் சேர்த்துப் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் அரைத்துக் கால் வராகன் எடை உள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** 1 முதல் 2 மாத்திரை.

**அனுபானம்:**— தேன், நெய், சர்க்கரை குடிநீர் வகைகள் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:**— அட்ட குன்மங்களும் தீரும், வயிற்றுவலி அனல் மந்தம், செரியாமை ஆகியவைகளும் தீரும்.

**பத்தியம்:**— பசுவின் பால், முருங்கைக்கீரை, முருங்கைக் காய், அரைக்கீரை, துவரை ஆகியவைகளாகும்.

**குறிப்பு**— இத்த முறையில் அய அரப்பொடிக்குப் பதிலாக இரும்புத்துருவை அல்லது கிட்டத்தைச் சேர்த்துச் செய்து கொள்வது உசிதம்.

## 1468. அட்டகுன்ம பச்சைவெட்டு பற்பம்

சுத்திசெய்த இரசம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இரச கற்பூரம் $1\frac{1}{2}$ வராகன் எடை, இரச செந்தூரம் $1\frac{1}{4}$ வராகன் எடை, மனோசிலை [illegible] வராகன் எடை, வெண்காரம் $\frac{1}{2}$ வராகன் எடை, வீரம் 18 குன்றிமணி எடை, நில உப்பிலிக் கொடிச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:**— மேற்கண்ட சரக்குகளில் இரசத்தைத் தவிர மற்றவைகளைத் தனித்தனியே பொடித்து வைத்துக்கொள்க, பிறகு இரசம், இரசகற்பூரம், வீரம் ஆகிய மூன்றையும் கல்வத்தில் இட்டு உப்பிலிக்கொடிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்து இரசம் மடிந்தபின்பு மற்றத் தூள்களையும் ஒன்றாகக் கலந்து இதில் சேர்த்து மேற்படி சாற்றையே சிறுகச் சிறுக வார்த்து மூன்று சாம நேரம் அரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்து பீங்கானில் வைத்து நான்குநாள் வெய்யிலில் வைத்துக் கொஞ்சமும் ஈரமில்லாமல் உலர்ந்த பின்பு மறுபடியும் பொடித்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :**— $\frac{1}{2}$ முதல் 1 அரிசி எடை.

**அனுபானம் :**— வெல்லம், சுக்கை அரைத்து விழுது. இளக வகைகள் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:**— எட்டுவகைக் குன்ம நோய்களும் தீரும். இரைப்பையிலுள்ள வாயு, அனல் மந்தம், வயிற்றுவலி முதலியவைகளும் தீரும்

**பத்தியம்:**— வெள்ளாட்டுப்பால் சோறு உண்ணவும் மற்றொன்றுமாகாது.

## 1464. குன்ம உசிதம்

உள்ளித்தைலம் 1 ஆழாக்கு, சாராயம் 1 ஆழாக்கு இவ்விரண்டையும் கலந்து புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு:-** 1 முதல் 5 வராகன் எடை. உடல் வலிவு, நோய் வலிவு, ஆகியவைகளுக்கு தக்கபடி நாளடைவில் அதிகப்படுத்திக் கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** எட்டுவகைக்குன்ம நோய்கள், செரியாமை நோய்கள், மந்தாக்கினி நோய், புளித்தேப்பம், வயிற்றிலுள்ள வாயுவுகள் முதலியவை தீரும்.

**பத்தியம்:-** இலகு பத்தியம் ஏற்படுத்தவும்; வாயு உணவுப் பண்டங்களை நீக்கவும்.

## 1465. எரிகுன்ம உசிதம்

தாமரை விழுதுச்சாறு, காடி இவை வகைக்கு ½ ஆழாக்கு, வெல்லம் 5 வராகன் எடை. மேற்கண்ட இரண்டையும் கலந்து வெல்லத்தைக் கரைத்துச் செய்யவும். இவ்விதம் காலை, மாலை இரண்டுவேளையும் மூன்று நாள் செய்ய எரிகுன்மம் தீரும்.

## 1466. உசிதம் [வேறு]

பெருங்காயம் ½ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), இந்துப்பு ½ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), துணியில் வடிகட்டிய கற்சுண்ணாம்பு ½ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்). இம் மூன்றையும் சேர்த்தரைத்து மூன்று பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு வாழைப் பழத்துக்குள் வைத்துச் சாப்பிட வேண்டும். அடுத்த இரண்டு நாளும் ஒவ்வொன்றை உட்கொள்ளவும். இவ்விதம் செய்யின் எரிகுன்மம் தீரும்.

## 1467. சத்திகுன்ம உசிதம்

முடக்கொத்தான் சமூலத்தில் கொஞ்சம் தோலுரித்த பூண்டையும் கொஞ்சம் வசம்பையும் சேர்த்திடித்துப் பிழிந்தசாறு ½ ஆழாக்கு இதனைக் காலையில் பருகச் செய்யவும். இவ்விதமே அடுத்த இரண்டு காலையிலும் பருகச் செய்யின் சத்திகுன்மந் தீரும்.

## 1468. சத்திகுன்ம உசிதம் (வேறு)

வயல்பயிறு ½ படி, ஒருதேங்காயின் துருவல், பனைவெல்லம் 2 பலம் (70 கிராம்) பசுவின் வெண்ணெய் தேவையான அளவு

பயற்றை வேகவைத்து அதில் வெல்லத்தைத் தூள் செய்து போட்டுத் தேங்காயையும் சேர்த்து வெண்ணெயையும் போட்டு நன்றாகப் பிசைந்து எட்டுப் பாகமாக்கி வைத்துக் கொண்டு ஒவ்வொரு பாகத்தை ஒவ்வொரு நாள் சாப்பிடவும். சத்தி குன்மம் தீரும்.

**குறிப்பு:-** எட்டு நாள் இதனை வைத்துக்கொண்டால் கெட்டுப் போகுமாகையால் நான்கு நாளைக்கொரு தடவை செய்து கொள்வது உத்தமம். இதனை உபயோகிக்கும்போது வேறு ஆகாரம் கூடாது. அவசியமானால் சொற்ப ஆகாரம் உபயோகிகக வேண்டும். இது மருந்தாகவும் ஆகாரமாகவுமிருப் பதால் அவரவர்கள் தம்தம் நிலைமைக்கு ஏற்றவாறு செய்து குணமடைவார்களாம்

## 1469. வலிகுன்ம உசிதம்

முருங்கைக் கொழுந்து 2½ பலம் (87½ கிராம்), இதனை அம்மியில் வைத்துப் பசுவின்பால் தெளித்து வெண்ணெய் போலரைத்து இரண்டு ஆழாக்குப் பசுவின் பாலில் கரைத்துப் பருகச் செய்விக்கவும. இவ்விதம் மூன்று காலையில் செய்யின் வலிகுன்மம் தீரும்.

**பத்தியம்:-** இலகு உணவு செய்விக்கவும். கஞ்சியினங் களாகும். பழங்கள் கொடுக்கலாம்.

## 1470. குன்மவாயு உசிதம்

உவர்மண் ½ படி இதனை முக்காற்படி தண்ணீரில்போட்டுக் கரைத்துத் தெளிவிறுத்துக் கொள்ளவும். பருமனான தேங்காய் 1 இதனைத் துருவித் தனிப் பாலெடுத்துக் கொள்ளவும். ஒரு புதுச் சட்டியில் பொடியுப்பைப் போட்டுக் கருக்கிக் கொட்டி விட்டு முன் இரண்டையும் கலந்துவிட்டுக் குழம்புப் பதமாகக் காய்ச்சியிறக்கிப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்க.

இதனை ஆறு பாகமாக்கிக் காலை, மாலை இரண்டு வேளையும் மூன்றுநாள் உட்கொள்ளவும். தேங்காய்ப்பால் அன்னம் சாப்பிடவும். புளி,கசப்பு ஆகியவைகளைத் தள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** குன்மவாயு, வலிகுன்மம், வயிற்றுவலி ஆகியவை தீரும்.

## 1471. அஷ்டகுன்மக் கிட்டக் குளிகை

*பழக்கிட்டத் தூள் 3 பலம் (105 கிராம்), வடிகட்டின கல் சுண்ணம் 3 பலம் (105 கிராம்), அன்னபேதித் தூள் ¼ பலம் (8¾ கிராம்), ஏலரிசிச் சூரணம் 1 பலம் (35 கிராம்), தோல் போக்கியிடித்த இஞ்சிச்சாறு செல்லத்தக்க அளவு.*

**செய்முறை:—** மேற்கண்டவைகளைக் கல்வத்திலிட்டு ஒரு மணி நேரமரைத்து எல்லாம் சேர்ந்த பின்பு இஞ்சிச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாமம் அரைத்துக் கால் வராகன் எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** 1 முதல் 2 மாத்திரை. காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

**அநுபானம்:—** இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர், சோம்புக் குடிநீர், சோம்புத் தீநீர் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:—** அஷ்டகுன்மங்களும் தீரும்.

**பத்தியம்:-** இலகு உணவாக ஏற்படுத்தவும், வாயுப் பண்டங்களை நீக்கவும்.

## 1472. தேங்காய்ச் சூரணம்

மேற்றோல் நீக்கின சுக்கு, மிளகு அரிசித்திப்பிலி, மஞ்சள் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, வசம்பைச் சுட்டெரித்த சாம்பல், கடுகுரோகணி, இந்துப்புத் தூள், வறுத்துப் பொடித்த பெருங்காயத்தூள், தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ், சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், வெண்காரதூள், சுத்திசெய்த காந்தத்தூள், சுத்திசெய்த அரப்பொடி, அல்லது அயத்துரு அல்லது கிட்டத்தூள், சுத்தி செய்த கௌரிப்பாடாணம் இவை வகைக்கு 1¼ வராகன் எடை சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு 1¼ வராகன் எடை எருக்கம் பருப்புச் சாம்பல், நெற்சாம்பல், நாயுருவிச் சாம்பல் இவை வகைக்கு 1¼ வராகன் எடை. முற்றின தேங்காய்1, எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** அயத்தையும் கௌரியையும் கல்வத்திலிட்டு பொடித்துப் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு அரைத்து வெண்ணெய் போலான பின்பு பூண்டையும் நேர்வாளப் பருப்பையும் சேர்த்தரைத்து வெண்ணெய் போலான பின்பு மூன்கண்ட சரக்குகளில் இடித்துச் சூரணிக்க வேண்டியவை களைச் சூரணித்தும் பொடித்துத் தூள்செய்ய வேண்டியவை

களைப் பொடித்துத் தூள்செய்தும் இவ்விரண்டு வகைகளையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிருக்கிற மருந்துடன் சேர்த்து இரண்டுமணி நேரம் அரைத்துத் தேங்காயைக் கண் திறந்து அதற்குள் இந்த மருந்தைச் செலுத்தித் துவாரத்திற்கு வேப்ப முளையை அடித்துத் தேங்காய்க்கு எருமைச்சாணிக் கவசம் செய்து நூறு பலம் வராட்டியில் புடமிட்டுக் கவசித்திருக்கிற சாணியின் மீது நெருப்புப்பிடித்து தேங்காய் வெடித்தவுடன் நெருப்பைத் தள்ளித் தேங்காயை எடுத்து ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு கொட்டாங்கச்சியை நீக்கி விட்டுத் தேங்காய்க் குள்ளிருக்கிற மருந்தை விழிப்புடன் எடுத்துக் கல்வத்தில் வைத்துக்கொள்ளவும். தேங்காயின் மீதுள்ள புறணியை நீக்கி விடவும். அது இருப்பதனால் செம்மையாக அரை படுகிற தில்லை ஆகையால் அதை நீக்கி விடவும் பிறகு தேங்காயைச் சிறு துண்டுகளாகத் துண்டித்து இதனை முதலில் வெண்ணெய் போலரைத்துக் கொண்டு பிறகு மற்ற மருந்தையும் சேர்த்து மசிய அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 2 முதல் 4 குன்றிமணி எடை உடல் வலிவை நிதானிக்கவேண்டியது. இதற்காக ஆரம்பத்தில் கொஞ்சம் கொடுத்து உடல் இயல்பைத் தெரிந்து பிறகு அதிகமாக உபயோகப்படுத்தலாம்.

**அனுபானம்:-** பனை வெல்லம், சர்க்கரை.

**தீரும்நோய்கள்:-** அஷ்டகுன்மம், வலிகுன்மம், உட்குத்து, புறவீச்சு, முதலிய கடினமான நோய்களெல்லாம் தீரும்.

**பத்தியம்:-** நோயின் வலிவு, உடல் வலிவு ஆகியவை களுக்குத் தகுந்தபடி பத்தியமேற்படுத்தவும்.

## 1473. ஆமிலபற்ப மாத்திரை

புளியம் புறணிச் சாம்சல். உவருப்பு, இந்துப்பு, வெடியுப்பு வளையலுப்பு, சுத்திசெய்த இரசம், கெந்தகம், கருநாபித் தூள் இவை வகைக்கு ½ பலம். எலுமிச்சம்பழச்சாறு செல்லத் தக்க அளவு.

**செய்முறை:-** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்து அரைத்து நன்றாகக் கறுத்த பின்பு உப்பினங்களைத் தனித் தனியே பொடித்து மற்ற சூரணத்தையும் சேர்த்து முன் சித்தப் படுத்தினதுடன் கலந்து ஒரு மணி நேரமரைத்து எல்லாம் சேர்ந்த பின்பு பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்துப்

பன்னிரண்டு சாமநேரம் அரைத்து ஒரு குன்றிமணி எடை மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி புட்டியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு:** 1 முதல் 2 மாத்திரை. காலை மாலை இரண்டு வேளையும் பத்து முதல் இருபதுநாள் உட்கொள்ளவும்.

**அனுபானம்:-** சர்க்கரை, தேன், வெல்லம், வாழைப்பழம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்-:** குன்மம், வயிற்றுவலி, குடலிரைச்சல் அனல் மந்தம், புளியேப்பம், உட்டிணவாயு ஆகியவை தீரும்.

**பத்தியம்-:** நோயிற்குத் தகுந்தபடி இலகு உணவுப் பத்தியம் ஏற்படுத்தவும்.

## 1474, கலிங்காதிக் குழம்பு

ஆற்றுத்தும்மட்டிக்காய்ச் சாறு 2 ஆழாக்கு: கறியுப்பு 3 ஆழாக்கு, வெள்ளாட்டுக் கோமயம் அல்லது, கடல்நீர் 4 ஆழாக்கு மஞ்சள் கடுக்காய்த்தோல் சூரணம் 5 பலம் (175 கிராம்), மிளகுச் சூரணம் 5 பலம் (175 கிராம்), தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ் ½ பலம் (17½ கிராம்) (இதனை வெண்ணெய்போல் அரைத்துக் கொள்ளவும்) மேற்றோல் சீவின சுக்குச் சூரணம் ½ பலம் (17 ½ கிராம்)

**செய்முறை:—** இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் குழம்புப் பதத்தில் இறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** ½ முதல் 1 வராகன் எடை காலை, மாலை இரண்டு வேளையும் கால் முதல் அரை மண்டலம் சமயோசிதம் போலச் சாப்பிடவும்.

**அனுபானம்:-** சர்க்கரை, வெல்லம், வாழைப்பழம் வெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** அகட்டு வாயு, அகட்டு வாயுக் கட்டிகள், குன்மவாயு, குன்ம வாயுக் கட்டிகள், கவுசை, ஆம்பல், பெரு வயிறு பலவகைக் கட்டிகள், பலவகை வாயுவுகள் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** வாயு பண்டங்கள், சுடும் பண்டங்கள், செரியாமை பண்டங்கள் முதலியவைகளை நீக்கவும்.

## 1475. மலட்டெண்ணெய்

**(அ)** பசுவின் நெய், நல்லெண்ணெய், சிற்றாமணக்கெண்ணெய், தேங்காயெண்ணெய் இவை வகைக்கு 2 பலம்(70கிராம் ஆற்றுத்தும்மட்டிக்காய்ச் சாறு 12 பலம் (420 கிராம்),உள்ளித் தைலம் 6 பலம்(210 கிராம்): பூநூல் திரிக்கிற பருத்திப் பிஞ்சை தோல் நீக்கி எருக்கம்பால் வீட்டு இடித்துப் பிழிந்தசாறு 3பலம் (105 கிராம்).

**(ஆ)** சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு 1 பலம்

**செய்முறை-:** (அ)விலுள்ள திரவங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து அதல் வாளத்தைநேர்மையாகப் பொடித்துக் கரைத்துச் சிறு தியாக எரித்துக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ வராகன் எடை. உடல்வலிவு, நோய் வலிவறுத தகுநததுபோல் மூன்றுநாள், ஐந்து நாள்,ஏழுநாள் கொடுக்கவும்

**அனுபானம்:-** காட்ப்பபருகுநீர், தேநீர், பால், வெந்நீர் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:.** மலடு நீங்கிக் கர்ப்பந்தரிக்கும்; சூலைச் கட்டு குன்மம், கிருமிகள், அகட்டுச்சூலை, விப்புருதி, மலடு அண்டவாயு ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** புளி, புகை தள்ளி இராத்திரியில் பாலன்னம் சாப்பிடவும்.

## 1476. உருத்திர வாயுச் சூரணம்

ஓமம், நற்சீரகம், பொரித்த பெருங்காயம், இந்துப்பு, மேற்றோல் சீவின சுக்கு, அரிசித்திப்பிலி, செவ்வியம், கண்டந் திப்பிலி, கொடிவேலி வேர்ப்பட்டை, சுத்தித்த சிவதைவேர், சுத்தி செய்த வாளம், சாம்பல் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) மஞ்சள் கடுக்காய்த் தோல், முருங்கை வேர்ப்பட்டை இவை வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்).

**செய்முறை:-**வாளத்தைக் சல்வத்தில் இட்டு நேர்மையாக அரைத்து மற்ற வகைகளை இடித்துத் துணியில் வடிகட்டிய சூரணத்தை இதில் சேர்த்து' இரண்டுமணிநேரம் அரைத்து நன்றாக சேர்ந்தபின்புபீங்கான்பாத்திரத்தில்பத்திரப்படுத்தவும்

**அளவு:-** $1\frac{1}{4}$ முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை.

**அனுபானம்:-** வெந்நீர், காப்பிப்பருகுநீர், தேநீர் பானம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்:-** உருத்திரவாயு, மாரடைப்பு, மார்வலி ஆகியவைகள் தீரும்.

**பத்தியம்:-** வாயு பண்டங்கள், சூடான உணவுப்பண்டங்கள் ஆகியவைகளை நீக்க வேண்டியது.

**குறிப்பு:-** நடுமார்பில் பாரமாய்க் கனத்து அரையணா அளவு வலித்து, அதற்குநேரே முதுகிலும் நொந்தால் இதுகடின சாத்தியம்; ஒரு பக்கத்தில் நொந்தால் இது சாத்தியம்.

## 1477. உருத்திரவாயு மெழுகு

கீழ்க்கண்டபடி சுத்தி செய்த வீரம், நவச்சாரம், சுத்தி செய்த இரசகற்பூரத்தூள், மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி இவற்றின் தனித்தனித்தூள் வகைக்கு 1 வராகன் எடை, ($3\frac{1}{2}$ கிராம்), சிற்றாமணக்கெண்ணெய் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** முன் மூன்று சரக்கையும் தனித்தனியே பொடித்து ஒன்றாகக் கலந்து மற்றத் தூள்களையும் அதனுடன் சேர்த்து இரண்டு மணி நேரம் அரைத்து நன்றாகச் சேர்ந்த பின்பு விளக்கெண்ணெயைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து மெழுகு பதத்தில் வழித்துப் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** $\frac{1}{2}$ முதல் 1 குன்றிமணி எடை.

**அனுபானம்:** சர்க்கரை, வெண்ணெய், பாலேடு முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** உருத்திரவாயு, சன்னி, சயித்தியம், இசிவு, உதிரவாயு, உதிரச்சிக்கல், பிரசவ உதிரக்கட்டு, சூலைக்கட்டு ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** வாயு பண்டங்கள், சூடான பொருள்கள், செரியாத பண்டங்கள் ஆகியவைகளை நீக்கி இன்னும் சமயோசிதம் போல் பத்தியம் வைக்கவேண்டியது.

**வீரச்சுத்தி:-** வீரம் 1 பலம் (35 கிராம்), சூடன் 1 பலம் (35 கிராம்), படிக்காரம் 1 பலம் (கிராம்)பின்கண்ட இரண்டையும் நேர்மையாகப் பொடித்து வைத்துக் கொள்க. வீரக்கட்டியை ஒரு அகலில் வைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துக் கட்டியில் சூடுகண்டவுடன் மேற்படி தூளைச் சிட்டிகையளவு எடுத்து அதன்மீது தூவ அது உருகும். இரும்பு சலாகையால் மெதுவாகப் புரட்டி வறுக்கவும். பிறகு முன்போல் தூளைப் போடவும் வீரம் புகையாமல் விழிப்புடன் அடிக்கடி தூளைப் போட்டு வறுத்து வறுத்துத் தூளெல்லாம் சென்று எரிந்தவுடன் ஆறின பின் வீரக் கட்டியை எடுத்து அதன்மீதுள்ள கருக்கை நீக்கிக் கொள்ளவும். இதுவே வீரச்சுத்தியாம். இவ்விதம் சுத்தி செய்து மேற்கண்ட பாகத்திலும், வேறு பாகங்களிலும் வீரத்தைச் சேர்த்துக் கொள்ளலாம். இது ஒருவகை நல்ல சுத்தியாகும்

## 1478. திரிசிரட்டை நெய்

தேங்காய்த் தனிப்பால் 8 பலம் (280 கிராம்), பலிவின் பால் 8 பலம் (280 கிராம்) சித்திரமூலவேர்ப்பட்டை 2 பலம் (70 கிராம்) இந்துப்புத்தூள் 3 வாரகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்).

**செய்முறை:-** முன் இரண்டுபாலையும் ஒன்றாகக் கலந்து சித்திர மூல வேர்ப்பட்டையை நீர்விட்டு வெண்ணெய் போல்அரைத்து அதில் கரைத்துக் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டி அதில் இந்துப்புத்தூளைப் போட்டு நன்றாகக் கலக்கிக் குப்பியில் வைத்துக் கொள்க.

**அளவு:-** 1 முதல் $1\frac{1}{2}$ வாரகன் எடை.

**அனுபானம்:-** சர்க்கரை, தேன், காப்பி, தேநீர் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:-** வயிற்றுவலி, அகட்டுவாயு, குன்மம் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** அசீரண பண்டங்கள், மந்தப் பண்டங்கள், கடின பண்டங்கள் முதலியவைகளை நீக்கவும். பசுவின் நெய், வெள்ளாட்டு உப்புக் கண்டம் அதிகமாகக் கூட்டவும்.

## அண்டநோய்க்கு மருத்துவம்

## 1479. வச்சிர சிந்தாமணி உருண்டை

நொச்சி இலை, புங்கிலை, கழற்சியிலை, தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ் இவை வகைக்கு 3 பலம் (105 கிராம்),

எருக்கம்பூ, புங்கம்விதைப் பருப்புத்தூள், கழற்சிப் பருப்புத் தூள், இலுப்பைக் கட்டித்தூள் இவை வகைக்கு 3 வராகன் எடை (10½ கிராம்), பொரித்த பெருங்காயத்தூள், வசம்புச் சாம்பல், இந்துப்புத்தூள், கருஞ்சீரகத் தூள் இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), உத்தாமணிச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** தூள்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து கொள்க. மற்றவைகளைத் தனித்தனியே வெண்ணெய் போலரைத்து ஒன்றாகக் கலந்து தூளையும் சேர்த்து ஒரு மணி நேரம் அரைத்து ஒன்றாக கலந்தான பின்பு மேற்படி உத்தா மணிச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்து வெண்ணெய்போலான பின்பு ஒரு வராகன் எடை யுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:** 1 முதல் 3 மாத்திரை காலை, மாலை இரண்டு வேளையும் ஏழு நாள் சமயோசிதம் போல் உபயோகிக்கவும்.

**அனுபானம்:-** சர்க்கரை, வெல்லம், பாலேடு, வெண்ணெய் நெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** எல்லாவித அண்டவாதம், அண்டவாயு, அண்டவீக்கம், அண்ட இசிவு முதலியவை தீரும். அண்ட சம்பந்தமான சுரங்களும் தீரும்.

**பத்தியம்:-** புளி, புகை, புணர்ச்சி, ஆகியவைகளை நீக்கவும்.

## 1400. அண்டவாயு உசிதம்

எருக்கம்பூ மொட்டு தேவையான அளவு. இதனைச்சட்டியி லிட்டுச் சிவக்க வறுத்துப் பழச்சாறு விட்டு வேகவைத்து வெண் ணெய்போல வெந்த பின்பு எடுத்துக் கொஞ்சம் உப்பைச்சேர்த் தரைத்து, 1½ வராகன் எடையுள்ள உருண்டைகளாகச் செய்து வைத்துக்கொள்க,

**அளவு:-** ½ முதல் 1 மாத்திரை. காலையில் மட்டும் உண்க.

**அனுபானம்:-** சர்க்கரை, வெண்ணெய், வாழைப்பழம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** அண்டவாதம், விதை வாதம், அண்ட வீக்கம், அண்டக்கடுப்பு, அண்ட இசிவு ஆகியவை தீரும்.

**பத்தியம்**:- புளி, புகை, ஆகியவைகளை நீக்கவும். பாற் கஞ்சி, பால்சோறு கொடுக்கவும்.

**குறிப்பு**:- நோய் வலிவாக இருந்து, உடலும் வலிவுடன் இருந்தால் அளவில் கொஞ்சம் அதிகமாகவும் ஐந்து நாள் முதல் ஏழுநாளும் உபயோகிக்கலாம்.

## 1481. விதைவாயு உசிதம்

வெள்ளைப் பூண்டை அரைத்து உரத்த துணியிலிட்டுப் பிழிந்தசாறு $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்) பேராமணக்கெண்ணெய் 1 பலம் (35 கிராம்) பொரித்த பெருங்காயப் பொடி 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்) இவற்றைச் சேர்த்துப் பருகச் செய்விக்கவும் மேலேறின விதைகள் உடனே கீழிறங்கிவிடும். இதற்கு விதை வாயுவென்று பெயர். அவசியமானால் இன்னும் இரண்டொரு வேளை கொடுக்கவும்.

## 1482. அண்டவாத ஒற்றடம்

கழற்சியிலை, முடக்கொற்றானிலை, கழுதைவிட்டை இவை வகைக்குத் தேவையான அளவு. இவற்றை இடித்து வறுத்துத் துணியில் வைத்து வீக்கத்தின் மீது ஒற்றடமிட்டு அதன்மீது வைத்துக்கட்டவும். இவ்விதம் தினம் இரண்டு தடவை செய்து வரின் அண்டவாதம் அண்டவீக்கம் முதலியவை தீரும்.

## 1483. அண்டவாதக் கட்டு

பப்பாளி இலையை அரைத்து இரவில் வீக்கத்தின் மீது வைத்துக் கட்டிக் காலையில் அவிழ்த்துவிடவும். இவ்விதம் மூன் றிரவு செய்யின் அண்டவாயு, அண்டவீக்கம், அது சம்பந்தமான நோவு, இசிவு, கடுப்பு ஆகியவை தீரும்.

## 1484. சகலவாயு ஒற்றடம்

சதுரக்கள்ளி ஒருசாண்துண்டு, ஆமணக்க முத்து 2 பிடி, கறியுப்பு 2 பிடி, தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ் 1 சிரங்கை முற்றின தேங்காய் மூடி 1 (இதனைத் துருவிக் கொள்ளவும்) இவை எல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்து நன்றாகச்சிதைத்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஓட்டிலிட்டுத் துணியில் வைத்து நோவுள்ள இடத்தில் ஒற்றடமிடவும். இது ஆறிப் போவதற்குள்ளாக மறுபாகத்தை வறுத்துச் சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்விதம் மாற்றி மாற்றி வறுத்துவறுத்து அரை முதல் ஒருமணி நேரம் சமயோசிதம் போல் ஒற்றட மிடவும். இவ்விதம் பலதடவைகள் செய்ய சகல அண்டநோய்,

நோவு, வீக்கம், குடைச்சல், இசிவு, சூலை, வாதம் ஆகியவை தீரும். இது அண்டநோயில் சொல்லப்பட்டிருப்பினும் வயிறு முதலிய தேகத்தின் எந்த பாகத்திலும் காணும் நோவு, குடைச்சல், வலி, சூலை, வீக்கம் முதலியவைகளிலும் உபயோகிக்கலாம்.

## 1486. வாயு மேற்பூச்சுத் தைலம்

வேப்பெண்ணெய், முந்திரிக்கொட்டை எண்ணெய், கொட்டாங்கச்சியெண்ணெய் இவை வகைக்கு 10 பலம் (350 கிராம்), சூடன் 2½ பலம் (87½ கிராம்) இம் மூன்றையும் ஒன்றாகக்கலந்து சூடனைப் பொடித்துப் போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து இரண்டு மூன்று கொதி வந்தபின்பு இறக்கி, ஆற வைக்கவும். அடுப்பிலிருக்கும் போது கைவிடாமல் துழாவிக் கொண்டிருக்க வேண்டும். ஆறினபின்பு கற்காரக்குள்ள புட்டியில் விட்டுக் காற்றுப் புகாமல் வைக்கவும்.

**தீரும்நோய்கள்:-** இதில் கொஞ்சம் எடுத்து நோயுள்ள இடத்தில் பூசிவர அண்டவாதம், அண்டவீக்கம் முதலிய மேற்கண்ட நோய்களெல்லாம் தீரும். உடலின் மற்ற பாகங்களிலும் காணும் குடைச்சல், இசிவு, வாயு முதலியவைகளுக்கும் உபயோகப்படும்.

## 1486. அண்டவாத கோழிச் சூரணம்

(அ) பெருங்குரிஞ்சா வேர்ப்பட்டை 4 பலம் (140 கிராம்), சிறுகுரிஞ்சாவேர்ப்பட்டை 4 பலம் (140 கிராம்), சிற்றவாரை வேர்ப் பட்டை 2 பலம் (70 கிராம்), பெருமருந்துவேர் 1 பலம் (35 கிராம்), தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ் 2 பலம் (70 கிராம்), கடுகு 2 பலம் (70 கிராம்), மிளகு 2 பலம் (70 கிராம்), பெருங்காயம் 3வராகன் எடை (10½ கிராம்). (இதனைப் பொரித்துக் கொள்ளவும்.)

(ஆ) பருமனான கருங்கோழி 1, இதனையறுத்துத் தலை, கால், உரோமம், வயிற்றிலுள்ள குடல் முதலியவைகள் நீக்கி சுத்திசெய்து கொள்ளவும். நல்லெண்ணெய் தேவையான அளவு.

**செய்முறை:-** (அ) விலுள்ளவைகளில் இடித்துச் சூரணிக்க வேண்டியவைகளைச் சூரணித்தும், அரைக்க வேண்டியவைகளை அரைத்தும் ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்து ஒரு மணி நேரம் அரைத்து நன்றாகக் கலந்த பின்பு முன் சித்தப்படுத்தின கோழி வயிற்றில் வைத்து நூலால் தைத்துக் கழுத்து

ஆசனம் முதலியவைகளையும் தைத்துச் சத்தில்லாமல் சித்தப் படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு வாயகன்ற பானையில்ஐந்து படி தண்ணீர்விட்டு அதில் பத்து பலம் சிறுகுறிஞ்சாவேர், பெருங்குறிஞ்சாவேர், ஆவாரைவேர் ஆகிய மூன்று வகைகளை யும் அல்லது கிடைத்த வரையில் இரண்டொரு வகையைச் சிதைத்து அதில் போட்டுப் பானைவாய்க்கு வலையால் அல்லது மூங்கிக்குச்சியால் பலமாக வேடுகட்டி அதன் மீது கோழியை வைத்து மேற்சட்டி மூடிச் சீலை மண் செய்து உலர்த்தி அடுப் பின் மீது வைத்து ஆரம்பத்தில் கொஞ்சம் மெதுவாயெரித்துப் பிறகு மிதமாய் பொரித்து நான்கு சாமம் சென்ற பின்பு ஆற விட்டு மறுநாள் காலையில் கவசத்தைப் பிரித்துக் கோழியை எடுத்துஎலும்புகளையெல்லாம்உதறி நீக்கிவிட்டுமாமிசத்தையும் அதற்குள்ளிருக்கும் மருந்தையும் எடுத்துக் கல்லுரலில் போட்டு மைபோலிடித்து ஒரு பாத்திரத்தில் நல்லெண்ணெயை விட்டு நன்றாகக் கொதித்தபின்பு உரலில் இடித்த மருந்தைச் சிறுகச் சிறுகப் போட்டுச் சிவக்க வறுத்து எடுத்து மறுபடியும் உரலில் இடித்துச் சூரணித்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்க. அல்லது இதனை அம்மியில் வைத்து மேற்கண்ட மூலிகைகளில் ஏதேனும் ஒன்றின் சாற்றை விட்டு அரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்தும் வைத்துக் கொள்ளலாம்.

**அளவு:-** 1முதல் $1\frac{1}{4}$ வராகன் எடை, காலை மாலை இரண்டு வேளையும் ஏழுநாள் முதல் பதினோரு நாள்கள் சாப்பிடவும்.

**அனுபானம்:-** நெய். தேன், சர்க்கரை, குடிநீர் வகைகள், வெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** அண்டவாதம், விதைவாதம், வீக்கம் இசிவு, குத்தல், இடுப்புநோவு ஆகியவைகளும், மேக சம்பந்த மான நோய்களும் தீரும்.

**பத்தியம்:-** உப்பில்லாப் பத்தியம் வைக்கவும்.

## 1487. விரைவாத இளகம்

கோழிமுட்டை மஞ்சட்கரு 10, கழற்சிப்பருப்புச் சூரணம் $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), நல்லெண்ணெய் 2 பலம் (70 கிராம்), கோழியாவாரைச்சாறு 1 ஆழாக்கு.

**செய்முறை:** இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து நன்றாகச் சேர்த்து ஒரு பாத்திரத்தில் போட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் கைவிடாமல் துழாவிக் கொண்டேயிருந்து

இளக பதத்திலிறக்கிஆறின பின்பு மூன்று பாகமாக்கி வைத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு பாகத்தையும் ஆறு பாகமாக்கி ஒரு நாளில் இரண்டுமணிக்கு ஒரு தடவை சாப்பிட வேண்டும். இவ்விதம் மூன்று நாள் சாப்பிடவும்.

**அனுபானம்:**-சர்க்கரை, தேன், வெண்ணெய் முதலியவை களாம்.

**தீரும்நோய்கள்:**- அண்டவாதம், விதைவாதம், விதை மேல் ஏறுதல்ஆகியவை குணப்படும்.

**பத்தியம்:**— முதல் மூன்று நாளும் உப்பில்லாப் பத்தியம், மறு மூன்று நாளும் உப்பில் சங்கிலையைப் போட்டு வறுத்து அந்த உப்பைச் சாதத்தில் சேர்த்துச் சாப்பிடவும். கடுமையான நோய்களுக்குக் கடும்பத்தியம் இருக்க வேண்டியது அவசியமே. பலநாள் துன்பப்படுவதை விட சிலநாள் பொறுத்துக் கொண்டு பத்தியத்தை ஏற்றுத் துன்பத்தை நீக்கிக் கொள்வது மேலானது.

**குறிப்பு:**- சில மருந்துகளை அளவிற்கு அதிகமாகச் சில சமயங்களில் சாப்பிட வேண்டி இருக்கிறது. அப்படிச் செய்வதைப் பார்க்கிலும் அதை நாலைந்து பாகங்களாகப் பிரித்துச் சில மணிக்கு ஒரு தடவையாக சாப்பிடவைப்பது மருத்துவர்கள் தந்திரம் உதாரணமாக மேற்கண்ட கழற்சிப் பருப்பின் அளவு நாள் ஒன்றிற்குச் சற்றேறக்குறையஏழரைவராகன் எடை ஆகிறது; இதன் சாதாரண அளவு வேளையொன்றிக்கு $1\frac{1}{4}$ முதல் $1\frac{1}{2}$ வராகன் எடையாகும். மேற்கண்டபடி ஆறுபாகமாக்கி விடுவதால் அதன் அளவுப்படி ஒன்றரை வராகன் எடையாகிவிடும். இவ்விதமே மற்ற பாகங்களிலும் கவனித்துச் சமயோசிதம் போலச் செய்யவும்.

## 1488. அண்டவாத எண்ணெய்.

வேப்பெண்ணெய் 8பலம் (280கிராம்),வேப்பங்கொழுந்தை அரைத்த விழுது 4 பலம் 140கிராம்) தோலுரித்த பூண்டி தழை அரைத்த விழுது 4 பலம் (140 கிராம்). கழற்சிப்பருப்பு $\frac{1}{2}$ பலம் (17 $\frac{1}{2}$ கிராம்), (இதன் உள் முளையை நீக்கிப் பருப்பை வறுத்து தூள் செய்து கொள்ளவும்).

**செய்முறை:**- முன்இரண்டு விழுதுகளையும் ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்துக் கழற்சிப்பருப்புத் தூளையும் சேர்த்து வெண்ணெய் போல அரைத்து மேற்கண்டபடி எண்ணெயில் கலக்கி அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டிப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு:**- 1 முதல் 1½ வராகன் எடை, காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும். வீக்கம் ஆகியவைகளில் மேலுக்குப் பூசவும்.

**அனுபானம்:**- காப்பி, தேநீர், சுக்குக் குடிநீர் முதலியவை களாகும்.

**தீரும்நோய்கள்:**- அண்டவாதம், விரை வாதம், அண்டக் குத்து ஆகியவை தீரும்.

**பத்தியம்:**- சமயோசிதம் போல் புளி, உப்பு ஆகியவை களைச் சேர்த்தும் சேர்க்காமலும் பத்தியமேற்படுத்தவும்.

## 1489. அண்டவாத எண்ணெய் (வேறு)

(அ) சிற்றாமணக்கெண்ணெய் 8 பலம் (280 கிராம்), முடக் கொற்றான் சமூலச்சாறு 1 ஆழாக்கு, கழற்சியிலைச்சாறு 1 ஆழாக்கு

(ஆ) தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் 10 வராகன்எடை (35 கிராம்), சுத்தி செய்த நேர்வாளப்பருப்பு 10 வராகன் எடை (35 கிராம்), சுத்திசெய்த ஆமணக்கம்பருப்பு 7½ வராகன் எடை (26¼ கிராம்),

(இ) இந்துப்புத்தூள், கழற்சிப்பருப்புத்தூள் மஞ்சட்கடுக் காய்த்தோல் தூள் இவை வகைக்கு 5 வராகன் டை (17½ கிராம்) மேற்றோல் சீவினசுக்குத் தூள், மிளகுத்தூள், வெள் ளைச்சாரணை வேர்ப்பட்டைத்தூள், சிவதைவேர்த்தூள் இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), வெண்காரம் பொரித்த தூள் 1 வராகன் எடை (3½ கிராம்.)

**செய்முறை:**- (ஆ) விலுள்ள பருப்பினங்களையும், பூண்டை யும் தனித்தனி கல்வத்திலிட்டரைத்துப் பிறகு மூன்றையும் ஒன் றாகக் கலந்து அரைத்து அதில் (இ)யிலுள்ள சூரணங்களை ஒன்றாகக் கலந்து சேர்த்து ஒரு மணி நேரமரைத்து நன்றாக கலந்த பின்பு (அ)விலுள்ள இரண்டு சாறு வகைகளையும் ஒன்றாகக் கலந்து கொஞ்சங்கொஞ்சம் தெளித்து வெண்ணெய் போல் அரைத்து மிகுந்த சாற்றையும் அரைத்த மருந்தையும் (அ)விலுள்ள எண்ணெயில் கலந்து நன்றாக சேர்த்து அடுப் பேற்றிச் சிறுதீயாக எரித்துக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட் டிப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:** 1 முதல் 1½ வராகன் எடை. காலையில் மாத்திரம் உபயோகிக்கவும்.

**அனுபானம்:-** தேநீர், காப்பி, வெந்நீர் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** அண்டவாதம், அந்திரவாயு, விதைவாதம் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** இச்சாபத்தியம், மோர்சாதம் உண்ணவும். நோய் வலிவாக இருந்தால் சமயோசிதம்போல் பத்தியமேற் படுத்தவும்.

## 1490. அண்ட எண்ணெய்

(அ) பதினோரு கோழி முட்டைகளை வேகவைத்து அதன் மஞ்சள் கருவை எடுத்துப் பக்குவமாகக் கருக்கித் தைல மெடுத்துக் கொள்க.

(ஆ) வேப்பெண்ணெய் 16 பலம் (560 கிராம்), திருகுக் கள்ளியை வாட்டிப் பிழிந்த சாறு 4 பலம் (140கிராம்)

(இ) கழற்சிப்பருப்புத் தூள் 2 பலம் (70 கிராம்) கருஞ் சீரகத் தூள், தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் வகைக்கு 1 பலம்(35கிராம்,) பால்சாம்பிராணித் தூள் ½பலம்(17½கிராம்) மாவிலிங்க இலைச்சாறு 4 பலம் (140கிராம்)

**செய்முறை:-** (இ) யிலுள்ள சூரணங்களை ஒன்றாகக்கலந்து மாவிலிங்கச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து(ஆ)விலுள்ள இரண்டு திரவங்களையும் ஒன்றாகக் கலந்து அதில் கரைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டி (அ)விலுள்ள அண்டத் தைலத்தை அதில் சேர்த்து நன்றாகக் கலந்து புட்டியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு:-** 1 முதல் 1½ வராகன் எடை. காலை மாலை இரண்டு வேளையும் ஏழுநாள் உட்கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** அண்டவாயு, சுழிகணம், சுவாசகாசம், எலிக்கடி ஆகியவை தீரும்.

**பத்தியம்:—** உப்பில்லாமல் கஞ்சி காய்ச்சி சர்க்கரை தொட்டுக்கொண்டு குடிக்கவும். மறுபத்தியம் மூன்று நாள் வரை வறுத்த உப்பு, துவரை, கத்திரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு புடலம் பிஞ்சு, அரைக்கீரை ஆகியவை கூட்டிப் பதினோரா

நான் நல்லெண்ணெய்யில் மிளகு, ஆதன்டையிலை ஆகியவை களைப் போட்டுக் காய்ச்சித் தலைமுழுக்குச் செய்து எல்லா உணவுப் பண்டங்களையும் சாப்பிடலாம்.

## 1491 அண்டவாத பேதி

கடுகுரோகணித் தூள் 4 வராகன் எடை (14 கிராம்) சுத்தி செய்த நேர்வாளப்பருப்பு 4 வராகன் எடை (14 கிராம்), பருமனான முற்றல் தேங்காய் 1 இதனைத் துருவித் தனிப் பால் பிழிந்து கொள்ளவும்.

**செய்முறை:-** மேற்படி வாளகத்தைக் கல்வத்திலிட்டு நேர்மையாகப் பொடித்துக் கடுகுரோகணித் தூளைச் சேர்த்து மேற்படி பாலைக் கொஞ்சம் விட்டு வெண்ணெய் போல் அரைத்து மேற்படி பாலில் கரைத்துக் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** ¼முதல் ½ வராகன் எடை. உடல் வலிவிற்குத் தகுந்தபடி காலையில் மாத்திரம் ஒரு வேளை கொடுக்கவும்.

**அனுபானம்:-** நீராகாரம், இளநீர் தேநீர், காப்பி முதலிய பானங்களாம்.

**தீரும்நோய்கள்:—** பேதியாகும்; அண்டவாயு முதலிய வாயு நோய்கள் தீரும். பேதி அதிகமானால் மோர்சோறுண்ணவும்.

## 1492. அண்டவாத மேற்பூச்சுத் தைலம்

சுத்திசெய்த வாளப்பருப்பு, சேராங்கொட்டை, முந்திரிக் கொட்டை, தேவதாரக்கட்டைத் தூள் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), சுண்ணாம்பு சுட்டசல் ¾ பலம் (26¼ கிராம்), கண்ணுக் கொட்டாங்கச்சி 10.

**செய்முறை :-** இவை எல்லாவற்றையும் நேர்மையாக இடித்து முறைப்படி குழித்தைல மிறக்கிக் கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** இதில் கொஞ்சம் எடுத்து அவசியமான பாகத்தில் கோழியிறகால் மூன்று வேளை பூசிவரவும். இதனால் சில உடலினர்க்கு வேக்காடு காணும். அப்போது மருந்தை நிறுத்தி அதன் மீது தேங்காயெண்ணெயைப் பூசிவரவும். அண்டவாதம், வினைதவாதம். வீக்கம், நோவு, முழங்கால் வாதம், ஆகியவை தீரும்.

**குறிப்பு:-** சில முரட்டு நோய்களுக்கும் சில முரட்டு உடலினர்களுக்கும் இதைப்போலும் கடினமான மருந்தும்

அவசியமாக இருக்கிறது. ஏனெனில் அவை வேறெந்த மருந்திற்கும் வசப்படுவதில்லை. சிறப்புடைய மருந்து அவசியமா என்பதே காரணம். இதனைச் சாந்தப்படுத்திக் கொள்ள வேண்டுமானால் இந்தத் தைலத்திற்கு சமன் அல்லது இரண்டு பங்கு ஜெய்த்தூன் எண்ணெயை, வேப்பெண்ணெயை அல்லது ஆமணக்கெண்ணெயைக் கலந்து உபயோகிக்கவும்.

## 1493. அண்டவாத அழிஞ்சில் எண்ணெய்

(அ) நல்லெண்ணெய் 10 பலம் (350 கிராம்), துளசிச்சாறு சிறுகீரைச்சாறு, ஆடுதின்னாப்பாளைச்சாறு வகைக்கு 5 பலம் (175 கிராம்).

(ஆ) அழிஞ்சில் வேர்ப்பட்டைத்தூள், மிளகுத்தூள் இவை வகைக்கு 1 பலம் (35கிராம்),தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ் 2 பலம் (70 கிராம்).

**செய்முறை:-** (ஆ) விலுள்ள பூண்டை வெண்ணெய் போல் அரைத்து அதிலுள்ள மற்ற இரண்டு வகைத் தூள்களையும் ஒன்றாகக் கலந்து அதில் சேர்த்து நேர்மையாக அரைத்து (அ) விலுள்ளவைகளை எல்லாம் ஒன்றாகக் கலந்து அதில் கரைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துக் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்தி லிறக்கி வடிகட்டிப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 1முதல் 1½வராகன் எடை. காலை மாலை இரண்டு வேளையும் உடல் வலிவறிந்து ஐந்து நாள், அல்லது ஏழு நாள் உபயோகிக்கவும்.

**தீரும்நோய்கள்:-** அண்டவாதம், விதைவாதம் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** நோய் வலிவிற்குத் தகுந்தபடி பத்திய மேற் படுத்தவும்.

## 1494. ஆனைக்கால் பற்று

சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு, கலியாண முருங்கை மரப் பட்டை இவையிரண்டும் சமனெடை. பட்டையைக் கல்லுரலிற் போட்டு நையச் சிதைத்து இதனுடன் வாளத்தையும் சேர்த்து அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்து அவசியமான இடத்தில் பூசி அதன்மீது ஆமணக்கு இலையை வைத்துக் கட்டவும். பன்னிரண்டு மணிக்கொரு தடவை கட்டினால் போதுமானது கட்டிவரும்போது வேகங்கண்டால் நிறுத்திவிட வேண்டியது.

**தீரும்ரோகங்கள்:-** யானைக்கால் வீக்கம், மேகவாயு, சூலைக் கட்டு, முழங்கால்வாதம், நரித்தலைவாதம், அரையாப்பு ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** நோய் வலிவாக இருந்தால் புளி, புகை, புணர்ச்சி ஆகியவைகளை நீக்கவும் அவசியமானால் உப்பையும் அறவே நீக்க வேண்டியது; அல்லது வறுத்துச் சேர்க்க வேண்டியது.

## 1495. மேற்படி வேறு

குந்திரிக்கம், நீலம், பெருங்காயம், சாம்பிராணி, மை சாட்சி, அபின், சவுக்காரம், கரியபோளம் இவை வகைக்கு ½ வராகன் எடை, மலைக்கற்றாழையை வாட்டிப் பிழிந்தசாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** மேற்படி சரக்குகளை அம்மியில் வைத்துப் பொடித்து, அரைத்து நன்றாகச் சேர்ந்த பின்பு மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து அந்தச் சாற்றிற் கரைத்துக் குழம்புப் பதமாகக் காய்ச்சி இளஞ்சூட்டுடன் அவசியமான இடத்தில் பூசவும். தினம் ஒரு தடவை கூடுமானால் இரண்டு தடவை பூசவும். இவ்விதம் இருபது பற்று இடவும்.

**தீரும்நோய்:-** யானைக்கால் வீக்கம் முதலிய மேற்கண்ட நோய்களெல்லாம் தீரும்.

**பத்தியம்:-** மேற்கண்டவைகளேயாம்.

## 1496. மேற்படி வேறு

வெள்ளைப் பாடாணம் 1 பலம் (35 கிராம்). காவிக்கல் 1 பலம் (35 கிராம்). இவ்விரண்டையும் தனித்தனிப் பொடித்து ஒன்றாகக் கலந்து தண்ணீரைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்துச் சிறுவிரல் பருமனும் ஒரு அங்குல நீளமுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி பத்திரப் படுத்தவும். அவசியமான போது எலுமிச்சம் பழச்சாற்றில் மேற்படி மாத்திரையை இழைத்துக் கொஞ்சம் பெருங்காயமும் கூடச் சேர்த்து இழைத்து அவசியமான இடத்தில் பூசவும். தினம் இரண்டு அல்லது மூன்று தடவை பூசலாம் மறுபற்று போடும்போது முன்பற்றிட்ட இடத்தை நன்றாகச் சீகைக் காயிட்டுத் தேய்த்துக் கழுவி விட்டுப் பற்றுபோடவும்.

**தீரும்நோய்கள்:-** ஆனைக்கால் வீக்கம், அரையாப்புக் கட்டி வாயுவுக்கட்டி, சிலந்திக்கட்டி ஆகியவை தீரும்.

**எச்சரிக்கை:—** இதில் பாடாணம் சேர்ந்திருப்பதால் வாய், கண், நாசி முதலிய இடங்களில் படாமல் இருக்க வேண்டும்.

## 1497. மேற்படி வேறு

விலாரி இலையை அவித்து அவசியமான இடத்தில் ஒற்றடமிட்டுக் கட்டிவர ஆனைக்கால் வீக்கம், இதர வீக்கங்கள், கட்டிகள் ஆகியவை தீரும்.

## 1498. மேற்படி வேறு

புலியின் மலம், காடிக்காரம் இவை இரண்டும் சமன். இவற்றைத் தண்ணீர் விட்டு அரைத்து வீக்கத்தின்மீது பூசி வாழை இலையை வைத்துப் பட்டி கட்டி வரவும், மறுநாட் காலையில் அவிழ்த்து முன்போல் கட்டி வரவும்; வேகங்கண்டால் எலியா மணக்கிலையைத் தண்ணீர் விட்டு வேக வைத்துக் கழுவிவர வேகமடங்கி வீக்கங் கரையும்; யானைக்கால் வீக்கம், வீக்கம், முழங்கால் வாதம் முதலியவை தீரும்.

**விண்ணப்பம்:-** யானைக்கால் வீக்கம் முதலிய மேற்கண்ட நோய்களுக்குப் பின் காணும் மருந்துகளை உள்ளுக்கு உபயோகிக்கலாம். அவையாவன:-

**குக்கிலாதி வடகம், வல்லாரை இளகங்கள், பிரசண்டவாலை** ஆகியவைகளாம். இம் முறைகள் இந்த அனுபோக வைத்திய நவநீதம் முன் பாகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

கருங்கோழிச் சூரணத்தையும் உபயோகிக்கலாம். இது நமது அகத்தியர்பள்ளு இருநூறில் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்கூறிய மருந்துகளினால் யானைக்கால்வீக்கம், அதுசம்பந்தமான சுரம் அது சம்பந்தமான உடல்வலி, அதுசம்பந்தமான நெறிக்கட்டு சுரம், அண்டவாதத்தினால் வரும் நெறிக்கட்டுச் சுரம், அதுசம்பந்தமாக வரும் மாறல்சுரம் ஆகியவை தீரும். வீக்கங்களும் வாடும்.

இவையன்றி மஞ்சள் மெழுகுத் தைலத்தை மேற்பூசி வருவதனாலும் வீக்கம் வாடும்.

## 1499. ஆனைக்கால் வீக்கப்பற்று [வேறு]

புலியின் மலம், காடிக்காரம் இவ்விரண்டும் சமன். முந்திரி எண்ணெயும் நல்லெண்ணெயும் சமனாகக்கலந்து முன்விர

டையும் கல்வத்திலிட்டுப் பொடிக்து மேற்படி எண்ணெய்க் கலவையைச் சிறுக சிறுக வார்த்து வெண்ணெய் போல் அரைத்து வாழையிலையில் தடவி வீக்கத்தின் மேல் வைத்துப் பட்டிகட்டிவிடவும்மறுநாள் அவிழ்த்து முன்போல் வேறு கட்டுக்கட்டவும். இவ்விதம் மூன்று கட்டுக் கட்டவும் வேகம் காணும். அப்போது எலியாமணக்கிலையைத் தண்ணீர்விட்டு வேகவைத்து அதனால் கழுவிவரவும். இவ்வாறு செய்யின் வேகமடங்கி ஆனைக்கால் வீக்கம் வாடும்.

**குறிப்பு:-** சிங்கத்தின் மலத்தையும் மேற்கண்டவாறு செய்யின் சிறப்புடைய குணமுண்டாம்.

## 1500. மேற்படி வேறு

சுத்திசெய்த இரசம், வீரம், இரசகற்பூரம், பொன்னரிதாரம், நெல்லிக்காய்க்கெந்தகம், கா ந் தம், சீனக்காரம். வெள்ளைப் பாடாணம் இவை வகைக்கு 2½ வராகன் எடை(8¾ கிராம்) பூங்காவி 2 பலம் (70 கிராம்)

**செய்முறை:-** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக் கலந்த பின்பு மற்றச் சரக்குகளையும் தனித்தனி பொடித்து அதில் சேர்த்து அரைத்து நன்றாகக் கலந்த பின்பு பூங்காவியைப் பொடித்துச் சேர்த்து மறுபடியும் ஒருமணி நேரம் அரைத்துச் செம்மையாக சேர்ந்த பின்பு நல்ல தண்ணீரைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாம நேரம் அரைத்து நீண்ட மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

இதனை முந்திரி எண்ணெய், வாழைக்கிழங்குச் சாறு முதலிய வற்றில் இழைத்து வாழையிலையிலூட்டி முன்போல் பட்டி கட்டி வரவும். வீக்கமிறங்கிக் கணுக்காலில் வரும்; பிறகு வீக்கங்கண்ட இடத்தில் மேல்பூசி வரவும்; இவ்வாறு செய்ய யானைக்கால்வீக்கம் வாடும்.

**பத்தியம்:—** எப்போதும் வீக்கங்கண்ட காலுக்கு நல்லெண்ணெய் பூசலாகாது. அந்த இடந்தவிர உடம்பெங்கும் தேய்த்து முழுகலாம்.

## 1510. மேற்படி வேறு

கரியபோளம், நற்போளம், வெள்ளைப்போளம், நாய்க்கடுகு, கழற்சிப்பருப்பு, மிளகாய் விதை, அமுக்குராக்கிழங்கு, கார்த்திகைக்கிழங்கு, வேப்பம்பிசின், முருங்கைப்பிசின், குந்திரிக்

கம்,உளுந்துமா கேழ்வரகுமா,மேற்றோல் சீவினசுத்கு, சுக்கான் கல்லுத்தூள், கருவளையல் பொடி இவை வகைக்குச் சமன், சொள்ளிலைச்சாறு, பெறுமறளை வதக்கிப் பிழிந்தசாறு. கோமயம். எலுமிச்சம்பழச்சாறு, கள்ளியை வாட்டிப் பிழிந்த சாறு,கோழி முட்டை வெள்ளைக்கரு இவை சமனாகக்கலந்தது தேவையான அளவு.

**செய்முறை:-** மேற்கண்ட சரக்குகளில் இடிக்க வேண்டிய வைகளை இடித்துச் சூரணித்தும், பொடிக்க வேண்டியவை களைப் பொடித்தும், மற்றவைகளையும் ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்து மேற்கண்ட சாறு முதலியவற்றின் கலவையைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து மேற்படி கலவையிலேயே கரைத்துக் காய்ச்சிக்குழம்புப்பதத்தில் இறக்கி வாழையிலையில் பூசி வீக்கத்தின் மேல்வைத்து மேற் கண்ட படி பட்டிகட்டி மறுநாள் காலையில் அவிழ்த்து, புளி யிலை, மலைவேப்பிலை, முருங்கையிலை ஆகியவைகளைத் தண்ணீரில் வேகவைத்து அவ்விலைகளால் ஒற்றிடமிட்டு அந்த நீரில் கழுவி விடவும். பின்பு உலர விட்டு மறுபட்டி முன்போல் கட்டவும். இந்தப்படி வீக்கம் வாடுகிற வரைக்கும் கட்ட, யானைக்கால் வீக்கம் முதலிய வீக்கங்கள் வாடும்.

**குறிப்பு:-** மேற்படி பட்டிகட்டுவதுடன் பறங்கிப்பட்டைப் பதங்கம், குக்கில்வல்லாதகி ஆகிய வகைகளை உள்ளுக்கும் கொடுத்துவந்தால் அதிக சீக்கிரம் குணமுண்டாகும்.

## 1502. அரையாப்புப் பற்று

**சுத்தி:-** செய்த வெள்ளைப்பாடாணம், பெருங்காயம் சீனக் காரம் வகைக்கு 1 குன்றிமணி எடை.எருக்கம்பால் தேவையான அளவு.

**செய்முறை:—** மேற்கூறிய மூன்று சரக்குகளையும் தனித்தனி பொடித்து ஒன்றாகக் கலந்து எருக்கம்பாலைச் சிறுகச் சிறுக வார்த்துக் களிம்பு போலாகிற வரையில் அரைத்து உரத்த துணியில் பிளாஸ்திரி போல் தடவிக் கட்டியின் மீது போடவும்.

இவ்விதம் செய்ய ஒரே நாளில் கட்டி கரைந்து போகும்.

## 1503. மேற்படி வேறு

சேராங்கொட்டை 10, கற்சுண்ணாம்பு 2 வராகன் எடை, சவுக்காரம் 1 வராகன் எடை.

**செய்முறை:-** மேறபடி சேராங்கொட்டையை உரலில் இட்டு இடித்து நேர்மையாகத்தூள்செய்துஅம்மியில் வைத்து தண்ணீர் வார்த்து வெண்ணெய்போல் அரைத்து மற்ற இரண்டையும் சேர்த்து நீரை வார்த்து வெண்ணெய்போல் அரைத்துக் கால் அல்லது அரைப்பலம் எடுத்து மெல்லிய வில்லையாகச்செய்து கட்டியின் மீது வைத்து ஆமணக்கிலையை அல்லது வெற்றிலையைவதக்கி வைத்துப் பட்டிகட்டவும். இரண்டொரு பட்டிகட்டுவதற்குள் கட்டி கரைந்துபோகும்.

## 1504. மேற்படி வேறு

வடிகட்டின கற்சுண்ணாம்பு 5வராகன் எடை (17½ கிராம்) சவுக்கார்த்தூள் 2½ வராகன் எடை(8¾ கிராம்),சேராங்கொட்டைக் குழித்தைலம் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** முன்கண்ட இரணடையும் கல்வத்தில் இட்டு அரைமணி நேரம் அரைத்து நன்றாகக் கலந்த பின்பு மேற்படி தைலத்தைச் சிறுகச் சிறுக வார்த்துக் குழம்புப் பதமாகிற வரையில் அரைத்துச் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.இதனை உரத்த துணியில் பிளாஸ்திரிபோல் பூசிக் கட்டியின் மேற்போடவும். ஒருநாளில் கட்டி கரைந்துபோகும்; அல்லது உடைந்துபோகும்.

## 1505. அரையாப்புக் கட்டு

கோது கொட்டை நீக்கின பழம்புளி 2 பலம் (70 கிராம்): மிருதார்சிங்கித்தூள் 2 வராகன் எடை(7கிராம்). புளியை வெண்ணெய்போல் அரைத்துப் பிறகு மேற்படி தூளைச் சேர்த்து மறுபடியும் நேர்மையாக அரைத்து வில்லை செய்து கட்டியின் மீது வைத்துப் பட்டிகட்டி மூன்று நாள் சென்று நான்காம் நாள் அவிழ்க்கவும்.

**பத்தியம்:** உடற்கூறறிந்து புளி, புகை, ஆகியவைகளை நீக்க வேண்டியது. அவசியமானால் உப்பையும் தள்ளவும்.

## 1506. அரையாப்பு உசிதம்

அரளிமரத்துப் பாலைச் சீலையிலூட்டிக் கட்டியின்மீது போட்டு வந்தால் கட்டி கரைந்து குணப்படும்.

## 1507. அரையாப்புக் கட்டு (வேறு)

மிளகு 1½ வராகன் எடை, இதனை இரண்டொன்றாக உடைத்து ஐந்து வராகன் எடை சதுரக்கள்ளிப்பாலில்போட்டு காய்ச்சி மெழுகுபதமாக வரும்போது எடுத்து அம்மியில்

Cell: 8489777140
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக கடை
மு.முருகன்
13. சாஸ்திரி தெரு. மெயின் ரோடு.

வைத்துப் பஞ்சுபோல் சிதைத்து வில்லையாகச் செய்து கொள்ளவும். அரையாப்புக் கட்டியில் சத்திரம் வைத்திருந்தாலும் சரியே, அது தானே பழுத்துடைந்திருந்தாலும் சரியே, வேறு மருந்தினால் வெந்திருந்தாலும் சரியே; மேற்படி, வில்லையை அதன்மீது வைத்துக் கட்டவும். இரண்டு மூன்று கட்டுக் கட்டினால் அதிலுள்ள விடமெல்லாம் நீராக வடிந்து முளையும் வெளிப்பட்டுப்போம். பிறகு கீழ்க்காணும் களிம்பைப் பூசி வரவும்.

## 1508. அரையாப்புக் களிம்பு

வறுத்ததுருசு 4 வராகன் எடை (14 கிராம்), மருத்துவெள்ளைத் தூள் 4 வராகன் எடை (14 கிராம்). இவ்விரண்டையும் சேர்த்து ஒருமணி நேரம் அரைத்து வேப்பெண்ணெயைச்சிறுகச் சிறுக வார்த்துக் களிம்புப் பதமாகிற வரையில் அரைத்துப் பீங்கான் சிமிழில் வைத்துக்கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** மேற்கண்ட கட்டைக்கட்டி விடத்தைப் போக்கின பின்பு இந்தக் களிம்பை ஒரு துணியில் தடவி இரணத்தின்மீது போட்டுவரப் புண் ஆறும். முளைபுறப்பட்டுப்போன வேறு புண்களுக்கும் இதனை உபயோகிக்கலாம்.

## 1509. அரையாப்பு இளகம்

கொடிவேலி வேர்ப்பட்டை 2 பலம் (70 கிராம்), நல்லெண்ணெய் 1 ஆழாக்கு, சர்க்கரை 2 பலம் (70 கிராம்).

**செய்முறை:-** மேற்படி வேர்ப்பட்டையை நீர்வார்த்து வெண்ணெய் போலரைத்து எண்ணெயில் கலக்கிச் சீனியையும்சேர்த்து அடுப்பேற்றி இரண்டு மூன்று கொதி வந்தபின்இறக்கிஆறவைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 1முதல் 1½வராகன் எடை, காலை மாலை இரண்டு வேளையும் எட்டுநாள் உபயோகிக்கவும்.

**தீரும்நோய்கள்:-** அரையாப்புக்கட்டிகள், வேறு வகையான கட்டிகள் ஆகிய எல்லாக்கட்டிகளும் கரைந்துபோகும்.

கட்டி உடைந்தால் எலியாமணக்குப் பட்டையை அரைத்து வில்லை செய்து வைத்துக்கட்டவும்.

**பத்தியம்:-** அரையாப்பு சேர்த்து இளங்கீரை, துவரை முருங்கைப்பிஞ்சு, வாழைக்கச்சல், மிளகு, பூண்டு, சீரகம், ஆகியவை கூட்டவும்.

## 1510. கரளையாப்புக் கட்டு

வெள்ளைப்பாடாணம், கௌரிப்பாடாணம் இவை வகைக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை, ($8\frac{3}{4}$ கிராம்) எருக்கம்பால் செல்லத் தக்க அளவு.

**செய்முறை:-** மேற்படி இரண்டு சரக்குகளையும் தனித்தனியேப் பொடித்து ஒன்றாகக் கலந்து மேற்படி பாலைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரம் அரைத்துப் பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** அரையாப்புக்கட்டிகளில் கரளை கரளையாக இருப்பதற்குக் கரளை அரையாப்புக் கட்டி என்று பெயர். அது வேறு மருந்துகளினால் இலேசில் கரையாது. அதைக் கத்தியால் கீறி மேற்படி மருநதைத் தடவி மேலே ஒடு வைத்துக் கட்டவும். இவ்வாறு கட்டி மூன்றாம் நாள் அவிழ்க்கவும். இவ்விதம் இரண்டொரு தடவைகள் செய்யக் கரளைக்கட்டி, கரளை அரையாப்பு ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** மேற்கண்டவைகளேயாம்.

## 1511. அரையாப்பெண்ணெய்

(அ) நல்லெண்ணெய் 12 பலம் (420 கிராம்), சுத்திசெய்த சேராங்கொட்டை எண் 15.

(ஆ) பால்சாம்பிராணி $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), சுத்தி செய்த அரிதாரம் $\frac{1}{4}$ வராகன் எடை. இவ்விரண்டையும் தனித் தனியேப் பொடித்து ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

**செய்முறை:-** எண்ணெயில் கொட்டையை நறுக்கிப் போட்டுக் காய்ச்சி எண்ணெய் கக்கினபின் கொட்டையை நீக்கிவிட்டு (ஆ) விலுள்ள தூளை அதில் போட்டு இரண்டு கொதி வந்தவுடன் துழாவியிறக்கி எண்ணெயை இறுத்துக் கொண்டு அடியிலுள்ள மண்டியைக் கல்வத்திலிட்டு வெண்ணெய்போலரைத்து மறுபடியும் எண்ணெயில் கரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு:-** 1 முதல் $1\frac{1}{4}$ வராகன் எடை எண்ணெயைக் கலக்கிக் கொடுக்க வேண்டியது. காலை மாலைஇரண்டுவேளையும் ஐந்துநாள் முதல், ஒன்பதுநாள் நோயின் வலிவறிந்து சமயோசிதம்போல் உபயோகிக்கவும்.

**தீரும் நோய்கள்:—** அரையாப்பு, கிரந்தி, சூலை, மேகப்புண் சட்டைக்கரப்பான், கருங்கிரந்தி, ஊறல் ஆகியவை தீரும்.

**பத்தியம்:—** உப்பு, புளி, மிளகு, கத்திரிப்பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, துவரம்பருப்பு, பசுவின் தயிர், பசுவின் நெய் ஆகியவை கூட்டிக் கொள்ளலாம்.

கடுகு, மஞ்சள், வாழையிலை, சாணிவாசனை, புகையிலை, மீன் கருவாடு ஆகியவை ஆகா.

## 1512. கிரந்திப்புண் மாத்திரை

சுத்திசெய்த இரசகற்பூரம் 2வராகன் எடை (7 கிராம்) இதனைப் புது ஓட்டில் வைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துக் கற்பூரவள்ளிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் சுருக்குக் கொடுத்து எடுத்து மேற்படி சாற்றையே சிறுகச்சிறுக விட்டு ஒரு சாமநேரம் அரைத்து ஒரு ஓட்டில்வைத்து ஒரு வராட்டியைக் கொளுத்திப் புகையடங்கின பின் ஓட்டை அதன் மீது வைத்து வில்லையைப் புரட்டிக் கொடுத்து வாட்டவேண்டும். அனல் ஆறின பின்பு எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைவிட்டு ஒருசாமம் அரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 1 முதல் 2 மாத்திரை, காலை, மாலை இரண்டு வேளையும் ஐந்து முதல் ஒன்பது நாள் கொடுக்கலாம் தேவையானால் பதினோருநாள் வரை கொடுக்கவும்.

**அனுபானம்:—** வெல்லம், வாழைப்பழம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** நாட்சென்ற கிரந்திப்புண். அழுகிப்போன புண் ஆகியவை தீரும்.

**பத்தியம்:—** உப்பு, புளி நீக்கவும். மறுபத்தியம் மூன்று நாள் உப்பை நீக்கிப் பிறகு உப்பு, புளி கூட்டவும்.

**குறிப்பு:—** உடல் வலிவாக இருந்து நாட்பட்ட புண்ணுமிருந்தால் மேற்கண்ட இரண்டு வராகன் எடையும் மேற்கண்ட நாட்களுள் கொடுக்கலாம். புண் இலகுவாயிருந்தால் ஒரு வராகன் எடை போதுமானது. மருத்துவர்கள் நோய்வலிமை, உடல் வலிமை ஆகியவைகளை நிதானித்துத் தினமொன்றுக்கு

நான்கு அல்லது ஐந்து வேளையாகப் பாவித்து மேற்கண்ட அளவை உபயோகிப்பது அவரவர்களின் புத்திநுட்பத்தைச் சார்ந்ததாகும்.

## 1513. கிரந்திப்புண் தூள்

வீரம் 2 வராகன் எடை (7கிராம்)மருதம்பட்டைச் சாம்பல் 1படி. இதனை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு சிறு கலயத்தில் போட்டு அழுத்தி சமமாக்கிக் கொள்ளவும். கெட்டி வெள்ளைத்துணி நாலங்குல அகலமும் இரண்டு சாண் நீள முள்ளதாகவும் கிழித்து அதிக ஈரப்பசையில்லாமல் களி மண்ணைத் தடவி அதில் மேற்படி வீரக்கட்டியை வைத்துப் பந்துபோல் சுருட்டி மேலும் களிமண்ணைத் தடவிக் காய வைத்து ஈரமில்லாமல் நன்றாயுலர்ந்தபின்பு முன் சித்தப் படுத்தின சாம்பலின் மேல் வைத்து அதன் மீது மறு பாதிச் சாம்பலைக் கொட்டி நன்றாயமுத்திக் கலயத்தின் வாய்க்கு அகல் வைத்து இரண்டு சீலைமண் செய்து உலர்த்தி கவசத்தின் இரண்டு பங்கு எடை வராட்டியில் புடமிட்டுக் குளிர ஆறின பின் கவசத்தைப் பிரித்து வீரத்தை யெடுத்து புட்டியில் பத்திரப் படுத்தவும்.

மிருதார்சிங்கி 2வராகன் எடை (7 கிராம்) உமிபோக்கின கோதுமை 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), கசகசா 2 வராகன் எடை (7கிராம்) மஞ்சள் காவி 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) முன் சித்தப்படுத்தின வீரம் $\frac{1}{4}$ வராகன் எடை.

**செய்முறை:—** கோதுமையைக் கல்வத்திலிட்டு அரைத்து மாவாக்கிக் கொள்ள வேண்டும். கசகசாவைக் கல்வத்திலிட்டு நேர்மையாகப் பொடித்துக் கொள்ள வேண்டும். இவ்விதமே மற்ற மூன்றையும் தனித்தனியேப் பொடித்து எல்லாவற்றை யும் ஒன்றாக கலந்து நீர் விட்டு மூன்று மணி நேரம்அரைத்து வெண்ணெய் போலான பின்பு வெற்றிலையில் வைத்து புட்டி யில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 1 முதல் 3 குன்றிமணி எடை, தினம் இரண்டு மூன்று வேளை உபயோகிக்கலாம்; நோயிற்குத் தகுந்தபடி ஏழு ஒன்பது, பதினோரு நாள் உபயோகிக்கவும்.

**அனுபானம்:-** பனைவெல்லம், வாழைப்பழம் முதலியவை களாகும்.

**தீரும்நோய்கள்:-** கிரந்திப் புண், மேகப்புண், குழிப்புண், அழிபுண், சிலைப்புண் முதலிய எல்லாவகைப் புண்களும் தீரும்.

**ஆனால், சொறிசிரங்கு, சொறிப்புண், குட்டப்புண் ஆகியவை களுக்குக் கொடுக்கலாகாது.**

**பத்தியம்:-** உப்பில்லாமல் சிறுபயறு அரிசியில் உடைத்துப் போட்டுக் கஞ்சி காய்ச்சி சர்க்கரை போட்டுக் கொடுக்கவும். புழுங்கலரிசி ரொட்டி தின்னலாம்; மற்றொன்றும் ஆகாது. மறு பத்தியம் வறுத்த உப்புக் கூட்டவும்.

**குறிப்பு:-** நோய் வலிவாயிருந்தால் மேற்கண்ட வீரம் காலே அரைக்கால் வராகன் எடை சேர்த்துக் கொள்ளலாம்; கொடிய நோய்களுக்குக் கடின மருந்து அவசியமே; மருத்துவர்கள் எந்த மருந்தையும் விழிப்புடன் உபயோகித்தால் எவ்வித பயமு மில்லை. இதைத் தொடர்ச்சியாகச் சில நாள் வரை உபயோகித் தால் சிலருக்கு உதடு வீங்குவதுண்டு. அப்படி வீங்கினால் மருந்தை உடனே நிறுத்திவிடவும்.

## 1514. கிரந்தி உருண்டை

(அ) சுத்தி செய்த இலிங்கம், இரச கற்பூரம் இவை வகைக்கு ½ வராகன் எடை (1¾ கிராம்) இரச செந்தூரம், மேற் கண்டபடி சுத்தி செய்த வீரம் வகைக்கு ¼ வராகன் எடை, பருமனான வெற்றிலைச் சாறு செல்லத்தக்க அளவு. பனை வெல்லம் 1½ வராகன் எடை (5¼ கிராம்).

(ஆ) கருங்குருவையரிசி, அல்லது கார் அரிசி 2 பலம் (70 கிராம்) உயர்ந்த சந்தனம் அரைத்த விழுது 3 பலம் (105கிராம்)

**செய்முறை:-** (அ)விலுள்ள சரக்குகளில் வெல்லம் தவிர மற்றவைகளைத் தனித்தனியே பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து வெல்லத்தையும் சேர்த்து ஒருமணி நேரம் அரைத்து ஒரு உருண்டையாகச் செய்து (ஆ)விலுள்ள அரிசியை ஒரு துணியில் வைத்து அதன் நடுவில் மேற்படி உருண்டையை வைத்து ஒரு பொட்டணமாகக் கட்டிச் சந்தனத்தைக் குழம் பாகக் கரைத்து அதில் இந்தப் பொட்டணத்தை ஓரிரவு ஊற வைத்து மறுநாள் காலையில் பொட்டணத்தை அவிழ்த்து அரிசி, மருந்து முதலிய எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு வெண்ணெய் போல் அரைத்து நான்கு குன்றிமணி எடை உள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திப் பீங்கான் பாத் திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 2 முதல் 3 மாத்திரை தினம் மூன்று, நான்கு, ஐந்து வேளை வீதம் நோய் வலிமைக்குத் தகுந்தபடி மூன்று நாள், ஐந்து நாள், ஏழுநாள், ஒன்பது நாள் உபயோகிக்கலாம்.

**அனுபானம்:-** வெல்லம் பனைவெல்லம், வாழைப்பழம் முதலியனவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** கிரந்தி, அரையாப்பு, கண்டமாலை, அரி கிரந்தி, பிளவை, மேகம் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** உப்பு, புளி ஆகியவைகளை நீக்கவும். மறு பத்தியம் இரண்டு மூன்று நாளிருந்து ஓமமரைத்துக் கஞ்சியில் கரைத்துத் தேய்த்து வெந்நீர் குளியல் செய்துஉப்பு,புளி முதலியவற்றைச் சேர்த்துக் கொள்ளவும்.

**குறிப்பு:-** வீரம், இரசகற்பூரம் முதலியசரக்குகள் கொடுமையானவைகளெனச் சிலர் மலைப்பார்கள். இவை கொடூரமானவைகளென்பது நிச்சயமே. ஆனால்இவைகளைக் குறைந்த அளவாகவும், சமயோசிதம் போல் கிரமப்படுத்தியும் தக்க அனுபானங்களுடன் சேர்த்தும் உபயோகிப்பதனால் எவ்வித கெடுதியும் உண்டாகாது. முரட்டு நோய்களுக்குச் சற்று கடினமான மருந்துகளை உபயோகிக்காவிடின் சீக்கிரமாக அது ஒருபோதும் கைவசப்படாது; ஆகையால் இவ் வகையான மருந்துகளும் அவசியமென்பது பல்லாண்டுகள் அனுபவசித்தி பெற்ற சிறப்புடைய மருத்துவர்களுக்கு வெளிப்படையாகத் தெரிந்த செய்தி

## 151ு. புற்றுப் பதங்கம்

சுத்தி செய்த இரசம், நெல்லிக்காய் கெந்தம், இலிங்கம், அரிதாரம், மனோசிலை, வெள்ளைப் பாடாணம், இரசகற்பூரம், காந்தம், சாதிக்காய் இவை வகைக்கு 2½ வராகன் எடை (8¾ கிராம்), குப்பைமேனிச்சாறு செல்லத் தக்க அளவு, உப்பு 2 படி.

**செய்முறை:-** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்து அரைத்து நன்றாகக் கறுத்தபின் மற்றவைகளையும் தனித்தனியேப் பொடித்துச் சேர்த்து மேற்படி சாற்றால் ஒரு மணிநேரம் அரைத்து மெல்லிய துணியில் தடவிக் காயவைத்து வைத்துக் கொள்க. உப்பை வெய்யிலில் போட்டு ஈரமுலர உலர்த்தி இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு சட்டியில் போட்டு சமமாக அழுத்தி அதன் நடுவில் முன் சித்தப்படுத்தின துணியில் வைத்து அதன் மறுபாதி உப்பைக் கொட்டிச் சமப்படுத்தி மறு சட்டி மூடி பலமாக ஏழு சீலைமண் செய்து உலர்த்தி அடுப் பேற்றி மூன்று சாமம் எரித்து ஆறவிட்டுப் பிரித்து மேற்சட்டியிலும் கீழ்ச் சட்டியிலும் படிந்திருக்கும் பதங்கத்தைச் சுரண்டி எடுத்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** ¼ முதல் ½ குன்றிமணி எடை காலை, மாலை இரண்டு வேளையும் அல்லது காலையில் ஒரு வேளை மாத்திரம் உபயோகிக்கவும்.

**அனுபானம்:-** அரை ஆழாக்கு பசுவின் பாலில் கலந்து கொடுக்கவும்.

**தீரும்நோய்கள்:-** கன்னப்புற்று, மார்புப் புற்று, வாய்ப் புற்று, அல்குல் புற்று, கால் புற்று, கண்டமாலை, வெள்ளைக் குட்டம், பறங்கிச் சூலை, கைகால் முடக்கு, அரையாப்பு ஆகியவைகள் தீரும்.

**பத்தியம்:-** புளி, புகை தள்ளி உப்பை வறுத்துக் கூட்டவும்.

**குறிப்பு:-** இவ்வித பதங்கம் முதலிய மருந்துகளை இளைய வர்களுக்கும் பெண்களுக்கும் உபயோகிக்க வேண்டுமானால் அவரவர்களுக்குத் தகுந்தது போல் இளகம், நெய், எண்ணெய், முதலியவைகளைச் செய்து அதில் அவரவர்களுக்குத் தகுந்தது போல் இரண்டொரு குன்றிமணி அளவு பதங்கத்தைச் சேர்த்து உபயோகிக்க வேண்டியது. இவ்விதம் செய்வதால் எவ்வித உடலினர்களுக்கும் பொருந்துவதுடன் அவர்களுக்கு உண்டாகி யிருக்கும் கொடிய நோய்களும் நீங்கிப் போகும்.

## 15. 6. கிரந்தி வல்லாதகி

(அ) சுத்திசெய்த சேராங்கொட்டை 16 பலம் (560 கிராம்) பசுவின் பால் 1 படி.

(ஆ) சுத்திசெய்த பறங்கிப்பட்டை, குக்கில் வகைக்கு 2 பலம் (70 கிராம்), சத்திச்சாரணைக் கிழங்கு. ஆகாசக் கருடன் கிழங்கு, பூமி சர்க்கரைக் கிழங்கு, மேற்றோல் சீவின சுக்கு, சிற்றரத்தை, கண்டத்திப்பிலி, குரோசானி ஓமம், வாய் விளங்கம், சன்னலவங்கப்பட்டை, கோட்டம், ஓமம், சிறு தேக்கு. செண்பகமொக்கு, கருஞ்சீரம், அமுக்குராக்கிழங்கு இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்),

(இ) கோரோசனை 2வராகன் எடை (7 கிராம்) வெல்லம் 16 பலம் (560 கிராம்).

**செய்முறை:-** (அ) விலுள்ள சேராங்கொட்டையை நான் காக நறுக்கிப் பாலில் போட்டுக் காய்ச்சி எண்ணெய் கக்கி

மிதந்தவுடன் கொட்டைகளை நீக்கி விட்டுப் பாலைக் குழம்புப் பதமாகக் காய்ச்சி வைத்துக் கொள்ளவும். காய்ச்சும்போது கைவிடாமல் துழாவிக் கொண்டிருக்க வேண்டும்.

(ஆ) விலுள்ளவைகளில் சூரணஞ்செய்யவேண்டியவைகளைச் சூரணித்தும், அரைக்க வேண்டியவைகளை அரைத்தும், ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்க. வெல்லத்தைக் கொஞ்சம் தண்ணீரில் கரைத்துக் காய்ச்சி இரண்டு கொதி வந்தவுடன் வடிகட்டித் திப்பியை நீக்கி விட்டு மறுபடியும் காய்ச்சிப் பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற பாலைச் சேர்த்து (ஆ)விலுள்ளவைகளை அதில் சிறுக சிறுகச் சேர்த்து மத்தால் கடைந்து எல்லாம் ஒன்றாகக் கலந்த பின்பு கீழிறக்கி ஆறின பின் கோராசனைப் பொடியைத் தூவிக் கலந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 1 முதல் 14வராகன் எடை. காலை மாலைஇரண்டு வேளையும் அரை முதல் ஒரு மண்டலம் உபயோகிக்கவும்.

**தீரும்நோய்கள்:-** எல்லா வகை மேகங்கள், கிரந்தி, குட்டம் கொடிய விரணங்கள், சூலை, நாசிரணம் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** இச்சா பத்தியம்.

**குறிப்பு:-** இந்த வல்லாதகியுடன் மேற்கண்ட புற்றுப் பதங்கத்தையும் சேர்த்து உபயோகித்தால் இன்னும் அநேக நோய்களும் சீக்கிரமாகத் தீர்ந்து விடும்.

## 1017. பறங்கியாதி இளகம்

(அ) சுத்திசெய்த பறங்கிச் சக்கை 6 பலம் (210 கிராம்), மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சள் கடுக்காய்த்தோல்' தான்றிக்காய்த் தோல் நெல்லிமுள்ளி, நற்சீரகம், கருஞ்சீரகம், குரோசானி ஓமம், கோட்டம், அதிமதுரம், ஓமம், ஏலரிசி, இலவங்கம், சாதிக்காய் சாதிப்பத்திரி, சடாமாஞ்சில், கோரைக் கிழங்கு, செண்பகமொட்டு கொத்துமல்லி விதை இலவங்கப்பட்டை, இலவங்கப் பத்திரி. வாய்விளங்கம். விலாமிச்சம்வேர் நன்னாரிவேர். அமுககுராக் கிழங்கு, கொடிவேலி வேர்ப்பட்டை, சங்கம்வேர்ப்பட்டை, செவ்வியம், கண்டத்திப்பிலி இவை வகைக்கு 2வராகன் எடை, இவை எல்லாவற்றையும் பூவரசம்பட்டைச் சாற்றில் ஒரு ராப்பகல் ஊற வைத்து வெய்யிலில் உலர்த்தி இடித்துத் துணியில் வடிகட்டிக் கொள்ளவும்.

(ஆ) சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 2 பலம் (70 கிராம்) இரசகற்பூரம் 1 வராகன் எடை, மூங்கிலுப்பு 3வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்).

(இ) பசுவின் நெய் 12 பலம் (420 கிராம்), தேன் 12 பலம் (420 கிராம்), நாட்டுச் சர்க்கரை 12 பலம் (420 கிராம்),

**செய்முறை:-** (அ)விலுள்ள சூரணத்துடன்(ஆ)விலுள்ளவை களைத் தனித்தனியே நேர்மையாகப் பொடித்துக் கலந்து ஒரு மணி நேரம் அரைத்து நன்றாகச் சேர்த்துக் கொள்ளவும். நெய்யை ஒரு பாத்திரத்தில் விட்டுக் காய்ச்சி அதில் வெற்றிலையைப் போட்டால் சடசடவெனச் சத்தமுண்டாகும் சமயத்தில் வெற்றிலையை நீக்கி விட்டு முன் சித்தப்படுத்தின சூரணத்தைப் போட்டுக் கரிந்து போகாதபடி கைவிடாமல் துழாவிக் கொண்டிருந்து பிறகு கீழிறக்கித் தேனைவிட்டு நன்றாகக் கலந்து பிறகு சர்க்கரையைச் சேர்த்து மத்தால் கடைந்து ஒன்றாகக் கலந்து ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் டுத்தவும்.

**அளவு:-** 1முதல் 1½ வராகன் எடை.காலை,மாலை இரண்டு வேளையும் ஒரு மண்டலம் உபயோகிக்கவும்.

**தீரும்நோய்கள்:-** மேக ஊறல், கைகால் பிடிப்பு, மேக வாயு, மேகசூலை, மேகவிரணங்கள், இருபத்தொருவகை மேகங்கள் ஆகியவை தீரும். தாது வலிவு, உடல்வலிவு உண்டாகும்.

**பத்தியம்:-** துவரை, அவரைப் பிஞ்சு, புடலம் பிஞ்சு, பீர்க்கம் பிஞ்சு ஆகியவை சேர்த்து இச்சாபத்தியமாயிருக்கவும். நான்கு நாளைக்கு ஒருமுறை நல்லெண்ணெய் தேய்த்து முழுகவும். புளி, புகை, கரப்பான் பண்டங்கள், கடுகு, வெங்காயம், நெய், தயிர், இறைச்சி ஆகியவைகளை மருந்து தின்னும்போது சேர்க்கலாகாது. மருந்தை விட்ட பிறகு எல்லாம் தின்னலாம்.

## 1518. சடைச்சி நெய்

(அ) சடைச்சிவேர் 100 பலம் (3500 கிராம்). இதனை நன்றாகச் சிதைத்து ஒரு பாண்டத்திலிட்டுப் பதினாறுபடிதண்ணீர் விட்டுக் காய்ச்சி இரண்டுபடியாகச் சுண்டவிட்டு இறக்கி இளஞ்சூட்டுடன் பிசைந்து வடிகட்டி வைத்துக்கொள்க தின்னலாம்.

(ஆ) நெய் 1 படி, வேப்பெண்ணெய் ½ படி, திராய்ச்சாறு ½ படி.

(இ) பொற்கொன்றை வேர்ப்பட்டை, அதிமதுரம், சந்தனத்தூள், பேய்ப்புடல், வெட்பாலையரிசி, அதிவிடையம், மஞ்சள் வேப்பம்பட்டை, பற்படாகம், அரிசித்திப்பிலி, விழலரிசி, கடுகுரோகணி, கொடிவேலிவேர்ப்பட்டை, நிலவேம்பு; பெருங்குரும்பை, இவை வகைக்கு 3வராகன் எடை. இவற்றை ஒன்றாகச் சேர்த்து இடித்துத் தூள்செய்து துணியில் வடிகட்டிக் கொள்க.

(ஈ) சுத்திசெய்த இரசம், நெல்லிக்காய் கெந்தகம் மனோசிலை இவை வகைக்கு 3½ வராகன் எடை. இவற்றுள் இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்து அரைத்து நன்றாகக் கறுத்த பின்பு மனோசிலையைத் தனியே பொடித்து இதனுடன்சேர்த்து ஒரு சாம நேரம் கைவிடாமல் அரைத்து வைத்துக் கொள்க.

**செய்முறை:-** (அ) விலுள்ள குடிநீரில் கொஞ்சம் எடுத்து வைத்து விட்டு மீதியையும், (ஆ)விலுள்ள திரவங்களையும் ஒன்றாகக் கலந்து கொள்க. (இ)யிலுள்ள சூரணத்தை அம்மியில் வைத்து முன் எடுத்து வைத்த குடிநீரைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போல் அரைத்து முன் சித்தப்படுத்தி வைத்திருப்பதில் கரைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி (ஈ)யிலுள்ள பொடியைச் சிறுகச் சிறுகத் தூவி நன்றாகக் கலக்கி சேர்த்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 1 முதல் 2 வராகன் எடை. உடல் வலிவு, நோய் வலிவு ஆகியவற்றை அறிந்து காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும். மேலுக்கும் பூசி மூன்று நாளைக்கு ஒரு தடவை அரைப்பிட்டு தலைமுழுகச் செய்து வரவும்.

**தீரும்நோய்கள்:-** எதனாலும் தீராத பறங்கிக் குட்டம் எதனாலும் ஆறாத புண்கள், சிறு சொறி, பெருஞ்சொறி, பேய்ச் சொறி, யானைச்சொறி, கிரந்தி ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** இச்சாபத்தியம். நோய் வலிவாக இருந்து உடல் வலிவும் இருந்தால் புளி, புகை முதலியவைகளைத் தள்ளிப் பத்தியமும் வைக்கலாம்.

## 1519. தேங்காய் நெய்

(அ) முற்றல் தேங்காயைத் துருவி பால் பிழிந்து, காய்ச்சின நெய் 16 பலம் (560 கிராம்) புங்கம்பால், ஆலம்பால், ஆடுதின்னாப் பாளைச்சாறு வகைக்கு 2 பலம் (70 கிராம்).

(ஆ) சுத்திசெய்த இலிங்கம், பொன்னரிதாரம், மிருதார் சிங்கி, நெல்லிக்காய் கெந்தகம், சீனாக்காரம், கொடுக்காய்ப் புளிப்பட்டைத்தூள் கொடிவேலி வேர்ப்பட்டைத் தூள் இவை வகைக்கு 1 வராகன் எடை.

**செய்முறை:** (அ) விலுள்ள திரவங்களைஎல்லாம் ஒன்றாகக் கலந்து கொள்க. (ஆ)வில் முன்னுள்ள ஐந்து சரக்குகளையும் தனித்தனியே பொடித்தும், பின்னுள்ள இரண்டுவகைச்சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து தேங்காய்ப்பாலைச் சிறுகச்சிறுக விட்டு மைபோலரைத்து முன் சித்தப்படுத்தியிருப்பதில் கரைத்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

**அளவு:-** 1 முதல் 2 வராகன் எடை. தினம் காலை, மத்தியானம், மாலை ஆகிய மூன்று வேளையும் உபயோகிக்கவும். மேலுக்கும் பூசவும்.

**தீரும்நோய்கள்:-** கன்னக்கிரந்தி, கன்னக்காளான், காது ஓசை, காது சூலை, கன்னக்கரப்பான், கன்னப்படுவன், கன்னப் புற்று ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** இச்சாபத்தியம்.

## 1520. கரளைநோய் நிவாரண எண்ணெய்

(அ) ஆடுதின்னாப் பாளை இலை, மாவிலிங்கை இலை, வெண்ணொச்சி இலை, துளசி இலை, முருங்கை இலை. பாவட்டை இலை, கள்ளி, வேளைச் சமூலம், முள்ளங்கிக் கிழங்கு, வெங்காயம், கையாந்தகரை எலுமிச்சம்பழம், எருக்கம்பூ, முருங்கைப்பட்டை இவற்றின் சாறு வகைக்கு 16 பலம் (560 கிராம்) நல்லெண்ணெய் 64 பலம்.

(ஆ) மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, பெருங்காயம். இந்துப்பு, வலம்புரிக்காய், யானைத் தந்தத்தூள் தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ், கோரைக் கிழங்கு, கோட்டம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) இவற்றுள் இடிக்க வேண்டியவைகளை இடித்துத் தூள் செய்தும் பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்தும் ஒன்றாகக் கலந்தும் வைத்துக் கொள்க.

**செய்முறை:-** (அ) விலுள்ள சாறுகளை ஒன்றாகக் கலந்து அதில் சுமார் இருபது பலம் சாற்றை வைத்துக் கொண்டு மிகுந்த சாற்றுடன் எண்ணெயைக் கலந்து வைத்துக் கொள்க. (ஆ)விலுள்ள சூரணத்தை அம்மியில் வைத்து அரைமணி நேரம் அரைத்து நன்றாகக் கலந்த பின்பு முன் எடுத்து வைத்திருக்கிற சாற்றில் கொஞ்சம் கொஞ்சமாக தெளித்து வெண்ணெய்போல அரைத்து முன் சித்தப்படுத்தி இருப்பதில் கரைத்து விடவேண்டியது. அரைத்து பின் சாறு மிகுந்திருந்தால் அதனையும் அதில் கலந்து விடவேண்டியது. பிறகு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துக் கடுகு திரள் பதத்திலிறக்கி வடிகட்டி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 1½ முதல் 5 வராகன் எடை வரை. காலை, மாலை இரண்டு வேளையும் ஒன்று முதல் இரண்டு மண்டலம் உபயோகிக்கவும்; இதனை மேலுக்கும் பூசவும்.

**தீரும்நோய்கள்:-** கரளை நோய்கள், விஜூபி, கரளைக் கட்டி ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** இச்சா பத்தியம்.

**குறிப்பு:-** கரளை நோய்களில் நரம்புகள் சுருங்கிக் கொண்டிருக்கும் ஒருவகையுண்டு; அது அசாத்தியம்; அதனை அறுவை செய்து நீக்கி விட்ட போதிலும் அது மறுபடியும் கிளைத்துமுன் போலாகி விடுவதுண்டு; இந்த எண்ணெயை உபயோகித்து வந்தால் அது வளராமல் நின்று போகும்.

## 1521. மேக எண்ணெய்

(அ) எள்ளெண்ணெய் 1 படி, வெள்ளறுகுச்சாறு 1 படி, சங்கம்வேர்ப் பட்டைச்சாறு 1 படி.

(ஆ) சித்திர மூலவேர்ப்பட்டை, கருஞ்சீரகம், கார்போகரிசி, பறங்கிப் பட்டை வகைக்கு 1பலம் (35கிராம்).

(இ) சுத்திசெய்த அரிதாரம், நெல்லிக்காய் கெந்தகம், சாதிலிங்கம், மனோசிலை இவை வகைக்கு 2½ வராகனெடை.

**செய்முறை:-** (அ)விலுள்ள இரண்டு சாறுகளையும் ஒன்றாகக் கலந்து சுமார் இரண்டு ஆழாக்கு எடுத்து வைத்துக் கொண்டு மிகுந்ததில் எண்ணெயைக் கலந்து வைத்துக் கொள்க. (ஆ) விலுள்ளவைகளை இடித்துத் தூள் செய்து அம்மியில் வைத்து முன் எடுத்து வைத்திருக்கும் சாற்றையும் சிறுகச்சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து முன் சித்தப்படுத்தி வைத்திருப்பதில் கரைத்து விடவும். அரைத்து மிகுந்த சாறிருந்தால் அதனையும் கலந்து விடவும். (இ)யிலுள்ள வகைகளைத் தனித்தனியாக பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து ஒரு சாமநேரம் கைவிடாமல் அரைத்து முன் சித்தப்படுத்தினதில் தூவிச் செம்மையாகத் துழாவி அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டிப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 1 முதல் 2 வராகன் எடை. காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும். மேலுக்கும் பூசவும்.

**தீரும்நோய்கள்:-** மேகப்புண், மேகவிரணம், அழிபுண், குழிப்புண், புரையோடுகிற விரணம் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** இச்சாபத்தியம்; நோய் வலுவறிந்து பத்திய மேற்படுத்தவும்.

## 1522. வடிவெண்ணெய்

(அ) வெள்ளைக் காக்கட்டான் இலை, கருப்புக் காக்கட்டான் இலை, அவுரியிலை, வல்லாரையிலை, பொற்றலைக் கையாந்தகரை, கற்றாழஞ்சருகு, பிரம்மி வழுக்கை இவை வகைக்கு 8 பலம் (280 கிராம்), சிறுசெருப்படை, சிறுகீரைச் சமூலம், ஆனைநெருஞ்சிச் சமூலம் இவை வகைக்கு 4 பலம் (140 கிராம்).

(ஆ) மஞ்சள் கடுக்காய்த்தோல் 32 பலம் (1 கிலோ 120 கிராம்) (இதனை நான்குபடி தண்ணீரில் போட்டுக்காய்ச்சி நான்கிலொரு பாகமாகச் சுண்டவைத்து வடிகட்டித் திப்பியை நீக்கி வைத்துக் கொள்க.) குமரிச்சாறு ½ படி, நல்லெண்ணெய் ½ படி.

**செய்முறை:-** (அ) விலுள்ளவைகளைத்தனித்தனி வெண்ணெய்போலரைத்து ஒன்றாகக் கலந்து அம்மியில்வைத்து ஒரு சாம நேரம் அரைத்து ஒரு ரூபாயெடையுள்ள வில்லைகளாகச் செய்து (ஆ) விலுள்ளவைகளை ஒன்றாகக் கலந்து பீங்கான் பாத்திரத்தில் மேற்படி வில்லைகளை அதில் போட்டு வாய் பந்தனஞ் செய்து அரைமுகச சதுரமுள்ள பள்ளந் தோண்டி அதில் புதைத்து நாற்பத்தோராம் நாளெடுத்துக் கொள்ளவும்.

**அளவு:-** 1 வில்லை, எண்ணெய் 1 வராகன் எடை (3 ½கிராம்) இவ்விரண்டையும் உட்கொள்ள வேண்டியது. இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் அரைமுதல் ஒரு மண்டலம் சமயோசிதம் போல் உபயோக்கிக்கவும்.

**தீரும்நோய்கள்:-** மேகசம்பந்தமான நோய்கள், இரத்தக் கெடுதியினாலுண்டாகும் நோய்கள், தோல்நோய்கள் முதலிய எல்லாநோய்களையும் நீக்கி இரத்தத்தைத் தூய்மை செய்து உடல் அழகு, உடல்வசீகரம். முகவசீகரம் ஆகியவைகளை உண்டாககும். உடலில் அழகை உண்டாக்குவதால் இதற்கு வடிவெண்ணெய் எனப் பெயரிடப்பட்டிருக்கிறது,

**குறிப்பு:-** இதனைச் செய்வதற்கும், இதனைச் சாப்பிடுவதற்கும் சற்றுக் கடினமாகத்தோன்றினாலும் இதனால் உண்டாகும் நன்மை அதிகம். மற்ற மருந்தினால் இவ்வளவு நன்மைகள் உண்டாகாது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் முதலிய யாவரும் உபயோகிக்கலாம் புகழ்பெற்ற ஒரு மருத்துவர் இதனை உபயோகித்து அதிக புகழை பெற்று வந்தார்.

## 1523. மேகப் புகை

**சுத்தி** செய்த இரசம், இலிங்கம், வீரம், அரிதாரம், காந்தம் நெல்லிக்காய்க் கெந்தகம். மனோசிலை, மிருதார்சிங்கி, பாடாணம். சூடன், பால்துத்தம், துருசு இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்),

**செய்முறை:-** மேற்கண்டவைகளை எல்லாம் தனித்தனியே பொடித்துப் பிறகு ஒன்றாகச் சேர்த்துப் பசுவின் நெய்யைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாம நேரம் அரைத்து ஒரு சாண் சதுரத் துணியிலூட்டித் திரித்து விளக்கிற் போட்டுப் பசுவின் நெய் விட்டு விளக் கேற்றிப் புகைப் பிடிக்கவும். இந்தப்படி தினம் இரண்டுவேளை மூன்று நாள் செய்யவும். கண்ணில் புகைப்படாமல் கண்ணைப்பாதுகாத்துக் கொள்ள வேண்டியது

**தீரும் நோய்கள்:-** மேகரணம், குழிப்புண், புரையோடுகிற புண் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** ஆறு நாள்வரை மோரும் சோறும் சாப்பிடவும். ஏழாம்நாள், எட்டாம் நாள் ஒன்பதாம் நாள் குளிர்ந்த நீரில் தலைமுழுகச் செய்யவும். பதினோராம் நாள் முக்கூட்டு எண்ணெய் எள்நெய், சிற்றாமணக்குநெய், பசுவின் நெய் சேர்ந்தது. முக்கூட்டு எண்ணெய் காய்ச்சி முழுகி அன்று எல்லா உணவுப் பண்டங்களையும் சேர்க்கலாம்.

**குறிப்பு:-** இவ்வகைப் புகைப் பிரயோகம் சில முரட்டு நோய்களில் அவசியம் தேவையாக இருக்கிறது. ஆனால் இதனை உபயோகிப்பவர்கள் அதிக விழிப்புடன் உபயோகிக்க வேண்டியது. இன்னும் இந்தத் திரியைக் கொளுத்திப் புண், ரணம் முதலியவைகளில் காண்பிப்பதாலும் அதிகப் பிரயோசனமுண்டு.

## 1524. இரணப்பூச்சுத் தைலம்

(அ) வேப்பெண்ணெய், புங்கெண்ணெய் இவை வகைக்கு 4 பலம் (140 கிராம்), இலுப்பை எண்ணெய் 2 பலம் (70கிராம்).

(ஆ) தோலுரித்த பூண்டிதழ் 4 பலம் (140) கிராம் வேம்பாடம்பட்டை 1 பலம் (35 கிராம்).

(இ) குங்கிலியம் 4 வாரகன் எடை (14கிராம்), காய்ச்சுக் கட்டி: மிருதார்சிங்கி, சுத்தி செய்த பொன்னரிதாரம் மைசாட்சி இரசம், நெல்லிக்காய்க் கெந்தகம், நாபி, துத்தம் துருசு இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம் புங்கம்பால்

செல்லத்தக்க அளவு. இவற்றுள் இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்றாகக் கறுத்த பின்புமற்ற சரக்குகளையும் தனித்தனிப் பொடித்து ஒன்றாகச் சேர்த்து இதனுடன் கலந்து புங்கம்பாலைச் சிறுகச் சிறுகவிட்டு வெண்ணெய் போல அரைத்து வைத்துக் கொள்க.

**செய்முறை:-** (அ) விலுள்ள திரவங்களை ஒன்றாகக் கலந்து (ஆ) விலுள்ளவைகளை நன்றாகச் சிதைத்து அதில் போட்டுப் பொன்னிறமாகக் காய்ச்சி வடிகட்டி அதில் (இ) யிலுள்ளதைப் போட்டுக் கரைத்து மீண்டும் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டாமல் சரக்குடன் வைத்துக் கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** இதனை மேலே பூசி வருவதால் கண்டமாலை, பிளவை, பவுத்திரம், விப்புருதி, தொடைவாழை, அரையாப்பு, மேகப்புண், புரை ஆகியவைகளும், இவை சம்பந்தமான ரணங்களும் தீரும். புரையோடி இருந்தால் இதனைச் சீலைத்துண்டில் நனைத்துத் திரியாகத் திரித்து உட்செலுத்தி வருவதினால் சதை வளர்ந்து புரை தூர்ந்து ரணம் ஆறும். குழிப் புண்ணாயிருந்தால் சீலைத்துண்டில் நனைத்துக் குழியில் வைத்து வருவதானால் சதை வளர்ந்து குழி தூர்ந்து புண் ஆறும். இதனால் பலவித ரணங்கள் ஆறும். அவரவர்கள் தத்தம் அனுபவத்தால் நிச்சயித்தறிவார்களாக.

**பத்தியம்:—** நோயின் வலிமை, உடல் வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தது போல் பத்தியமேற்படுத்தவும்.

## 1525. மேக மேற்பூச்சுத் தைலம்

(அ) நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், புங்கெண்ணெய் ஆமணக்கெண்ணெய், பழைய நெய் இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்).

(ஆ) சுத்திசெய்த சேராங்கொட்டை 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்), மனிதர்நகம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$கிராம்).

(இ) கார்போகரிசி 2 வராகன் எடை(7கிராம்),வேம்பாடம் பட்டை 2 வராகன் எடை (7 கிராம்), நீரடிமுத்துப்பருப்பு $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), கருஞ்சீரகம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$கிராம்), பிரம தண்டு விதை 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), தகரைவிதை 1வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), கத்தூரி மஞ்சள் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$கிராம்), புங்கம்பட்டைச் சாறு செல்லத்தக்க அளவு. இந்த ஏழு சரக்கையும் இடித்து தூள் செய்து அம்மியில் வைத்து மேற்படி புங்கம் பட்டைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து வெண்ணெய்போல் அரைத்து வைத்துக் கொள்க.

(ஈ) சுத்தி செய்த பொன்னரிதாரம், நெல்லிக்காய்க் கெந்தகம், சாதிலிங்கம், இரசகற்பூரம், மனோசிலை, மிருதார்சிங்கி துத்தம், அண்டஓடு இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), சுத்திசெய்த வீரம் 1½ வராகன் எடை (5¼ கிராம்), நவச்சாரம் ½ வராகன் எடை (1¾கிராம்), பால்சாம்பிராணி 2 வராகன் எடை (7 கிராம்), மருத்து வெள்ளை 2 வராகன் எடை (7 கிராம்), முத்தலான மூன்று தேங்காய்களின் தனிப் பால். இந்தப் பதின்மூன்று சரக்குகளையும் தனித்தனியே பொடித்து ஒன்றாகக் கலந்து மேற்படி தேங்காய்ப்பாலைச் சிறுகச் சிறுக விட்டு வெண்ணெய்போல் அரைத்து மிகுந்து இருக்கிற பாலில் கரைத்து வைத்துக் கொள்க.

**செய்முறை:-** (அ) விலுள்ள திரவங்களை ஒன்றாகக் கலந்து (அ)விலுள்ள சேராங்கொட்டையை நான்காக நறுக்கிப்போட்டு நகத்தையும் போட்டுக் காய்ச்சி எண்ணெய் கக்கிக் கொட்டை மிதந்தவுடன் வடிகட்டி இறுத்து அதில் (இ)யிலுள்ளதைக் கரைத்து மறுபடியும் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடி கட்டி அதில் (ஈ) யிலுள்ளதைச் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டாமல் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**தீரும்நோய்கள்:-** இதனை மேலேபூசி வருவதால் மேக ஊறல், படர்தாமரை, மேகரணம், சொறி, புண் புரை ஆகியவை தீரும்.

## 1526. குழிப்புண் பூச்சுத் தைலம்

முந்திரிஎண்ணெய், வேப்பெண்ணெய் இவை வகைக்கு 1பலம் (35 கிராம்), சுத்தி செய்த நெல்லிக்காய் கெந்தகம், மிருதார் சிங்கி, வெள்ளைக் குங்கிலியம் இவை வகைக்கு 1 வராகன் எடை (35 கிராம்).

**செய்முறை:-** முன் இரண்டு எண்ணெய்களையும் சேர்த்துக் காய்ச்சிக் கொதித்தவுடன் பின் மூன்று சரக்குகளையும் தனித் தனியே பொடித்து ஒன்றாகக் கலந்து ஒரு மணி நேரம் அரைத்து எடுத்து எண்ணெயில் போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** இதனை மேலேபூசி வருவதால் குழி விழுந்தபுண், இரணம் ஆகியவை தீரும். குழி விழுந்த புண்ணிற் துணியில் நனைத்துக் குழிக்குள் வைத்து வரச் சதை வளர்ந்து புண் ஆறும்.

## 1527. புண் சுடர்த் தைலம்

ஒரு சாண் அகல நீளமுள்ள சீலை கிழித்து அதனை எருக்கம் பாலில் நனைத்து நனைத்து மூன்று முறை உலர்த்திக் கொள்ளவும். அதன் மேல் அரைப் பலம் சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகத்தைப் பொடித்து அத துணியின் நடுவில் வைத்துப் பரப்பித் துணியை உருட்டித் திரியாக்கி இரும்புக் கம்பியில் சேர்த்து சிற்றாமணக்கெண்ணெயில் நனைத்துக் கொளுத்தி மேலே மேற்படி எண்ணெயை விட்டுவரத் தைலம் விழும். அதை எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** மேற்படி தைலத்தைப் புண்ணில் போட்டுவர உச்சிப்பிளவை, பக்கப் பிளவை, கண்டமாலை, பனிச்சை, தண்டுப்பிளவை, அரையாப்பு, பவுத்திரம், முலைக்குத்து, விப்புருதி ஆகிய எல்லாவகைப் புண்களும் தீரும்; கட்டிகள் கரையும்.

## 1528. புண்ணெய்

புங்கம்பால், சதுரக் கள்ளிப்பால், பழைய நெய், இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), சுத்தி செய்த இரசகற்பூரம் 1 வராகன் எடை (35 கிராம்).

**செய்முறை:-** மேற்படி மூன்று திரவங்களையும் ஒன்றாகக் கலந்து இரசகற்பூரத்தைப் பொடித்துப் போட்டுக் காய்ச்சி இரண்டு மூன்று கொதி வந்தவுடன் இறக்கி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** மேற்படி நெய்யைத் துணியிலூட்டி மேலே போட்டுவரத் தீராத விரணங்கள், ஆறாத புண்கள், புரைகள் ஆகியவை தீரும்.

## 1529. புரை நெய்

இறந்துபோன நாயின் நாக்கைஅறுத்துலர்த்திச் சமனெடை நல்ல பாம்பின் சட்டையைச் சேர்த்திடித்துத்தூள் செய்து அதற்கிரண்டு மூன்று பங்கு பசுநெய்யிற் போட்டுக் காய்ச்சி இரண்டு மூன்று கொதி வந்தபின் இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** மேற்படி நெய்யைப் புரையிலூற்றியடைக்கப் புரையோடுகிற புண்கள் தீரும்.

## 1530. குழிப்புண் உசிதம்

சிறு துளசியிலையை அரைத்து வைத்துக் கட்டி வரக் குழிப் புண் ஆறிப் போகும்.

## 1531. புண் பச்சை எண்ணெய்

அலரி விதையெண்ணெய் 10 பலம் (350 கிராம்), ஜங்கால் பச்சை 4 வராகன் எடை. இதனைப் பொடித்து மேற்படி எண்ணெயிற் போட்டுக் காய்ச்சிப் பதத்திலிறக்கி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனை மேற்பூசி வருவதால் அடிகாயம் தடிக்காயம், வெட்டுக்காயம், குத்துக்காயம், குண்டுக்காயம், ஊமைக்காயம் முதலிய காயங்களும், மற்ற ஆறாத இரணங் களும் ஆறும். குழிப்புண், புரைப்புண் ஆகியவைகளில் சேலைத் துண்டிலூட்டிப் போட்டுவரச் சதை வளர்ந்து தூர்ந்து அவை ஆறும்.

## 1532. பிளவைக் களிம்பு

வெள்ளைக் குங்கிலியம் 1 பலம் (35 கிராம்), நல்லெண் ணெய் செல்லத்தக்க அளவு, சுத்தி செய்த இரசம், துருசு, வீரம் இவை வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்).

**செய்முறை:-** குங்கிலியத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து நல்லெண்ணெயைச் சிறுகச் சிறுக விட்டு வெண்ணெய்போல வரைத்து நீரை விட்டுச் செம்மையாக அலம்பிக் கழுவ வேண்டும். பிற்பாடு நீரைவிட்டு அரைத்து மேற்கண்டபடி அலம்பிக் கழுவி இறுத்து விடவேண்டும். இவ்விதம் பத்துத்தடவை மடக்கி மடக்கிக் கழுவி முடிவாக நீரை இறுத்து விடவும். பின் மூன்று சரக்குகளையும் சேர்த்தரைத்து இரசம் மடிந்த பின்பு, கல்வத்தி லிருக்கும் மருந்துடன் சேர்த்துக் களிம்புப் பதமாகிற வரையில் அரைத்துச் சீலையிலூட்டிப் பிளவையின் மீது போட்டு வைக் கவும். அது, பழுத்து உடைந்து போகும். பிறகு முன்போல வெள்ளைக் குங்கிலியத்தை நல்லெண்ணெய் விட்டரைத்து முன் போல் பத்துத் தடவை கழுவிச் சீலையில் தடவி இரணத்தின் மீது போடவும். பிளவைப்புண் ஆறும்.

## 1533. துவர் எண்ணெய்

நல்லெண்ணெய், வேப்பெண்ணெய். ஆமணக்கெண்ணெய் இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்), வெள்ளைக்குங்கிலியம், மிருதார்சிங்கி, மாசிக்காய், துருசு, காய்ச்சுக்கட்டி இவை வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), மஞ்சள் மெழுகு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்.)

**செய்முறை;-** எண்ணெயினங்களை ஒன்றாகக் கலந்து மெழுகைத் தவிர மற்றச் சரக்குகளைத் தூள் செய்து ஒன்றாகக் கலந்து மேற்படி எண்ணெயிற் போட்டுக் காய்ச்சிக் கொதி வந்தவுடன் மேற்படி மெழுகைப் போட்டுப் பதமாகக் காய்ச்சி இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனை மேற்பூச்சாகப் பூசி வருவதனால் எல்லாவகை இரணங்களும் தீரும்.

## 1534. மேற்படி வேறு

ஆலம்பட்டை, அரசம்பட்டை, கல்லிச்சிப்பட்டை, நிலக்கடம்புவேர் இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), கருங்குங்கிலியம் 1 வராகன் எடை காய்ச்சுக் கட்டி 1 வராகன் எடை தேங்காயெண்ணெய் 1 பலம் (35 கிராம்), விளக்கெண்ணெய் 1 பலம் (35 கிராம்).

**செய்முறை.-** இரண்டு எண்ணெய்களையும் ஒன்றாகக் கலந்து மேற்கண்ட சரக்குகளைத் தனித்தனியேப் பொடித்துப் பிறகு ஒன்றாககலந்து ஒரு மணி நேரம் அரைத்து மேற்படி எண்ணெய்க் கலவையில் தூவிப் பதமாகக் காய்ச்சி இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க,

**தீரும்நோய்கள்:-** மேற்கண்டபடி உபயோகிக்க மேற்கண்ட குணங்களுண்டாம்.

## 1535. புண் பிளாஸ்திரி

துத்தம், துருசு, அண்டஓடு இவை வகைக்கு 1 வாரகன் எடை (3½ கிராம்), நல்லெண்ணெய் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** முன் மூன்று சரக்குகளையும் தனித்தனி பொடித்து ஒன்றாகக் கலந்து அரைமணிநேரம் அரைத்து பிறகு நல்லெண்ணெயைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமம் நேரம் அரைத்து பிளாஸ்திரி பதத்தில் பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்க.

இதனைத் துணியில் தடவி இரணத்தின் மீது போட்டுவர ஆறாதவிரணங்கள், மகா விரணங்களெல்லாம் தீரும்.

## 1536. வடக் களிம்பு

பழைய வடத்தைச் சுட்ட சாம்பல் 2 ஆழாக்கு துருசு, துத்தம், சுத்திசெய்த இரசம் ஆகியவை வகைக்கு ¼ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), வெண்ணெய் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** சாம்பலை துணியில் வடிகட்டி அதிலுள்ள திப்பியை நீக்கி விடவும். மற்றச் சரக்குகளைத் தனித்தனி பொடித்து அந்தச் சாம்பலுடன் சேர்த்து ஒரு மணிநேரம் அரைத்து எல்லாம் நன்றாக கலந்த பின்பு வெண்ணெயைச் சேர்த்துக் களிம்புப்பதமாகிற வரையில் அரைத்துப் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும். துணியில் தடவி மேலுக்குப் போட்டு வருவதால் ஆறாத விரணம் ,புராதன விரணம் முதலிய எல்லாவகை விரணங்களும் தீரும்.

## 1537. வெட்டுக்காய உசிதம்

தேங்காயெண்ணெய் 8 பலம் (280 கிராம்), தும்பைச்சாறு 8 பலம் (280 கிராம்), இவ்விரண்டையும் கலந்து காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வடிகட்டிக்கொள்ளவும். இதனை மேலுக்குப் போட்டு வருவதால் வெட்டுப்பட்டு நெடுநாள் ஆறாமலிருக்கிற காயம் சீக்கிரம் ஆறிப்போகும்.

## 1538. ஆறாப்புண் உசிதம்

சோளச்சோற்றைக் கல்வத்தில் வைத்து எலுமிச்சம் பழச் சாற்றைவிட்டு வெண்ணெய்போல் அரைத்து அடை தட்டிப் புண்ணின்மேல் வைத்துக்கட்டி அறுபது நாழிகை சென்றபின்பு அவிழ்த்து நீக்கி விட்டு கௌரிப்பாடாணத்தை நல்லெண்ணெயில் இழைத்து இரணத்தின்மீது இறகால் தடவி அனல் காய்ச்சவும் ஆறாத ரணம், புண் ஆகியவை தீரும்.

## 1539. கிருமிப்புண் உசிதம்

துருசு, கிளிஞ்சிற் சுண்ணாம்பைச் சுட்டு வடிகட்டின தூள் இவ்விரண்டும் வகைக்கு ½ பலம் (17 ½ கிராம்), வெண்ணெய் தேவையான அளவு.

துருசைப் பொடித்துச் சுண்ணாம்பையும் சேர்த்து ஒன்றாகக் கலந்து பின்பு வெண்ணெயைச் சேர்த்துக் களிம்பு பதமாகிற வரையில் அரைத்துப் பீங்கான் சிமிழில் வைத்துக்கொள்ளவும், இதனைச் சீலைத் துண்டில் தடவி இரணத்தின் மீது போட்டு

வரா அதிலுள்ள கிருமிகள் செத்து அவை நாசமாகிப் புண்ணாறி விடும் கட்டிகளின்மீது போட்டக்கட்டி கரைந்துபோகும், அல்லது உடைந்து போகும். பிளேக் என்னும் மகாமாரியில் காணும் கட்டிகளின் மீதுபோட அவற்றிலுள்ளகிருமிகளை நாசமாக்கிச் சௌக்கியத்தைக் கொடுக்கும்.

## 1540 இரணக் கட்டு

மஞ்சள் மெழுகு 2 பலம் (70 கிராம்), துருசு, நல்லெண்ணெய், வெள்ளைச்சாரணைச்சாறு இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்).

துருசைப் பொடித்து மற்றவைகளையும் சேர்த்து அரைமணி நேரம் அரைத்து இரும்புக்கரண்டியில் வைத்துருக்கித் தண்ணீரில் சாய்க்கவும். பிறகெடுத்து மறுபடியும் கொஞ்சம் அரைத்து முன் போல் கரண்டியில் வைத்துருக்கித் தண்ணீரில் சாய்க்கவும். இவ்விதம் மடக்கி மடக்கி நான்கு தடவை சாய்த்து வில்லையாகச் செய்து அவசியமான இடத்தில் வைத்துக் கட்ட வேண்டியது. இந்தக் கட்டை நான்காம் நாள் அவிழ்க்கவும். இந்தப்படி பிடிப்புமாறி இரணம் உலருகிறவரைக்குப் புதிதாகச் செய்து அப்போதைக்கப்போது கட்டவும். ஏழு அல்லது பத்துக் கட்டு வரையில் கட்டலாம். கால்விரணம் முதல் மகா விரணம வரையிலுள்ள பல தீராத விரணங்கள் காய்ந்து உலரும்.

## 1541. துர்மாமிசக் களிம்பு

சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், வெள்ளைப் பாடாணம், துருசு, துத்தம், சாதிலிங்கம், இரசம், வங்காளப் பச்சை, இவை வகைக்கு 2 குன்றிமணி எடை, வெள்ளைக் குங்கிலியம் 4 வராகன் எடை (14 கிராம்), தும்பைச்சாறு செல்லத்தக்க அளவு, பசுவின் வெண்ணெய் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்றாகக்கறுத்த பின்பு மற்றச் சரக்குகளையும் தனித் தனிப் பொடித்து ஒன்றாகக் கலந்து அரைமணி நேரமரைத்து எல்லாம் கலந்த பின்பு தும்பையிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாம நேரமரைத்துப் பசுவின் வெண்ணெயில் கலந்து சிமிழில் வைத்துக் கொள்ளவும். இதனை துணியில் தடவி புண்ணின் மேல்போட்டுவர சதை வளர்ந்திருப்பது, துர்மாமிசம், சவ்வு படர்ந்திருப்பது முதலியவை கரைந்து நல்ல சதை வளர்ந்து புண் ஆறும்.

## 1542. சிவப்பு பிளாஸ்திரி

தேங்காய்த் தனிப்பால் ½ படி, நல்லெண்ணெய் ½ படி, இவ்விரண்டையும் காய்ச்சி இறக்கிக் கொள்க. சுத்தி செய்த சாதிலிங்கம், துத்தம் இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), துருசு 2 வராகன் எடை (7கிராம்),வடிகட்டின கற்சுண்ணாம்பு 1 வராகன் எடை (3½ கிராம்), வெள்ளைக்குங்கிலியம் 3வராகன் எடை (10½ கிராம்), மஞ்சள் மெழுகு 8 வராகன் எடை (28 கிராம்), பேய்ப்பீர்க்கம் விதைப்பருப்பு, செம்பு அரப்பொடி கருவேலம்பட்டை, இவை வகைக்கு ½ பலம்.

**செய்முறை:-** மேற்கண்ட சரக்குகளில் செம்பு அரப்பொடியைத்தவிர மற்றவைகளில் பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்தும் இடித்துத் தூள் செய்ய வேண்டியவைகளை தூள் செய்தும் ஒன்றாகக் கலந்து ஒருமணி நேரமரைத்து எல்லாம் சேர்ந்த பின்பு எடுத்து வைத்துக் கொள்க. செம்பரப் பொடியைக் கல்வத்திலிட்டு மேற்படி எண்ணெயைச் சிறுகச் சிறுக விட்டரைத்து நன்றாக மசிந்தபின்பு முன் சித்தப்படுத்தின தூளைச் சிறுகச்சிறுகச் சேர்த்து எண்ணெயைச் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாமநேரம் அரைத்து பிளாஸ்திரி பதத்தில் எடுத்துப் பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:—** இதனை மேலுக்குப் போட்டு வரச் சகல புண்களும், எல்லா வகை விரணங்களும் தீரும்.

## 1543. சப்தரிஷிக் களிம்பு

சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், அரிதாரம், மனோசிலை, பால்துத்தம், துருசு, வெங்காளப்பச்சை இவை வகைக்கு1 வராகன் எடை (3½ கிராம்), பசுவின் வெண்ணெய் 5 பலம் (175 கிராம்).

**செய்முறை:** முன்கண்ட சரக்குகளைத் தனித்தனியே பொடித்து ஒன்றாகக் கலந்து ஒருமணி நேரமரைத்துப் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும். இதனைத் துணியில் தடவி மேலுக்கு உபயோகித்துவர எல்லா வகை ரணங்களும் தீரும்.

## 1544. மஞ்சள் பிளாஸ்திரி

மஞ்சள் மெழுகு 3 பலம் (105கிராம்), நல்லெண்ணெய் 2 பலம் (70 கிராம்) கஸ்தூரி மஞ்சள் தூள் 1 பலம் (35 கிராம்), துத்தம் துருசு வகைக்கு 1 வராகன் எடை (3½கிராம்).

Cell: 9489777140
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக கடை
M.முருகன்

**செய்முறை:-** மேற்கண்ட சரக்குகளில் முன்னுள்ள மூன்றும் தவிர மற்றவைகளைத் தனித்தனியே பொடித்து ஒன்றாகக் கலந்து ஒருமணி நேரமரைத்து எடுத்து வைத்துக் கொள்க. மெழுகையும் எண்ணெயையும் சேர்த்து இரும்புக் கரண்டியில் விட்டு நெருப்பில் வைத்துருக்கி நீர் போலானவுடன் கஸ்தூரி மஞ்சள் பொடியைப் போடடுக் கீழும் மேலுமாகக் கிண்டிக் கிளறிக் கல்வத்தில்போட்டு அரைமணி நேரமரைத்துப் பிறகு முன் சித்தப்படுத்தின தூளையும் சேர்த்து மூன்றுமணி நேர மரைத்து கோந்து பதத்திலெடுத்துப் பீங்கான் சிமிழில் பத்திரப் படுத்தவும். இதனைச் சீலையில் தடவி ஒட்டுச்சீலை (பிளாஸ் திரி)யாக மேற்போட்டுவர எல்லாவகை இரணங்களும் தீரும்.

## 1545. கண்டமாலை எண்ணெய்

பச்சோந்தி ஒன்று, நல்லெண்ணெய் ½ படி, கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், ஓமம், வசம்பு இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்).

**செய்முறை:-** பச்சோந்தியை அறுத்துச் சட்டியிலிட்டு எரித்து அது கருகி உருகிவரும் சமயத்தில் எண்ணெயைவிட்டு முன் சரக்குகளை இடித்துத் தூள் செய்து அதில் போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டிப் பீங்கான் பாத் திரத்தில் வைத்துக் கொள்க. இதனை மேற்பூசிவரப் பலவகைக் கண்டமாலைகள் தீரும்.

## 1546. கண்டமாலைப் புகை பிளாஸ்திரி

சுத்தி செய்த வெள்ளைப் பாடாணம், பெருங்காயம், மாமரத்திலுள்ள வெள்ளைவண்டு சித்திரமூல வேர்ப்பட்டை, கல்நார், கல்மதம், அதிமதுரம், கோட்டம், செங்கழு நீர்க் கிழங்கு, அபின், ஆலம்வேர், மிளகு, உப்பு இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்), முட்டை வெள்ளைக்கரு, நல்லெண்ணெய் இவ்விரண்டும் சமனாகச் சேர்த்தது செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** மேற்கண்ட சரக்குகளில் பொடிக்க வேண்டிய வைகளைப் பொடித்தும் இடித்துச் சூரணிக்க வேண்டியவை களைச் சூரணித்தும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு ஒருமணி நேரமரைத்து நன்றாக சேர்ந்த பின்பு முன் கலந்து வைத்திருக் கும் வெண்கரு எண்ணெய் ஆகியவற்றின் கலவையைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமநேரமரைத்துச் சாண்சதுரத்துணித் துண்டுகளில் பூசித் திரிகளாகத் திரித்து வைத்துக் கொள்க.

இந்தத் திரியைக் கொளுத்திப் புகை புண்ணில் படும்படியாகவும் வாய், கண் ஆகியவைகளில் புகைபடாமலிருக்கும்படியாகவும் துப்பட்டியால் போர்த்திக்கொண்டு புகைபிடிக்கவும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் மூன்று நாள் புகைபிடிக்கவும். இதனைத் துணியில் தடவிப் புண்ணின் மீதும் போட்டு வரவும்.

**தீரும்நோய்கள்:-** எல்லாவகைக் கண்டமாலைகளும் தீரும்.

## 1547. கண்டமாலைப் புகை

சுத்திசெய்த சாதிலிங்கம், அரிதாரம், வெள்ளைப் பாடாணம், பறங்கிப்பட்டை, கொடிவேலி வேர்ப்பட்டை இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), துத்தம் 12 குன்றிமணி எடை.

**செய்முறை:-** இவை எல்லாவற்றையும் தனித்தனியே பொடித்து ஒன்றாகச் சேர்த்து இரண்டுமணி நேரம் அரைத்துப் பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்க. அவசியமானபோதுஇதில் சுமார் ஒரு வராகன் எடை எடுத்து மெல்லிய துணியில் பரப்பித் திரியாகத்திரித்து மேற்கண்ட விதமாகப் புகைபிடித்து வர மேற்கண்ட நோய் தீரும். கண்டமாலைப் புண் உலர்ந்து போகும்.

## 1548. கண்டமாலைப் பூச்சுத்தைலம்

(அ) நல்லெண்ணெய் ½ படி, புளிநரளைச் சாறு, பிரண்டைச்சாறு, கௌதும்பைச்சாறு, மாவிலங்கப் பட்டைச்சாறு, சின்னியிலைச்சாறு இவை வகைக்கு 1 ஆழாக்கு.

(ஆ) கொடிவேலி வேர்ப்பட்டை, அரளி வேர்ப்பட்டை, ஊமத்தை வேர்ப்பட்டை, தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ், வசம்பு இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்).

(இ) சுத்தி செய்த பச்சைநாபி, நெரிவிஷம், வெள்ளைப் பாடாணம், கௌரிப்பாடாணம், நெல்லிக்காய்க் கெந்தகம், மடல் துத்தம், இரசம் இவை வகைக்கு, 2½ வராகன் எடை (8¾ கிராம்), இவற்றுள் இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்றாக கறுத்த பின்பு மற்றச் சரக்குகளையும் தனித்தனியே பொடித்து அதனுடன் சேர்த்து ஒருமணி நேரம் அரைத்து நன்றாக கலந்து வைத்துக் கொள்க.

**செய்முறை:-** (அ) வில் எண்ணெயைத் தவிர மற்றச்சாறுகளை ஒன்றாகக் கலந்து அதில் சுமார் ஒரு ஆழாக்கு எடுத்து

வைத்துக் கொண்டு மீதியை எண்ணெயுடன் கலந்து விடவும். (ஆ) விலுள்ளவைகளை இடித்துச் சூரணித்து முன் எடுத்து வைத்திருக்கும் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து வெண்ணெய் போலரைத்து முன் சித்தப்படுத்தி வைத்திருப்பதில் கரைத்துக் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி அதில் (இ)யிலுள்ளதைத் தூவிக்கரைத்து மறுபடியும் காய்ச்சிக் கடுகுதிரள்பதத்திலிறக்கி வடிகட்டாமல் புட்டியில் வைத்துக்கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** இதனைச் சீலையிலூட்டி மேல்போட்டு வர கண்டமாலை, பிளவை, கன்னக்கிரந்தி, பக்கப்பிளவை ஆகியவை தீரும்.

## 1549. கண்டமாலைப் பிரயோகம்

(அ) நல்லெண்ணெய் ½ படி, நல்லவேளைச்சாறு ½ படி.

(ஆ) அப்பைக்கிழங்கு நல்லவேளை வேர்ப்பட்டை, சத்திச்சாரணைக்கிழங்கு, நன்னாரிவேர்ச்சூரணம், சிறுகாஞ்சொரி வேர்ப்பட்டைத் தூள், சிறுபீளை வேர்ப்பட்டைத் தூள், தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ் இவை வகைக்கு 5 பலம், மிளகு 1 ஆழாக்கு, (இதனை இடித்துச் சூரணித்துக் கொள்ளவும்), வெண்காரத்தூள் 10 வராகன் எடை.

**செய்முறை:-** (அ) விலுள்ள வேளைச்சாற்றில் ஒருபடி எடுத்து வைத்துக்கொண்டு மற்றஒருபடி சாற்றையும் எண்ணெயையும் கலந்து வைத்துக்கொள்க. (ஆ) விலுள்ளவைகளைத் தனித்தனியே மேற்படி வேளைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து வெண்ணெய் போல் அரைத்து முடிவில் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து மேற்படி சாற்றையே சிறுகச்சிறுக வார்த்து ஒரு சாமநேரம் அரைத்து எடுத்து மிகுந்த சாற்றில் கரைத்து முன் சித்தப்படுத்தி இருப்பதில் விட்டுக்கலந்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டிப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்க.

**அளவு:-** 5 முதல் 10 வராகன் எடை. காலையில் ஒருவேளை மூன்றுநாள் உட்கொள்ளவும். இன்னும் உடல்வலிமை, நோய் வலிமைக்குத் தகுந்தபடியும் இதனை அளவில் அதிகப்படுத்தியும் கொடுக்கலாம். ஆகையால் ஒவ்வொருவரும் சமயோசிதம்போல் செய்து கொள்ள வேண்டியது.

**தீரும்நோய்கள்:-** எல்லாவகைக் கண்டமாலைகளும் தீரும். தனப்புற்றுக்கு மேலேபூச அது தீரும்.

## 1550. கண்டமாலை தீலி எண்ணெய்

அவுரிச்சாறு, மோர், ஆமணக்கெண்ணெய் இவை வகைக்கு ½ படி, தோலுரித்த வெள்ளப்பூண்டிதழ் 10 பலம் (350 கிராம்), மோரில் சுத்திசெய்த பூநாகம், மேற்றோல் சீவின சுக்குத்தூள், மிளகுத்தூள் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்).

**செய்முறை:-** முன் திரவம் இரண்டையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும். பூண்டை அம்மியில் வைத்து வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ளவும். பூநாகம் முதலிய மூன்று சரக்குகளையும் முன் கலந்து வைத்த திரவத்தைச் சிறுகச் சிறுக விட்டு வெண்ணெய் போலரைத்து முன அரைத்தபூண்டையும் சேர்த்து முன் சாற்றையே சிறுகச் சிறுக வார்த்து மைபோல் அரைத்து மிகுந்திருக்கிற திரவத்தில் கரைத்து எண்ணெயையும் சேர்த்துக் காய்ச்சிக் கடுகு திரள் பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

**அளவு:-** $1\frac{1}{4}$ முதல் $2\frac{1}{2}$ வராகன் எடை. காலையில் ஒரு வேளை உபயோகிக்கவும். அவசியமானால் மாலையிலும் உபயோகிக்கலாம்.

**தீரும்நோய்:-** இதனை உள்ளுக்கும் உபயோகித்து மேலுக்கும் பூசிவந்தால் பலவகைக் கண்டமாலைகள் தீரும்.

**பத்தியம்:-** சமயோசிதம் போல் பத்தியமேற்படுத்தவும்.

## 1551. கண்டமாலைப் பற்று

வெள்ளைச்சாரணை வேர் 1 பலம் (35 கிராம்), மஞ்சள் அல்லது, மஞ்சள்தூள் ¼ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து, அவசியமான பாகத்தைச் சுற்றிலும் பூசி மேற்படி வெள்ளைச்சாரணைவேரை வில்லையாக நறுக்கிமேலே வைத்துக் கட்ட, கண்டமாலை, அரையாப்பு விப்புருதி, புண் புரை ஆகியவை தீரும்.

## 1552. புண்ணிற்கு குளிர்ந்தகாரம்

கோழிமுட்டை 1 இதனைப்பொத்து இரண்டரை வராகன் எடை வெள்ளைப்பாடாணத்தைத் தூள்செய்து போட்டுஅதன் மீது புரசம்பட்டைஎரித்தசாம்பலை அல்லது பூவரசம்பட்டைச் சாம்பலை முட்டையின் வாய்மட்டம் போட்டு: மறு முட்டையோட்டால் மூடி முட்டை முழுவதும் ஏழு சீலைமண் செய்து உலர்த்தி ஒரு முழப்புடம் போட்டு குளிர ஆறினபின் எடுத்துக்

கவசத்தைப் பிரித்து முட்டைக்குள்ளிருப்பதை எடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவும். இதனைக் காரமாக உபயோகிப்பதால் எரியாமல் குளிர்ந்திருக்கும். சதைவளர்ச்சி முதலியவைகளைக் கரைக்கும். முளையையும் கரைக்கும்.

## 1553. அரையாப்புக் காரம்

கெளரிப்பாடாணத்தை எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து வெண்மையான சீலையிலூட்டி நிழலிலுலர்த்தி அரையாப்பில் முளை போலிருக்கும் பாகத்தில் புளியிலை அகலம் போடவும்; எரிவந்தம் அதிகமாயிருந்தால் நெய்யைக்குத்த எரிவு அடங்கும். இவ்வாறு செய்வதானால் முளை கரையும்; சகல விரணங்களும் ஆறும்.

## 1554. புண்வாய்க்காரம்

எருக்கங்கரி 1 பலம் (35கிராம்), மயில்துத்தம் 2 வராகன் எடை. இவ்விரண்டையும் பொடித்து ஆமணக்கெண்ணெய் விட்டரைத்து வழித்து வைத்துக் கொண்டு புண்வாயில் போட வாய் அகலமாகும

## 1555. புற்று உசிதம்

கல்லுபபை நல்லெண்ணெய் வார்த்தரைத்து புற்றில் பூசி மேலே புங்கிலை வைத்துக் கட்டிவர புற்று மறைந்து குணமுண்டாம்.

## 1556. குபேரசித் தைலம்

**உலர்த்தின கழுதை இலத்தி இரண்டு கூடை, இதனை அடி**யில் சன்ன த்துவாரங்களிட்ட ஒரு பானையில் போட்டு, வாய்ப் பந்தனஞ் செய்து முறைப்படி குழித்தைலம் இறக்கி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**தீரும்நோய்கள்:-** ஒரு வராகன் எடை தைலத்தில் ஒரு வராகன் எடை கார்போகரிசிச் சூரணத்தைக் கலந்து உட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டு வேளையும் எட்டுநாள், பதினாறுநாள் செய்ய, கிரந்தி, அரையாப்பு, கொங்கைகுத்து, கொங்கைப்புற்று, பிளவை, உச்சிப்பிளவை, சன்னிகள், வாதசூலை, இளம் பிள்ளைவாதம், அண்டவாதம், கன்னக்கரப்பான், கன்னப்புற்று, கன்னஒசி, கன்னக்காளன், மேகசூலை ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** உப்பில்லாமல் கடினபத்தியம் வைக்கவும்.

## 1557. இரணக்கிருமி நாசகாரி

வடிகட்டின கிளிஞ்சிற் சுண்ணமும். பசுவின் வெண்ணெயும் சமன்கலந்து நல்ல தண்ணீர்விட்டு ஏழுமுறை நன்றாக கழுவி எடுத்து இரணத்தின்மேல் பூசி வாழையிலை அல்லது ஆமணக்கிலை வைத்துக் கட்டிவரப் பூச்சிகள் வெளிவரும் பிறகு இரணத்தைத் துவர்த் தண்ணீரால் கழுவி, மறுபடியும் முன்போற் கட்டவும். இவ்விதம் செய்துவரின் இரணத்திலுள்ள பூச்சிகள் வெளிப்பட்டு இரணம் ஆறிப்போகும்.

## 1558. புரைப்புண் உசிதம்

சீந்திற்கிழங்கு, தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ், வசம்புச் சூரணம் இவற்றைச் சமனெடை எடுத்து வெண்ணெய்போல அரைத்துக் குருந்தெண்ணெயை அல்லது நல்லெண்ணெயை விட்டுக் காய்ச்சிப் புரையோடுகிற புண்ணில் விடவேண்டும். இவ்விதம் தினம் இரண்டு மூன்று தடவை செய்துவரின் புரை தூர்ந்து புண் ஆறும்.

## 1559. இரண மூலசம்

சுத்திசெய்த பொன்னரிதாரம், இரசம், நெல்லிக்காய்க் கெந்தகம், வெள்ளைக்குங்கிலியம், காய்ச்சுக்கட்டி, துத்தம், துருசு மனித உடலின் எலும்பு இவை வகைக்கு 5 வராகன் எடை, பசுவின் வெண்ணெய் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** இரசத்தைத் தவிர மற்றவைகளைப் பொடித்து வைத்துக் கொள்க பின்பு இரசத்தைக் கல்வத்தி விட்டு கெந்தகத் தூளைச் சேர்த்து நன்றாகக் கருக்கிறவரை யில் அரைத்து, மற்றத் தூள்களையும் சேர்த்து ஒருமணி நேரம் அரைத்து எல்லாம் சேர்ந்த பின்பு வெண்ணெயைச் சிறுகச் சிறுகச் சேர்த்து ஒரு சாம நேரமரைத்துப் பிளாஸ்திரி பதத்தி லெடுத்து, வெங்கலக்கிண்ணியில் போட்டுத் தாம்பிரத் தகடு பதித்த மத்தாற் கடைந்து வரவேண்டும். பிசின்பதமாய் மத்தானது கிண்ணியில் ஒட்டுகிறவரையில் கடையவேண்டும். அந்தப் பதத்தில் வழித்துத் தாம்பிரகுப்பியில் வைத்துக்கொள்ள வேண்டும்.

**தீரும்நோய்கள்:—** மேற்படி மருந்தைத் துணியில் தடவி மேற்போட்டு வர ஆறாத விரணங்கள் முதலிய எல்லாவகை விரணங்களும் தீரும்.

## 1560. இரண உசிதம்

தேள் கொடுக்கு இலைச்சாறு, நல்லெண்ணெய் இவ்விரண்டையும் சமனாக் கலந்து அதில் கொஞ்சம் துருசைத் தூள்செய்து போட்டுக் காய்ச்சிக் கடுகு திரள் பதத்திலிறக்கிப் பத்திரப்படுத்தவும் இதனை இரணத்தின் மேற்பூசிவர இரணங்கள் ஆறும். இதில் புண்கள் ஆறாதுபோனால் ஆவாரம்பூவில் எருக்கம்பால் தடவிப் போட ஆறிப்போகும்.

## 1561. மேற்படி வேறு

பாற்சாம்பிராணி 1பலம்(35 கிராம்) இதனைப் பொடித்துத் துணியில் பரப்பித் திரிபண்ணி, நான்கு பலம்நல்லெண்ணெயில் தோய்த்து முறைப்படி சுடர்த்தைலமிறக்கி இதனைக் கல்வத்தில் போட்டு நேர்மையாக அரைத்துப் புட்டியில் வைத்துக் கொண்டு புண்ணின் மீது போட்டு உள்ளுக்குங் கொடுத்து வந்தால்எல்லா வகை ரணங்களும் ஆறும்.

## ஆண் நரம்புச் சிலந்தி குறி

கொப்பளங்கண்டு நரம்பு புறப்பட்டால் அது ஆண் சிலந்தியாம்.

## பெண்நரம்புச் சிலந்தி குறி

வீங்கிக் கொண்டு சூடாயிருந்தால் அது பெண் நரம்பு சிலந்தியாம்,

## 1562. நரம்புச்சிலந்தி

மிளகரணையிலையை வேகவைத்து மேல் வைத்துக் கட்டிவர நரம்பு கழன்றுபோகும்.

## 1563. இதுவுமது

பெருங்காயம் 1 பலம் (35 கிராம்). இதனைப் பொடித்து மூன்று அல்லது நான்கு பலம் நல்லெண்ணெயிலிட்டு எரித்து இரண்டு மூன்று கொதிவந்த பக்குவத்திலிறக்கி வடிகட்டாமல் வைத்துக் கொள்ளவும். இந்த எண்ணெயை நரம்புச்சிலந்தியின் மீது போட்டு ஊமத்தை இலையை வைத்து கட்டிவர நரம்பு கழன்று புண் ஆறும்.

## 1564. நரம்புச்சிலந்தி எண்ணெய்

வீழியிலைச்சாறு, வெங்காயச்சாறு விளக்கெண்ணெய் இவை வகைக்கு 1 ஆழாக்கு பெருங்காயத்தூள், தோலுரித்த வெள்ளைப் பூண்டு:வசம்புச்சூரணம் இவை வகைக்கு 2 வராகன் எடை.

**செய்முறை:-** பின் மூன்றையும் வெண்ணெய் போலரைத்து முன் மூன்று திரவத்தையும் ஒன்றாகக் கலந்து அதில் கரைத்துக் காய்ச்சி பதத்திலெடுத்துக்கொள்ளவும்.

**அளவு:-** $1\frac{1}{4}$ முதல் $2\frac{1}{2}$ வராகன் எடை காலை மாலை இரண்டு வேளையும் உள்ளுக்குக் கொடுக்கவும். மேலுக்கும் பூசவும்.

**தீரும் நோய்கள்:-** நரம்புச்சிலந்தி தீரும்.

## 1565. சிலந்திப்பற்று

ஊமத்தங்காயைச் சுடுசாம்பலில் வெதுப்பிச்சுட்டுவிதையையும் தோலையும் நீக்கிவிட்டு உள்ளிருக்கிற சதையையெடுத்து அதில் நான்கு குன்றிமணியெடை அபினைச் சேர்த்து முட்டை வெண்கருவைச் சிறுகச்சிறுக வார்த்து வெண்ணெய் போல ரைத்து சிலந்தியின் மேல் பூசிவரச் சிலந்தி உடனே உடைந்து சௌக்கியமாம்.

## 1566. படுவன் உசிதம்

அழிஞ்சில்வேர்ப்பட்டை அரைத்த விழுது 1 வராகன் எடை இதனை ஆழாக்கு மோரில் கரைத்துப் பருகச் செய்விக்கவும். வாந்தியாகும். இதன் பிறகு பத்தியம் கொடுக்கவும். உப்பில் லாப்பத்தியம் வைக்கவும். இவ்விதம் ஏழு நாள் காலையில் கொடுத்து மேற்கண்டபடி பத்தியம் செய்துவர எலிப்படுவன், ஆட்டுப்படுவன், மாட்டுப்படுவன் ஆகியவை தீரும்.

## 1567. விரல்சுற்றி உசிதங்கள்

அரைப்பை அரைத்து வைத்துக்கட்ட விரல்சுற்றி பட்டுப் போகும்.

மஞ்சளையரைத்து வைத்துக்கட்டினாலும் காய்ந்து சௌக்கிய முண்டாகும்.

விடமூங்கில் இலையை ஆமணக்கெண்ணெய் தடவி வாட்டி மேலே சுற்றிக்கட்டி வரத் தீரும்.

## 1568. பொத்திக்கடிமுலாம்

வெள்வங்கம் 1 பலம், இரசம் 1பலம், நெல்லிக்காய்க்கெந்தகம் 2 பலம், நல்லெண்ணெய் 5 பலம்.

வெள்வங்கத்தை உருக்கி இரசத்தைத் தொந்தித்துக் கெந்தகத்தைப் பொடித்துச் சேர்த்து அரைத்து நன்றாகக்கறுத்த

பின்பு எண்ணெயைச்சிறுகச் சிறுகச் சேர்த்து அரைத்துக் குழம்பு பதமாக எடுத்து இரண்டொரு நாள் கடும் வெய்யிலில் வைத்து மூன்றுநாள் கடிகள் மீது பூசிவர எல்லாவகைக் கடிகளும் தீரும். சிகைக்காய் அல்லது, அரைப்பு தேய்த்து வெந்நீர் தலைமுழுகச் செய்யவும். கன்றுப்பூக்கானியிலையைக் கசக்கிப் பிழிந்த சாற்றைப் பூசி வந்தாலும் பொத்திக்கடி தீரும்.

## 1569. பொத்திக்கடி தைலம்

(அ) நல்லெண்ணெய் 8 பலம், பிராயம்பட்டைச் சாறு 8 பலம்.

(ஆ) கார்போகரிசித்தூள், நீரடி முத்துப் பருப்புத்தூள், பூலாங்கிழங்குத்தூள், ஏலரிசித் தூள், மிளகுத்தூள், வகைக்கு 3 வராகன் எடை, சூடன் தூள் ½ வராகன் எடை, இரசம் 1½ வராகன் எடை, வெற்றிலை 50.

**செய்முறை:** (அ) விலுள்ள இரண்டு திரவத்தையும் கலந்து காய்ச்சிக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வைத்துக்கொள்க இரசத்தைக் கல்வத்திலிட்டு ஒவ்வொரு வெற்றிலையாகப் போட்டரைத்து இரசம் மடிந்தபின்பு (ஆ) விலுள்ளவைகளையெல்லாம் ஒன்றாகக் கலந்து அதில் சேர்த்து அரைமணி நேரம் அரைத்து பின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் எண்ணெயைச் சிறுகச் சிறுகவிட்டு அரைத்துக் குழம்புப் பதத்தில் பீங்கானில் வழித்துவிட்டு இரண்டு மூன்று நாள் சூரியபுடம்வைத்துப் பத்திரப் படுத்தவும்.

**தீரும்நோய்கள்:-** இதனை மேற்பூசி நாள் முழுவது மிருந்து மாலையில் கஸ்தூரி மஞ்சளையும்,கார்போகரிசியையும்சேர்த்து அரைத்து மேற்பூசித் தேய்த்து வெந்நீரில் தலைமுழுகச் செய்யவும். இரவில் பூசிக் கொண்டால் இவ்விதம் காலையில் தலைமுழுகச் செய்யவும். இவ்விதம் மூன்று நாள் ஐந்து நாள் செய்யின் பொத்திக்கடி, சொறி சிரங்கு, அழிசிரங்கு, மேகத்தினவு, மேகச்செறி ஆகியவை குணமாகும். சிரங்குகளிலுள்ள கிருமிகள் செத்து நாசமாகிவிடும்.

## 1570. நெருப்புப்புண் உசிதம்

கோழிமுட்டை வெள்ளையம் புலியைத்தண்ணீரில் போட்டு குச்சிமத்தாற்கடைய நுரை யெழும்பும்;அதைத் தனியே எடுத்து வைத்துக் கொள்க. இவ்விதமே நல்லெண்ணெயை நீரில் விட்டுக் கடைய நுரையெழும்பும். இதனையும் தனியே எடுத்து வைத்துக் கொள்க, இவற்றோடு பொரித்த சீனாக்காரத்தூள் ஆகிய மூன்றையும் சமனெடையாகச் சேர்த்துச் சற்று அரைத்துச் சேர்த்துப்பீங்கானில் வைத்துக்கொண்டு கோழியிறகால் தீப்பட்ட புண்ணின்மீது பூசிவர அந்தப் புண் சீக்கிரம் ஆறும்: சீழ் பிடிக்காது.

## 1571. மேற்படி உசிதம் வேறு

பறங்கியிலைச் சாற்றைத் தீப்பட்ட புண்ணின்மீது பூசிவர அதிசீக்கிரம் ஆறிப்போகும்.

## 1572. உதட்டுவெடிப்பு மூலாம்

பசுவின் வெண்ணெய் 1 பலம் (35 கிராம்), மஞ்சள் மெழுகு 1 பலம் (35 கிராம்), சூடன்தூள் 1 வராகன் எடை (3½கிராம்), எருக்கம்பால் 1 வராகன்எடை.

**செய்முறை:—** மெழுகை ஒரு பாத்திரத்திலிட்டுருக்கி அது உருகினவுடன் வெண்ணெயைச் சேர்த்து அதுவும் உருகின பதத்தில் வெண்கலப்பாத்திரத்தில் விட்டு சூடன், எருக்கம்பால் ஆகியவைகளையும்சேர்த்து வெங்கலமத்தால் கடைந்து பிளாஸ்திரி பதத்திலெடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:—** இதனை உதட்டு வெடிப்பில் பூசினால் சில வேளை நோவெடுக்கும். சகிக்கிறவரையில் வைத்திருந்து வெந்நீரால் கழுவிவிடவும். இவ்விதம் செய்ய உதட்டின் வெடிப்பு அதிலுள்ள கிருமிகள்செத்து மறைந்துபோகும், இவ்விதமே பல்லீற்றில் தடவிவர அதிலுள்ள புழுக்கள், சொத்தை ஆகியவை நீங்கும்.

## 1573. உதட்டுவெடிப்பு உசிதம்

அயிரைமீனை உலர்த்திப் பொடி செய்து வாழைப்பழத்தி லூட்டி உதட்டில் வைக்கவும் இந்தப்படி மூன்று நாள் வைக்கப் புழுவிழுந்து வெடிப்பு நீங்கும்.

## 1574. மேற்படி வேறு

கண்டங்கத்திரி விதையை உலர்த்திப் பொடித்து எருக்கம் பால் விட்டுப் பிசைந்துலர்த்தி ஒரு கலயத்திலிட்டு நெருப் பிட்டுத் துவாரமுள்ள கொட்டாங்கச்சியால் மூடிப் புகை பிடிக்கப் புழுவிழுந்து வெடிப்புமாறிப் புண் ஆறும்.

## 1575. பாதவெடிப்பு உசிதம்

சன்றுப்பூக்கானிலையைக் கசக்கிப் பிழிந்த சாற்றைத் தடவி வரப் பாதவெடிப்பு, உதட்டுவெடிப்பு, பொத்திக்கடி, முகத்திலுள்ள வங்கு ஆகியவை தீரும்.

## 1571. மேற்படி உசிதம் வேறு

பறங்கியிலைச் சாற்றைத் தீப்பட்ட புண்ணின்மீது பூசிவர அதிசீக்கிரம் ஆறிப்போகும்.

## 1572. உதட்டுவெடிப்பு மூலாம்

பசுவின் வெண்ணெய் 1 பலம் (35 கிராம்), மஞ்சள் மெழுகு 1 பலம் (35 கிராம்), சூடன்தூள் 1 வராகன் எடை (3½கிராம்), எருக்கம்பால் 1 வராகன்எடை.

**செய்முறை:—** மெழுகை ஒரு பாத்திரத்திலிட்டுருக்கி அது உருகினவுடன் வெண்ணெயைச் சேர்த்து அதுவும் உருகின பதத்தில் வெண்கலப்பாத்திரத்தில் விட்டு சூடன், எருக்கம்பால் ஆகியவைகளையும்சேர்த்து வெங்கலமத்தால் கடைந்து பிளாஸ்திரி பதத்திலெடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:—** இதனை உதட்டு வெடிப்பில் பூசினால் சில வேளை நோவெடுக்கும். சகிக்கிறவரையில் வைத்திருந்து வெந்நீரால் கழுவிவிடவும். இவ்விதம் செய்ய உதட்டின் வெடிப்பு அதிலுள்ள கிருமிகள்செத்து மறைந்துபோகும், இவ்விதமே பல்லீற்றில் தடவிவர அதிலுள்ள புழுக்கள், சொத்தை ஆகியவை நீங்கும்.

## 1573. உதட்டுவெடிப்பு உசிதம்

அயிரைமீனை உலர்த்திப் பொடி செய்து வாழைப்பழத்திலூட்டி உதட்டில் வைக்கவும் இந்தப்படி மூன்று நாள் வைக்கப் புழுவிழுந்து வெடிப்பு நீங்கும்.

## 1574. மேற்படி வேறு

கண்டங்கத்திரி விதையை உலர்த்திப் பொடித்து எருக்கம் பால் விட்டுப் பிசைந்துலர்த்தி ஒரு கலயத்திலிட்டு நெருப்பிட்டுத் துவாரமுள்ள கொட்டாங்கச்சியால் மூடிப் புகை பிடிக்கப் புழுவிழுந்து வெடிப்புமாறிப் புண் ஆறும்.

## 1575. பாதவெடிப்பு உசிதம்

சன்றுப்பூக்கானிலையைக் கசக்கிப் பிழிந்த சாற்றைத் தடவி வரப் பாதவெடிப்பு, உதட்டுவெடிப்பு, பொத்திக்கடி, முகத்திலுள்ள வங்கு ஆகியவை தீரும்.

## 1576. இரணப் புகை

பெருங்காயம் (இதனை வறுத்துத் தூள் செய்து கொள்க) சாதிக்காய்த்தூள், குரோசாணி, ஓமத்தூள், இலவம்பிசின் தூள், வெள்ளைக்குங்கிலியத்தூள், வெண்காரத்தூள், பெருங்கொன்றைப் பிசின் தூள், மஞ்சள்தூள், ஆவாரம்வேர்ப்பட்டைத்தூள் ஓமத்தூள், ஊசிக்காந்தத் தூள், இலிங்கத தூள், மனோசிலைத் தூள், காரீய அரப்பொடி, கொடிவேலி வேர்ப்பட்டைத்தூள், குக்கில் தூள், வசம்புத்தூள், வெள்ளைப்பூண்டுத் தோல், கஸ்தூரி மஞ்சள் தூள் இவை வகைக்கு 2 வராகன் எடை. இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு ஒரு மணி நேரம் நன்றாக அரைதது ஒன்றாகக் கலந்தபின் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

இதில் இரண்டு வராகன் எடை தூளையெடுத்துப் பஞ்சில் ஊட்டிப் புளியம்புறணி நெருப்பில் போட்டு முறைப்படி புகை பிடிக்கவும். தினம் இரண்டு தடவையும் மூன்றுநாள் ஆறுவேளை புகை பிடிக்கவும். இரணத்தின்மீதும் புகைபிடிக்கலாம்.

**தீரும்நோய்:-** ஆறாத ரணங்களெல்லாம் ஆறும்.

**பத்தியம்:-** பாலன்னம் சாப்பிடவும்; மற்றொன்றுமாகாது

## 1577. இரணமுலாம்

வங்கச் செந்தூரம் 24 வராகன் எடை, நாட்டு மெழுகு 5 வராகன் எடை, நல்லெண்ணெய் 1½ பலம் (52½கிராம்).

**செய்முறை:-** எண்ணெயில் செந்தூரத்தைப் போட்டுக் காய்ச்சிப் பிறகு மெழுகைப் போட்டுக்காய்ச்சி நன்றாகக்கிண்டி பிளாஸ்திரி பதத்தில் சிமிழில் எடுத்து வைத்துக்கொள்க.

இதனைத் துணியில் தடவி மேலே போட்டுவர ஆறாத ரணங்களெல்லாம் ஆறும்.

## 1578. புருடக் கிரந்தி எண்ணெய்

பொன்முசுட்டைவேர்த்தூள், ஈகாய்ச்சுக்கட்டித்தூள், மஞ்சட் கடுக்காய்த்தோல் தூள், கருங்குங்கிலியத்தூள், வசம்புத் தூள் தோலுரித்த ஒருதலைப் பூண்டிதழ், மிளகுத்தூள், துருசுத் தூள் இவை வகைக்கு 2 பலம், நல்லெண்ணெய் 5 பலம்.

**செய்முறை:-** மேற்படி தூள்களை ஒன்றாகச் சேர்த்து ஒரு மணி நேரம் அரைத்து மேற்படி எண்ணெயில் போட்டுக் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்திலிறக்கிப்புட்டியில் வைத்துக்கொள்ளவும்.

தீரும்நோய்கள்:- இதனை மேற்பூசி வருவதனால் புருஷ கிரந்தி தீரும்.

## 1579. புருஷ கிரந்தித்தூள்

இரசகற்பூரம், காய்ச்சுக்கட்டி இவ்விரண்டும் சமனாக எடுத்து ஆர்க்கப்பொடித்து வைத்துக் கொள்க

இதிற் கொஞ்சமெடுத்து இரணத்தின் மீது தூவிவர இலிங்கத்தின் மீதுள்ள கிரந்தி இரணம் தீரும்.

## 1580. கிரந்தி மேற்பூச்சு

இரசம், விழுதிவேர்ப்பட்டைத்தூள், வெள்ளைக்குங்கிலியத் தூள், துத்தத்தூள், துருசுத்தூள், காய்ச்சுக்கட்டித்தூள், களிப் பாக்குத் தூள் இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்) பசுவெண்ணெய் தேவையான அளவு.

**செய்முறை:-** இரசம், துத்தம், துருசு ஆகிய மூன்றையும் சேர்த்தரைத்து இரசம் மடிந்தபின்பு மற்றவைகளையும் ஒன்றாகக் கலந்து அதில் சேர்த்து ஒருமணி நேரமரைத்து எல்லாம் கலந்த பின்பு வெண்ணெயைச் சிறுகச்சிறுகச் சேர்த்தரைத்துப் பிளாஸ்திரி பதத்திலெடுத்துப் பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனை மேற்பூச்சாகவும்பூசிவரக் கிரந்திப் புண் ஆறும்.

## 1581. கிரந்திப் புகை

வெள்ளைப்பாடாணம், கௌரிப்பாடாணம், அரிதாரம், மனோசிலை, இலிங்கம், இரசம், துருசு, மருத்துவெள்ளை, மிளகு, இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), எருக்கங்கரி 5 வராகன் எடை. பருத்தியிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** இரசத்தைத்தவிர மற்றவைகளைத் தனித் தனியே பொடித்து வைத்துக் கொள்க. இரசத்தைக் கல்வத்திலிட்டு வெள்ளைப்பாடாணம், கௌரிப் பாடாணம் ஆகிய இரண்டையும் சேர்த்தரைத்து இரசம் மடிந்தபின்பு மற்றவைகளையும் ஒன்றாகக் கலந்து இதில் சேர்த்து ஒரு மணி நேர மரைத்து நன்றாக கலந்தபின்பு பருத்தியிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரம் அரைத்து ஒன்பது உருண்டை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க.

**தீரும்நோய்கள்:-** ஒரு உருண்டையைப் புளியம்புறணி நெருப்பிலிட்டு முறைப்படி புகைபிடிக்கவும், இவ்விதம்

நாளுக்கு இரண்டு வேளையாக மூன்றுநாள் ஆறு வேளை பிடிக்கவும். கிரந்தி, கடிவிகாரம், சூலை ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** உப்பு, புளி ஆகியவைகளை நீக்கவும்.

## 1582. கிரந்தி உருண்டை

சுத்திசெய்த இரசகற்பூரம் 1½ வராகன் எடை மிருதார் சிங்கி 1 வராகன் எடை, பனைவெல்லம் ½ பலம்

**செய்முறை:-** முன்னிரண்டு சரக்குகளையும் ஆர்க்கப் பொடித்துப் பனைவெல்லத்தையும் சேர்த்து ஒருசாமநேர மரைத்து ஏழு உருண்டை செய்து ஞாயிற்றுக்கிழமைக் காலை யில் சூரியனுக் கெதிரே நின்று ஒரு உருண்டையைத் தலையைச் சுற்றி எரிந்துவிட்டு மற்ற ஆறு உருண்டையையும் காலை, மாலை இரண்டு வேளையும மூன்றுநாள் ஒரு உருண்டைவீதம் தின்னவும்.

**தீரும்நோய்கள்:-** கிரந்தி நோய்கள் எல்லாம் தீரும்.

**பத்தியம்:—** உப்பில்லாப் பத்தியம் வைத்து, மறுபத்தியம், உப்பு வறுத்துக் கூட்டவும்.

## 1583. கரப்பான் குடிநீர்

செங்கத்தாரி வேர்ப்பட்டை, மரமஞ்சள். புஷ்பதேவதாரம். பேய்ப்புடல், கார்போகரிசி, தகரைவிதை. கருஞ்சீரகம். மஞ்சட் கடுக்காய்த்தோல், சிவதை வேர், நிலக்கிளா வேர்ப்பட்டை, சங்கம்வேர், நிலக்குமிழ் வேர்ப்பட்டை, ஆயில்பட்டை இவை வகைக்கு 2 பலம் இவற்றை நன்றாகச் சிதைத்து ஒரு பாண்டத திலிட்டுப் பத்துப்படி நீர் வார்த்து எட்டிலொரு பாகமாகச் சுண்ட வைத்து வேளையொன்றுக்கு அரை ஆழாக்கு வீதம் காலை மாலை இரண்டு வேளையும் ஐந்து நாள் பருகச் செய்யவும்.

**தீரும்நோய்கள்:-** எல்லாவகைக் கரப்பான்கள், வீக்கம் புண், விடபாகம், வாதவலி ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** நோய் வலுவிற்குத் தகுந்தபடி உப்பை நீக்கியும் நீக்காமலும் பத்தியமேற்படுத்தவும்.

## 1584. கிரந்திக் குடிநீர்

பறங்கிப்பட்டை, சிறுகுறிஞ்சா, பிறப்பங்கிழங்கு, ஈசுரமூலி வேர், சிவனார்வேம்பு, உகாவேர், பிராய்வேர், அழிஞ்சிப்

பட்டை பூவரசம்பட்டை, நூறு வருடஞ்சென்ற வேப்பம் பட்டை இவை வகைக்கு 2 பலம்.

**செய்முறை:-** இவை எல்லாவற்றையும் நையச் சிதைத்து எட்டு படி நீர்விட்டு எட்டொன்றாகக் காய்ச்சிக் காலை, மாலை இரண்டுவேளையும் அரையாழாக்குவீதம் ஏழுநாள் பருகும் படிச் செய்யவும்.

**தீரும்நோய்கள்:-** கிரந்திப்புண், கடிநஞ்சு ஆகியவைதீரும்.

**பத்தியம்:-** உப்பை நீக்கிப் பத்தியம் வைக்கவும். மறு பத்தியம் உப்பை வறுத்துக் கூட்டவும்.

## 1585. கிரந்தி மேகச் சூரணம்

நிலாவாரையிலை, தவசிமுருங்கைச் சமூலம், சிவனார் வேம்புச் சமூலம். வெள்ளறுகு சமூலம், தூதுவளை சமூலம், கொட்டைக் கரந்தை சமூலம், இந்த ஆறு வகைகளையும் நிழலி லுலர்த்தித் தனித்தனி இடித்துச் சமனாக நிறுத்தெடுத்து ஒன் றாகக் கலந்து ஒருமணி நேரமரைத்துப் பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** $1\frac{1}{2}$ முதல் 2 வராகன் எடை.

**அனுபானம்:-** வெந்நீர், சிறுபிள்ளைகள் சிறுநீர். (சிறுநீரில் சாப்பிட்டால் பத்தியம் இல்லை.) வெந்நீரில் சாப்பிட்டால் பத்தியம் வைக்க வேண்டும். வியாதி பலமாயிருந்தால் புளியைத் தள்ளி உப்பை வறுத்துச் சேர்க்கவும். வியாதி இலேசாயிருந் தால் உப்பு, புளி முதலியவைகளை மிதமாகச் சேர்க்கவும்.

**தீரும்நோய்கள்:-** கிரந்தி, மேகம், கடிவிடம், குட்டம், மேக வாயு, மேகசூலை ஆகியவை தீரும்.

## 1586. கிரந்தி வல்லாதகி

சுத்திசெய்த சேராங்கொட்டை 10 வராகன் எடை, நீலப் பனைக்கிழங்குத்தூள் 6 வராகன் எடை, குரோசானி ஓமத் தூள் 6 வராகன் எடை, பழைய வெல்லம் 1 பலம், சுத்திசெய்த இரசம் $1\frac{1}{2}$ வராகன் எடை.

**செய்முறை:-** இரசத்தையும் சேராங்கொட்டையையும் சேர்த்த ரைத்து இரசம் மடிந்து முரமுரப்பில்லாமல் வெண்ணெய்

போலானபின்பு மற்றவைகளையும் சேர்த்து ஒருசாம நேரம் அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** ½ முதல் 1 வராகன் எடை. காலை மாலை இரண்டு வேளையும் ஏழுநாள் உபயோகிக்கவும்.

**தீரும்நோய்கள்:-** எல்லாவகைக் கிரந்திகள், சூலைகள், மேக ஊறல் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** உப்பை நீக்கவும்.

**குறிப்பு:-** மேற்கண்ட முறையில் சேராங்கொட்டைக்குப் பதிலாக அதனைக் குழித்தைலமாக இறக்கிச் சேர்த்தரைத்துக் கொள்வது உத்தமம் ஆனால் அளவிற்குக் குறைத்துக் கொடுக்க வேண்டியது அவசியம்.

## 1587. கிரந்தி வல்லாதகி (வேறு)

நிலப்பனைக் கிழங்குத்தூள், குரோசானி ஓமத்தூள், சொறி யோமத்தூள் வகைக்கு 9 வராகன் எடை, (31½ கிராம்) சுத்தி செய்த சேராங்கொட்டை 3 வராகன் எடை (10½ கிராம்) சுத்தி செய்த இரசம் 1½ வராகன் எடை, வெல்லம் 1 வராகன் எடை.

**செய்முறை:-** இரசத்தையும் சேராங்கொட்டையையும் சேர்த்தரைத்து இரசம்மடிந்த பின்பு மற்றத் தூள்களையும் ஒன்றாகக் கலந்து அதிற் சேர்த்து ஒருமணி நேரமரைத்து வெல்லத்தைச் சேர்த்து மூன்றுமணி நேரமரைத்துப் பதினான்கு பங்கு செய்து வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** ஒருபங்கைத்தயிரில் குழப்பிச் சாபபிடவும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் ஏழுநாள் சாப்பிடவும். இவ்விதம் செய்யக் கிரந்தி, சூலை, பிரமியம் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** வறுத்த உப்பு, துவரம்பருப்புக் கூட்டவும்.

## 1588. பட்டை வல்லாதகி

சுத்தி செய்த பறங்கிப்பட்டைத் தூள் 4 பலம், (140 கிராம்) பனைவெல்லம்6 பலம். (210 கிராம்) சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகத்தூள், மஞ்சள் தூள், சுத்திசெய்த சேராங்கொட்டை வகைக்கு 2 பலம் (70 கிராம்) கழுவின எள் 8 பலம் (280 கிராம்), நல்லெண்ணெய் 8 பலம்.

**செய்முறை:-** சேராங்கொட்டையை உரலிலிட்டு எள்ளைச் சிறுகச் சிறுகப் போட்டு நன்றாயிடித்துப் பிறகு வெல்லத்

தைக் கூட்டியிடித்து இளக பதத்தில் மற்றத் தூள்களை எல்லாம் தூவியிடித்து எடுத்து நல்லெண்ணெயை விட்டுப் பிசைந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 1½ முதல் 5½ வராகன் எடை. காலை மாலை இரண்டு வேளையும் பத்துநாள் உபயோகிக்கவும்.

**தீரும்நோய்கள்:-** கிரந்தி, குட்டம், கொடியவிரணங்கள் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** இச்சாபத்தியம். நோய் பலமாயிருந்தால் சமயோசிதம் போல் பத்தியமேற்படுத்தவும்.

## 1589. கிரந்தி எண்ணெய்

(அ) சங்கம்வேர்ப்பட்டை 1¼ பலம், (43¾ கிராம்) பூவரசம் வேர்ப்பட்டை, குமிழம் வேர்ப்பட்டை, வெள்ளைச்சாரணை வேர், வட்டக்கிலுகிலுப்பை வேர்ப்பட்டை, நன்னாரி வேர், வெள்ளறுகு சமூலம், நிலாவாரை வேர்ப்பட்டை, சொடிவேலி வேர்ப்பட்டை, இவை வகைக்கு 1 பலம், (35 கிராம்) மருக்காரை வேர்ப்பட்டை, மொஞ்சி வேர்ப்பட்டை, மிளகரணை வேர்ப்பட்டை இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்).

(ஆ) எள்ளெண்ணெய் 12 பலம், நுணா இலைச்சாறு ½ ஆழாக்கு, எலுமிச்சம்பழச்சாறு 1 ஆழாக்கு

(இ) சாதிக்காய், வசம்பு, இலவங்கப்பட்டை இவற்றின் சூரணம் வகைக்கு 1½ வராகன் எடை.

**செய்முறை:—** (அ) விலுள்ளவைகளை நையச்சிதைத்து ஒரு பாண்டத்தில் போட்டு நான்குபடி தண்ணீர்விட்டு எட்டிலொரு பாகமாகச் சுண்டவைத்து இறக்கி இளஞ்சூட்டுடன் பிசைந்து வடிகட்டின குடிநீருடன் (ஆ) விலுள்ள திரவங்களைச் சேர்த்துக் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டித் திப்பி நீக்கின எண்ணெயில் (இ) யிலுள்ள தூள்களை ஒன்றாகக் கலந்து தூவி நன்றாகத் துழாவிப் புட்டியில்பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 2½ முதல் 3 வராகன் எடை. காலையில் ஒரு வேளை ஏழுநாள் உபயோகிக்கவும்.

**தீரும்நோய்கள்:-** எல்லாவகைக் கிரந்திகளும் தீரும்.

**பத்தியம்:-** பாகற்காய், மொச்சைக்கொட்டை, நல்லெண்ணெய், பிண்ணாக்கு, [illegible] ஆகியவைகளைச்

Cell: [illegible]
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக கடை
மு.முருகன்

சேர்த்துக்கொள்ளவும். மறுபத்தியம் ஏழு நாளிருக்கவும்; பிறகு எல்லாவற்றையும் சேர்த்துக் கொள்ளவும்.

### 1590. கள்ளிப்பூக்கிரந்தி எண்ணெய்

(அ) சிற்றாமணக்கெண்ணெய், பூவரசம்பட்டைச்சாறு, புங்கம் பட்டைச்சாறு இவை வகைக்கு 8 பலம், சுத்திசெய்த வாளப்பருப்பு ½ வராகன் எடை.

(ஆ) சுத்தி செய்த இரசகற்பூரத்தூள் 1 வராகன் எடை இலவங்கத்தூள் 2 வராகன் எடை,

**செய்முறை:-** (அ) விலுள்ள திரவங்களை ஒன்றாகக் கலந்து அதில் நேர்வாளப்பருப்பை வெண்ணெய் போலரைத்துக் கலக்கிக் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி (ஆ)விலுள்ள இரண்டையும் கல்வத்திலிட்டு ஒரு மணி நேரமரைத்து நன்றாக சேர்ந்தபின்பு மேற்படி எண்ணெயில் தூவி நன்றாகக் கலக்கி புட்டியில் வைத்துக்கொள்க

**அளவு:-** 1 முதல் 2 ½வராகன் எடை,உடல் வலிவை அறிந்து ஏழுநாள் பத்துநாள் சமயோசிதம்போல் காலையில் ஒருவேளை மாத்திரம் உபயோகிக்கவும்.

**தீரும்நோய்கள்:-** கள்ளிப்பூக்கிரந்தி, மருக்கிரந்தி ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** புளி, புகை, வாயு உணவுப்பண்டங்கள் நீக்கவும்.

### 1591. கிரந்திச் சூரணம்

சுத்திசெய்த இரசம் 3 வராகன் எடை (10½ கிராம்)நெல்லிக் காய்க் கெந்தகம் 6 வராகன் எடை (21 கிராம்), வறுத்திடித்த ஓமத்தூள் 60 வராகன் எடை (210 கிராம்).

**செய்முறை:-** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்றாகக் கறுத்த பின்பு ஓமத்தூளையும் சேர்த்து ஒரு சாம நேரமரைத்து நன்றாகக்கலந்த பின்பு பீங்கான் பாத்திரத் தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 1½ முதல் 2வராகன் எடை காலை,மாலை இரண்டு வேளையும் எட்டு நாள் உபயோகிக்கவும்.

**தீரும்நோய்கள்:-** எல்லாவகைக் கிரந்திகளும் தீரும்.

**பத்தியம்:-** அரையாப்புக் கூட்டி புகை, புளி, புணர்ச்சி நீக்கி வைக்கவும்.

**குறிப்பு:-** இது வைத்திய இரகசிய முறைகளுள் ஒன்று. சிறுவர் முதியோர், ஆகிய எல்லோரும் உபயோகிக்கலாம்.

## 1592. கிரந்திக் களங்கு

சுத்திசெய்த இரசம் 10 வராகன் எடை (35 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் 5 வராகன் எடை (17½ கிராம்), எலுமிச்சம்பழச் சாறு, சிறுசெருப்படிச்சாறு, சோற்றுக்கற்றாழைச் சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்துக் கறுத்தபின்பு எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்துஒருநாளரைத்து ஈரமுலர்த்திக்கொள்ளவும். சிறுசெருப்படிச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து மூன்று நாளரைத்து ஈரம் உலர்த்திக் கொள்ளவும். பிறகு சோற்றுக்கற்றாழைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து ஒருநாளரைத்து ஒரு முட்டையோட்டில் வழித்துப்போட்டு மேலும் முட்டையோட்டால் மூடி முழுவதும் மண்ணால் பிடித்து அதன் மீது ஐந்து சீலைமண் செய்துலர்த்தி மணற்குள் வைத்து ஒரு சாமம் எரித்து எடுத்து ஆறவைத்துக் கவசத்தைப் பிரித்து மருந்தையெடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும். இதில் கொஞ்சம் இரசம் வெளிப்பட்டிருக்கும். அதை நீக்கிவிடவும்.

**அளவு:-** ஒன்றரை குன்றிமணி எடை, காலை மாலை இரண்டு வேளையும் பத்துநாள் உபயோகிக்கவும்.

**அனுபானம்:-** சர்க்கரை, வெல்லம், தேன், முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** எல்லாவகைக் கிரந்திகள், சூலைகள் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** அரையுப்புக் கூட்டி இச்சாபத்தியமிருக்கவும்.

**குறிப்பு:-** இதுவும் ஒருவகை நுட்பமான முறை.

## 1593. முகவங்குப் பூச்சு

பளிங்கான பொன்னரிதாரத்தைக் கோவைச் சாற்றில் இழைத்து முகவங்கின்மேல் பூசிவர அது நிர்மூலமாகிவிடும்.

## 1594. நாசிக் கிரந்திப் புகை

உலாந்தாலிங்கக் கட்டி $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்). பட்டைச் சாராயம் தேவையான அளவு, கோழிமுட்டை வெள்ளைக் கரு தேவையான அளவு.

கட்டியை ஒரு ஓட்டில் வைத்து மேற்படி சாராயத்தில் ஒரு சாமமும், வெள்ளைக் கருவால் ஒரு சாமமும், சுருக்குக் கொடுத்து எடுத்து நேர்மையாகப் பொடித்து வைத்துக் கொள்க. வெள்ளைச் சேலைத்துண்டில் அத்திப்பாலையூட்டி நிழலிலுலர்த்தி அதன் மீது மேற்படி இலிங்கப் பொடியை இலேசாகத் தூவித் திரித்துச் சுங்கானில் வைத்து நெருப்பிட்டுப் புகையிழுத்து மூக்கால் விடவேண்டும். இந்தப்படி காலை, மாலை இரண்டு வேளையும் ஆறு நாள், ஒன்பதுநாள் செய்துவரவும். வேளையொன்றுக்கு ஐந்து முதல் பத்துக் குன்றிமணி எடை வரை போதுமானது.

**தீரும்நோய்கள்**:- மூக்குப் புண், மூக்குக்கிரந்தி, கபாலசூலை, கபாலக்கிரந்தி, சூலை, வாயு, மேகவிரணம், கண்டமாலை ஆகியவை தீரும்.

**பத்தியம்**:- புளி, புகை ஆகியவைகளை நீக்கிஉப்பு வறுத்துக் கூட்டவும்.

## 1595. நாசிக்கிரந்தி உருண்டை

(அ) இரசகற்பூரம் $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{1}{2}$ கிராம்) (இது ஒரே கட்டியாயிருக்க வேண்டும்.) புங்கம்வேர்ப்பால், தாய்ப்பால் இவை வகைக்குத் தேவையான அளவு.

(ஆ) மிளகுத் தூள் 10 வராகன் எடை (35 கிராம்) தேன் செல்லத்தக்க அளவு.

**செய்முறை**:- (ஆ) விலுள்ள மேற்படி கட்டிக்குப் புங்கம் பாலால் ஒரு சாமமும், தாய்ப்பாலால் ஒரு சாமமும் சுருக்குக் கொடுத்து எடுத்துப் பொடித்து (ஆ) விலுள்ள மிளகுத்தூளைச் சேர்த்து அரைமணி நேரமரைத்து நன்றாகக் கலந்தபின்பு தேனைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமநேரமரைத்துப் பதினான்கு உருண்டைசெய்து காலை, மாலை, இரண்டு வேளையும் ஏழு நாள் சாப்பிடவும்.

**அனுபானம்**:- சர்க்கரை, வெல்லம், பொரியரிசிமா முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** நாசிவிரணம், நாசிக்கிரந்தி ஆகியவை தீரும்.

**பத்தியம்:** புளி, புகை, வாயுப்பண்டங்களை நீக்கி இச்சாபத்தியமாயிருக்கவும்.

## பீனிசநோய் மருத்துவம்

### 1596. பீனிச உசித நசியம்

சுத்தி செய்த இரசம் 1 வராகன் எடை (3½ கிராம்) சுத்தி செய்த நெல்லிக்காய்க்கெந்தகம் 5 வராகன் எடை (17½ கிராம்) கருப்பு வெற்றிலைச்சாறு செல்லத்தக்க அளவு, நல்லெண்ணெய் 4 பலம் (140 கிராம்)

**செய்முறை:-** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்றாகக்கறுத்தபின்பு வெற்றிலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து மூன்றுமணி நேரமரைத்துக் குழம்புப் பதத்தில் வெள்ளைச்சீலைத் துண்டில் ஊட்டியுலர்த்தித்திரியாகச் செய்து மேற்படி எண்ணெயில் நனைத்து முறைப்படி சுடர்த் தைலமிறக்கிப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

**தீரும்நோய்கள்:-** இந்தத் தைலத்தில் ஒரு துளி அல்லது, இரண்டு துளி நாசியில் நசியஞ் செய்யவும். தினம் இரண்டு மூன்று தடவை நசியம் செய்யலாம். இவ்வாறு செய்யச் சீழ்ப் பீனிசம், சிராய்ப்பீனிசம், நாசிகாபீடம் மண்டைக்குடைச்சல் மண்டைவலி ஆகியவை தீரும்.

### 1597. பீனிசிசைப்புகை

சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், மிருதார்சிங்கி, தொட்டிப்பாடாணம், நாபி இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்) சுத்திசெய்த சாதிலிங்கம் 4 வராகன் எடை (14 கிராம்) வெற்றிலைச்சாறு செல்லத்தக்க அளவு

**செய்முறை:-** முன் சரக்குகளைத் தனித்தனியே பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு ஒருமணி நேரமரைத்துப் பிறகு மேற்படி சாற்றைச்சிறுகச்சிறுக வார்த்து மூன்றுமணி நேரமரைத்துக் குழம்புப் பதத்தில் வெள்ளைச் சீலைத் துண்டில் ஊட்டிக் காயவைத்துக் கடுதாசியில் வைத்துத் திரியாகச் செய்து கொளுத்தி மூக்கில் புகைபிடிக்கவும்.

**தீரும்நோய்கள்:** நாளுக்கு இரண்டு அல்லது மூன்றுதடவை நாசியில் புகை பிடித்துவரின் எல்லாவகைப் பீனிசங்கள் மூக்குக் கிரந்தி ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** மோருஞ்சோறும் ஈரவெங்காயமுண்ணவும்; பச்சைப்பயறு, துவரம்பருப்பு கூட்டவும்.

## 1598. பீனிச ஸ்நானத் தைலம்

பசுவின் வெண்ணெய் 5 பலம் (175 கிராம்), விளக்கெண்ணெய் 5 பலம் (175 கிராம்), காட்டுச் சிறுகீரை வேர் 2½ பலம் (87½ கிராம்).

வேரை வெண்ணெய் போலரைத்து முன் இரண்டையும் சேர்த்து அதில் கரைத்துக் காய்ச்சிக் கடுகு திரள் பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனைத் தலையில் தேய்த்துச் சாணி; அல்லது, சீகைக்காய், அரப்பு முதலியவைகளில் ஒன்றை தேய்த்து வெந்நீரில் தலைமுழுகச் செய்யவேண்டும். இவ்விதம் பிரதிவாரமும் இரண்டு அல்லது, மூன்று தடவை தலைமுழுகச் செய்துவரின் பக்கப்பீனிசம், நீர்ப்பீனிசம், புண்நாற்றமாய் மாறுகிற பீனிசம், வறட் பீனிசம், சிராய்ப் பீனிசம் ஆகியவை தீரும்.

## 1599. இரத்தபீனிசத் தைலம்

(அ) சிற்றாமணக்கெண்ணெய் 12 பலம் (420 கிராம்) துளசிச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, மணித்தக்காளிச்சாறு, சிறுகீரைச்சாறு, வகைக்கு பலம் 2 தோல் நீக்கிஇடித்துப் பிழிந்த இஞ்சிச்சாறு 4 பலம் (140 கிராம்).

(ஆ) மிளகுத்தூள் ½ பலம் (17½ கிராம்), வசம்புத்தூள் 2 பலம் (70 கிராம்), தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ், தோலுரித்த வெங்காயம் இவ்விரண்டும் வகைக்கு 1 பலம் இந்தஇரண்டையும் மெல்லியதாய் அரிந்து ஓட்டில் வறுத்தெடுத்துக் கொள்ளவும்.

**செய்முறை:-** (அ) விலுள்ள சாறுகளை ஒன்றாகக் கலந்து (ஆ) விலுள்ள இரண்டு தூள்களையும் அம்மியில் வைத்து மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து வெண்ணெய்போலரைத்து மிகுந்த சாற்றில் கரைத்து எண்ணெயிற் கலந்து விடவும் பிறகு முன் வறுத்து வைத்திருக்கிற பூண்டு, வெங்காயம் ஆகியவைகளையும் அதில் சேர்த்துக் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டிப் புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** இதில் கொஞ்சமெடுத்துத் தலையில் தேய்த்து எட்டுமணி நேரம் தாமதித்துப் பிறகு சிகைக்காய் தேய்த்து வெந்நீரில் தலைமுழுகச் செய்ய வேண்டும். இவ்விதம் தொடர்ச்சியாக இருபது நாள் தலைமுழுகச் செய்து பிறகு வாரத்திற்கொருதடவை தலைமுழுகச் செய்து வரலாம். இவ் விதம் செய்துவரின் மூக்கில் ஒரு சிரங்கை இரண்டு சிரங்கை இரத்தம் வடிதல்,இரத்தப் பீனிசம், சிராய்ப்பீனிசம், முகஇசிவு முகத்துடிப்பு. மூக்குப்பள்ளம் இவை தீரும்.

## 1600. பீனிசவேம்புத் தைலம்

வேப்பெண்ணெய் 20 பலம், எட்டியிலையை வெந்நீர் தெளித்து இடித்தசாறு 10 பலம், வெள்ளைச்சாரணைக் கிழங்கையரைத்த விழுது 5 பலம், மிளகு, தோலுரித்த வெங்காயம் இவை வகைக்கு 1 ½ பலம்.(52½ கிராம்)

**செய்முறை:-** பின்னிரண்டு சரக்குகளையும் வெண்ணெய் போலரைத்து மற்றவைகளையும் ஒன்றாகக் கலந்து அதிற்கரைத்துக் காய்ச்சி கடுகுதிரள் பதத்திலிறக்கிக் கம்பளியில் வடிகட்டிப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**தீரும்நோய்கள்:-** இதனை நான்கு நாளைக் கொருதரம் தேய்த்து தலைமுழுகச் செய்துவரின் பீனிசம், கழுத்திசிவு, உடம்புவலி, கடுப்பு, தினவு, சொறி, சிரங்கு ஆகியவை தீரும்

**பத்தியம்:-** தலைமுழுகிய தினத்தன்று புளி, புகை தள்ளவும்.

**குறிப்பு:-** எட்டியிலை அகப்படாத இடங்களில் ஐந்து பலம் எட்டிக்கொட்டையை மெல்லியதாகச்சீவி அதில் ஒருபடி தண்ணீரை விட்டு நான்கிலொரு பாகமாகக் காய்ச்சி வடி கட்டின குடிநீரை சேர்த்து கொள்ளலாம். வெள்ளைச்சாரணை அகப்படாவிட்டால் சிவப்புச் சாரணையைச் சேர்த்துக் கொள்ளலாம்.

## 1601. பீனிசமறள் தைலம்

நல்லெண்ணெய் 10 பலம்(350 கிராம்), மருள்கிழங்குச்சாறு 20 பலம் (700 கிராம்), மிளகு 1 பலம் (35 கிராம்), அரிசித்திப்பிலி 1 பலம் (35 கிராம்), வேம்பாடம்பட்டைத்தூள் 2 வராகன் எடை (7 கிராம்).

**செய்முறை:-** வேம்பாடம்பட்டையைத்தவிர மற்ற இரண்டு சரக்கையும் அம்மியில் வைத்துப் பொடித்து மேற்படி சாற்றைச்

சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து மிகுந்த சாற்றிற் கரைத்து அதில் எண்ணெயையும் விட்டுக்காய்ச்சிக் கடுகு திரள்பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க. இந்த தைலத்தில் இரண்டொரு கரண்டியெடுத்து அதில் வேம்பாடம் பட்டைத் தூளைப் போட்டுக் காய்ச்சி முன் தைலத்தில் கலந்து புட்டியில் வைத்துக்கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனை நான்கு நாளைக்கொரு தடவை தேய்த்து, மூன்று சாம மிருநதுபிறகு உசிலம் பொடியையாவது சிகைக்காய்த் தூளையாவது தேய்த்து வெந்நீரில் தலைமுழுக்குச் செய்துவர நீர்ப்பீனிசம், சிராய்ப்பீனிசம், கபாலவாயு, ஒரு தலை நோவு, தந்தவாயு, முகவாதம் ஆகியவை தீரும்.

## 1602. பீனிசத் துளசித் தைலம்

நல்லெண்ணெய் 20 பலம் (700 கிராம்), துளசிச்சாறு 20 பலம் (700 கிராம்), குந்திரிக்கத்தூள் 2 பலம் (70 கிராம்)

**செய்முறை:** முன் இரண்டு திரவங்களையும் சேர்த்துக் காய்ச்சி மெழுகுபதத்தில் குந்திரிக்கத்தூளைத் தூவியிறக்கி, இளஞ்சூட்டுடன் வடிகட்டி புட்டியில் வைத்துக்கொள்க. இதில் இரண்டொரு துளி நாசியில் நசியம் செய்ய வேண்டும். தினம் மூன்று தடவை தலையில்தேய்த்து முடிவில் தலைமுழுகச்செய்து வர வேண்டும். இவ்விதம் செய்து வருவதால் சலப்பீனிசம், முதலிய எழுவகைப் பீனிசங்களும் தீரும்.

## 1603. பீனிச மிளகுத் தைலம்

(அ) நல்லெண்ணெய் 20 பலம், (700 கிராம்), மிளகுத்தூள் 8 பலம் (280 கிராம்).

(ஆ) மிசிரி அபின், சாதிக்காய்த்தூள் வகைக்கு 1 வராகன் எடை (3 கிராம்), இவ்விரண்டையும் சேர்த்தரைத்து எடுத்து வைத்துக்கொள்க

**செய்முறை:-** எண்ணெயையும் மிளகுத்தூளையும் ஒரு கலயத்தில் போட்டுக் கலயத்தின் வாயை அகலால் மூடிச் சீலை மண் செய்துலர்த்தி ஊறவைத்த நெல்லை ஒருபானையில் அரை வாசி போட்டு முன் சித்தப்படுத்தின கலயத்தை வைத்து அதன் மேலும் முன் நெல்லைப் போட்டு வேகவைத்து நெல் புழுங்கின பதத்தில் இறக்கிக்குளிர ஆறின பின்பு கலயத்தை எடுத்துக் கொள்ளவும். இவ்விதம் மடக்கி மடக்கி நான்கு தடவைகள் செய்தெடுத்துக் கவசத்தைப் பிரித்து வடிகட்டித் திப்பியை நீக்கி விட்டு மறுபடியும் கலயத்தில்விட்டு நன்றாகக் கலக்கி மறுபடியும் வாயை மூடிச் சீலைமண் செய்துலர்த்தி முன்போல் நெற்பானையில் வைத்து நான்கு தடவை புழுக்கியெடுத்து வைத்துக் கொள்ளவும்.

திரும்நோய்கள்:-இதனை எட்டுநாளைக்கொருமுறை தலைக்குத் தேய்த்துச் சிறுபயறு தேய்த்து வெந்நீரில் தலைமுழுக்குச் செய்துவரப் பீனிசம், கபாலசூலை, சுவாசகாசம் ஆகியவை தீரும்.

பத்தியம்:- தலைமுழுகச் செய்த அன்று புளி, புகை தவிர்க்கவும்.

## 1604. கபால சூலைத் தைலம்

நல்லெண்ணெய் 8 பலம் (280 கிராம்), கொடிவேலி வேர்ப் பட்டை 8 பலம் (280 கிராம்).

**செய்முறை:**- பட்டையைத் தண்ணீர் வார்த்து வெண்ணெய் போலரைத்து எண்ணெயில் கலக்கிக் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்:**- நான்கு நாளைக்கொருதடவை இதனைத் தலைக்குத் தேய்த்து ஸ்நானஞ் செய்துவரக் கபாலசூலை, சீதளத்தலைநோய், கபசம்பந்தத் தலைநோய், நீர்க்கோவை, தலைப்பாரம் முதலியவை தீரும்,

## 1605. கபால சூலைப் பாளைத்தைலம்

நல்லெண்ணெய் 10 பலம் (350 கிராம்), ஆடுதின்னாப் பாளைச்சாறு 10 பலம் (350 கிராம்).

**செய்முறை:**- இவ்விரண்டையும் கலந்து காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:**- இதனை எட்டுநாளைக்கு ஒரு முறை தேய்த்து தலைமுழுக்குச் செய்துவரக் கபாலசூலைதீரும். மேற்கண்ட நோய்களும் தீரும்.

## 1606. பால சூலைக் கலியாணத் தைலம்

நல்லெண்ணெய் 10 பலம் (350 கிராம்) கலியாண முருக்கிலையில் பசுவின் பாலைவிட்டு இடித்துப் பிழிந்தசாறு 10 பலம் (350 கிராம்), மிளகு 1 பலம் (35 கிராம்), சீரகம் 1 பலம் (35 கிராம்).

**செய்முறை:**- பின்கண்ட இரண்டு சரக்குகளையும் அம்மியில் வைத்துப் பொடித்து மேற்படிசாற்றை விட்டு வெண்ணெய்

போலரைத்து மிகுந்த சாற்றில் கரைத்து எண்ணெயையும் கூடச் சேர்த்துக்காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனை நான்கு நாளுக் கொருதடவை தேய்த்துத் தலைமுழுக்குச் செய்துவரக் கபாலசூலை, தலைநோவு, பீனிசம் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** ஸ்நானஞ்செய்த அன்று புளியைத் தள்ளவும்.

## 1607. கரிசாலைத் தைலம்

நல்லெண்ணெய் 10 பலம் (350 கிராம்), கரிசாலைச்சாறு 10 பலம் (350 கிராம்), பசுவின்பால் 10 பலம் (350 கிராம்) அதிமதுரத்தூள் $1\frac{1}{2}$ பலம் ($43\frac{3}{4}$ கிராம்)

**செய்முறை:-** அதிமதுரத்தைப் பால்விட்டு வெண்ணெய் போலரைத்துப் பாலில் கரைத்து மற்ற இரண்டு திரவத்தையும் கலந்து காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனை நான்கு நாளைக்கொருதடவை ஸ்நானஞ்செய்துவர கபாலசூலை, பீனிசம் ஆகியவை தீர்ந்து கண்ணொளியுண்டாகும். நரைத்த மயிர் கருக்கும்.

## 1608. நீலித் தைலம்

அவுரியிலைச்சாறு, பச்சைமஞ்சட்சாறு இவை வகைக்கு 8பலம் (200 கிராம்), நல்லெண்ணெய் 16 பலம் (560 கிராம்).

**செய்முறை:** இவைகளை ஒன்றாகக்கலந்து காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக்கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனை எட்டு நாளைக்கொருதடவை தேய்த்து தலைமுழுகச் செய்துவர ஒற்றைத் தலைவலி, பீனிசம், காதடைப்பு, கபாலசூலை ஆகியவை தீரும்.

## 1609. அவரைத் தைலம்

நல்லெண்ணெய் 8 பலம் (280 கிராம்), அவரையிலைச்சாறு 8 பலம் (280 கிராம்).

**செய்முறை:-** இவ்விரண்டையும் கலந்து காய்ச்சி மெழுகு பதத்தில் வடிகட்டி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனை எட்டு நாளைக்கொருதடவை தேய்த்து நான்கு தலைமுழுக்கு முழுகத் தலைவலி, பீனிசம் ஆகியவை தீரும்.

## 1610. பதங்கத் தைலம்

பனிங்குச் சாம்பிராணிப் பதங்கம் 1 பலம் (35 கிராம்) நல்லெண்ணெய் 5 பலம் (175 கிராம்), ஊழலத்தியிலையில் பசுவின் பாலை விட்டிடித்துப் பிழிந்தசாறு 15 பலம் (525 கிராம்), பச்சை மஞ்சட்சாறு 5 பலம் (175 கிராம்), வெற்றிலைச்சாறு 5 பலம் (175 கிராம்), நொச்சியிலைச்சாறு 5 பலம் (175 கிராம்), வயல் நண்டுக்கொழுப்பு 2 பலம் (70 கிராம்), கருஞ்சீரகத்தூள் ½ பலம் (17½ கிராம்), கஸ்தூரி மஞ்சள் தூள் ½ பலம் (17½ கிராம்), தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ் ½ பலம் (172 கிராம்).

**செய்முறை:-** சாறுகளையெல்லாம் ஒன்றாகக்கலந்து மற்றச் சரக்குகளை அம்மியில் வைத்து மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து மிகுந்தசாற்றில் கரைத்து எண்ணெயையும் அதில் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனை மூன்று நாளைக்கொரு முறை தேய்த்துத் தலைமுழுகச் செய்துவர ஒருதலைவலி, மண்டைக் குத்தல், ஏழுவகைப் பீனிசம் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** தலைமுழுகிய அன்று புளியை நீக்கவும்.

## 1611. பீனிச சுகந்தத் தைலம்

(அ) நல்லெண்ணெய் 20 பலம் (700 கிராம்), முசுமுசுக்கைச் சாறு 16 பலம் (560 கிராம்), கோடகசாலைச்சாறு 2½ பலம் (37½ கிராம்), எலுமிச்சம்பழச்சாறு 2½ பலம் [87½ கிராம்], பசுவின்பால் 20 பலம் [700 கிராம்].

(ஆ) தேவதாரக்கட்டைத்தூள், சந்தனக்கட்டைத்தூள் இவை வகைக்கு 8 பலம் [280 கிராம்] இவ்விரண்டையும் இடித்து இரண்டுபடி நீர்விட்டு நான்கிலொரு பாகமாகச் சுண்டவைத்து இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

(இ) பற்படாகம் 1 பலம் [35 கிராம்], மிளகு 2 பலம் [70 கிராம்] இவற்றைத்தூள் செய்து பசுவின் பால்விட்டு வெண்ணெய்போல அரைத்துக் கொள்க.

Cell: 8489777140
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக கடை
மு. முருகன்
... மெயின் ரோடு.

**செய்முறை:-** (அ) விலுள்ள திரவங்களையும், [ஆ]விலுள்ள குடிநீரையும் ஒன்றாகக் கலந்து அதில் (இ)யிலுள்ளதைக் கரைத்துக் காய்ச்சி மெழுகுபதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** நான்கு நாளைக்கு ஒருமுறை இதனைத் தேய்த்துத் தலைமுழுகிவர எல்லாவகைப் பீனிசங்கள், பித்த நோய்கள் ஆகியவை தீரும்.

## 1612. பீனிச வெருகந் தைலம்

நல்லெண்ணெய் $7\frac{1}{2}$ பலம் ($262\frac{1}{2}$ கிராம்), வெருகங்கிழங்கை அரைத்த விழுது $1\frac{1}{2}$ பலம் [$43\frac{1}{2}$ கிராம்], மிளகு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), மஞ்சள் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்).

**செய்முறை:-** பின்கண்ட இரண்டையும் பொடித்து நீர் வார்த்துவெண்ணெய்போலரைத்து வெருகங்கிழங்குவிழுதையும் சேர்த்து அரைமணி நேரமரைத்து எண்ணெயிற் கலக்கிக் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** எட்டுநாளுக்கொரு தடவை தேய்த்து தலைமுழுகிவரப் பீனிசரோகங்கள், பலவகை சுரரோகங்கள் ஆகியவை தீரும்

## 1613. நசிய நெய்

பசுவின் நெய் 6 வராகன் எடை (21 கிராம்), புனுகு $\frac{1}{4}$ வராகன் எடை, குங்குமப்பூ $\frac{1}{4}$ வராகன் எடை, கோரோசனை $\frac{1}{2}$ வராகன் எடை வெற்றிலைச்சாறு, 10 வராகன் எடை [35 கிராம்].

**செய்முறை:-** பின் மூன்று சரக்கையும் கல்வத்திலிட்டு வெற்றிலைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து வழித்து நெய்யிற் போட்டுக் கலக்கிக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடிகட்டி புட்டியில் வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** ஒன்று அல்லது, இரண்டு துளியை நாசியில் நசியஞ்செய்துவர எல்லாவகைப் பீனிசங்கள், மூக்கடைப்பு ஆகியவை தீரும்.

## 1614. ஆக்கிராணம்

காட்டுவாகை விதைத்தூள் 1 பலம் (35 கிராம்),இலவங்கத் தூள் 3 வராகன் எடை, (10 கிராம்) இவ்விரண்டையும் ஒன்று சேர்த்து ஒருமணி நேரமரைத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அதனை நாசியில் ஊக்குறிஞ்சல் (ஆக்கிராணம்) செய்து வரச் சிரோவாதம், தலைவலி, மண்டைக் குத்தல், கபாலசூலை ஒற்றைத் தலைவலி, நீர்ப்பாய்ச்சல், பீனிசம் ஆகியவை தீரும்

## 1615. பீனிசப் புகை

சுத்திசெய்த இலிங்கம், சுத்திசெய்த அரிதாரம், சாதி பத்திரித்தூள், அக்கிராகாரத்தூள் இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), எருக்கங்கரித்தூள் 1 வராகன் எடை (3½ கிராம்)

**செய்முறை:-** முன்னிரண்டு சரக்குகளையும் தனித்தனி பொடித்து ஒன்றாகக் கலந்து மற்ற மூன்று வகைத் தூளையும் அதிற் சேர்த்து ஒரு மணி நேரமரைத்துத் துணியில் பரப்பித் திரித்து வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** காலை மாலை இரண்டு வேளையும் ஏழு நாள் கொளுத்தி நாசியிற் புகைபிடிக்க எல்லாவகைப் பீனிச நோய்களும் தீரும்.

## 1616. பீனிசப் புகை (வேறு)

சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் ½ வராகன் எடை (1¾ கிராம்), இரசம், அரிதாரத்தூள்; இவை வகைக்கு ¼ வராகன் எடை, குந்திரிகத்தூள், கொடிவேலி வேர்ப்பட்டைத் தூள், எருக்கங்கரி இவை வகைக்கு 1 வராகன் எடை, குப்பை மேனிச்சாறு, எருக்கம் பழுப்புச்சாறு இவ்விரண்டும் சமனாகச் சேர்த்தது செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்றாகக் கறுத்தபின்பு மற்ற தூள்களையும் இதில் சேர்த்து ஒரு மணி நேரம் அரைத்துப் பிறகு முன் கலந்து வைத்திருக்கிற சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரமரைத்து குழம்பு பதத்தில் மெல்லிய துணியில் தடவி உலர்த்தித் திரியாக திரித்து வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** காலை, மாலை இரண்டு வேளையும் திரியைக் கொளுத்தி நாசியில் புகைபிடித்து வரப் பீனிசம், கபால சூலை, ஒருதலைவலி, பித்தவலி, நயனவாதம் ஆகியவை தீரும்.

## 1617. சாம்பிராணிப் புகை

பளிங்குச்சாம்பிராணித் தூள் ½வராகன்எடை, சாதிலிங்கத் தூள் 1 வராகன் எடை (3½ கிராம்), மிளகுத்தூள் 1 வராகன் எடை (3½ கிராம்), ஏலரிசித்தூள் 2 வராகன் எடை (7 கிராம்)

இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து ஒரு மணி நேரம் அரைத்துக் சுடுதாசியில் பரப்பித் திரியாகச் செய்து கொள்க.

**தீரும்நோய்கள்:-** திரியைக் கொளுத்திப் புகைப் பிடிக்கத் தலைவலி, மண்டைக்குத்தல், காதடைப்பு ஆகியவை தீரும்.

## 1618. பீனிச நசியம்

பூவந்திப் பழத்தை விதையை நீக்கிவிட்டு தண்ணீரில் அல்லது, தாய்ப்பாலில் ஒரு மணிநேரம் ஊறவைத்து மெல்லிய துணியில் முடிந்து நாசியில் இரண்டு மூன்று துளி நசியஞ் செய்துவரப் பீனிசநோய், தலைவலி, உடல்வலி, பைத்திய நோய், தலைப்பாரம் ஆகியவை தீரும்.

## 1619. பீனிச நசியம்

பேய்ப்பீர்க்கம் விதைப்பருப்பைத் தாய்ப்பால் விட்டரைத்து மேற்கண்டபடி நசியஞ்செய்ய மேற்கண்ட நோய்கள் தீரும்.

## 1620 பீனிச வேர்த்தைலம்

(அ) முசுமுசுக்கைவேர், அமுக்குராவேர், சாரணைவேர், நெய்ச்சட்டிவேர், நொச்சிவேர் வகைக்கு ½ பலம் (17½கிராம்), சந்தனக் கட்டைத்தூள் ½ பலம் (17½ கிராம்), இவைகளை நையச் சிதைத்து ஐந்துபடி நீரைவிட்டு எட்டிலொருபாகமாகச் சுண்ட வைத்திறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

(ஆ) வெற்றிலைச்சாறு, கையாந்தகரைச்சாறு, வெள்ளாட்டுப் பால் இவை வகைக்கு 5 பலம் (175 கிராம்) தாய்ப்பால் 2½ பலம் (87½ கிராம்), நல்லெண்ணெய் 20 பலம் (700 கிராம்).

(இ) சிற்றரத்தைத் தூள் ½ பலம் (17½கிராம்), மிளகுத் தூள் ¼ வராகன் எடை (14 கிராம்), மரமஞ்சட் தூள், அகிற் கட்டைத் தூள், ஆயிற்பட்டைத் தூள், பூலாங்கிழங்குத்தூள், பச்சிலைத்தூள், கஸ்தூரிமஞ்சள் தூள் இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), பசுவின் பால் 11 பலம் (350 கிராம்), மேற்படி தூள்களை ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்து மேற்படி பாலைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து எடுத்து வைத்துக் கொள்க.

**செய்முறை:-** (அ)விலுள்ள குடிநீரையும் (ஆ) விலுள்ள திரவங்களையும் ஒன்றாகக் கலந்து அதில் (இ) யிலுள்ளதைக் கரைத்துக் காய்ச்சி மெழுகுபதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனை நான்கு நாளைக்கொருதடவை தேய்த்துக் காதிலும் சிறுதுளிகள் விட்டுத் தலைமுழுகச் செய்து வர திரிதோடங்கள் மண்டைச்சூலை, மண்டையிடி, பீனிசத் தலைநோய் காதிரைச்சல், காதுவலி ஆகியவை தீரும். பத்து முழுக்கு முழுககுணம் தெரியும்.

**பத்தியம்:-** தலைமுழுகிய அன்று புளி தள்ளி இச்சாபத்தியமாயிருக்கவும்.

## 1621. செவிநோய்த் தைலம்

(அ) நல்லெண்ணெய் 8 பலம் (280 கிராம்), ஆதண்டைச் சாறு, பொன்னாங்காணிச்சாறு, சிறுகீரைச்சாறு, வகைக்குப் பலம் இரண்டரை.

(ஆ) ஆதண்டைவேர்ப்பட்டை, 2 பலம்(70கிராம்)அதிமதுரம், வேம்பாடம்பட்டை இவை வகைக்கு அரைப்பலம், சோம்பு, நற்சீரகம், கொத்துமல்லி விதை, மரமஞ்சள், மிளகு. இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்) இவற்றைக் தனித்தனியாக தூள்செய்து மேற்கண்ட எடை நிறுத்தெடுத்துக்கொள்ளவும்.

(இ) சாம்பிராணித்தூள் 1 வராகன் எடை (3 கிராம்).

**செய்முறை:-** (அ)விலுள்ளவைகளில் எண்ணெயைத் தவிர, மற்றவைகளையெல்லாம் ஒன்றாகக் கலந்து (ஆ) விலுள்ள சூரணங்களை அம்மியில்வைத்து அரைமணி நேரமரைத்து எல்லாம் கலந்த பின்பு முன்கலந்து வைத்திருக்கிற சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து வெண்ணெய்போலரைத்து மிகுந்த சாற்றிற் கரைத்து அதில் எண்ணெயையும்விட்டுக் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி (இ)யிலுள்ள சாம்பிராணித் தூளைத்தூவி நன்றாகக் கலக்கி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**தீரும்நோய்கள்:-**இதனை எட்டுநாளைக்கொருதரம்தேய்த்து தலைமுழுகி வரவேண்டும். பிரதிதினம் காதிலும் விட்டுவர வேண்டும். இப்படிச் செய்துவரின் காதிரைச்சல், மண்டைச் சூலை ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** தலைமுழுகிய அன்று புளியை நீக்கவும்.

## 1622. நறளைத் தைலம்

(அ) நல்லெண்ணெய் 8 பலம் (280 கிராம்), நறளையிலைச் சாறு 8 பலம் (2[illegible] கிராம்).

(ஆ) பால்சாம்பிராணித்தூள், சிற்றரத்தைத்தூள், சோம்புத் தூள், மிளகுத் தூள், வேம்பாடம்பட்டைத்தூள், இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்).

**செய்முறை:-** (ஆ)விலுள்ள சூரணங்களை ஒன்றாகக் கலந்து அம்மியில்வைத்து மேற்படி நறளைச்சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு வெண்ணெய்போலரைத்து மிகுந்த சாற்றிற்கரைத்து எண்ணெயும் சேர்த்துக்காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வடி கட்டி புட்டியில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனை நான்கு நாளைக்கொரு தடவை தேய்த்துத் தலைமுழுகிவரத் தலைவலி, பீனிசம் ஆகியவை தீரும்.

## 1623. செவிநோய் சஞ்சீவி

(அ) சிற்றாமணக்கெண்ணெய் 20 பலம் (700 கிராம்), முள் ளிலவம் பட்டைச்சாறு, கையாந்தகரைச்சாறு, காட்டுச்சீரக இலைச்சாறு இவை வகைக்கு 8 பலம் (280 கிராம்), பொன்னாங் காணிச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, உத்தாமணிச்சாறு, சாரணைச்சாறு, கிரந்திநாயகச்சாறு, எருக்கம்பழுப்புச் சாறு, சிறுகுரிஞ்சாச் சாறு இவை வகைக்கு ½பலம். குப்பைமேனிச் சாறு, மணத்தக்காளிச்சாறு, சங்கிலைச்சாறு, செங்கத்தாரி யிலைச்சாறு இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்).

(ஆ) மஞ்சள்கடுக்காய்த் தோல் தூள் 1பலம் (35 கிராம்) கஸ்தூரிமஞ்சள் தூள், கருஞ்சீரகத் தூள், கடுகுரோகணித்தூள் கார்போகரிசித்தூள் இவை வகைக்கு 3 வராகன்எடை [10½ கிராம்].

**செய்முறை:—** (அ) விலுள்ள சாறுகளையெல்லாம் ஒன் றாகக் கலந்து கொள்க. (ஆ)விலுள்ள தூள்களை அம்மியில் வைத்து அரைமணி நேரமரைத்து எல்லாம் ஒன்றுசேர்ந்தபின்பு முன்கலந்த சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து மிகுந்த சாற்றிற்கரைத்து அதில் எண்ணெயை யும் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக்கொள்க.

**தீரும்நோய்கள்:—** நான்கு நாளைக்கொரு தடவை இதனைத் தேய்த்துத் தலைமுழுகிவர மண்டைக்கரப்பான், செவிநீர்ப் பாய்ச்சல், செவியிற் சீழ் வருதல் செவியில் நீர் வருதல், செவி யிரைச்சல், தந்தநோய் முதலிய கண்டத்தின் மேற்பட்ட நோய்க ளெல்லாம் தீரும்.

## 1624. முகவாத மேற்பூச்சுத் தைலம்

நல்லெண்ணெய் 5 பலம் (175 கிராம்), தேங்காய்த்தனிப் பால் 10 பலம் (350 கிராம்), எருக்கம்பால் 5 பலம் (175கிராம்) பூநாகம் 5 பலம் (175 கிராம்).

**செய்முறை:-** இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து காய்ச்சி மெழுகுபதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக்கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனை மூக்கு, செவி, நெற்றி, சன்னம் கழுத்து ஆகிய இடங்களில் பூசித் தேய்க்கவும். இவ்விதம் நாளுக்கு இரண்டொரு தடவையாக மூன்றுநாள் தேய்த்துவர முகவாதம், கழுத்திசிவு, கண்டகுப்தசன்னி, முகங்கோணல் ஆகியவை தீரும்.

## 1625. கொரட்டைத் தைலம்

(அ) நல்லெண்ணெய் 20 பலம் [700 கிராம்], கொரட்டைப் பழச்சாறு, ஆதண்டை இலைச்சாறு, வெற்றிலைச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, முடக்கொத்தான்சாறு இவை வகைக்கு $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்)

(ஆ) மேற்றோல் சீவின சுக்குத் தூள், மிளகுத்தூள், நற்சீரகத் தூள், நெல்லிமுள்ளித் தூள், செண்பகமொட்டுத் தூள், இவை வகைக்கு 1 பலம் (85 கிராம்).

**செய்முறை:-** (அ)விலுள்ள திரவங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து தூவிக் காய்ச்சி மெழுகுபததிலிறக்கி வடிகட்டி வைத்துக்கொள்க.

**தீரும்நோய்:** இதனை நான்குநாளைக்கொரு தடவை தேய்த்துத் தலை முழுகிவர எல்லாவகைப் பீனிச நோய்களும் தீரும்.

## 1626. இரத்த பீனிசப்புகை

மஞ்சள், ஓமம், சாம்பிராணி, கருங்குங்கிலியம் இவைகளின் தூள் வகைக்கு 3வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்) இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து இரண்டொரு மணிநேரம் அரைத்துநன்றாக கலந்த பின்பு துணியில்வைதது முறைப்படி சுத்தி செய்து கொளுத்தி நாசியிற் புகைபிடிக்கவும்.

இவ்விதம் தினம் இரண்டு மூன்றுதடவைகள் செய்துவரின் இரத்த பீனிசம், மூக்கில் இரத்தம் வடிதல் முதலிய பீனிசநோய்கள் தீரும்.

## 1627. பீனிசத் தலைகட்டு

மிளகு, கோஷ்டம், அகில், தக்கோலம், குங்குமப்பூ, அரிசித்திப்பிலி, ஆவாரங்கொழுந்து இவை வகைக்கு 1வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) இவற்றை இளநீர் விட்டரைத்து எருமைத்தயிரில்

குழப்பித்தலையில் வைத்துக்கட்டவும். இவ்விதம் தினம் ஒவ்வொரு தடவை 5 நாள், 7 நாள், 8 நாள் செய்யின் இரத்த பீனிசம், மூக்கிலிருந்து இரத்தம் வருதல் ஆகியவை தீரும்.

## 1628. இரத்தப் பீனிச நசியம்

மாதளம்பூச்சாறு, வெள்ளறுகுச்சாறு, தாய்ப்பால்வகைக்கு ½ வாரகன் எடை (1⅞ கிராம்), மாங்கொட்டைத்தூள் 1வராகன் எடை (3½ கிராம்) இவற்றைக் கல்வத்திற் சேர்த்து அரைமணி நேரமரைத்து வெள்ளைத்துணியில் வைத்து இரண்டு மூன்று துளி ஒவ்வொரு நாசியிலும் பிழிய வேண்டும். இவ்விதம் இரண்டு மூன்று தடவை சமயோசிதம் போலச் செய்துவரின் பீனிச இரத்த வகை ஆறும் தீரும்.

## 1629. நசிய நெய்

அறுகஞ்சாறு ¼படி, பசுவின் பால் 2 படி, இவ்விரண்டையும் காய்ச்சிப் பதத்தில் பிரைகுற்றிக் கடைந்து வெண்ணெயெடுத்து உருக்கி நெய்யாக வைத்துக்கொள்க. தினம் இரண்டு மூன்று தடவை இதனை மூக்கில் நசியஞ் செய்துவர இரத்த பீனிசம் தீரும். இரத்த பீனிச வகை ஆறும் தீரும்.

குறிப்பு:- இதனை உள்ளுக்கும் உபயோகிக்கலாம்; இரத்தங் கக்கல், இரத்தக்ஷயம், வறட்டிருமல் முதலிய உட்டிணசம்பந்த நோய்கள் தீரும். இவ்விதம் செய்யப்பட்ட மோர், தயிர் முதலியவைகளை உபயோகித்து வந்தாலும் மேற்கண்ட நோய்கள் தீரும்.

## 1630. சித்தர் தைலம்

கொடிவேலி வேர்ப்பட்டை 3 பலம் (105 கிராம்), இதனை நையச் சிதைத்து ஒருபடி தண்ணீர் விட்டு நான்கில் ஒரு பாகமாக சுண்டவைத்து இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க. மஞ்சள் கடுக்காய்த்தோல் தூள், கண்டத்திப்பிலித் தூள், வன்னிமர வேர்ப்பட்டைத்தூள் வகைக்கு பலம் (17½ கிராம்), இம் மூன்றையும் அம்மியில் வைத்து முன் சித்தப்படுத்தின குடிநீரைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து மிகுந்த குடிநீரில் கரைத்துப் பத்துப்பலம் நலலெண்ணெயை அதில் சேர்த்துக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடிகட்டி வைத்துக் கொள்க.

தீரும்நோய்கள்'- இதனை வேளைக்கு ஒரு வராகன் எடை வீதம், காலை மாலை இரண்டு வேளையும் உட்கொள்ள வேண்டியது. எட்டு நாளைக்கு ஒரு தடவை இதனைத் தேய்த்து தலைமுழுகச் செய்து வரவேண்டியது. இவ்விதம் செய்துவரின்

இரத்த பித்தம்' இரத்தம் கக்கல், இரத்தசிலேட்டுமம், இரத்தப் பிரமியம், இரத்தக் குறைவு, இரத்த சுரோணிதம் ஆகியவை தீரும்,

## 1631. இரத்த பித்த கறித் தைலம்

(அ) நல்லெண்ணெய், பசுவின்பால், ஆதண்டை இலைச்சாறு மலைவேப்பிலைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, கையாந்த கரைச்சாறு தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு, முசுமுசுக்கைச் சாறு தாமரைவளையச்சாறு இவை வகைக்கு 20 பலம் (700 கிராம்)

(ஆ) மிளகுத்தூள் 20 பலம் (700 கிரகம்).

**செய்முறை:-** [அ] விலுள்ளவைகளில் எண்ணெய் தவிர மற்ற சாறுகளை ஒன்றாகக் கலந்து [ஆ] விலுள்ள மிளகை அம்மியில் வைத்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து மிகுந்த சாற்றில் கரைத்து எண்ணெயும் கூடச் சேர்த்துக் காய்ச்சி மெழுகுபதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** நான்கு நாளைக்கு ஒரு தடவை இதனைத் தேய்த்து தலைமுழுகிவரின் மூக்கிலிருந்து இரத்தம் விழுதல், தொண்டையிலிருந்து இரத்தம் விழுதல், சிராய்ப்பீனிசம் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** தலைமுழுகச் செய்த அன்று உப்பில்லாமல் வெந்நீரன்னம் உண்ணவும். மறுநாள் உப்புக் கூட்டவும்.

## 1632. அறுவகை இரத்த நெய்

கண்டங்கத்திரிவேர், சிற்றாமல்லிவேர். கீழ்க்காய் நெல்லிவேர். வேப்பம்கட்டை, கடுகுரோகணி, கோட்டம்: திராட்சைப்பழம், பேரீச்சம்பழம், யானைத்திப்பிலி, முருங்கைப்பூ, நெல்லிப்பருப்பு, விலாமிச்சம் வேர், அதிவிடயம், சிறுதேக்கு இவை வகைக்கு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), நெய் 10 பலம் (350 கிராம்).

**செய்முறை:—** மேற்கண்ட சரக்குகளில் இடிக்க வேண்டிய வைகளை இடித்துத் தூள் செய்தும், அரைக்க வேண்டியவை களை அரைத்தும் ஒன்றாகக் கலந்தும் தண்ணீர் தெளித்து, வெண்ணெய் போலரைத்து மேற்படி நெய்யில் கரைத்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடிகட்டி வைத்துக். கொள்க.

**தீரும்நோய்கள்:—** இதில் ஒரு வேளைக்கு ஒரு வராகன் எடை வீதம் காலை, மாலை இரண்டு வேளையும் உடகொண்டு மூக்கிலும் நசியம் செய்துவர இரத்தம், வெள் அடைப்பு ஆகிய அறுவகையும் தீரும்.

## 1633. இரத்தகாச உசிதம்

பருத்திக்கொட்டைப் பருப்புத்தூள், சந்தனத்தூள், சர்க்கரை இவை வகைக்கு 1 வராகன் எடை. இம் மூன்றையும் கல்வத்திலிட்டு அரைமணி நேரம் அரைத்து இரண்டு பலம் பசுவின் வெண்ணெயில் கலந்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் மூன்றுநாள் உட்கொண்டு வரின் இரத்தகாசம், இரத்தசயம், நுரையீரல் புண், நுரையீரல் வறட்சி ஆகியவை தீரும்.

**குறிப்பு:-** உயர்ந்த சந்தனக்கட்டையைப் பன்னீர்விட்டிழைத்து உலர்த்தி மேற்கண்ட பாகத்தில் சேர்த்துக்கொள்வது உத்தமம்.

## 1634. இரத்தசய உசிதம்

பச்சைக்கொத்துமல்லிக் கீரைச்சாறு 1 பலம் (35 கிராம்), சீனாக்கற்கண்டுத் தூள் 1 வராகன் எடை (3½ கிராம்), ★ சிருங்கி பற்பம் 4 குன்றிமணி எடை. இம் மூன்றையும்ஒன்றாகக் கலந்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் பத்துநாள், இருபதுநாள் உட்கொண்டு வரின் இரத்த சயம், சினுக்கிருமல், அத்திச்சூடு, சயசுரம் முதலியவை தீரும்.

## 1635. இரத்தசய உசிதம் வேறு

எருமைத் தயிர்ச்சக்கை 5 வராகன் எடை (17½ கிராம்), பசுவின் வெண்ணெய் 5 வராகன் எடை (17½ கிராம்), மஞ்சள் கடுக்காய்த் தூள் 1¼ வராகன் எடை, தேன்½ வராகன் எடை இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து உட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் மூன்றுநாள், ஐந்து நாள், ஏழுநாள் சமயோசிதம் போல் உபயோகித்துவர மேற்கண்ட நோய்கள் தீரும்.

## 1636. மேற்படி வேறு

ஆலம்விழுது நுனியை அரைத்த விழுது 1¼ பலம் (43¾ கிராம்), இதனை ஒரு ஆழாக்கு பசுவின் பாலில் கரைத்துக் காலையில் பருகச் செய்யவேண்டும். இவ்விதம் மூன்று, ஐந்து, ஏழு நாள் காலையில் பருகச் செய்துவரின் இரத்த சயம், இரத்த வாந்தி ஆகியவை தீரும்.

---

★ இதன் முறை முன்பாகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

## 1637. காசபஞ்ச வித்துத் தூள்

நாவல்விதை, ஆலம்விதை, அரசம்விதை, அத்தி விதை, தாமரை விதைப்பருப்பு அல்லது, தாமரைவளையம், நிலப் பனைக் கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, முருங்கைப்பூ, மான் கொம்பை இழைத்துலர்த்தின தூள் அல்லது, மான்கொம்பு பற்பம், தூதுவளையிலை, தூதுவளம்பூ, தூதுவளங்காய் இவை களையுலர்த்தி இடித்த தூள் வகைக்கு 1 பலம் (35 கிராம்).

**செய்முறை:-** இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து ஒரு மணிநேரம் அரைத்து நன்றாக ஒன்றுசேர்ந்த பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 1 முதல் 1½ வராகன் எடை.

**பத்தியம்:-** நெய்யையும் தேனையும் சமனாகக் கலந்து சுமார் 1 முதல் 1½ வராகன் எடை எடுத்து இதில் கலந்து உட் கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** இரத்தபித்தம், இரத்த சயம், இரத்த காசம், இரத்த வாந்தி ஆகியவை தீரும்,

## 1638. இரத்தபித்தக் குடிநீர்

நன்னாரிவேர், வட்டத்திருப்பிவேர் இவை வகைக்கு ½பலம் அறுகம்வேர் 1 பலம் இவற்றைச் சிதைத்துப் பால் 1 ஆழாக்குத் தண்ணீர் 1 ஆழாக்கு விட்டுக்காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து வடிகட்டிக் கொள்ளவும். துணியைச் சுட்ட சாம்பல் 1 வராகன் எடை (3½ கிராம்), கற்கண்டுத்தூள் 1 வராகன் எடை (3½ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற் படி குடிநீரில் தூவிப் பருகச் செய்யவேண்டும். இவ்விதம்செய்து வரின் உடனே இரத்தபித்தம், இரத்த வாந்தி, இரத்த சயம் ஆகியவை தீரும்.

## 1639. இரத்த பித்த உசிதம்

ஐந்து பலம்பருத்திக்கொட்டை ஊறவைத்திடித்துப்பிழிந்த பால் அரை முதல் ஒரு ஆழாக்கு, வறுத்திடித்த அரிசித்திப்பிலி த் தூள் 1 வராகன் எடை (3½ கிராம்), இவ்விரண்டையும் ஒன்றா கக் கலந்து பருகச் செய்யவேண்டும். இவ்விதம் காலையில் ஒரு வேளை செய்துவரின் இரத்தம், இரத்தசயம், இரத்தகாசம் ஆகியவை தீரும்.

### 1640. மேற்படி வேறு

பசுவினெய் ¾ பலம் (26¼ கிராம்), இதனை ஒரு கரண்டியில் இட்டு உருக்கி ஒன்றேகால் வராகன் எடை வேப்பம்பூவை அதில் போட்டுப் பொன்னிறமாக வறுத்து நெய்யுடன் அரைத்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் மூன்றுநாள்கள் செய்துவரின் இரத்த பித்தம், இரத்தவாந்தி முதலியவை தீரும்.

### 1641. மேற்படி வேறு

அத்திப்பட்டையை இடித்துப்பிழிந்தசாறு ஆழாக்கு, தேன் 2 வராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து காலை, மாலை இரண்டு வேளையும் பருகச் செய்துவரின் மேற்கண்ட நோய்கள் தீரும்.

### 1642. இரத்தகாச நெய்

(அ) நெய் 10 பலம் (350 கிராம்), தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு 10 பலம் (350 கிராம்).

(ஆ) அத்திவிதை, ஆலம்விதை, அரசம்விதை, நிலப்பனைக் கிழங்கு, சீந்திற்கிழங்கு, கோரைக் கிழங்கு, சாதிக்காய், இலவங்கம், சாதிபத்திரி, மிளகு, கோட்டம், தக்கோலம், அகில், குங்குமப் பூ இவை வகைக்கு 1½ வராகன் எடை [5¼ கிராம்].

**செய்முறை:-** (ஆ) விலுள்ள சரக்குகளை இடித்துத் தூள் செய்து (அ) விலுள்ள சாற்றைச்சிறுகச்சிறுகவிட்டுவெண்ணெய் போலரைத்து மிகுந்த சாற்றில் கரைத்து [அ]விலுள்ளநெய்யையும் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வடிகட்டிவைத்து கொள்க.

**அளவு:-** 1 முதல் 2 வராகன் எடை காலை, மாலை இரண்டு வேளையும் உட்கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** இரத்தங்கக்கல், இரத்தகாசம், கண்ணொரிவு, இரத்த பித்தம், உளமாந்தை, ஈழை, பெரும்பாடு, எலும்புருக்கி, நெஞ்சுப் புண் ஆகியவை தீரும்.

### 1643. சுவாசகாசம் உசிதம்

விளக்கெண்ணெய் 1½ பலம் (52½ கிராம்) தோலுரித்தவெள்ளைப் பூண்டிதழ் 2 பலம் [87½ கிராம்], தேள்கொடுக்கியிலை 2½ பலம் [87½ கிராம்], இவையெல்லாவற்றையும் ஒரு பாத்திரத்தில் சேர்த்து அடுப்பேற்றிச சிவக்கக் காய்ச்சி மூன்று பாகம் செய்து மூன்று காலையில் சாப்பிடவேண்டும். இவ்விதம் செய்யின் சுவாசகாசம் தீரும்.

**பத்தியம்:-** புளிப்புப் பொருள், சீதளப்பொருள் ஆகியவைகளை நீக்கவும்.

## 1644. பருத் தைலம்

நல்லெண்ணெய் 2 பலம் (70 கிராம்) தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் 3 வராகன் எடை (10½ கிராம்) வசம்புத்தூள் 6வராகனெடை (21 கிராம்), மனிதன் நகம் 3வராகன் எடை (10½ கிராம்) இவற்றைச் சிதைத்து மேற்படி எண்ணெயிற் போட்டுக் காய்ச்சிச் சரக்குக் கரிந்துபோன பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

இதனைப்பருவின் மீது கோழியிறகால் பூசி வரவும். அது பழுத்துடைந்து போகும்.

## 1645. மேற்படி வேறு

விளக்கெண்ணெய் 2 பலம் (70 கிராம்), பெருமரவேரைச் சுட்டசாம்பல் 3 வராகன் எடை [10½ கிராம்],கோவையிலைச் சாறு 7 வராகன் எடை (24½ கிராம்) இம்மூன்றையும் கலந்து வெய்யிலில் வைத்து நீர் சுண்டினபின் எடுத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

இதனை எடுத்துக் கோழியிறகால் பருவின் மீது பூசிவர அது பழுத்துடைந்துபோகும்.

## 1646. மேற்படி வேறு

புனுகைப் பூசிவரப் பரு உடைந்து சௌக்கியமாகும்; பச்சைக் கருவேப்பிலையுஞ் சங்குமிழைத்துப் பூசி வரலாம். பொடுதலையை அரைத்து மேற்பூசலாம்; மேற்படி இலையைக் கசக்கி முகர்ந்தாலும் குணமாகும்.

## 1647. புழுவெட்டு உசிதம்

சுத்திசெய்த வாளப்பருப்பைத் தண்ணீரில் இழைத்துப்புழுவெட்டுள்ள இடத்தில் பூசிக் கொப்பளங்கண்டு நச்சுநீர் வெளிப்பட்டுப் பிறகு நிறைய மயிர் முளைக்கும்.

## 1648. புழுவெட்டுத் தைலம்

நல்லெண்ணெய் 10 பலம் [350 கிராம்], வெள்ளெருக்கம்பூ 2 பலம் [70 கிராம்], மிளகு 2 பலம் (70 கிராம்), தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ் 2 பலம் (70 கிராம்) வசம்பு 2 வராகன் எடை (70 கிராம்) வெற்றிலைக்காம்பு 2 பலம் [70கிராம்.]

**செய்முறை:-** மேற்கண்ட சரக்குகளைச் சிதைத்து எண்ணெயில் போட்டுக்காய்ச்சிச் சிவந்த பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனைத் தோய்த்துக் கொண்டு ஒரு சாம மிருந்து சிகைக்காயிட்டு வெந்நீர் தலைமுழுகச் செய்யவும். இந்தப்படி நான்கு நாளைக்கொருமுறை மூன்று தடவை தலை முழுகச் செய்யவும். இவ்விதம் செய்யப் புழுவெட்டு தினவு ஆகியவை தீர்ந்து மயிருதிர்ந்து நல்ல மயிர் முளைக்கும்.

## 1649. புழுவெட்டு எண்ணெய்

விளக்கெண்ணெய் 5 பலம் (175 கிராம்), மைசாட்சித் தூள் ¼பலம் (8 ¾ கிராம்). அவுரியிலையை அரைத்தவிழுது 5 பலம் (175 கிராம்).

**செய்முறை:-** எண்ணெயில் மேற்கண்ட இரண்டையும் போட்டுக்கரைத்துக் காய்ச்சிமெழுகுபதத்தில்வடிகட்டிவைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:** இதனை அவசியமான இடத்திற் பூசிவரப் புழுக்கள் செத்து நல்ல உரோமம் முளைக்கும்.

## 1650 சில்விஷ உசிதம்

நல்லெண்ணெய் 40 பலம் (1400 கிராம்), பேயத்திச்சாறு 80 பலம் (280 கிராம்), ஏலரிசித்தூள் அரிசித்திப்பிலித்தூள் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்).

**செய்முறை:-** மேற்கண்ட இரண்டு சரக்குகளையும், அம்மி யில் வைத்து, மேற்கண்ட சாற்றைச் சிறுகச் சிறுகக் கரைத்து எண்ணெயையுங் கூடச்சேர்த்துக் காய்ச்சி மெழுகுபதத் திலிறக்கி வடிகட்டிப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்க.

**அளவு:-** 1 முதல் 1 ½ வராகனெடை. இதனைக் காலை மாலை இரண்டு வேளையும் உள்ளுக்குங் கொடுத்து மேலுக்கும் தலையிலும் பூசிவரவேண்டும்.

**தீரும்நோய்கள்:-** சில்விடம். சிலேட்டும வாதம்புழு வெட்டு. விரணம், கடி, குட்டம் ஆகியவை தீரும்

## 1651. முடி வளர் தைலம்

சங்கின் வேர்ப்பட்டைச்சாறு 2 ஆழாக்கு. நல்லெண்ணெய் 4 ஆழாக்கு, அழிஞ்சிவிரை, மிளகு, செங்கழுநீர்க்கிழங்கு, கோட்டம் இவை வகைக்கு 1 ¼ விராகனெடை.

**செய்முறை:-** மேற்படி சரக்குகளை அம்மியில் வைத்துப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து வெண்

ணெய் போலரைத்து மிகுந்த சாற்றிற் கரைத்து எண்ணெயையும் கூடச் சேர்த்துக் காய்ச்சி மெழுகுபதத்தில் இறக்கி வடிகட்டித் தானியபுடத்தில் ஏழுநாள் வைத்து எடுத்துக்கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனை நான்கு நாளைக்கொருமுறை தேய்த்துத் தலைமுழுகச் செய்துவர மயிருதிர்தல், செம்பட்டைமயிர், தினவு, புழுவெட்டு ஆகியவை தீர்ந்து மயிர் முளைக்கும்; மேலுக்கும் பூசிவர மயிர்வளரும்.

## 165 . புழுவெட்டு மத்தைத் தைலம்

நல்லெண்ணெய் 20 பலம் (700 கிராம்), ஊமத்தையிலைச் சாறு 20 பலம் (‾00 கிராம்), ஊமத்தை வேர்ப்பட்டை 1பலம் (35 கிராம்). ஊமத்தம்விதை 1 பலம் (35 கிராம்).

**செய்முறை:-** மேற்கண்ட இரண்டுபொருள்களையும் அம்மியில் வைத்துப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து மிகுந்த சாற்றில்கரைத்து அதில் எண்ணெயையும் கூடச்சேர்த்து மெழுகுபதத்திலிறக்கி வைத்துக்கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** இதனைத் தலைக்குத் தேய்த்துவரப் புழுவெட்டு நீங்கி மயிர் முளைக்கும்.

**குறிப்பு** இதனால் சிலருக்கு மயக்கங்காணும்; அதற்காக பயப்படவேண்டியதில்லை.

## 1653. கூந்தல் வளர் தைலம்

தேங்காய் எண்ணெய் 12 பலம் [420 கிராம்], கையாந்தகரைச் சாறு 12 பலம் (420 கிராம்), தாழைவிதுச்சாறு 12 பலம் [420 கிராம்] துருசுத்தூள் 6 வராகன் எடை [21 கிராம்]

**செய்முறை:-** முன் மூன்றையுங்கலந்து வெய்யிலில் வைத்து முக்கால்வாசி சுண்டினபதத்தில் துருசுதூளைப் போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கிப் பத்திரப்படுத்தவும்.

**தீரும்நோய்கள்:-** இதனைத் தினந்தோறும் தலையில் பூசியும் நான்கு நாளைக்கொருமுறை தலைமுழுகச் செய்துவர மயிர் வளரும். புழுவெட்டு, கடி, தேமல் ஆகியவைகளும் தீரும்.

## 1654. கூந்தல்வளர் மணித் தைலம்

(அ) நல்லெண்ணெய் 24 பலம் (840 கிராம்), பசுவின் பால் மயிர்மாணிக்கச்சாறு வகைக்கு 16 பலம் (560 கிராம்).

(ஆ) சிவப்புக்குன்றிமணிப் பருப்பு 2½ பலம் (87½ கிராம்). அரைக்கீரை விதை 2½ பலம் (87½ கிராம்), மிளகு, அதிமதுரம்,

சோம்பு, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, பச்சிலை, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், கிச்சிலிக்கிழங்கு, பூரல்பட்டை, பூஞ்சாந்துப்பட்டை, மரு, செண்பகப்பூ இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்).

**செய்முறை:-** (ஆ)விலுள்ள குன்றிமணிப் பருப்பைச் சிதைத்துப் பசும்பாலில் போட்டு ஓரிரவு ஊறவைத்து அரைந்து எடுத்துக் கொள்க. அரைக்கீரை விதையையும் அவ்விதமே ஊற வைத்து அரைத்து எடுத்துக் கொள்க. மற்ற சரக்குகளை ஒன்றாகச் சேர்த்திடித்துத் தூள்செய்து அம்மியில் வைத்து (அ) விலுள்ள பசுவின் பாலை சிறுகச் சிறுகவிட்டு வெண்ணெய் போலரைத்து முன் அரைத்தவைகளையும் இதில் சேர்த்து மறுபடியும் அரைமணி நேரமரைத்து ஒன்றாக கலந்த பின்புஎடுத்து வைத்துக் கொள்க. மிகுந்த பாலையும், (அ)விலுள்ள எண்ணெய், மயிர்மாணிக்கச்சாறு ஆகியவைகளையும் கலந்து மேற்சொல்லியபடி அரைத்து வைத்ததைக் கரைத்துக் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:—** இதனைத் தினந்தோறும் தலையில் பூசிச் சீவி முடிந்து நான்கு நாளைக்கொருமுறை தேய்த்துத் தலை முழுகச் செய்துவர உரோமம் வளரும்; புழுவெட்டு முதலியவை தீரும்.

## 1655. உரோம நாசகாரி

அப்பிரகத்தூள், அரிதாரத்தூள், மனோசிலைத்தூள், சங்குச் சுண்ணாம்பு இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்), கொமட்டி மாதளம் பழச்சாறு சொல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** மேற்கண்டவைகள் எல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்து மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து ஒருசாம நேரமரைத்து வெண்ணெய் போலான பின்பு குழம்புப்பதமாக எடுத்து வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** அவசியமான இடத்தில் இதில் கொஞ்சமெடுத்துப் பூசிவர உரோமம் உதிர்ந்து நாசமாகும். எரிவந்தம் தாபிதம் முதலியவை ஒன்றுமிரா. அவசியமானால் நல்லெண்ணெயை மேலே பூசவும்.

## 1656. உரோம சங்காரன்

நல்லெண்ணெய் 10 பலம் [350 கிராம்] சேராங்கொட்டை, கற்பூரம், சங்குச் சுண்ணாம்பு, எவாட்சாரம், மனோசிலை, அரிதாரம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்.)

**செய்முறை;-** எண்ணெயை ஒரு பாத்திரத்தில் விட்டுச் சேராங்கொட்டையை நான்காக நறுக்கி அதில் போடவும். மற்றச் சரக்குகளைத் தனித்தனியேப் பொடித்துப்போடவும். பிறகு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துச் சரக்குகள் கரிந்து போன பதத்திலிறக்கி வடிகட்டி புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** இதனை அவசியமான இடத்தில் பூசிவர உரோமம் உதிர்ந்து போகும்.

## 1657. மேற்படி வேறு

மயிர்ச்சிக்கி, மஞ்சிட்டி, அரிதாரம் இவை வகைக்குச் சமன் இவற்றைத் தனித்தனியே பொடித்து ஒன்றாகக் கலந்து தண்ணீர் விட்டு வெண்ணெய் போலரைத்துக் கொஞ்சம் எடுத்து தண்ணீரில் குழைத்து அவசியமான இடத்தில் பூசிவர உரோமம் உதிர்ந்து போகும்.

## 1658. நரை மாறத் தைலம்

நீர் வற்றின தேங்காயைக் கண் திறந்து அதில் பூலாம் பழத்தை நிறையப் போட்டு நிறைத்து வாய்க்கு அடைப்பிடிக்கவும். இவ்விதம் தேவையான தேங்காய்களைச் சித்தப்படுத்திப் பூமியில் சதுப்பான இடத்தில் புதைத்து நாற்பத்தோராநாள் எடுக்க உள்ளே அழுகி இருக்கும். அதையெல்லாம் எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டுத் தேங்காய் ஒன்றுக்கு ஐந்து பலம் கையாந்தகரைச் சாறும் இரண்டரைப் பலம் நல்லெண்ணெயும் விட்டு ஆட்டெலும்பினால் துழாவிக் காய்ச்சி எலும்பு கறுத்த பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

இதனைத் தேய்த்துத் தலைசீவியும், நான்குநாளைக்கொரு தடவை தலைமுழுகச் செய்தும்வர நரைமாறும்; முடி வளரும்.

**குறிப்பு:-** நமது **தாருட்டியவிருத்தி போதினி** இரண்டாம் பாகத்திலுள்ள கூந்தல் வளர்தைலம் என்னும் முறையையும் பார்வையிடவும்.

## 1659. தலைப்பேன் சாக தைலம்

பேன்கொல்லி விரைப்பருப்புத்தூள் ½ பலம் (17½ கிராம்), நல்லெண்ணெய் 1 பலம் (35 கிராம்). இவ்விரண்டையும் சேர்த்து அரைமணி நேரமரைத்து வழித்து ஒரு பாத்திரத்திலிட்டு வெய்யிலில் வைத்து எடுத்துப் பேனுள்ள தலையில் தடவ பேன் செத்து மேலே மிதக்கும். நீக்கிவிடவும்.

## காதுநோய் மருத்துவம்

### 1660. காது சன்னித் தைலம்

வெளிச்சிப்பிசின், வலம்புரிக்காய், தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ், வசம்பு, கடுகு, மேற்றோல் சீவியசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, இலவங்கம், செண்பகப்பூ இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்), வேப்பெண்ணெய் 5 பலம் (175 கிராம்).

**செய்முறை:-** சரக்குகளைத் தூள்செய்து மேற்படி எண்ணெயில் போட்டுப் பதமாக எரித்து வடிகட்டி வைத்துக் கொள்க

**தீரும்நோய்கள்:-** மேற்படி தைலத்தைப் பஞ்சில் தோய்த்துக் காதில் இரண்டு மூன்று துளி விட்டு அடைத்துப் பல்லிடுக்கு தாள்வாய், கழுத்துநரம்பு, உள்ளங்கை, உள்ளங்கால், உச்சந்தலை ஆகிய இடங்களிலும் தேய்த்து ஒன்றேகால் வராகன் எடை உள்ளுக்கும் கொடுக்கவும். இவ்விதம் மூன்றுநாள் செய்ய காதுசன்னி, காதுமந்தம், காதுநோய் ஆகியவை தீரும்.

### 1661 செவிப்புழு உசிதம்

வேலிப்பருத்தி வேர்ப்பட்டை ½ பலம் (17½ கிராம்), மேற்படி இலை ½ பலம் [17½ கிராம்] இவ்விரண்டையும் சேர்த்து வெண்ணெய் போலரைத்து ஒன்றரைப் பலம் வேப்பெண்ணெயில் கரைத்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

இதில் இரண்டு மூன்று துளி காதில் விட்டுவரக் காதிலுள்ள புழுக்கள் செத்துப் போகும்: காதிலுள்ள குடைச்சல் தீரும்.

### 1662. மேற்படி வேறு

பேய்க்குமட்டிக்காய்ச்சாறு 2 பலம் (70 கிராம்), வேப்பெண்ணெய் 2 பலம் [70 கிராம்] இவ்விரண்டையும் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க

இதில் இரண்டு மூன்று துளி காதில் விட்டுவரக் காதிலுள்ள புழுக்கள் சாகும்; மாறாமல்வடியும் சீழ் மாறும்.

### 1663. காதில் ஈ புகுதலுக்கு மருத்துவம்

கொல்லன் கோவைக் கிழங்கை உலர்த்திப் பொடித்த தூள் 1 வராகன் எடை [3½ கிராம்], நல்லெண்ணெய் 1 வராகன்

எடை [3½ கிராம்], இவ்விரண்டையும் கலந்து துணியில் வைத்துப் பிழிந்து இரண்டொரு துளி காதில்விட காதில் புகுந்த ஈ சாகும்.

### 1664. மேற்படி வேறு

பேய்க்குமட்டிக்கொழுந்து 2 வராகன் எடை [7 கிராம்), நல்லெண்ணெய் 2 வராகன் எடை [7 கிராம்] இவ்விரண்டையும் சேர்த்துக்காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு காதில் சொட்டி வர காதில் புகுந்திருக்கிற ஈ சாகும்.

### 1665 செவிச்சீழ்த் தைலம்

வலம்புரிக்காய்த் தூள் ¾ பலம் [26¼ கிராம்], ஒரு ஊமத்தங் காயைக் குடைந்து விதைபோக்கி அதற்குள் மேற்படி தூளை அடைந்து மூன்று பலம் நல்லெண்ணெயில் போட்டுச் சிவக்கக் காய்ச்சிச் சிவந்த பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக்கொள்க இதனைக் காதில் சொட்டிவரச் சீழ் நின்று புண் ஆறும்.

### 1666. காதுமூலப் பற்று

கார்த்திகைக்கிழங்கு, சத்திசாரணைக் கிழங்கு, வசம்புத் தூள், தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் இவை வகைக்குச் சமனெடை. இவற்றை அரைத்து மேலே பற்றிட்டுவரக் காது மூலம் தீரும்.

### 1667. செவிட்டு உசிதம்

நிலப்பனைக் கிழங்கு 1 பலம் (35 கிராம்), நல்லெண்ணெய் 1 பலம் [35 கிராம்], கிழங்கை வெண்ணெய் போலரைத்து எண்ணெயில் கலக்கிக் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க. இதனைக் காதில் விட்டுவரச் செவிடு தீரும்.

### 1668. மேற்படி வேறு

பொன்னாங்காணிவேர், பாவட்டை வேர்ப்பட்டை, சடாமாஞ்சில் தூள், மிளகுத்தூள் இவை வகைக்கு 1 பலம் [35 கிராம்] நல்லெண்ணெய் 5 பலம் (175 கிராம்).

**செய்முறை:**- மேற்படி சரக்குகளில் முன்னுள்ள இரண்டையும் பஞ்சுபோல் சிதைத்தும், மற்ற இரண்டு தூள்களையும் ஒன்றாகக் கலந்தும் எல்லாவற்றையும் எண்ணெயிற்போட்டுச் சிவக்கக் காய்ச்சிப் பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக்கொள்க

**தீரும்நோய்கள்:**- இதனை காலை மாலை இரண்டுவேளையும் பத்துநாள் காதில் சொட்டிவரச் செவிடுதீரும்

## 1669. செவிநோய் சஞ்சீவி

(அ) நல்லெண்ணெய் 12 பலம் (420 கிராம்), புங்கெண்ணெய் 2 பலம் (70 கிராம்). அத்திப்பட்டைச் சாறு, புங்கம் வேர்ப்பட்டைச்சாறு, முருங்கைப்பட்டைச் சாறு, காட்டா மணக்குப்பட்டைச் சாறு இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்), நண்டுச்சாறு ½ சேர் (70 கிராம்).

(ஆ) பூநாகம் 1 பலம் (35 கிராம்). துத்தம், துருசு, மிருதார் சிங்கி, வகைக்கு ½ பலம் (17 ½ கிராம்). கருஞ்சீரகம், கம்பிப் பிசின், சீரகம், வலம்புரிக்காய், கடல்நுரை, மருத்துவெள்ளை, செங்கத்தாரிப் பட்டை, வேம்பாடம் பட்டை, வால்மிளகு, வசம்பு, கார்போகரிசி, ஏலரிசி வகைக்கு வாரகனெடை ஒன்றரை, கோழி முட்டை மஞ்சள் கரு 5

**செய்முறை:-** (அ)விலுள்ள திரவங்களை ஒன்றாகக் கலந்து கொள்க. ஆவிலுள்ளவைகளில் தூள்செய்ய வேண்டியவைகளை தூள்செய்தும் இடித்துத்தூள் செய்ய வேண்டியவைகளைத்தூள் செய்தும் மற்றவைகளையும் ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்துத் தண்ணீர் தெளித்து வெண்ணெய் போலரைத்து முன் சித்தப்படுத்தினதில் கரைத்துக்காய்ச்சிக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக்கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனைக் காதில் சொட்டியும், நான்கு நாளைக்கொருமுறை தலையில் தேய்த்துத் தலைமுழுகச் செய்து வர கர்ணசூலை, காதுக்குத்தல், காதடைப்பு, காதிரைச்சல், சீழ்ப்பாய்ச்சல், ஆகியவை தீரும்.

## 1670. காதுநோய் உசிதம்

ரவுஸா அத்தரைக் காதில் சொட்டிவரச் செவிநோய் தீரும்.

சாம்பிராணித் தைலத்துடன்வடியும் தண்ணீரைத் தனியே எடுத்து வைத்துக்கொண்டு காதில் சொட்டி வந்தாலும் காது நோய் தீரும்.

## 1671. காதுவெளிச்சி உசிதம்

நல்லெண்ணெய் 1 பங்கு, கொம்புத்தேன் 1 பங்கு, இவ்விரண்டையும் கலந்து ஒரு கிழிஞ்சியில் விட்டு விளக்கில்காட்டிக் கொதி வந்த பின் எடுத்து ஆறவைத்துப் புட்டியில் வைத்துக் கொள்க, இதனைக்காதில் சொட்டிவரக் காதிலுள்ள வெளிச்சி பழுத்து உடைந்து சீழ் வெளிப்பட்டுப்போம். வலி தீரும்.

## 1672. செவிநாறல் நோய் உசிதம்

மிளகரணைவேர், அமுக்குராவேர், பிராயம்பட்டை இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) இவைகளை இடித்துச் சூரணித்து வைத்துக் கொள்க. இதிற்கொஞ்சம் சூரணமெடுத்துச் சாராயத்திற் குழைத்துக் காதைச் சுற்றிலும் பற்றிடவும். இன்னும், சூரணத்திற் கொஞ்சமெடுத்துப் பிட்டவித்துக் காதில் வேது பிடிக்கவும். இப்படிச் செய்துவரச் செவிநாறல் நோய் தீரும்.

**குறிப்பு:-** திரவரூபமான மருந்தை அல்லது, எண்ணெயைக் காதிற்குள் சொட்ட வேண்டியதிருந்தால் அதனை நெருப்பில் அல்லது, விளக்கில் சற்றுக்காய்ச்சி இளஞ்சூடாக இருக்கும் போது காதில் சொட்டவிடவேண்டுமென்பது சித்தமருத்துவர் சித்தாந்தம்.

## 1673. வாய்க்கிரந்தி உசிதம்

கடுக்காய்த்தூளை வெண்ணெயிற்குழைத்து சுண்ணீரில் ஊறவைத்து எடுத்து வாயிலும் நாக்கிலும் தடவிவர வாய்க்கிரந்தி உதட்டுவெளுப்பு, உதட்டுப்புண் ஆகியவை தீரும்.

## 1674. மேற்படி வேறு

கோவையிலையைப் பச்சரிசிக் கழுநீரில்அவித்து வாய்கொப்பளித்து வரவும். அந்த இலையில் உப்பிட்டுச் சாப்பிட்டுவரவும் இவ்விதம் செய்ய வாய்ப்புண், உதட்டுப்புண், உதட்டு வெடிப்பு உதட்டுவெளுப்பு ஆகியவை தீரும்.

## 1675. கந்தப் பொடி

(அ) கறியுப்பு 5 பலம் [175 கிராம்] எருக்கம்பால் 10 பலம் [350 கிராம்], குப்பைமேனிச்சாறு 10 பலம் [350 கிராம்] இவ்விரண்டையும் கலந்து மேற்படி உப்பில் சிறுகச்சிறுக விட்டு அரைத்து எல்லா திரவமும் சென்றபின்பு வில்லை செய்து கவசத்தின் எட்டுப்பங்கு எடை வராட்டியில் புடம் இட்டுக் குளிர ஆறின பின்பு எடுத்துக் கவசத்தைப் பிரித்து உள்ளிருக்கும் மருந்தை எடுத்து வைத்துக்கொள்க.

[ஆ] கருஞ்சீரகம், காய்ச்சுக்கட்டி, கண்டங்கத்திரிவிதை, களிப்பாக்கு, மஞ்சட் கடுக்காய்த் தோல், அரப்பொடி, கொட்டாங்கச்சிக் கரி இவை வகைக்கு 7 வராகனெடை [24½ கிராம்]

**செய்முறை:-** (ஆ) விலுள்ள அரப்பொடியைக் கல்வத்தில் போட்டு இரண்டு மணிநேரம்அரைத்து மற்ற [அ)விலும், [ஆ]

வில்லுமுள்ள சரக்குகளையும் பொடித்துச் சேர்த்துஇரண்டுமணி நேரம் அரைத்து எல்லாம் கலந்தான பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**தீரும்நோய்கள்:—** இதனால் பல் நோய் முப்பத்திரண்டும் தீரும்.

## 1676. பல்நோய் உசிதம்

காரீயத்தை உருக்கி வெள்ளெருக்கம்வேரால் கடைந்துவரப் பற்பமாம். அதனைஎடுத்து வைத்துக்கொண்டு பல்தேய்த்துவர ஈறு பலப்படும்; அசைந்தபல் இறுகும்; பலவித பல் நோய்கள் தீரும்.

## 1677. பல்சஞ்சீவித் தூள்

துருசு 1 பலம் (35 கிராம்) இதனை ஓட்டிலிட்டு நீர்சுண்ட வறுத்து எடுத்துக் கொள்ளவும். கோட்டத் தூள், காய்ச்சுக் கட்டி தூள், இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) இம்மூன்றையும் சேர்த்து ஒரு மணிநேரம் அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதில்கொஞ்சம் எடுத்துப்பற்களில்தேய்த்துத் தாம்பூலம் தரித்து அல்லது, வெறும்பாக்கை மென்று வருகிற உமிழ்நீரை உமிழ்ந்து கொண்டிருந்து சற்று நேரம் தாமதித்து வெந்நீரால் வாய்க்கொப்பளித்து விடவும். இவ்விதம் செய்துவரின் பல் வாயு முதலிய பல் நோய்கள் தீரும்.

## 1678. பல்லரணை உசிதம்

வறுத்த துருசுத்தூள் 1 பங்கு, கறியுப்புத்தூள் 2 பங்கு. இவ்விரண்டையும் சேர்த்து அரைமணி நேரம் அரைத்து வைத்துக் கொள்க. இதில் கொஞ்சம் எடுத்துப்பல்லரணையின் மீதுதடவிவர அது கரைந்து போகும். ஈறுவீக்கத்தின்மீது தடவிவர ஈறுவீங்கியிருத்தல், தடித்திருத்தல் முதலியவை கரைந்து அதனாலுண்டாகும் தொந்தரவுகள் நீங்கிப்போகும்.

## 1679. மேற்படி வேறு

கெந்தகப்புளிப்பைப் பஞ்சில் நனைத்து அவசியமான இடத்தில் வைத்துவரப் பல்லரணை, ஈறுவீக்கம், பல்வலி முதலியவை தீரும்.

## 1680. பல்நோய் உசிதம்

கறியுப்பைத் தூள் செய்துபல்லைத் தேய்த்துவருவதால் பல்லில் உண்டாகும் புழுக்கள், ஈறுவீக்கம், சொத்தைவிழுதல் முதலிய அநேக நோய்கள் தீரும்.

### 1681. மேற்படி வேறு

கல்நார்ப் பற்பத்தைத் தினந்தோறும் தேய்த்துவரப் பல்லசைவு நீங்கிப் பல்லிறுகும். 'கல்நாரிருக்கப் பல் விழுவானேன், இந்தக் கல்நார்முறைகள் பல இந்த அனுபோக வைத்திய நவநீதம் முன்பாகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவசியமானோர் அவற்றைப் பார்த்துத் தெரிந்து கொள்க.

## கண்நோய் மருத்துவம்

### 168[illegible]. அந்திமாலை உசிதம்

வல்லாரையிலை 1 பலம் [35 கிராம்] இதனை வெண்ணெய் போலரைத்து ஒரு ஆழாக்கு பசுவின் பாலில் கரைத்துப் பருகச் செய்யவேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டுவேளையும் ஏழுநாள் ஒன்பதுநாள் பதினொருநாள் செய்துவரின் எத்தனை நாட்பட்ட அந்திமாலையாயினும் தீரும்.

### 1683. மேற்படி வேறு

ஒரு வருடம்சென்ற வெல்லம் $2\frac{1}{2}$ வராகனெடை [$8\frac{3}{4}$ கிராம்], ஒரு வருடஞ்சென்ற பழம்புளி, $2\frac{1}{2}$ வ ாகனெடை ($8\frac{3}{4}$ கிராம்) (இதிலுள்ள கொட்டைகோது முதலியவைகளை நீக்கி விடவும்.) நல்லெண்ணெய் 2 வராகனெடை [7 கிராம்]கோழியவரையிலைச் சாறு வராகன் எடை, சுண்ணாம்பு குன்றிமணி எடை இவைஎல்லாவற்றையும் உள்ளங்கையில்வைத்துக்குழப்பி உட்கொள்ள வேண்டும். இவ்விதம் செய்துவர ஐம்பது வருடம் தெரியாத மாலைக்கண்ணும் தீரும்.

### 1684. கண் வெள்ளைப் பொடி

சொறித்துத்தம் 5 வராகன்எடை [$17\frac{1}{2}$ கிராம்], [இதனைக் காட்டெருவில் புடமிட்டு எடுத்துக் கொள்க.] சங்கு 2 வராகன் எடை [7 கிராம்,] நாட்டு வெள்ளைப்பீங்கானோடு2வராகன் எடை [7கிராம்,] கடல்நுரை 1 வராகன் எடை[$3\frac{1}{2}$ கிராம்.]

**செய்முறை:-** இவற்றுள் ஒவ்வொன்றையும் தனித்தனி பொடித்துப்பிறகு எல்லாவற்றையும்ஒன்றாகக் கலந்துகைவிடாமல் நான்கு சாமம் அரைத்துப் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

---

★ இதற்குப் பதிலாகப் பாகப்படுத்தின பூநீற்றைச் சேர்த்துக் கொள்வது உத்தமம்.

**தீரும்நோய்கள்:-** இதில் ஒரு என் அளவு காலை, மாலை இரண்டு வேளையும் கண்ணில்போட்டுவர கண்கூச்சம், கண்ணின் சதை வளர்ச்சி, கண் பூ, நிமைத்தடிப்பு, கண் நீர்வடிதல் ஆகியவை தீரும்.

## 1685. மேற்படி வேறு

சீனக்காரம் 1 பங்கு, சுடுகாட்டில் வெந்ததலையோடு 1பங்கு இவ்விரண்டையும் தனித்தனிப் பொடித்து ஒன்றாகக் கலந்து நான்கு சாம நேரமரைத்துக் கொம்புச் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

**தீரும்நோய்கள்:-** இதனை இரண்டு எள் அளவு காலை, மாலை இரண்டு வேளையும் கண்ணிலிட்டு வரக் கண்படலம், கண்ணோவு, கண்சிவப்பு ஆகியவை தீரும்.

## 1686. கண்சிவப்புப் பொடி

சீனக்காரம் 1 பங்கு சுத்திசெய்த பொன்னரிதாரம் 1 பங்கு இவ்விரண்டையும் தனித்தனி பொடி யெடுத்துப் பிறகு இரண்டையும் கலந்து நான்கு சாம நேரமரைத்துப் பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்க.

இதில் ஒரு என் அளவு காலை, மாலை இரண்டு வேளையும் கண்ணில் போட்டுவரக் கண்பூ, படலம், திமிரம் முதலிய நோய்கள் தீரும்.

குறிப்பு:- இந்த மருந்தை எல்லோரும் உபயோகிக்கலாகாது. அனுபோகசாலிகள் உபயோகிக்க வேண்டியது.

## 1687. பச்சைக்கற்பூரப் பொடி

சிறுகீரை வேர், பொன்னாங்காணி வேர், சிறுபீளை வேர், ஓரிலைத்தாமரை வேறு இவை வகைக்கு 5 பலம் (175 கிராம்). நாட்டுவெள்ளைப் பீங்கானோடு 1 வராகன் எடை (3½ கிராம்), துத்தம் 4 வராகன் எடை (14 கிராம்), பீதரோகணி 4 வராகன் எடை (14 கிராம்). எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** முன் வேர்களைத் தனித்தனியே அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்துக் கொள்ள வேண்டியது. மற்ற சரக்குகளைத் தனித்தனியேப் பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து இரண்டு சாம நேரமரைத்து மூன்

அரைத்தவேர் விழுதுகளையும் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றைச்சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாமநேரமரைத்து வில்லை செய்து உலர்த்தி ஒரு முழச் சதுரக் குழிதோண்டி அதில் அரை வாசி புளியஞ்சிராய்த் தூளிட்டு அதன்மேல் கவசத்தை வைத்து மேலுஞ் சிராய்த் தூளிட்டுப் புடமிட்டு ஆறினபின் மருந்தை எடுத்துப் பொடித்துவைத்துக் கொள்க. இதற்குத் தனிப் பொடி என்று பெயர்.

இந்தத் தனித்தூள் ஒரு பங்கு, பச்சைக்கற்பூரம் ஒரு பங்கு இவ்விரண்டையும் சேர்த்தரைத்துத் தனியே வைத்துக் கொள்க. இதற்குப் பச்சைக் கற்பூரப் பொடியென்று பெயர்.

**தீரும்நோய்கள்:-** இந்தப் பச்சைக்கற்பூரப் பொடியை இரண்டு எள் அளவு காலை, மாலை இரண்டு வேளையும் கண்ணில் போட்டுவரப் படலம், நீர்ப்பாய்ச்சல், இமைத்தடிப்பு புகைச்சல் ஆகியவை தீரும். தனிப்பொடியை மற்ற நோய்களுக்குக் குணமறிந்து உபயோகிக்கவும்.

## 1688. நயனாரசித பற்பம்

கழுநீரில் சுத்திசெய்த பால்துத்தம் 4 வராகன் எடை (14 கிராம்), சொக்க வெள்ளிச்சரிகைப் பொடி 1 வராகன் எடை (3½ கிராம்), பீசுரோகணித்தூள் 1 வராகன் எடை (3½ கிராம்), உலர்த்தின வெள்ளைச்சாரணைப்பட்டைத் தூள் 4 வராகன் எடை (14 கிராம்]. எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை -** மேற்கண்ட சரக்குகளை ஒன்றாகச் சேர்த்துக் கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்து எல்லாம் ஒன்றாகக் கலந்த பின்பு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் நேரமரைத்து உருண்டை செய்துலர்த்தி வெள்ளைச் சீலையை அதன்மேல் பந்துபோலச் சுருட்டிக்கனத்த எரு முட்டையில் புடமிட எடுத்துச் சீலைச்சாம்பலை ஊதி விட்டு மருந்தைப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**தீரும்நோய்கள்:-** இதில் எள் அளவு எடுத்துக் காலை, மாலை இரண்டு வேளையும் கண்ணிலிட்டுவர நேத்திரவாயு, கண்ணீர்ப்பாய்ச்சல், கண்சிவப்பு, கண்குத்தல், கண்வலி ஆகியவை தீரும்.

## 1896- மேற்படி வேறு

சரிகை வெள்ளியை உருக்கிப் புளியிலைக் கனம் தகடடித்துச் சிறு துண்டுகளாகத் துண்டித்தது 1 வராகன் எடை (3½கிராம்) 1 பலம் (35 கிராம்). படிக்காரத்தைச் சிறு அகலில்

வைத்துக் கரி நெருப்பின்மீது வைத்து உருகினவுடன் மேற்படி வெள்ளித் தகட்டுத் துண்டுகளைப் போட்டுக் கிளறிவந்து நீர் சுண்டினவுடன் எடுத்து ஆறினபின்பு மேலகல்மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கனத்த புடமாகப் போட்டு எடுத்து ஆறினபின்பு அகலிலுள்ளதை எல்லாம் சுரண்டிக் கல்வத்தில் போட்டு அரைத்துப் பொடித்துத் துணியில் சலித்து திப்பியை நீக்கிவிட்டுப் பற்பத்தைப் புட்டியில் பத்திரப்படுத்தவும். வெள்ளி பற்பமாகிச் சீனக்காரத்துடன் சேர்ந்திருக்கும். மேற்கண்டபடி உபயோகிக்க மேற்கண்ட நோய்கள் தீரும். இதனை இன்னும் வெண்ணெய் முதலிய அனுபானங்களுடன் உபயோகிக்க பிரமியம், வெட்டைச்சூடு, மூலச்சூடு முதலியவைகளும் தீரும்.

## 1690. கண் மை

ஆர்க்கப்பொடித்து வடிகட்டின செங்கற்பொடி 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), அரிசித்திப்பிலித்தூள் 1 வராகன் எடை [$3\frac{1}{2}$ கிராம்] துருசுத்தூள் 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்) பொடுதலைச்சாறு செல்லத்தக்க அளவு; பசுவின் வெண்ணெய் 2 பலம் (70 கிராம்).

**செய்முறை:-** வட்டியைக் கவிழ்த்து மேற்படி மருந்துகளை மேலே வைத்துத் தாம்பிரப் பஞ்சபாத்திரத்தின் அடியால் தேய்த்து மைபோலான பக்குவத்தில் வழித்துத் தாம்பிரச்சிமிழில் வைத்துக்கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** இதில் ஒரு எள் அளவு எடுத்து நெருப்பில் காய்ச்சிச்சற்று இளகலாக்கிக் கண்ணிலிடவும். இவ்விதம் காலை மாலைஇரண்டுவேளையும் கண்ணில் விட்டுவரக் கண்புகைச்சல் நீர்முட்டம், வெள்ளெழுத்து, வெண்கடுப்பு, ஆகியவை தீரும்.

## 1691. வெள்ளெழுத்து மாத்திரை

பிச்சிப்பூ 100 அரைத்த சந்தனம், ஓரிலைத்தாமரைவேர், தாய்ப்பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** மேற்கண்ட சரக்குகளை கல்வத்திலிட்டுத் தாய்ப்பாலைச் சிறுகச் சிறுகவிட்டு வெண்ணெய் போலரைத்து நீண்ட மாத் திரைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-**மேற்படி மாத்திரையைத்தாய்ப்பால் அல்லது தண்ணீரில் இழைத்துக் காலை, மாலை இரண்டுவேளையும்

கண்ணில் இட்டுவரக் கண்புகைச்சல், வெள்ளெழுத்து ஆகியவை தீரும்.

## 1692. வெள்ளெழுத்துத் தைலம்

பழைய நெய், விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், எலுமிச்சம் பழச்சாறு, பசுவின்பால் இவை வகைக்கு 8 பலம் (280 கிராம்), பொன்னாங்காணிச்சாறு 24 பலம் (840 கிராம்) சீரகம், மிளகு, இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்).

**செய்முறை:-** பின்கண்ட இரண்டு சரக்குகளையும் அம்மியில் வைத்துப் பொடித்துப் பசுவின் பாலைச் சிறுகச்சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து மற்றவைகளையெல்லாம் ஒன்றாகக் கலந்து அதில் கரைத்துக் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** இதனை எட்டுநாளைக்கு ஒரு தடவை தேய்த்து வெந்நீரில் தலைமுழுகச் செய்துவர வெள்ளெழுத்து, கண புகைச்சல், கண்ணீர் பாய்ச்சல் ஆகியவை தீரும்.

## 1693. நேத்திரவாயு மை

துத்தம், துருசு வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) சீனாக்காரம் 2 வராகன் எடை (7 கிராம்), சேராங்கொட்டை 2 எண். இந்தச் சேராங்கொட்டையைச் சுட்டுக்கரியாக்கிக் கொள்ளவும். பசுவின் வெண்ணெய் 2 பலம் (70 கிராம்).

**செய்முறை:-** மேற்படி சரக்குகளைத் தனித்தனியாகப் பொடித்துஒன்றாகச்சேர்த்துக் கல்வத்திலிட்டு அரைமணிநேரம் அரைத்து எல்லாம் ஒன்றுகலந்த பின்பு வெண்ணெயைச் சிறுகச் சிறுகப் போட்டு அரைத்து மைபோலானபின்பு வழித்துத் தாம்பிரச் சிமிழில் வைத்துக்கொள்ளவும்,

**தீரும்நோய்கள்:-** இதில் எள் அளவு காலை, மாலை இரண்டுவேளையும் கண்ணிலிட்டுவர எல்லாவகை நேத்திர வாயுகளும் தீரும்.

**பத்தியம்:- புளி, புகை, மீன், கருவாடு, கோழி வாயுப் பண்டங்கள் ஆகியவை ஆகா.**

## 1694. நேத்திரவாயுப் பற்று

அதிமதுரத்தூள் $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), 20 கிராம்பு (இதனைத்தூள்செய்து கொள்ளவும்). மஞ்சள்கடுக்காய் 6 எண்ணில் (இதனை உடைத்து உட்கொட்டையை நீக்கிவிட்டுத் தோலை மாத்திரம் இடித்துத் தூள்செய்து கொள்ளவும்). அபின் $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்). இவை எல்லாவற்றையும் சேர்த்துக் கல்வத்தில் ஒருமணி நேரமரைத்து எடுத்து வைத்துக் கொள்க. ஒருபடி கருவேப்பிலையில் ஒன்றரைப்படி தண்ணீர் விட்டுக் காற்படியாகச் சுண்டக் காய்ச்சி இறுத்து அதில் முன் தூளில் ஒன்றரை வராகன் எடை எடுத்துப்போட்டுக் கலக்கிக் குழம்புப்பதமாகக் காய்ச்சிக் கண்ணைச்சுற்றிப் பற்றிடவும். இந்தப்படி நான்குநாள் பற்றிட்டு ஐந்தாநாள் நல்லெண்ணெய்த் தேய்த்து அரைப்பிட்டுத் தலைமுழுகச் செய்யவும். இவ்விதம் செய்ய நேத்திரவாயு, கண்ணோவு ஆகியவை தீரும்.

## 1695 நேத்திரவாயுத் தைலம்

சிற்றாமணக்கெண்ணெய் 15 பலம் (525 கிராம்), ஆதண்டைச் சாறு 15 பலம் (525 கிராம்), தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் 8 பலம் (280 கிராம்)

முன்னிரண்டையும் ஒன்றாகக் கலந்து பூண்டைச் சிதைத்து அதில் போட்டுக் காய்ச்சிக் சுடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** எட்டு நாளைக்கொருதடவை இதனைத் தேய்த்துத் தலைமுழுகச் செய்துவர நேத்திரவாயு, அது சம்பந்த நோய்கள் ஆகியவை தீரும்.

## 1696. மேற்படி வேறு

சிற்றாமணக்கெண்ணெய் 30 பலம் (1050 கிராம்) வேளை வேரை அரைத்த விழுது 5 பலம் (175 கிராம்), தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழை அரைத்தவிழுது 5 பலம் (175 கிராம்).

**செய்முறை:-** எண்ணெயில் மற்றவைகளைக் கரைத்துக் கலக்கிக் காய்ச்சிப் பதத்தில் வடித்துவைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** மேற்கண்டபடி செய்ய மேற்கண்ட நோய் தீரும்.

## 1697. கண்காச மாத்திரை

சவுரிப்பழம் 1, இதனைக் கல்வத்திலிட்டு நசுக்கி எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போல அரைத்து நீண்ட மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** நந்தியாவட்டைப்பூச் சாறு, தாய்ப்பால்; பனைமட்டையை வாட்டிப் பிழிந்தசாறு, எலுமிச்சம்பழச் சாறு ஆகியவைகளில் ஒன்றில் இழைத்து இரண்டு எள் அளவு காலை, மாலை இரண்டு வேளையும் கண்ணில் தீட்டிவரக் கண்ணில் நீரிறங்குதல், கண்படலம், கண்ணோவு, பில்லம், திமிரம் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** மீன், கருவாடு உப்பு, புளி, புணர்ச்சி ஆகியவை ஆகா. வெந்நீரும் சோறுமுண்ணவும்.

## 1698. கண்பூ மாத்திரை

இந்துப்பு 1 வராகன் எடை (3½ கிராம்), பச்சைக்கற்பூரம் 2 வராகன் எடை (7 கிராம), கோரோசனை 3 வராகன் எடை (10½ கிராம்), பால்துத்தம் 3 வராகன் எடை (10½ கிராம்), அரிசித்திப்பிலித் தூள் 5 வராகன் எடை (17½ கிராம்), சிறுநந்தியாவட்டைப்பூச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** முன்கண்டவைகளைத் தனித்தனி பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு அரைமணி நேரம் அரைத்து எல்லாம் ஒன்றாகக் கலநதபின்பு மேற்படிசாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து நீண்டமாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனைத்தேனில் இழைத்து இரண்டெள்ளு அளவு காலை, மாலை இரண்டுவேளையும் கண்ணில் விட்டு வரக் கண்பூ, படலம், திமிரம், கண்காசம் ஆகியவை தீரும்.

## 1699. கண் முடமயிர் மை

வெள்ளாட்டுக்கொம்பைச் சுட்டகரி 1 பலம் (35 கிராம்). இதனைத்தூள் செய்து துணியில் வடிகட்டிக் கொள்ளவேண்டும் எலுமிச்சம்பழச்சாறு 5 பலம் (175 கிராம்), புளியிலைச்சாறு 5 பலம் (175 கிராம்), துத்தம், துருசு, இவை வகைக்கு 2½வராகன் எடை (8¾ கிராம்).

**செய்முறை:**—முன் கரித்தூளைக் கல்வத்திலிட்டுப் பழச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து அரைத்துச் சாறெல்லாம் சென்ற பின்பு உலர்த்தி மறுபடியும் பொடித்துப் புளியிலைச்சாற்றை விட்டு அரைத்து முடிவில் துத்தம் துரிசையும் சேர்த்து அரைத்து மைபோலானபின்பு சிமிழில் எடுத்து வைத்துக்கொள்க.

**தீரும்நோய்கள்:**- முடமயிர் முளைத்திருந்தால், கூடுமானால் அதைப்பிடுங்கி நீக்கிவிட்டு இந்த மையைத் தடவிவரவும்; இவ்விதம் சிலநாள்கள் செய்துவரின் முடமயிர் உதிர்ந்துபோம் அன்றியும் அது முளைக்காமலும் தடைப்பட்டுப்போம்.

**பத்தியம்:**- வாயு பண்டங்களை நீக்கவும்.

### 1700. கண் புழுவெட்டு மை

ஒரு புதுச்சட்டியின் உள்பக்கத்தில் ஊமத்தையிலைச் சாற்றைத் தடவிக் காயவைக்கவேண்டும். அது சுவறினபின் மறுபடியும் முன்போல் தடவிக் காயவைக்கவேண்டும் இவ்விதம் ஏழு தடவை மடக்கி மடக்கித் தடவிச் சுவறவைத்துச் சித்தப்படுத்திக் கொள்ளவும். பின் ஒரு புதுவிளக்கில் வேப்பெண்ணெயைவிட்டுச் சுத்தமான மெல்லிய துணியினால் திரிசெய்து போட்டுக் கொளுத்திச் சட்டியைக் கவிழத்துச் சுடர்படும்படியாகச் சட்டியின் உதட்டில் ஓட்டுத்துண்டுகளை வைத்துப் பக்குவமாக மை பிடித்துச் சுரண்டி புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:**- அவசியமானபோது இதில் கொஞ்சமெடுத்து எலுமிச்சம்பழச் சாற்றில் குழைத்துக் கண்ணிமையில் மையிடவும்; கண்புருவத்திலும் பூசவும். இவ்விதம் காலை, மாலை எட்டுநாள் செய்து வரக் கண்புழு வெட்டு, மயிருதிர்தல் புளிச்சகண் ஆகியவை தீரும்.

### 1701. கண்விரிவு மை

துருசு, துத்தம் வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), சதுரக்கள்ளிப்பாலைச் சேலைத் துண்டி லூட்டி உலர்த்தித் திரித் திரியாகத் திரித்து கொளுத்தி எரித்தெடுத்த சாம்பல் 1 வராகன் எடை (3½ கிராம்), முள்ளிப்பழச் சாறு செல்லத்தக்க அளவு. பிரண்டைச்சாறு செல்லத்தக்க அளவு, பசுவின் வெண்ணெய் 1½ பலம் (52½ கிராம்).

**செய்முறை:**- முன் மூன்றையும் கல்வத்தில் போட்டு அரை மணி நேரமரைத்து எல்லாம் நன்றாக கலந்த பின்பு முள்ளிப்

ழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேர மரைத்து வழித்து வட்டியில் போட்டு வெண்ணெயையும் கலந்து தாம்பிரச் செப்புப்பாத்திரத்தினால் தேய்த்து அதுவட்டியில் பிடித்துக் கொள்கிற பதத்தில் வழித்துத் தாம்பிரச் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** இதில் இரண்டு எள் அளவு காலை, மாலை இரண்டு வேளையும் கண்ணில் தீட்டிவரக் கண்ணில் சுற்றுப் பிரிந்திருப்பது தீரும்.

## 1702. கண் அமரிப் பொடி

துத்தம், துருசு, கொள்ளு இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்) சங்குத்தூள், கடுக்காய்த்தோல் தூள் இவை வகைக்கு 1½ வராகன் எடை. (52½ கிராம்).

**செய்முறை:-** முன் மூன்றையும் தனித்தனிப் பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து மற்ற இரண்டையும் அதில் கூடச்சேர்த்து இரண்டுமணி நேரமரைத்துப் புட்டியிலெடுத்து வைத்துக்கொள்க.

**தீரும்நோய்கள்:-** கண்ணிமைகள் தடித்திருந்தாலும், சதை வளர்ந்திருந்தாலும் இமையை மடித்துக் கொண்டு மேற்படி தூளில் கொஞ்சமெடுத்துப் போட்டு மெதுவாகத் தேய்க்கவும் இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் மூன்று ஐந்து ஏழு நாள் சமயோசிதம் போலச் செய்யச் சதை கரைந்து குணமாகும்.

## 1703. கண் சதைவளர்ச்சி மை

நாட்டுச் சவுக்காரம் 1 பலம் (3½ கிராம்), கையாந்தகரைச் சாறு செல்லத்தக்க அளவு, பொன்னாங்காணிச்சாறு செல்லத் தக்க அளவு.

**செய்முறை:-** சவுக்காரத்தைக் கல்வத்திலிட்டுக் கையாந் தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரம் அரைக்க வேண்டும். பின்பு ஈரத்தை உலர்த்திப் பொன்னாங் காணிச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாம நேரம் அரைத்து வழித்துச் செம்புச் சிமிழில் வைத்துக்கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** இதில் இரண்டெள்ளு அளவு காலை, மாலை, இரண்டு வேளையும் போட்டுவரக் கண்ணீர்ப்பாய்ச்சல், நீர்ப்பில்லம் ஆகியவை தீரும்.

## 1704. கண்ணீர்ப்பாய்ச்சலுக்கு மை

குதிரைப்பல், துருசு, துத்தம், கொன்றை, சோற்றுக் கற்றாழை வேர், சங்கு இவை வகைக்கு 2 வராகன் எடை தேனும் முலைப்பாலும் சமனாகச் சேர்த்தது செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** மேற்கண்ட சரக்குகளைத் தனித்தனிப் பொடித்து ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு ஒரு மணி நேரம் அரைத்து நன்றாக கலந்த பின்பு எடுத்து வெங்கல பாத்திரத்தில் போட்டு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற தேன் முலைப் பால் கலவையைச் சிறுகச் சிறுகவார்த்துச் செம்பு பாத்திரத்தினால் தேய்த்து மைப்பதத்தில் வழித்துச் செம்புச்சிமிழில் வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதில் இரண்டு அல்லது, மூன்று எள் அளவு காலை, மாலை இரண்டு வேளையும் கண்ணில் தீட்டி வரக் கண்ணீர்ப்பாய்ச்சல் நோய் தீரும்.

## 1705. கண்குருட்டு விநோத மருத்துவம்

சிறுகீரை வேர், பொன்னாங்காணிவேர், அதிமதுரம், சீரகம் சந்தனத்தூள் இவை வகைக்குச்சமன், எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு, பசுவின் வெண்ணெய் தேவையான அளவு.

**செய்முறை:** முன் சரக்குகளைத் தனித்தனி பொடித்துப் பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்து ஒன்றாகக் கலந்தபின்பு எலுமிச்சம் பழச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து ஒருசாம நேரமரைத்துத் தேவையான அளவு பசுவின் வெண்ணெயைச் சேர்த்து நன்றாக கலந்து எடுத்து வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:—** இதில் தேவையான அளவு கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துத் தலையுச்சி, உள்ளங்கைகள், உள்ளங் கால்கள் ஆகியவைகளில் வைத்து ஐந்து பேர் நின்று ஒரு மணி நேரம் வரை அரைத்துத் தேய்க்கவும்; இவ்விதம் மூன்று இரவு தேய்த்துவர நாளடைவில், அனல் தலைக்கேறி அதனாலுண் டான குருடு நீங்கிப் பார்வையுண்டாகும்.

## 1706. கண்பூ உசிதம்

அத்திப்பட்டையில் வெள்ளாட்டிணத்திலுள்ள கொடியாட் டின் பாலை விட்டு இடித்துத் துணியில் வைத்துப் பீங்கானில்

பிழிந்து அதில் வேப்பம்பிசினை உரைத்துக் காலை. மாலை இரண்டுவேளையும் மூன்று நாள் கண்ணில் இட்டுவரக் கண்பூ மாறிப்போகும்.

**பத்தியம்:-** வெந்நீரை ஆறவைத்து உபயோகிக்க வேண்டும்.

**குறிப்பு:-** வெள்ளாட்டில் கொடியாட்டுப்பால் அகப்படா விட்டால் வெள்ளாட்டுப்பாலைச் சேர்த்துக்கொள்ளவும்.

### 1707. மேற்படி வேறு

சிவப்பு நாயுருவியிலையைக் கசக்கிக் கண்ணில் பிழிந்துவரக் கண்பூ மாறும்.

### 1708. நயனநோய் சந்திரோதயம்

சங்குமணித்தூள், தான்றிக்காய்ப்பருப்பு, மஞ்சட்கடுக்காய்த் தோல் சுத்திசெய்த மனோசிலை, அரிசித்திப்பிலி, மிளகு கோட்டம், வசம்பு இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), வெள்ளாட்டுப்பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** மேற்கண்ட சரக்குகளைத் தனித்தனி பொடித்து ஒன்றாகக் கலந்து ஒரு மணி நேரமரைத்து நன்றாக கலந்த பின்பு வெள்ளாட்டுப்பாலைச் சிறுகச்சிறுக வார்த்து ஐந்துநாள் அரைத்து நீண்ட மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்க

**தீரும்நோய்கள்:—** இதனைத் தேன், நந்தியாவட்டைப் பூச்சாறு எலுமிச்சம்பழச் சாறு, முலைப்பால் ஆகியவைகளில் ஒன்றில் இழைத்துக் காலை, மாலை, இரண்டு வேளையும் கண்ணில் தீட்டி வரக் கண் திமிரம், சதைவளர்ச்சி, கண்காசம், அந்திமாலை, கண்பூ, கண்படலம், கண் நெருஞ்சிமுளை ஆகியவை தீரும்,

### 1709. கண்பச்சை மாத்திரை

துத்தம், துருசு இவை வகைக்கு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), சங்குத்தூள் 6 வராகன் எடை (21 கிராம்), எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** எல்லாவற்றையும் கல்வத்தில் இட்டு அரை மணி நேரம் அரைத்து எல்லாம் கலந்தபின்பு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்து நீண்ட மாத்திரையாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்க.

முருகன்
630 561.

**தீரும்நோய்கள்:-** இதனை முலைப்பாலில்இழைத்துப் போட கண்நோய் தொண்ணூற்றாறும் தீரும்

## 1710. கண்பச்சை உருண்டை

சீனாக்காரம், துத்தம், துருசு, சுருமாக்கல், வெந்த தலையோடு, வெண்காரம் இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு

**செய்முறை:-** மேற்கண்டசரக்குகளைத்தனித்தனி பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்தில் இட்டு ஒருமணி நேரம் அரைத்து நன்றாக கலந்தபின்பு எலுமிச்சம்பழச் சாற்றை சிறுகச்சிறுக விட்டு நான்கு சாம நேரம் அரைத்து உருண்டை மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி புட்டியில் வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனை முலைப்பால் முதலியவைகளில் இழைத்துப் போடக் கண் பூ, கண்புழுமேய்ச்சல், கண் எரிச்சல், கண்ணோவு ஆகியவை தீரும்.

## 1711. கண்பச்சைத் தாம்பிராதி மாத்திரை

தாம்பிர அரப்பொடி, துத்தம், இந்துப்பு, துருசு, சீனக்காரம், சங்குப்பொடி, கோரோசனை, தாமரை வேர் இவை வகைக்கு 2½ வராகன் எடை (8 ¾ கிராம்), எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு,

**செய்முறை:-** முன்சரக்குகளைத் தனித்தனி பொடித்து பின் ஒன்றாகக் கலந்து கல்வத்தில் இட்டு ஒரு மணிநேரம் அரைத்து எல்லாம் ஒன்றாக கலந்தபின்பு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டுசாம நேரம் அரைத்து நீண்டமாத்திரைகளாகச்செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தவும்

**தீரும்நோய்கள்:-** தக்க அனுபானங்களில் இழைத்துக் கண்ணில் தீட்டிவரக் கண் நோய்கள் எல்லாம் தீரும்.

## 1712. கண்மலப் பச்சை மாத்திரை

ஓரிலைத் தாமரை வேர்த்தூள் 1½ பலம் (52½ கிராம்), சங்குத்தூள் 5 வராகன் எடை (17 ½ கிராம்) தலையோட்டுத்தூள் 2 வராகன் எடை (7 கிராம்), துத்தம், துருசு வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்) எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** எல்லாத் தூள்களையும் ஒன்றாகச் சேர்த்துக் கல்வத்தில் இட்டு ஒருமணி நேரம் அரைத்து நன்றாக கலந்த பின்பு, எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்து நீண்ட மாத்திரைகளாகச் செய்துலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

**தீரும்நோய்கள்:-** தக்க அனுபானங்களில் இழைத்துக் கண்ணில் இடக் கண்நோய் தொண்ணூற்றாறும் தீரும்,

## 1713. கண் புழு வெட்டு மாத்திரை

புளியம் புறணிச் சாம்பல், சுத்திசெய்த சாதிலிங்கத்தூள். நாய்மண்டைத்தூள் இவை வகைக்கு 1 வராகன் எடை [3½ கிராம்], துத்தம், துருசு இவற்றின் தூள் வகைக்கு 5 வராகன் எடை (17 ½கிராம்) புளியிலைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு முசுமுசுக்கைச் சாறு, எலுமிச்சம்பழச் சாறு, கையாந்தகரைச் சாறு தாய்ப்பால் இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** முன் சரக்குகளையெல்லாம் ஒன்றாகக் கலந்து புது ஓட்டில்போட்டு அடுப்பின் மீது வைத்துச் சிறுதீயாக எரித்துச் சற்று வெதும்பிக் கல்வத்தில் போட்டு அரைமணி நேரமரைத்து நன்றாககலந்தபின்பு முன் சொல்லப்பட்டிருக்கும் ஒவ்வொருவகைத் திரவத்தாலும் ஒவ்வொரு சாமம் முறையே அரைத்து மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப் படுத்தவும்.

**தீரும்நோய்கள்:-** இதனை இழைத்துக் கண்ணிலிட்டுவரப் புழுவெட்டு, மற்ற கண் நோய்கள் ஆகியவை தீரும்.

## 1714. நயன நோய் தாம்பிர மணி மாத்திரை

தாம்பிர அரப்பொடி, பொன் அரப்பொடி: துளையிடாத நன் முத்துதூள் துருசுத்தூள், துத்தத்தூள், சங்குத்தூள், தலையோட்டுத்தூள் பீதரோகணித்தூள் இவை வகைக்கு 1 வராகன் எடை [3½ கிராம்). புங்கம் வேர்ப்பட்டைச்சாறு, எலுமிச்சம் பழச் சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

மேற்படி சரக்குகளையெல்லாம் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு ஒரு மணிநேரமரைத்து நன்றாக கலந்த பின்பு புங்கஞ் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டு சாமநேரமரைக்க வேண்டும். பிறகு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்ந்து எட்டுச் சாமநேரமரைத்து நீண்ட மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

**திரும்நோய்கள்:-** இதனை இழைத்துக் கண்ணில் தீட்டிவரக் கண்காசம், நீலகாசம், பித்தகாசம், படலம், பில்லம், மயிர்க் குத்து, புழுவெட்டு, அந்திமாலை, ஒளிமழுங்கல், நேத்திரவாயு, கண்ணோவு முதலிய கண்வியாதி தொண்ணூற்றாறும் தீரும்.

## 1715. கண் இலகு ரத்தினாதி மாத்திரை

தங்க அரப்பொடி, வெள்ளி அரப்பொடி, தாம்பிர அரப் பொடி அய அரப்பொடி, துளையிடாத நல்முத்துத் தூள், நற் பவளத்தூள் இவை வகைக்கு 1 வராகன் எடை (3 கிராம்). எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** மேற்படி தூள்களை ஒன்றாகக் கலந்து கல்வத் தில் போட்டு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து எட்டு நாளரைத்து நீண்ட மாத்திரைகள் செய்துநிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

**திரும்நோய்கள்-:** இதனையிழைத்துக் கண்ணிலிட்டு வரக் கண்படலம், பில்லம், கண்பூ, கண்காசம், பித்தகாசம்ஆகியவை தீரும்.

## 1716. சிறு இரத்தினாதி மாத்திரை

தங்க அரப்பொடி, வெள்ளி அரப்பொடி, செம்பு அரப் பொடி நற்பவளத்தூள், துளையிடாத நன்முத்துத்தூள், பூலா வேர்த்தூள், ஆசித்திப்பிலிதூள், பச்சைக்கற்பூரத்தூள், துத் தத்தூள், கோரோசனைத்தூள், வெந்ததலையோட்டுத்தூள், இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** சரக்குகளையெல்லாம் ஒன்றாகக் கலந்து ஒரு மணி நேரமரைத்து நன்றாக சேர்ந்த பின்பு பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டு நாளரைத்து நீண்ட மாத்திரை களாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்க.

**திரும்நோய்கள்:-** இதனையிழைத்துக் கண்ணிலிட்டு வரக் கண் நோய் தொண்ணூற்றாறும் தீரும்.

## 1717. நவரத்தினாதி மாத்திரை

தங்க அரப்பொடி, வெள்ளி அரப்பொடி, தாம்பிர அரப் பொடி அயஅரப்பொடி, நாக அரப்பொடி, நற்பவளத்தூள் துளையிடாத நன்முத்துத்தூள். வெந்ததலையோட்டுத்தூள் துத்தத்தூள், துருகத்தூள், நெல்லிப்பருப்புத்தூள், மஞ்சள்கடுக்

காய் தோல் தூள், பச்சைக் கற்பூரத்தூள், பொன்னாங் காணிவேர்த்தூள் சிறுகீரைவேர்த்தூள், பூலாவேர்த்தூள், புளியம்பூத்தூள் இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்) எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** மேற்படி வகைகளைக் கல்வத்திலிட்டுப் பழச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்துப் பத்து நாளரைத்துமாத்திரை செய்துலர்த்தி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனை தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணிலிட்டுவரக் கண்காசம், கண்பித்தகாசம், படலம், பில்லம், புகைச்சல் ஆகியவை தீரும்.

## 1718. நவலோக ரத்தினாதி மாத்திரை

தங்க அரப்பொடி, வெள்ளி அரப்பொடி, தாம்பிரஅரப் பொடி, அய அரப்பொடி, நாக அரப்பொடி, கருவங்க அரப் பொடி, வெள்வங்க அரப்பொடி, பித்தளை அரப்பொடி, ஓட்டைப்பல்தூள், பசுவின் பல்தூள், எருமைப்பல்லின்தூள், மான் பல்லின் தூள், பன்றிக் கொம்புத்தூள், கலைமான் கொம்புத்தூள், எருமைக் கொம்புத் தூள். புங்கம்விதைத்தூள், மேற்றோல்சீவின சுக்குத்தூள், மிளகுத்தூள், அரிசித்திப்பிலித் தூள், பலகறைத்தூள், இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத் திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்துப் பத்து நாளரைத்து நீண்ட மாத்திரைகளாகச் செய்து நிழலி லுலத்திப் பத்திரப்படுத்துக.

**தீரும்நோய்கள்:-** இதனை தக்க அனுபானங்களில் இழைத் துக் கண்ணிலிட்டுவரக் கண்நோய் தொண்ணூற்றாறும் தீரும்.

## 1719. நயனசிந்தாமணி மாத்திரை

ஆமையோடு, நாகர்வண்டோடு, வெந்ததலையோடு, ஊமச்சிக்கூடு, வளையலோடு, இரும்பு அரப்போடி, துருசு மிளகு, அரிசித்திப்பிலி, சங்கு, வெள்ளைச்சாரணைவேர்ப்பட்டை பீதரோகணி, அதிமதுரம் புங்கம்விதை துத்தம் இவற்றின் தூள் வகைக்கு 1½ வராகன் எடை-எலுமிச்சம்பழச் சாறு கையாந்தக ரைச்சாறு, முசுமுசுக்கைச் சாறு, சிறுபீளை இலைச் சாறு பொன்னாங்காணிச்சாறு முருங்கைப்பூச்சாறுநந்தியாவட்டைப்

பூச்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு. தாய்ப்பாலும் தேனும் கலந்தது செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** மேற்கண்ட சரக்குகளையெல்லாம் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு மேற்கண்ட திரவங்களால் வகைக்கு ஒவ்வொரு சாமம் முறையே அரைத்து நீண்ட மாத்திரைகள்செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனை இழைத்துக் கண்ணிலிட்டுவரக் கண்ணீர்ப்பாய்ச்சல், பில்லம், நீர்ப்பில்லம், கண்பூ ஆகியவை தீரும்.

## 1720. கலிக்க மாத்திரை

மகிழம்விதை, இந்துப்பு, சீனாக்காரம் இவற்றின் தூள் வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), வெற்றிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** முன்மூன்றையும் கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்து நன்றாகக் கலந்தபின்பு மேற்படி வெற்றிலைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து ஒரு சாம நேரமரைத்து நீண்ட மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்க

**தீரும்நோய்கள்:-** இதனை வெற்றிலைச்சாற்றில் இழைத்துக் கண்ணிலிட சுரம், தலைவலி, தலைப்பாரம், முகவாதம், பல்குத்து, நீர்க்கோவை, மூர்ச்சை, மயக்கம் ஆகியவை தீரும்.

## 1721. நேத்திரவாயு வர்த்தி

நற்சீரகம், தேற்றாங்கொட்டை, மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சள், ஓமம், நற்சந்தனம், குங்குமப்பூ இவை வகைக்குச் சமனெடை.

**செய்முறை:-** இவற்றைத் தனித்தனியே பொடித்து ஒன்றாகக் கலந்து ஒருமணி நேரமரைத்து மெல்லிய துணியில் கொஞ்சமெடுத்துப் பரப்பித் திரியாகத் திரித்து வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனைக் கொளுத்தி நாசியிற்புகைபிடிக்க பீனிசத்தலை நோவு, நேத்திரவாயு, கபாலசன்னி ஆகியவை தீரும்.

## 1722. கண்ணோய் நசியம்

அடப்பம்விதை, மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, அக்கிராகாரம் இவற்றின் தூள் வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்).

இவற்றைக் கல்வத்திலிட்டு ஒருமணி நேரமரைத்து எடுத்து வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** அவசியமானபோது இதில் கொஞ்சம் எடுத்துக் கொஞ்சம் தாய்ப்பால் விட்டு மத்தித்து வெள்ளைத் துணியில் வைத்து இரண்டு நாசித்துவாரங்களிலும் இரண்டு மூன்று துளி நசியம் செய்து வரவும். இவ்விதம் செய்துவரத் தலைநோவு, கண்ணோவு, கண்நீர்ப்பாய்ச்சல், தலைபாரம் ஆகியவை தீரும்.

## 1723. கண்ணோய் ஆக்கிராணம்

மேற்றோல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, இவற்றின் தூள் வகைக்கு 5 வராகன் எடை (17½ கிராம்), விபூதி 15 வராகன் எடை (52½ கிராம்) இவற்றை ஒன்றாகக் கலந்து எருக்கம் பாலை விட்டுக் குழைத்து வெய்யிலில் உலர்த்திப்பிறகு பொடித்துப் புட்டியில் வைத்துக்கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதில் கொஞ்சமெடுத்து நாசியில் ஆக்கிராணம் செய்யத் தும்மல் காணும்; மூக்கிலிருந்து நீர்வடியும் சளி நீங்கும்; கண்ணோய், தலைநோய், தலைகனம் ஆகியவை தீரும்.

## 1724. கண்ணோய் பேதிச்சூரணம்

மஞ்சள்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லி முள்ளி, சரக்கொன்றைக் கொழுந்து (இதனை உலர்த்திக் கொள்ளவும்) இவற்றைத் தனித்தனியே இடித்த தூள்வகைக்குச் சமனெடை, இதற்குச் சமன் சர்க்கரை. இவ்விரண்டையும் கலந்து வைத்துகொள்க.

**அளவு:-** 1 முதல் 2 வராகன் எடை. வெந்நீரில் கரைத்துக் காலையில் பருகச் செய்யவும் இவ்விதம் செய்துவரச் சிரசிலுள்ள துர்நீர்கள் நீங்கிக் கண்ணிலுள்ள நோய்கள். தலைநோவு, மலக்கட்டு, வாயு, பித்தம் ஆகியவை தீரும். கழிச்சலாகும்.

**குறிப்பு:-** இதனை இரண்டு நாளைக்கொரு தடவைஉபயோகித்து வரவேண்டியது. அல்லது எட்டுநாளைக்கொரு தடவை அடுத்தடுத்து இரண்டு நாள் உபயோகித்து வரவேண்டியது.

## 1725. நயனநோய் பேதி

மேற்றோல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி இவற்றின் தூள் வகைக்கு ½ பலம் (17½ கிராம்), சுத்திசெய்த சிவதை வேர்த்தூள். 1½ பலம் (52½ கிராம்) சர்க்கரை 3 பலம் (105 கிராம் இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து நன்றாகச் சேர்த்து வைத்துக் கொள்க.

**அளவு:-** 1 முதல் 2 வராகன் எடை. வெந்நீருடன் உட்கொள்ளவும்.

**தீருமநோய்கள்:-** மலச்சிக்கல் தீரும். தலையிலுள்ள துர்நீர்கள் வெளிப்பட்டுத் தலைமூளை தூய்மையாகும்; வாயு, பித்தம் ஆகியவை தீரும்.

**குறிப்பு:-** மேற்கண்ட இரண்டு பாகங்களையும் கண், செவி, நாசி, பல் முதலிய கண்டத்திற்கு மேற்பட்ட நோய்களில் உபயோகித்து தலையிலுள்ள துர்நீர்களை நீக்கி தூய்மைசெய்து கொள்ளலாம்.

## 1726. நயனசஞ்சீவி மை

சீனாக்காரத்தூள் ¼ பலம் (8¾ கிராம்), பீதரோகணித்தூள் ½ பலம் (17½ கிராம்), எருமை வெண்ணெய் 1 பலம் (35 கிராம்).

**செய்முறை:-** முன் மூன்றையும் கல்வத்திலிட்டு ஒருசாம நேரமரைத்து வழித்து வட்டிலில் போட்டுச் செப்புப் பாத்திரத்தினால் இரண்டு சாமநேரம் தேய்த்து மைப்பதத்தில் வழித்துத் தாம்பிரக் குப்பியில் வைத்துக் கொள்க.

இதில் கடுகு அளவு காலை, மாலை இரண்டு வேளையும் கண்ணிலிட்டுவர நேத்திரவாயு, அந்தி மாலை, இழிகண், விழிக்குழி, பித்தகாசம், அன்னகோபம், படலம், பில்லம் ஆகிய நயன நோய்கள் எல்லாம் தீரும்.

**குறிப்பு:-** கண்ணில் அதிக எரிச்சலாயிருந்தால் கொஞ்சம் எடுத்து வெண்ணெயை அதிகமாகச் சேர்த்துக் குழைத்துப் போடவும்.

## 1727. கண் நவநீத மை

பசுவின் வெண்ணெய் 2½ பலம் (87½ கிராம்), இதனை ஒரு புதுப்பானையிலிட்டு அது நிறையத் தண்ணீரைவிட்டு ஒருநாள் வைத்து மறுநாள் காலமே அந்தத் தண்ணீரை இறுத்துவிட்டு முன்போல் புதிதாகவேறு தண்ணீர்விட்டு வைக்கவும்; மறுநாள் இறுத்துவிட்டு முன்போல் தண்ணீர்விட்டு வைக்கவும்; பிரதி தினமும் இரண்டொரு தடவை பிசைந்தும் வரவும்; இவ்விதம் ஆறுமாதம் தினந்தோறும் செய்துவந்தால் முடிவில் அது கல்லைப்போல் இறுகிப்போயிருக்கும். பின்பு அதையெடுத்து நிறுத்து அதற்குக் கால்பங்கு பீதரோகணித்தூளைச் சேர்த்து வெங்கலப்பாத்திரத்தில் வைத்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து தாம்பிரப் பாத்திரத்தினால் இரண்டு சாமநேரம்தேய்த்து மைப்பதத்தில் வழித்துத்தாம்பிரக்குப்பியில் வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதில் எள் அளவு எடுத்துக் காலை மாலை இரண்டுவேளையும் ஒரு மண்டலம் கண்ணிலிட்டு வர நேத்திரவாயு, அந்திமாலை முதலிய நேத்திர நோய்கள் தொண்ணூற்று ஆறும் தீரும்.

**குறிப்பு:-** அவசரமாகச் செய்யவேண்டியதிருந்தால்மேற்படி வெண்ணெயைத் தேவையான அளவு ஒருபாத்திரத்தில்போட்டு அது நிறைய தண்ணீரை விட்டு நன்றாகப் பிசைந்து தண்ணீரை இறுத்து விடவேண்டியது மறுபடியும் முன்போல் தண்ணீரை விட்டு முன்போல் பிசைந்து இறுத்துவிடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி இருநூறு 'தடவை செய்து எடுத்து மேற்கண்ட படி செய்தெடுத்து உபயோகிக்கவும்.

## 1728. கண் கண்டுக்குழம்பு

பொரித்த படிக்காரத்தூள் 1 பலம் (35 கிராம்), சீனாகற்கண்டுத்தூள் 1 பலம் (35 கிராம்), இவ்விரண்டையும் சேர்த்துக் கல்வத்தில் ஒருமணி நேரம் அரைத்துக் கல்கார்க்குள்ளபுட்டியில் போட்டு அதன்மேல் நான்கு அங்குலம் இருக்கும்படியாகப் புளிப்பு மாதுளம்பழச் சாற்றைவிட்டுநன்றாகக் குலுக்கிக்கார்க்கிட்டு வைத்துக்கொள்.

**தீரும்நோய்கள்:-** சலாகையால் இதில் கொஞ்சம் எடுத்துக் காலைமாலை இரண்டு வேளையும் கண்ணில் தீட்டிவரப்படலம் பில்லம், சதைவளர்ச்சி, கண்கூச்சம் கண்ணோவு, கண்சிவப்பு முதலிய கண்நோய்கள் தொண்ணூற்றாறுந் தீரும்.

## 1729. கண்பச்சைக் கற்பூரக்குழம்பு

திறமான பச்சைக்கற்பூரம் தேவையான அளவு. இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்துத் திறமான தேனைச் சிறுகச் சிறுக விட்டரைத்துக் குழம்புப் பதத்தில் எடுத்து கல்காரக்குள்ளபுட்டியில் பத்திரப்படுத்தவும்.

**தீரும்நோய்கள்:-** இதில் கொஞ்சம் சலாகையாலெடுத்து காலை, மாலை இரண்டு வேளையும் கண்ணிலிட்டுவர கண்ணெரிச்சல், கண்புகைச்சல், மேகச்சூடு, கண்சிவப்பு, கண்ணில் அரிப்பு, தலை நோவு, தலைப்பாரம், ஆகியவை தீரும்.

## 1730. கண் பற்று

சொறித்துத்தம் தேவையான அளவு. இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்தரைத்துக் குழம்புப்பதமாக எடுத்துக் கண்ணைச் சுற்றிலும் பற்றிட வேண்டும். இவ்விதம் தினம் இரண்டு தடவை

செய்துவரின் கண்சிவப்பு, கண்வலி, கண்கூச்சம், கண்ணெரிவு, கண் பொருமல் ஆகியவை தீர்ந்து கண் குளிர்ச்சியாயிருக்கும்.

## 1731. கண்பற்று வேறு

பூங்காவித்தூள், மரமஞ்சள் தூள், கோரைக்கிழங்குத் தூள் இவை வகைக்குச் சமன் எடை, இம் மூன்றையும் கல்வத்திலிட்டு வெள்ளாட்டுப் பாலைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்துக் குழம்புப்பதத்தில் எடுத்துக் கொஞ்சம் கொதிக்கவைத்துக் கண்ணைச்சுற்றிலும் பற்றுப் போடவும். இவ்விதம் தினம் இரண்டொரு தடவை செய்துவரின் கண்ணோவு, கண்வலி, கண்சிவப்பு, முதலியவைகளும், மேற்கண்ட நோய்களும் தீரும்.

## 1732. கண்பற்று மாத்திரை

மஞ்சள் கடுக்காய்த்தோல், காய்ச்சுக்கட்டி, மடல்துத்தும், தேன்மெழுகு, படிக்காரம், அதிமதுரம், களிப்பாக்கு, தேற்றான் விதை, அபின், கொடுக்காய்ப்புளி இவை வகைக்குச் சமன் எடை, எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** மேற்கண்ட சரக்குகளுள் இடித்துத் தூள் செய்ய வேண்டியவைகளைத் தூள்செய்தும் பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்துத் தூள் செய்தும் மற்றவைகளையும் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்து நன்றாக கலந்த பின்பு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து மூன்றுமணி நேரமரைத்து நீண்ட மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்.

**தீரும்நோய்கள்:-** பழச்சாற்றில் அல்லது. காடியில் அல்லது, கருவேப்பிலைக் குடிநீரில் மேற்படி மாத்திரையை இழைத்துக் கண்ணைச் சுற்றிலும் பற்றிட வேண்டும்; இவ்விதம் தினம் இரண்டொரு தடவை செய்துவரின் கண்சிவப்பு, கண்வலி, கண் கூச்சம், கண்ணீர்ப்பாய்ச்சல், முதலிய அநேக நோய்கள், தீரும்.

## 1733. கண்புற வளையம்

பலகரை 5, இவற்றை ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு இவை அமிழ்ந்து கிடக்கும்படி எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு வெய்யிலில் வைத்துவர எல்லாம் கரைந்து போகும். பிறகு, கீழ் காய் நெல்லி வேர்ப்பட்டை 1 பலம்(35 கிராம்), இவ்விரண்டையும் கல்வத்திலிட்டரைத்துக் குழம்புப் பதத்திலெடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்க.

இதில் கொஞ்சமெடுத்துக் காலை, மாலை இரண்டு வேளையும் கண்ணைச் சுற்றிலும் பூசிவரவும். இவ்விதம் மூன்று தினங்கள் செய்துவர கண்கூச்சம், கண்புகைச்சல், கண்பொருமல், கண் வீக்கம் கண்வலி ஆகியவை தீரும்.

## 1734. மேற்படி வேறு

வேப்பம்பிசின், விளாம்பிசின், கடுக்காயைச்சுட்டகறித் தூள் மேற்றோல் சீவினசுக்கு, கோதுகொட்டை நீக்கின புளி இவை வகைக்குச் சமன் எடை, எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** முன் இரண்டு பிசின்களையும் எலுமிச்சப்பழச் சாற்றில் ஊறவைத்துக் கரைத்துப்புளியையும் கரைத்து மற்ற தூள்களையும் சேர்த்துக் கலவத்தில் இட்டு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்தரைத்துக் குழம்புப்பதத்தில் எடுத்து வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதில் கொஞ்சம் எடுத்துக் காலை மாலை இரண்டு வேளையும் கண்ணைச்சுற்றிலும் பூசிவரக் கண்வலி, கண்சிவப்பு முதலிய மேற்கண்ட நோய்கள் தீரும்.

## 1735. கண்ணோய் உசிதம்

தாய்ப்பாலில் மிளகை மை போலரைத்துக் கண்ணிமைகளின் மீது பூசவேண்டும்; இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் செய்துவரின் கண்ணோய், கண்வலி ஆகியவை தீரும்

## 1736. கண்குமரிப் பற்று

மஞ்சள்கடுக்காய்த்தோல், நெல்லி முள்ளி, அதிமதுரம் (இதனை வைத்துக் கொள்ளவும்) புளியந்துளிர், கருவேப்பிலை இவை வகைக்குச் சமன். ஆவாரையிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** மேற்கண்ட சரக்குகளைத் தனித்தனியே கற்றாழைமடலுக்குள் செலுத்தி வைத்து ஊறின பின்பு எடுத்துக் கல்வத்திலிட்டு அரைமணி நேரம் அரைத்து எல்லாம் கலந்த பின்பு ஆவாரைச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து அரைத்துக் குழம்பு பததில் எடுத்துக்காய்ச்சி இறுகின பதத்தில் எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்க. அவசியமானபோது தாய்ப்பாலை விட்டரைத்துக் குழம்புப்பதமாக எடுத்துக் கண்ணைச்சுற்றிலும் பூசவும், இவ்விதம் தினம் இரண்டு தடவை செய்துவரின் கண் வீக்கம், கண்ணீர்ப்பாய்ச்சல், கண்வேதனை, அன்னகோபம் கண்ணெரிவு' கண் அழற்சி, கண்பூ, கண் வெளிச்சி, தலைநோவு ஆகியவை தீரும்.

## 1737. கண் ஒற்றடம்

பசுவின்பால் ½ ஆழாக்கு, சரக்கொன்றையிலை ½ பிடி இதனை இடித்துப் பாலிற்போட்டு வேகவைத்து வெந்தபதத்தி லிறக்கி கண்ணில் ஆவிபிடித்து அந்த இலையை எடுத்து மெல்லியதுணியில் வைத்து முடிந்து கண்ணில் ஒற்றடமிட

செய்துவரின் கண்சிவப்பு, கண்வலி, கண்கூச்சம், கண்ணெரிவு, கண் பொருமல் ஆகியவை தீர்ந்து கண் குளிர்ச்சியாயிருக்கும்.

### 1731. கண்பற்று வேறு

பூங்காவித்தூள், மரமஞ்சள்தூள், கோரைக்கிழங்குத் தூள் இவை வகைக்குச் சமன் எடை, இம் மூன்றையும் கல்வத்திலிட்டு வெள்ளாட்டுப் பாலைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்துக் குழம்புப்பதத்தில் எடுத்துக் கொஞ்சம் கொதிக்கவைத்துக் கண்ணைச்சுற்றிலும் பற்றுப் போடவும். இவ்விதம் தினம் இரண்டொரு தடவை செய்துவரின் கண்ணோவு, கண்வலி, கண்சிவப்பு, முதலியவைகளும், மேற்கண்ட நோய்களும் தீரும்.

### 1732. கண்பற்று மாத்திரை

மஞ்சள் கடுக்காய்த்தோல், காய்ச்சுக்கட்டி, மடல்துத்தும், தேன்மெழுகு, படிக்காரம், அதிமதுரம், களிப்பாக்கு, தேற்றான் விதை, அபின், கொடுக்காய்ப்புளி இவை வகைக்குச் சமன் எடை, எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** மேற்கண்ட சரக்குகளுள் இடித்துத் தூள் செய்ய வேண்டியவைகளைத் தூள்செய்தும் பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்துத் தூள் செய்தும் மற்றவைகளையும் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்து நன்றாக கலந்த பின்பு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து மூன்றுமணி நேரமரைத்து நீண்ட மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்.

**தீரும்நோய்கள்:-** பழச்சாற்றில் அல்லது. காடியில் அல்லது, கருவேப்பிலைக் குடிநீரில் மேற்படி மாத்திரையை இழைத்துக் கண்ணைச் சுற்றிலும் பற்றிட வேண்டும்; இவ்விதம் தினம் இரண்டொரு தடவை செய்துவரின் கண்சிவப்பு, கண்வலி, கண் கூச்சம், கண்ணீர்ப்பாய்ச்சல், முதலிய அநேக நோய்கள், தீரும்.

### 1733. கண்புற வளையம்

பலகரை 5, இவற்றை ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு இவை அமிழ்ந்து கிடக்கும்படி எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு வெய்யிலில் வைத்துவர எல்லாம் கரைந்து போகும். பிறகு, கீழ் காய் நெல்லி வேர்ப்பட்டை 1 பலம்(35 கிராம்), இவ்விரண்டையும் கல்வத்திலிட்டரைத்துக் குழம்புப் பதத்திலெடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்க.

இதில் கொஞ்சமெடுத்துக் காலை, மாலை இரண்டு வேளையும் கண்ணைச் சுற்றிலும் பூசிவரவும். இவ்விதம் மூன்று தினங்கள் செய்துவர கண்கூச்சம், கண்புகைச்சல், கண்பொருமல், கண் வீக்கம் கண்வலி ஆகியவை தீரும்.

## 1734. மேற்படி வேறு

வேப்பம்பிசின், விளாம்பிசின், கடுக்காயைச்சுட்டகறித் தூள் மேற்றோல் சீவினசுக்கு, கோதுகொட்டை நீக்கின புளி இவை வகைக்குச் சமன் எடை, எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** முன் இரண்டு பிசின்களையும் எலுமிச்சப்பழச் சாற்றில் ஊறவைத்துக் கரைத்துப்புளியையும் கரைத்து மற்ற தூள்களையும் சேர்த்துக் கலவத்தில் இட்டு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்தரைத்துக் குழம்புப்பதத்தில் எடுத்து வைத்துக்கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதில் கொஞ்சம் எடுத்துக் காலை மாலை இரண்டு வேளையும் கண்ணைச்சுற்றிலும் பூசிவரக் கண்வலி, கண்சிவப்பு முதலிய மேற்கண்ட நோய்கள் தீரும்.

## 1735. கண்ணோய் உசிதம்

தாய்ப்பாலில் மிளகை மை போலரைத்துக் கண்ணிமைகளின் மீது பூசவேண்டும்; இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் செய்துவரின் கண்ணோய், கண்வலி ஆகியவை தீரும்

## 1736. கண்குமரிப் பற்று

மஞ்சள்கடுக்காய்த்தோல், நெல்லி முள்ளி, அதிமதுரம் (இதனை வைத்துக் கொள்ளவும்) புளியந்துளிர், கருவேப்பிலை இவை வகைக்குச் சமன். ஆவாரையிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** மேற்கண்ட சரக்குகளைத் தனித்தனியே கற்றாழைமடலுக்குள் செலுத்தி வைத்து ஊறின பின்பு எடுத்துக் கல்வத்திலிட்டு அரைமணி நேரம் அரைத்து எல்லாம் கலந்த பின்பு ஆவாரைச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து அரைத்துக் குழம்பு பதத்தில் எடுத்துக்காய்ச்சி இறுகின பதத்தில் எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்க. அவசியமானபோது தாய்ப்பாலை விட்டரைத்துக் குழம்புப்பதமாக எடுத்துக் கண்ணைச்சுற்றிலும் பூசவும், இவ்விதம் தினம் இரண்டு தடவை செய்துவரின் கண் வீக்கம், கண்ணீர்ப்பாய்ச்சல், கண்வேதனை, அன்னகோபம் கண்எரிவு' கண் அழற்சி, கண்பூ, கண் வெளிச்சி, தலைநோவு ஆகியவை தீரும்.

## 1737. கண் ஒற்றடம்

பசுவின்பால் ½ ஆழாக்கு, சரக்கொன்றையிலை ½ பிடி இதனை இடித்துப் பாலிற்போட்டு வேகவைத்து வெந்தபதத்தி லிறக்கி கண்ணில் ஆவிபிடித்து அந்த இலையை எடுத்து மெல்லியதுணியில் வைத்து முடிந்து கண்ணில் ஒற்றடமிட

வேண்டும். இளஞ்சூடாய் இருக்கவேண்டும். சூடாறிவிட்டால் மறுபடியும் சூடு காட்டிக்கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** கண்வலி, கண்கூச்சம், கண்சிவப்பு இமைத் தடிப்பு முதலிய பல நோய்கள் தீரும்.

## 1738. கண்ணோய்ப் புகை

எள், உலர்த்தின வேப்பிலை, கடுகு இவை வகைக்குச் சமனெடை. இவற்றை இடித்துத் தூள் செய்து வைத்துக் கொள்க. இதில் கொஞ்சமெடுத்து நெருப்பில போட்டுக் கண்ணில் புகை காட்டவும். இவ்விதம் தினம் காலை, மாலை இரண்டு வேளையும் செய்துவரின் கண்சிவப்பு, கண்ணீர்ப்பாய்ச்சல், கண்குத்தல், கண்வலி, தலைவலி முதலிய அநேக நோய்கள் தீரும்.

## 1739. மேற்படி வேறு

உலர்ந்த முருங்கையிலை, உலர்ந்த இலந்தையிலை, வேப்பம் பிசின், மைசாட்சி, சாம்பிராணி, கொம்பரக்கு, இவை வகைக்கு சமனெடை. இவற்றை இடித்து தூள் செய்து கொஞ்சம் பசுவின் வெண்ணெய் சேர்த்து நெய்ப்பசை உண்டாக்கிக் கொள்ளவும்.

**தீரும்நோய்கள்:-** இதில் கொஞ்சமெடுத்து, நெருப்பில் போட்டுக் கண்ணில் தூபம்பிடிக்கக் கண்வலி, கண்சிவப்பு: நேத்திரவாயு, கண்கடுப்பு, கண்குடைச்சல், கண்ணீர்ப்பாய்ச்சல் முதலிய கண் சார்பான அநேக நோய்கள் தீரும்.

## 1740. கண் குளிர்ச்சி எண்ணெய்

(அ) விடம் நீக்கியிடித்துப்பிழிந்த சீந்தில்சாறு, நெல்லிக் காய்ச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, கையாந்தகரைச்சாறு, தாழை விழுதுச்சாறு, சோற்றுக்கற்றாழைச்சாறு இவை வகைக்கு 32 பலம் (1120 கிராம்), பசுவின் பால் 32 பலம், நல்லெண்ணெய் 32 பலம் (1120 கிராம்).

(ஆ) அதிமதுரம், ஏலரிசி, இலவங்கப்பட்டை, இலவங்கப் பத்திரி, இலவங்கம், கோட்டம், சாதிக்காய், திராட்சைப்பழம், சதகுப்பை, செஞ்சந்தனம், விலாமிச்சம் வேர், வெட்டிவேர் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்)

**செய்முறை:-** (அ) விலுள்ள திரவங்களையும் எண்ணெயையும் கலந்து வைத்துக் கொள்க. (ஆ) விலுள்ளவைகளில் திராட்சையைத்தவிரமற்றவைகளை ஒன்றாகச் சேர்த்திடித்துத் தூள் செய்து அதனுடன் திராட்சையையும் சேர்த்து அம்மியில் வைத்து (அ) விலுள்ள பசுவின்பாலைச் சிறுகச் சிறுக தெளித்து

வெண்ணெய் போலரைத்து பிருக்த பாலில் கரைத்து முன் சித்தப்படுத்தி இருப்பதில் கலந்து கரைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக்கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டிப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்

**தீரும்நோய்கள்:-** எட்டுநாளைக்கொரு தடவை இதனைத் தலையில் தேய்த்துத் தலைமுழுகச் செய்துவரக் கண்நோய்கள் சகலமும் தீரும்.

## 1741. மேற்படி வேறு

(அ) நல்லெண்ணெய் 16 பலம் (560 கிராம்). சிறுகீரைச் சாறு பொன்னாங்கண்ணிச் சாறு, சோற்றுக்கற்றாழைச் சாறு இவை வகைக்கு 8 பலம் (280 கிராம்). அல்லிக்கிழங்கு, தாமரைக்கிழங்கு இவை வகைக்கு 40 பலம் (1400 கிராம்). இந்த இரண்டையும் சேர்த்திடித்துச் சாறு பிழிந்து கொள்ளவும்

(ஆ) நெல்லிமுள்ளி, வெட்டிவேர், மரமஞ்சள் இவை வகைக்கு 10 பலம் (30 கிராம்) இவற்றை நையச் சதைத்து ஒரு பாண்டத்தில் போட்டு மூன்றுபடி தண்ணீர் விட்டு நான்கி லொரு பாகமாகச்சுண்ட வைத்து வடிகட்டி வைத்துக் கொளக.

(இ) கோட்டம், அதிமதுரம், சந்தனத்தூள் இவை வகைக்கு ¾ பலம் (26¼ கிராம்), பசுவின் பால் 8 பலம் (280 கிராம்). இந்த மூன்றையும் சேர்த்திடித்து தூள்செய்து அம்மியில் வைத்துப் பசுவின் பாலைத் தெளித்து வெண்ணெய் போலரைத்து வைத்துக் கொள்க.

**செய்முறை:-** (அ) விலுள்ள திரவங்களையும் (ஆ)விலுள்ள குடிநீரையும் ஒன்றாகக்கலந்து அதில் (இ)யிலுள்ளதைக் கரைத்துக் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதனை எட்டுநாளைக்கொரு தடவை தேய்த்துத் தலைமுழுகச் செய்துவரக் கண்புகைச்சல், பித்த காசம், உட்டிண ஆதிக்கம் முதலிய கண்நோய்கள் சகலமும் தீரும்.

## 1742. நயனசஞ்சீவித் தைலம்

(அ) அவுரியிலைச்சாறு, ஆரையிலைச்சாறு, சிறுக்கீரைச் சாறு, சோற்றுக்கற்றாழைச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, இவை வகைக்குச் சாறு ½ படி, நல்லெண்ணெய் 1 படி.

(ஆ) செங்கழுநீர்க்கிழங்கு, கோட்டம், சீந்தில் தண்டு, அகிற்கட்டை, கஸ்தூரிமஞ்சள், அஞ்சனக்கல், அதிமதுரம், சாதிக்காய் நன்னாரிவேர், தண்ணீர்விட்டான் கிழங்கு, நெய் தற்கிழங்கு, தாமரைவளையம், ஏலரிசி, இலவங்கம், சடா மாஞ்சில் இவைவகைக்கு 1 பலம். பசுவின் பால் 1 படி.

**செய்முறை:-** (அ)விலுள்ள எல்லா திரவங்களையும் ஒன்றாகக் கலந்து கொள்க. (ஆ)விலுள்ளவைகளில் இடிக்க வேண்டியவைகளை இடித்து மற்றவைகளையும் ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்து முன் சித்தப்படுத்தினதில் கரைத்துக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டிப் பத்திரப்படுத்தவும்.

**தீரும்நோய்கள்:-** இதனை எட்டுநாளைக்கொரு தடவை தேய்த்துத் தலைமுழுகச் செய்துவரின், தலைவேதனைகள், கண்ணீர்ப் புகை, கண்வேதனை, கண்குத்தல், கண்சதை, வளர்ச்சி ஆகியவை தீரும்.

## 1743. நயனமேக சஞ்சீவித் தைலம்

(அ) நல்லெண்ணெய் 16 பலம் (560 கிராம்), பொன்னாங்காணிச் சாறு, முசுமுசுக்கைச்சாறு, கீழ்காய்நெல்லிச்சாறு, நெய்ச்சட்டிச்சாறு, சோற்றுக்கற்றாழைச் சாறு, நெல்லிக்காய்ச் சாறு இவை வகைக்குப் 16 பலம்.

(ஆ) சீனாக்கற்கண்டு 1 பலம் (35 கிராம்) நற்சீரகம் 1பலம் (35 கிராம்), அதிமதுரம், கோட்டம், சந்தனத்தூள் இவை வகைக்கு ½ பலம(17½கிராம்),பசுவின் பால்16பலம்(560கிராம்).

**செய்முறை:—** [அ] விலுள்ள திரவங்களை ஒன்றாகக் கலந்து கொள்ளவும். (ஆ) விலுள்ளவைகளில் தூள் செய்ய வேண்டியவைகளைத் தூள் செய்து அம்மியில் வைத்து (ஆ) விலுள்ள பாலைக் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து மிகுந்த பாலில் கரைத்து முன் சித்தப்படுத்தி யிருப்பதில் கலந்து காய்ச்சிக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டிப் பத்திரப்படுத்துக.

**தீரும்நோய்கள்:** இதனை எட்டுநாளைக்கு ஒரு முறை தேய்த்துத் தலைமுழுகி வரக் கண்ணெரிச்சல், கன்புகைச்சல், கண்ணீர்ப்பாய்ச்சல் முதலிய நோய்கள் தீரும். கை, காலெரிச்சல், மயக்கம், தயக்கம் முதலியவைகளும் தீரும், எல்லாவகை மேகங்களும் நீங்கும்.

## 1744. கண்ணயிரை உசிதம்

அயிரைமீன் 1 பலம் (35 கிராம்)இதனைக் கல்வத்திலிட்டுப் பசுவின்பாலைச் சிறுகச்சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்துப் பிறகு அதில் ஒரு பலம் ரஸ்தாளி வாழைப்பழத்தைச் சேர்த்து அரைமணி நேரமரைத்துச் செம்புகுப்பியில் வைத்துக் கொள்க. இதில், பயறளவு எடுத்துக் கண்ணிலிட்டு மல்லாந்து

படுத்துக் கொண்டிருக்கவும். பச்சைநிறமான நீர்வடியும் இரண்டு சாமநேரம் படுத்துக்கொண்டிருந்து பிறகு வெந்நீர் விட்டுக் கழுவிவரவும். இவ்விதம் ஐந்துநாள், ஒன்பதுநாள் செய்யின் கண் பூமாறும்

### 1745. கண் தைலம்

(அ) தாய்ப்பால், பசுவினெய், பாவட்டைச்சாறு, முருங்கைப் பூச்சாறு, நந்தியாவட்டப்பூச்சாறு இவை வகைக்கு 2 ஆழாக்கு.

(ஆ) இலவங்கம் கோட்டம், இலவங்கப்பட்டை, அதிமதுரம் இவற்றின் தூள் வகைக்கு 1 வராகன் மடை ($3\frac{1}{2}$கிராம்),

**செய்முறை:-** (அ) விலுள்ள சாறுகளை ஒன்றாகக் கலந்து (ஆ) விலுள்ள தூள்களை ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து மிகுந்தசாற்றில் கரைத்து இதில் தாய்ப்பாலையும் நெய்யையும் கலந்து காய்ச்சிப் பதத்தில் வடித்து வடிகட்டி புட்டியில் வைத்துக் கொள்க

**தீரும்நோய்கள்:—** இதனைச் சலாகையால் கண்ணிலிட்டுவர கண் வேதனை, கண்குத்தல், கண்சதை வளர்ச்சி ஆகியவை தீரும்.

### 1746. இரணசுக்கிர உசிதம்

கிரந்திநாயகம் இலை, நீர்ப்பூலா இலை ஆகிய இரண்டையும் சேர்த்துக்கையில் வைத்துக்கசக்கிக் கண்ணில் இரண்டு மூன்று துளி சொட்டவும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் தேய் துவரின் இரண சுக்கிரன், வர்ணசுக்கிரன் ஆகியவை தீரும்.

### 1747. இரணசுக்கிர மாத்திரை

துத்தம், துருசு, செம்புஅரப்பொடி, அயஅரப் பொடி, அரிசித்திப்பிலித்தூள் இவை வகைக்கு 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்), காடி, தாய்ப்பால், பனைமட்டைச்சாறு இவை வகைக்குச் செல்லத் தக்க அளவு.

**செய்முறை:-** முன் இரண்டு சரக்குகளையும் தனித்தனியே பொடித்து மற்றவைகளையும் கலந்து கல்வத்திலிட்டுக் காடியைச் சிறுகச் சிறுக விட்டு மூன்றுநாளரைக்கவும், பின்பு தாய்ப்பாலால் மூன்றுநாளும், பனைமட்டைச் சாற்றால் மூன்று நாளும் அரைத்து நீண்ட மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்க,

**தீரும்நோய்கள்:-** இதனை தாய்ப்பாலில் இழைத்துக் காலை மாலை இரண்டு வேளையும் கண்ணிலிட்டுவர இரணசுச்கிரன், வர்ணசுக்கிரன் ஆகியவை தீரும்.

## 1748. கண்ணொற்றிட உசிதம்

ஒரு கோழிமுட்டையை உடைத்து வெள்ளைக்கருவை ஒரு பீங்கானில் விட்டு அதில் ஒன்றேகால் வராகன் எடை எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு ஆர்க்கப் பொடித்த ஒரு வராகன் எடை சீனக்காரத்தூளை அதில் போட்டு விரலால் நன்றாக மத்தித்து ஒரு வெள்ளைத் துணியில் வைத்துப் பொட்டணமாகக் கட்டி மல்லாந்து படுத்துக்கொண்டு கண்ணின் மீது வைத்து ஒரு நாழிகை சென்று நீக்கிவிடவும். இதில் கண்ணில் விழுந்தாலும் சிவப்பு, கண்ணுறுத்தல், கண்ணெரிச்சல், கண் கடுப்பு, கண் வீக்கம் ஆகியவை தீரும்.

## 1749. கண் அண்ட உசிதம்

ஒரு கோழிமுட்டையை எருமைச்சாணியில் பொதிந்து அவி புடமிட்டெடுத்து ஓடு நீக்கிக் கருவை இரண்டாகப் பிளந்து மஞ்சள் கருவை நீக்கி, ஒவ்வொரு பாதியை கண்ணில் வைத்து இரவில் கட்டிக் காலையில் அவிழ்க்கவும். இந்தப்படி பத்துநாள் செய்யச் சகல கண்மேகச்சூடு, கண் உட்டிண ஆதிக்கம், கண் பரு ஆகியவை தீரும்.

## 1750. கண்ணொளி உசிதம்

ஒரு முயலை அறுத்து அதன் வயிற்றைக்கீறி ஈரலைக்குலையோடே எடுத்துத் தனியே வைத்துக்கொள்க. மற்ற குடல் முதலியவைகளை நீக்கித் தோலை உரித்து இறைச்சியைத் தனியே எடுத்து வைத்துக்கொள்க. முன் ஈரல்குலையிலுள்ள பித்துப்பை உடையாமல் அதனைத் தனியே எடுத்து வைத்துக் கொள்க. முசுமுசுக்கையை இடித்துத் தனிச்சாறு பிழிந்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொண்டு மேற்படி ஈரல் குலையைக் கரி நெருப்பில் காட்டி நன்றாகச் சூடுகண்டவுடன் மேற்படி சாற்றில் தோய்க்க வேண்டும். குளிர ஆறின பின்பு முன்போல் கரிநெருப்பில் வாட்டிச் சாறு சுவறினவுடன் முன்போல் முன்சாற்றில் தோய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி பத்து தடவைகஇ தோய்த்துத்தனியே வைத்துக் கொள்க. முன் எடுத்து வைத்திருக்கிற பித்துப்பையையும் உடைந்து போகாமல் அதிக காக்கிரதையாக கரிநெருப்பில் வாட்டி முன் சாற்றில் தோய்க்க வேண்டும், இதனையும் பத்துத்தடவை மடக்கி மடக்கித் தனியே எடுத்து ஒரு பிடிசாதத்திற்குள் வைத்துத் தனியே விழுங்கி விடவும். பிறகு ஈரல் குலையை மென்று சாப்பிடவும். பிறகு முன் எடுத்து வைத்திருக்கிற கறியை அதிக காரமில்லாமல் சமைத்துச் சாப்பாட்டுடன் சாப்பிடவும். இவ்விதம் மூன்று நாள்கள் செய்யவும். இப்படி ஒவ்வொரு மாதத்திற்கு மும் மூன்று நாளாக மூன்று மாதங்களில் ஒன்பது நாட்

கள் செய்துவரின் கண்பார்வை மந்தம் தீர்ந்து கண்ணொளி யுண்டாகும்; ஒரே மாதத்தில் கண்ணொளியுண்டாகிக் குணம் தெரியும்.

## 1751. நயனநோய் வெள்ளிப்பொடி

சிறுகண்நாகம் 1 பலம் (35 கிராம்), மிசிரிஅபின் 1பலம் (35 கிராம்) நாகத்தை புது ஓட்டில் இட்டு உலையில் வைத்தூதி உருகினவுடன் அபினைக்குன்றிமணி அளவு எடுத்துக் கிராசித்து துழாவி அது எரிந்துபோனவுடன் மறுபடியும் அபினை முன் போல் கிராசிக்க வேண்டும். இவ்விதம் அபினெல்லாம் சென்ற பின்பு நாகம்பற்பமாகிவிடும். இதனை வடிகட்டித் தனியே புடடியில் வைத்துக் கொள்க.

**தீரும்நோய்கள்:-** இதில் என் அளவு எடுத்துக் காலை, மாலை இரண்டுவேளையும் கண்ணில் இட்டுவர எல்லாவித கண்நோய்களும் தீரும். இன்னும், இதில் கொஞ்சம் எடுத்துப் பசுவின் நெய்யில் குழைத்துத் தாம்பிரச் சிமிழில்வைத்துக் கொண்டும் எள் அளவு கண்ணில் இட்டு வரலாம். கண் பூ அதிகமாகவும் நாட்பட்டதாகவுமிருந்தால் மேற்படி பற்பம் இரண்டு பங்கு, அக்கிராகாரத் தூள் ஒருபங்கு, இவ்விரண்டையும் கலந்து பசுவின் வெண்ணெயிற் குழைத்து வைத்துக் கொண்டு கண்ணிலிட்டு வர மேற்கண்ட பூ முதலியவை கரைந்து தீர்ந்து போகும்.

## 1752. நயனநோய் அசாருன் தைலம்

நல்லெண்ணெய், பசுவின் பால், நீராகாரம், எலுமிச்சம் பழச்சாறு. நிலக்கடம்புச்சாறு இவை வகைக்கு 2 படி.

**செய்முறை:-** இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து அடுப்பின் மீது வைத்து இளந்தியாக எரித்துக் கடுகுதிரள் பதத் திலிறக்கி வடிகட்டித் தானிய புடத்தில் வைத்து நான்கு நாளைக் கொருதடவை சூரியோதயத்திற்கு முன் தலையில் தேய்த்து ஒரே வெந்நீரால் தலைமுழுகச் செய்துவரக் கண்காசம் கண்பார்வை மந்தம், பீனிசம் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** தலைமுழுகிய அன்று புளி, புகை, மீன் இறைச்சி வாயுப் பொருள்கள் ஆகியவைகளை நீக்கித் துவரம் பருப்பு, முருங்கைப்பிஞ்சு, கத்திரிப் பிஞ்சு, அவரைப்பிஞ்சு ஆகியவை கூட்டவும்.

## 1753. கண் நிம்ப சஞ்சீவி

வேப்பந்துளிர் 5 பலம் (175 கிராம்) இதனைக் கல்வத்தி லிட்டு மைபோலரைத்து ஒரு பலம் நல்லெண்ணெயை விட்டு

இரண்டு மணி நேரம் நன்றாயரைத்து ஒரு சல்லாத் துணியில் வைத்து ஒரு பீங்கான் கோப்பையில் பிழிந்து மேற்றெளிவை யிறுத்து புட்டியில் வைத்துக் கொள்ளவும்,

**தீரும்நோய்கள்:-** இதனைச் சலாகை நுனியில் நனைத்துக் காலை, மாலை இரண்டுவேளையும் கண்ணிலிட்டுவர எல்லா வகைக்கண்நோய்களும் தீரும்.

## 1754. கண்ணிமை உசிதம்

வட்டமாயிருக்கிற காணாவேளை இலையைக் கசக்கி அந்த சாற்றைக் கண்ணிமையின் மேல்பூசி வரக் கண்ணிமைத் தடிப்பு கண்ணிமை அழலை ஆகியவை தீரும்.

## 1755. காணி ஒற்றிடம்

பொன்னாங்காணி இலையை ஒரு மண்பாத்திரத்தில்போட்டுக் கொஞ்சம் பசுவின் வெண்ணெயை அதில் போட்டுச் சிறு தீயாக எரித்து இலையை வதக்கி மெல்லிய துணியில் வைத்து முடிந்து கண்ணில் ஒற்றடமிட வேண்டும். இவ்விதம் தினம் இரண்டு தடவைகள் செய்துவரின் கண்சிவப்பு, கண்கூச்சம், கண்ணெரிச்சல், கண்சூடு முதலிய கண்நோய்கள் தீரும்.

## 1756. இரசித பற்ப உசிதம்

ஒரு எலுமிச்சம்பழத்தில் இருபத்தொரு இலவங்கங்களை நிரம்பக்குத்தி அதன்மேல் பசுவின் வெண்ணெய் ஒரு பலம் கவசித்து ஒரு பானையில் நல்ல தண்ணீர்விட்டு அதில் மேற்படி கவசத்தைவைத்துஒரு நாட்சென்று மறுநாள் அந்தத்தண்ணீரை இறுத்து விட்டு வேறே தண்ணீர் விடவும். இந்தப்படி பத்துத் தரம் விட்டுப்பின்பு அந்த வெண்ணெயைப் பழத்துடனேயெடுத்துப் பீங்கானிலிட்டு வெய்யிலில் வைத்தால வெண்ணெயெல்லாம் உருகி நெய்யாகிப்போகும். அந்த நெய்யையெடுத்துபுட்டியிலிட்டு 1689 ஆம் முறையில் சொல்லப்பட்டிருக்கும் இரசித பற்பத்தில் இரண்டு வராகன் எடை எடுத்து நன்றாகப் பொடித்து அந்தப் புட்டியிலிட்டுக் குலுக்கி வெய்யிலில் வைத்து காலை, மாலை இரண்டு வேளையும் கண்ணில் இட்டுவரக் கண் நோய் தொண்ணூற்றாறும் தீரும்.

**அனுபோக வைத்திய நவநீதம்**

**பத்தாம் பாகம் முற்றிற்று.**